# ஏகபாத நூற்றந்தாதி



இலக்கண அறிஞர்
அரசஞ் சண்முகனார்.

மதுரைத் தமிழ்ச் சங்கம் வெளியீடு
1995

# ஏகபாத நூற்றந்தாதி - ஆய்வுரை.

பெரும் புலவர் மகாவித்துவான் அரசஞ்சண்முகனார் இயற்றிய அரியநூல் வகையுள் ஒன்று இந்த ஏகபாத நூற்றந்தாதியாகும்.

ஏகபாதம் என்பது ஓர் அடி. அஃது ஓரடியால் அமைந்த ஒரு பாட்டைக் குறித்தது அபபடி ஏகபாதப் பாடல்கள் தற்சிறப்புப் பாயிரத்தில் மூனறும, நூலில் நூறுமாக நூற்று மூன்று பாடல்களைக கொண்டுள்ளது.

நூல் நூறு பாடல்களில் அமைந்தமையாலும், ஒவ்வொரு பாடலின் இறுதியும, வரும பாடலொடு தொடர்ந்து செலலும அசையோ எழுத்தோ கொண்ட முதலினைக் கொண்டமையாலும் நூற்றந்தாதி ஆயிற்றாம.

*"நாற்சீர் கொண்டது அடியெனப் படுமே"* என அடியின் இலக்கணம் வகுத்த தொல்காபபியர் (செய் 31),

*"அடியின் சிறப்பே பாட்டெனப் படுமே"* என்றும கூறினார் (செய்.34)

ஆதலால் ஓரடியே சீருற அமைந்தால் பாட்டின் தகுதியைப் பெற்று விடும் என்று பாட்டின் அளவு குறித்தார்.

ஓரடியே பாட்டாகும் எனின், அடியின் அளவு குறளடி சிந்தடி எனவும் அளவடியில் குறைந்து வருதலையும் அடியெனவே கொண்டு அதனையும ஒரு பாட்டாக்கிக் கொள்ளும் மரபு ஏற்பட்டமையாலேயே

அறஞ்செய விருமபு
ஆறுவது சினம
இயல்வது கரவேல்

என்னும் ஆத்திசூடியும் பாட்டெனப போற்றப் படுகின்றதாம்.

இவ்வேக பாதம் ஓரடி ஒரு பாட்டு எனினும், அவ்வடியை அபபடியே நான்கு முறை எழுதி ஒவ்வோரடிக்கும் வெவ்வேறு பொருள் விரிக்கும் சிறப்புடையது ஆகும்.

இவ்வேக பாதத்தைப் பாடுதல் எத்தகைய அருமைப்பாடு உடையதோ, அதனினும அருமைபபாடு

உடையது உரை காண்பதாகும். ஆதலால் நூலாசிரியர் அரசஞ்சண்முகனார் தாமே சொற்பிரிப்புச் செய்து கருப்பொருளும் எழுதினார். அவர்க்கு நண்பராகவும் வழிவழிப் புலமை சிறந்த புலமைத் தோன்றலாகவும் திகழ்ந்த முகவூர் இராமசாமிக் கவிராயர் திருமகனார் கந்தசாமிக் கவிராயர் (மு.இரா.க) கருப்பொருளை விளக்கும் வகையில் உரைவிள்க்கம் வரைந்தார். இப்பாட்டும் உரையும, அந்நாள் புலவர்களை யெல்லாம் மயங்கித் தியங்கி நிற்கச் செய்த திறமுடையவாகும.

பாட்டுக்குப் பாட்டெடுத்தல், பாட்டுக்கு உரை கொடுத்தல், இப்படிப் பாடுக என்ற அளவில் பாடுதல், கடும் புலவரையும் வாயெடுக்க மாட்டா வகையில் ஒடுக்குதல், என்பனவெல்லாம் இடைக்கால - பிற்காலப புலவர்கள் போக்காகி விட்டது. அக்கால நிலையில் மடக்கு (யமகம்) திரிபு என்பன பாடலும் இரட்டுறப் பாடலும் ஓரெழுத்து வருக்கம் வரப பாடலும் என்பன பெருகின. புலவர்க்குப் புலவர் தாம வல்லாராகவும் வெல்வாராகவும் காட்டுதலே புலமைக்கு அடையாளம் என்றும் ஆகிவிட்டது. அக்கால எல்லையின் இறுதியில் வாழ்ந்த அரசஞ்சண்முகனார்க்கு, எவர்க்கும அரிய ஏகபாதம் பாடி, அதனையும ஒருபத்து முப்பத்து என்று முன்னோர் (திருஞானசமபந்தரும், வண்ணச்சரம் தண்டபாணி அடிகளும) பாடிய அளவிலும் மிக்கதாய்ப் பாடி, முடிக்க வேண்டும என்னும துணிவு கிளர்ந்தது. இப்பாடல் பாடும அருமையைக் கந்தசாமிக் கவிராயர் வரைந்த முகவுரையே நன்கு தெளிவாக்குகின்றது.

கல்லில் கலைநயம் கண்ட வல்லான், இறைவனை 'ஏகபாத மூர்த்தி'யாகக் கண்டான். மதுரைத் திருக்கோயிலில் ஏக பாத மூர்த்தி திருவடிவைக் கண்டு மகிழலாம். சொல்லில் கலைநயம் கண்ட சண்முகனார் திறத்தை, இவ் வேக பாதத்தில் காணலாம்.

ஓரடியை நாலடியாகப் பெருக்கிய இப்பாட்டு ஒருபாட்டா? இல்லை! பல பாடல்களாய் அமையும் ஒருபாட்டாம்.

"அமபாலிகையத்தங் கோடலங் கஞ்சத் தனத்தனையே"

என்பது கட்டளைக் கலித் துறைப பாட்டு.

முதல் நான்கு சீர்களும் வெண்டளை பெற்று, இறுதிச் சீர் விளங்காய் ஆகி, நேரசையில் தொடங்கும இது, அடிக்குப் பதினாறு எழுத்துக் கொண்டு ஏகாரத்தால் முடிந்தமையால் கட்டளைக் கலித் துறையாகும். இனி, இதுவே:

“அம்பா லிகையத் தங்கோட லங்கஞ் சத்த னத்தனையே” என அறுசீராக்கி நாலடியமைத்தால் அறுசீர்க்கழிநெடிலடி யாசிரிய விருத்தம் ஆகும். “மா, மா, காய்; மா மா காய்” என்பது இதன் யாப்பியலாம். இனி, இதுவே:

“அம்பா லிகை யத்தங்கோ டலங்கஞ்சத் தனத்தனையே”

என நான்கடி மடக்கினால் கலித்தாழிசை ஆகி விடும் அல்லவா! மூவசைச் சீர் நான்கு பெற்று வருவது கலியடிதானே!

இவ்வாறே அகவலாகவும் பிறபாக்களாகவும் விரியும் வகையை உரைவிளக்கத்தில் கண்டு கொள்க. (பக்: 5, 6)

முதற்பாட்டு கடவுள் வாழ்த்து. இக்கடவுள் வாழ்த்தை அடுத்து உரையாசிரியர் ஒருபாடல் எழுதி “இப்பாட்டு ஏகபாத உரைக்குக் காப்பாதலே அன்றி நூலுக்கு உரைகாரன் செய்த பாயிரமும் ஆம்” என்கிறார். இவ்வுரை இயங்கும முறையை “நூலாசிரியர் எழுதிய கருப்பொருள் கொண்டு இந்நூலுக்குப் பதவுரையும் உரைவிகற்பங்களும விசேடவுரையும் பொழிப்புரையும் ஆங்காங்கு எம் உணர்ச்சிக்கு எட்டிய அளவில் எழுதுதும்” என்று மிகவும் அடக்கத்துடன் எழுதுகிறார் கவிராயர் (18)

கருப்பொருள் உரைகூறும் கவிராயர் ‘உரைக் காபபு’ இவர்தம் பாவன்மை இத்தகைத் தெனக் காட்டும் சான்றாகத் திகழ்கின்றது (17) அதில், இந்நூல் அருமையை “இருபாதத்து எழுபுவியும் அளந்தானும் அளக்க வொண்ணா விருந்தா”கச் செய்ததாகக் குறிபபிடுகிறார். ‘இருபாதத்து எழுபுவியும் அளந்தோர்’ என்பதற்குத் திருமாலும் வள்ளுவரும் என உரைகண்டு விரித்து உரைக்கிறார்.

முதல் ஏகபாதத்திற்கு நூறு பொருள் கண்டுள்ளனர் ஆசிரியரும் உரையாசிரியரும். எனினும் 29 பொருள்கள் கிடைத்தில. கிடைத்தவை கிடையாதவை பற்றிய குறிப்பை **144** ஆம் பக்கத்திற் கண்டு கொள்க.

சைவப் பெரும் புலவர்களாகிய இவர்கள் இக்காப்புப் பாடலுக்குப் பலபத்திரராமன், கண்ணன், சடகோபர், பெரியாழ்வார், திருமங்கையாழ்வார், திருப்பாணாழ்வார், ஆகியோர்க்கும் புத்தர், இயேசு, முகம்மது ஆகியோர்க்கும் பொருள்கண்டு இருந்தமை இவர்கள் சமயச் சால்புக்குச் சான்றாம். அவை கிடைக்கவில்லை எனினும், மீனம் முதல் இராமன் வரையான திருமால் திருப்பிறப்புகளும் (61-65)

திருமாலும் (153) அநுமனும் (142) கூறப்பட்டிருத்தல் அறியத் தக்கது.

அகத்தியர் தொல்காபபியர் நக்கீரர் திருவள்ளுவர் ஆகியவர்களும் இவ்வாழ்த்தில் இடம் பெறுதல் வியபபாம். (115, 116, 121, 126).

பழம்பெரும் வள்ளல் குமணன், கற்புக்கு அணிகலப படைப்பாகிய கண்ணகி, நால்வர் பெருமக்கள் ஆகிய இன்னவர்களொடு செய்நன்றி யிறிதற் குறியாக வள்ளல் சுபபிரமணியனாரை இணைத்துள்ளமை பெருந்தக்க உள்ளக் குறிப்பாம.

அக்கருத்தின் குறிப்பு, "பாலப்பருவத்து மதுரை மாரி கோயிலின் அருகுள்ள தடாகத்து நீராடுங்காலைப் படியினின்று வழுக்கி நீந்த அறியாமையால் நீரில் அமிழ்ந்துழி அயலுள்ளார் எல்லாரும வாளா இருபபச் சேணின்றோடி வந்து என்னைத் தூக்கி நீநதிக் கரையிற் சேர்த்து உயிர் தந்தமையின் இவரையும் குரவர் வகையுட் கொண்டு வாழ்த்தலாயிற்று. இவர் உத்தம பாளையம சுபபிரமணிய முதலியார் என்ற ஒரு கனவான்" என்பது. இதனைச் சண்முகனாரே வரைந்தார் என்பது, "என்னைத் தூக்கி" என்பதால் தெளிவாகும்.

கழலை நோயால் சண்முகனார் வருந்தினார். அந்நாளில் சேதுபதி கல்வி நிலையத்தில் பணி செய்தார். அக்கல்வி நிலைய ஆட்சித் தலைவர் பாண்டித் துரையார். அவரைக் கண்டு தம் துயர் உரைத்தார் சண்முகனார். "உடனே அவர்கள் கலாசாலையில் யான்பெற்று வந்த ஊதியத்தை ஓராண்டுவரை வேலையின்றிப பெறுமாறு ஆணை செய்து அளித்ததூஉம அன்றி இருநூறு வெண் பொற்காசும் பரிசிலாக அளித்தார்கள். அவர்கள் செய்த பேருதவியை என்றும மறவேன்" என்றும, அக்கீம் துரை என்பார் முமமதிக்கு ஒருகால், மூன்று முறை கருவி கொண்டு சேதித்து (அறுவை செய்து) அந்நோய் முற்றத் தீர்த்து என்னுயிரை எனக்கே பரிசிலாக அளித்துப் பேருதவி புரிந்தார்கள். அவர்களால் அன்றோ நீங்கும் நிலையில் இருந்த என்னுடல் இன்றும உளதாயிற்று. இப்போதுள்ள உடலை நோக்கில் தந்தையும் தாயும் ஆயினார் அத்துரை யவர்களே ஆதலின், இப்பாயிர விருத்தி யுரையை அந்நன்றியின் ஞாபகச் சின்னமாக அச்சிடுவித்தேன்" என்றும் தொல்காப்பியப பாயிரவிருத்தி நன்றி கூறலில் கூறுவதை நோக்க இவர்தம் நன்றியறிதற் சிறப்பு நன்கு புலப்படும்.

காப்புச் செய்யுள் ஒன்றற்கு மட்டும் இந்நூலில் (4 - 144) நூற்று நாற்பது பக்க அளவு உரைவிளக்கம் இருப்பது தமிழ்வளப் பரபுக் காட்ட வல்லதாம். தமிழின் சொல்லமைப்பு, புணர்ப்பு நிலையுடையது என்பது மொழிவல்லார் நன்கு அறிந்ததே. ஆயினும், அப்புணர்ப்பின் வகையும் வனப்புமு வளமுமு எல்லாம் முற்றாகக் கண்டு முழுதாய்வு செய்ய விருமபுவார்க்கு வைப்பகமெனத் திகழ்வது இம்முதற்பாட்டாம்.

அகராதி ஆய்வு செய்வார்க்கும், சொல்லடைவு செய்வார்க்கும், சொல்லணி ஆய்வார்க்குமு, தொன்மு (புராண) ஆய்வு மேற்கொள்வார்க்குமு, அரியன செய்தலை எடுத்துக் காட்ட விழைவார்க்கும் இப்பாட்டுமு உரையுமு கையிற் கனியாக உதவும்.

நூலில் உள்ள நூறு பாடல்களும், அவற்றின் உரைவகைகளுமு சிதைவின்றி முற்றாகக் கிடைத்துள. அவற்றிலும் ஐந்து, ஆறு, ஏழு என இரட்டுறல் (சிலேடை) பெருகியே கிடக்கின்றன

"திருத்தகை யாகத்த மாலை யதணித் திலகவையே"

எனத் திருவில் முதற்பாட்டுத் தொடங்குவதும்,

"சேவல மந்தண வாமனந் தாமன் திருத் தவத்தே"

என நூறாமு பாட்டுத் திருத் தவத்தே நிறைவதும் திருப்பேறாகத் திகழ்வதாமு.

இதனைப பொருளுணர்ந்து கற்க விருமபுவார் இஃது ஒரு பொருளுடைத்து என்று வருவனவற்றைத் தெரிந்து கற்பாராக. பின்னர் இரு பொருள் முப்பொருள் உடையது என்பவற்றைக் கற்பாராக. எளிமையில் இருந்து அருமையைக் கற்கும் அமைதி அதனால் வாய்க்கும்

நூலாசிரியர் தனித்தனிப பாடல்களாகப பாடினும் ஒரு வரன்முறைப படுத்திக் கொண்டே பாடினார் என்பது, சுக்கிரன் சந்திரன் செவ்வாய் சனி புதன் இராகு வியாழன் சூரியன் கேது எனக் கோள்வகை வைபபு முறையும் அதற்குத் தரும் விளக்கமும் காணத் தெளிவாம் (113)

நூலாசிரியரும் உரையாசிரியரும் கணியம் (சோதிடமு) மருத்துவம் ஆகியவற்றில் தேர்ச்சி மிக்கவர் என்பது ஆங்காங்குப் பரவிக் கிடப்பினும் 94, 95 ஆமு பக்கங்களில் மிகத் தெளிவாகின்றதாம். தொல்காப்பிய உரையில்

நச்சினார்க்கினியர், அகத்தியர் தொல்காப்பியர் பற்றி வரைந்த செய்தியை ஒப்புக் கொண்டு உரைவிரிக்கிறார் (118)

இதனை இதனால் பெற்றாம் என்று உரைநயம் விரிக்கிறார் உரையாசிரியர். சுவைமிக்கது அது (58, 81)

ஒருவரைக் குறித்த புகழ்நிலை விரிவுடையதாயின் அதனைக் கருதி வேறாகவும் சிறப்பித்தலையும் குறிக்கிறார் (125)

கவ்வு அல் கவ்வல் என்றாகித் தொகுத்தல் பெற்றுக் கவலென நின்றது. தகம் தரித்தல்; தகனத்தின் இடைக்குறையுமாம் என்பன போலச் சொல்லாய்வுகளும் ஆங்காங்குக் காட்டுகிறார் (157)

"இப்பொருள்களை ஏதுக்கள் கூறி நுண்ணியதாக உரைப்பான் புகின் விரியும்" என்பது இவர் உரை விரியாமையை உளங்கொண்டு எழுதுகிறார் என்பது காட்டும (157).

அத்தம், கோடு என்பவற்றுக்கு இவர் எழுதும் உரையும் மேற்கோள்களும் நோக்க வேண்டுமிடத்து விரித்துக் கூறுதலை விடுத்தார் அல்லர் என்பதும் புலப்படும்.

இந்நூல் பாடப்பட்ட முறை முகவுரையால் இனிது விளங்கும்.

எளிய இனிய பாடல்களைக் கொண்ட இன்னிசை இருநூறு, சந்தத் திருவடிமாலை முதலிய நூல்களை இயற்றிய சண்முகனார் கடினமான மாலைமாற்றுமாலையும், அதனினும் மிகக்கடிய ஏகபாதமும் பாடியமை காலச் சூழலைக் காட்டுவதாம்.

கொளுத் துன்னூசி விளக்கம், ஆகுபெயர் அன்மொழித் தொகை ஆராய்ச்சி, தொல்காப்பிய நுண்பொருட் கோவை, பாயிர விருத்தி என்பன வெல்லாம் புலமைத் தலைக்கோல் பெற்றார் தத்தமில் கூடி ஆயவும், மகிழவும், மறுக்கவுமாக அமைந்த நூல்களாயின. தவப்பெருந்திரு சிவஞான முனிவர்க்குப் பின்னே தம் கோள் நிறுவுதலில் நிகரற்று விளங்கியவர் அரசஞ் சண்முகனார்.

**" ஆகு பெயர் அன்மொழித்தொகை ஆராய்ச்சியும் வேண்டும் அரிசி ஆராய்ச்சியும் வேண்டும்; ஆகுபெயர் அன்மொழி ஆராய்ச்சி சிலரை வாழவைக்கும்; அரிசி ஆராய்ச்சி பலரையும வாழவைக்கும்; ஆகலின் முதற்கண் அரிசி ஆராய்ச்சி செய்வோம்; பின்னே வாய்க்கும் போது**

ஆகுபெயர் அன்மொழித் தொகை ஆராய்ச்சி செய்வோம்" என்று பாரதியார் குறிப்பது அவர் சேதுபதி பள்ளியில் பணி செய்த காலத்தில் தமிழ்ச் சங்கப் புலவர்கள் செய்த ஆய்வு பற்றிக் குறித்த குறிப்பாகும். ஆனால் இலக்கணக் கடல் சண்முகனார் என நாவலர் ச.சோ. பாரதியார் பாராட்டிய பேறும் உண்டு. அவர் ஏகபாத உரையாசிரியர் கந்தசாமிக் கவிராயர் வீட்டிலேயே சண்முகனாரைப் பல்கால்கண்டு அவர் புலமை நலத்தில் தோய்ந்திருக்கிறார்.

தவத்திரு மறைமலையடிகள் மகளார் நீலாம்பிகையார் தனித் தமிழ் இயக்கம் உருவாகத் தூண்டலாக இருந்தவர். தனித்தமிழில் பல நூல்கள் இயற்றியவர்; வடசொற்றமிழ் அகர வரிசை தந்தவர். அவர் தம் புலமைக்கு மகிழும் அடிகளார் மழ விளங் குழந்தை நிலையில் நீலா அரசஞ்சண்முகனார் தோளில் தவழ்ந்த பேறுதான், நீலாவுக்கு இத்தமிழ்ப் பேற்றை வழங்கியது" என்று பாராட்டியதும், கிறித்தவக் கல்லூரி முதல்வர் வில்லியம் மில்லரிடம் சண்முகனாரைத் தம் ஆசிரியர் என்று அடிகள் உரைத்ததும் அரசஞ்சண்முகனார் புலமைப் பேற்றுப் பட்டயங்களாம்!

சண்முகனார் புலமை மிக்கதா, புகழார்ந்த சால்பு மிக்கதா எனின், இரண்டும் ஒன்றை ஒன்று வென்று ஒன்றாகி ஓங்கும் மாண்பை அவர்தம் வரலாறு கொண்டு வண்டமிழர் உணர்வாராக.

இந்நூல் வெளிப்பட முந்துநின்ற பெருமக்கள் மூவர். அவர் சோழவந்தானில் அரசஞ்சண்முகனார் அறிவுக் கூர்ப்பின் வைப்பமாகத் திகழும் இராக்கப்பபிள்ளை அவர்களும், இந்நூலைப் படியெடுத்து முன்னரே வெளியிட விரும்பிய சோழவந்தான் கன்னியப்ப முதலியார் அவர்களும் கழக ஆட்சியாளர் தாமரைச் செல்வர் வ. சுபபையா பிள்ளை அவர்களுமே ஆவார்.

அச்சேறா நிலையில் படியெடுத்த அளவில் பல்லாண்டுகள் கடந்தன. ஆயினும் அப்,படி நிலையிலும் முனைவர் ஆய்வுக்குப் பயன்படவும் ஆயிற்று. இப்படியொரு நூலும் உரையும் தமிழ் உலகில் உண்டு என்பதை மெய்ப்பிக்க வாய்த்த வாய்ப்பாய்த் தமிழ்நாட்டு அரசின், தமிழ் வளர்ச்சித் துறை, அருந்தமிழ் நூல் வெளியீட்டுத் திட்டத்தின் உதவித் தூண்டலால் இந்நூல் வெளிப்படுவதாயிற்று.

எச் சேதுபதி கலைநிலையத்தில் சண்முகனார் பணிசெய்தாரோ, எச்சங்கப் புலவராகத் திகழ்ந்தரோ, எச் செந்தமிழ் இதழில் புலமை நலம் கொழித்தாரோ அவற்றை

இற்றைவரை பேணிவரும் மதுரைத் தமிழ்சங்க ஆட்சிக்குழுவும் செயலாளர் மா. தனுக்கோடி பாண்டியனாரும் உவந்தேற்று, உரிய வனபபும் உயரிய அச்சும, அரிய தாளும், பெரிய பொறுப்பும கொண்டு வெளியிட்டமை பாராட்டுக் குரியதாம்! இதன் மெய்ப்புப் பார்த்த பேராசியர்கள் திறம மிக மிகப் பெரிதாம்! தலை சுழற்றும் நூலை நிலை மாறா நிலையில் அச்சிட எத்தகு 'நிலையில் திரியா நிலை வேண்டும'! இந்நூல் மெய்ப்புப் பார்த்த பேராசிரியர்களிடம எவ்வித அச்சுப் பணியையும் ஒப்படைக்கலாம் என்பதற்குச் சான்றாவது இதுவாகும!

சண்முகனார் புகழ் வாழ்க!

சங்கத் தொண்டு வாழ்க!

தமிழ்த் தொண்டன்
இரா. இளங்குமரன்
திருவள்ளுவர் தவச் சாலை,
அல்லூர். திருச்சி மாவட்டம 620 101.

பெரும் பேராசிரியர்

அரசஞ் சண்முகனார் இயற்றிய

# ஏகபாத நூற்றந்தாதி.

(ஆசிரியர் இயற்றிய கருப்பொருள்,

பெரும்புலவர்

**மு.ரா. கந்தசாமிக் கவிராயர்**

இயற்றிய பொருள் விளக்கம் ஆகியவற்றுடன்)

நூலைச் சீருறப் படியெடுத்தவர்

புலவர் **இரா. இளங்குமரன்**

வெளியீடு

மதுரைத் தமிழ்ச் சங்கம்

மதுரை.

1. நூல் : ஏகபாதநூற்றந்தாதி

2. ஆசிரியர் : சோழவந்தானூர் அரசஞ்சண்முகனார்

3. மொழி : தமிழ்

4. எழுத்தளவு : 12 புள்ளி

5. நூல் அளவு : 1 x 8 Dy

6. பதிப்பு : முதல் பதிப்பு

7. வெளியீடு : சனவரி 1995

8. படிகள் : 1000

9. விலை : ரூ 60/- (அறுபது)

10. பதிப்புரிமை : மதுரைத் தமிழ்ச் சங்கம்,
மதுரை-625001

11. வெளியிடுவோர் : மதுரைத் தமிழச் சங்கம்,
மதுரை-625001.

இந்த நூல் அரிய தமிழ் நூல்களை வெளியிட நிதியுதவி வழங்கும் தமிழ்நாடு அரசின் திட்டத்தின் கீழ் நிதியுதவி பெற்றது.

12. அச்சிட்டோர் : சங்கர் பிரிண்டிங் பிரஸ்,
271, குட்ஷெட் தெரு,
மதுரை - 625 001.

குமரன் துணை

# ஏக பாத நூற்றந்தாதி

## முகவுரை.

*பூவார் கடம்பன் பொன்னடி பரவுதூஉந்*
*தாவா இன்பந் தழைத்தற் பொருட்டே*

ஏகபாத நூற்றந்தாதி என்பது கலித்துறையால் ஏகபாதமாக அந்தாதித் தொடை கொண்டு ஸ்ரீ முருகக் கடவுளைக் குறித்துச் சோழவந்தானூர் ஸ்ரீமத் அரசஞ் சண்முகனார் பாடிய அரிய பிரபந்தமாம். இத்தகைய பிரபந்தம் இதற்குமுன் யாரானுஞ் செய்யப்படாமையால் இதுவே இவ்வகையில் முதலாவ தெனப்படும்.

ஏகபாதம் என்பது வேறுபொருள் பயப்ப ஓரடியே நான் கடியாக வருவது. இது சித்திரகவி வகை பலவற்றுள்ளும் மிக அருமை வாய்ந்தது. நிரோட்டயமகம் ஏகபாதத்தை நோக்கச் சிறிதும் அருமையுடைத்தன்றேனும் ஏனைத் திரிபு யமகங்களை நோக்கப் பெரிதும் அருமையுடைத்தாகலின் அது நூறு செய்யுளான் பாடலின்றி முப்பது செய்யுளானும் திரிபு யமகம் முதலாயின நூறு செய்யுளானும் இதுவரை பலரானும் பாடப்பட்டு வருதலின் முப்பதினின்றும் இனம் விளக்கற் பொருட்டு நூற்றந்தாதி எனப்பட்டது.

நிரோட்ட யமகமே முப்பதின்மேற் பாடற்கரியதாய் இருப்ப அதனினும் பல்லாயிரம் மடங்கு அருமை வாய்ந்த ஏகபாதம் நூறு செய்யுளான் அந்தாதியாகப் பாடப் பட்டமை செந்நாப் புலவர் பல்லோரானுங் கொண்டாடத் தக்கதே. அவற்றுள்ளுஞ் சிலேடையமைந்த செய்யுள் எழுபதின் மேலாகவுள்ளன. அவற்றுள்ளும் மூன்று முதற் பத்துவரை சிலேடை வாய்ந்தன பல. இருபொருட் சிலேடை சிலவே.

ஏகபாதத்துள் இங்ஙனம் சிலேடையாதல் மிகவும் அருமை என்பது சொல்லாதே விளங்கும். இதுவன்றி முதலாவது காப்புச் செய்யுள் ஆகிய ஏகபாதம் பல்லாயிரம் பொருளுடைத்தாயினும் ஓராற்றான் நூறு சிலேடை கொண்டு பேரற்புதம் விளைத்து விளங்குகின்றது. இவ்வாறு சிலேடை அமையாவிடினும் இதுவரை ஏகபாதம் தனிச் செய்யுளாக ஒன்றிரண்டு கண்டதன்றிப் பத்தானுந் தொகைச் செய்யுளாகக் கண்டதில்லை. அவையுஞ் செவ்வனே பதம் பிரிந்து பொருள் உணர்த்தும் ஆற்றலுடையன அல்ல. இவையோ எளிதிற் பதம் பிரிந்து எல்லாஞ் செம்பொருள் பயந்து இனியவாகின்றன. இலக்கணவரம்பினையுடைய ஏகபாதம் இதுவரை நூறு முப்பதெனப் பெருந்தொகை பெறாவிடினும் அவற்றிற் குறையவாயினும் பத்தல்லது பன்னிரண்டின் மேற்பெற்ற தில்லை என்பது தேற்றமே.

இந்நூலாசிரியர் செய்த பிரபந்தங்களுள் இந்நூற்கும் மாலை மாற்று மாலைக்கும் உரையெழுதி மாலைமாற்று மாலையை உரையுடன் 1903 ஆம் வருடத்தில் அச்சிட்டனம். அதனை அடுத்தே இந்நூலுந் தொடங்கப்படினும் திரவியத்தடையால் இதுவரை தாமதித்து இப்போது அச்சிடப்பட்டது.

இந்நூலாசிரியர் இயற்றிய நூல்களும் பிறவும் மாலை மாற்று மாலை முகவுரையிற் குறிக்கப்பட்டன. இவர் அக்காலத்தில் நுண்பொருட் கோவை என்னும் பெயரால் தொல்காப்பியத்துட் சில சூத்திரங்கட்கே பொருள் எழுதி வந்தனராயினும், பின்னர் முற்றும் எழுதத் தொடங்கித் தொல்காப்பியச் சண்முக விருத்தி எனப்பெயர் தந்தெழுதி வருகின்றனர். அவ்வுரையுட் பாயிரவிருத்தி சென்ற வருடம் வெளியிடப்பட்டது. நூன் மரபு முதலானவற்றின் உரை இப்போது அச்சிடப்படுகின்றது. இவர் தொல்காப்பியத்துக்கே அன்றித் திருக்குறட்கும் அரிய நுண்ணிய விருத்தியுரை எழுதிவருகின்றனர்.

இந்நூல் கி.பி.1888 ஆம் வருடம் இதன் ஆசிரியர்க்கு யாண்டு இருபது நடக்கும் காலை முப்பது செய்யுளாற் பாடி முடிக்கப்பட்டிருந்தது. இன்றைக்குப் பத்தாண்டின் முன்னர்

நான் இந்நூலாசிரியரோடு முதன் முதல் நட்புக்கொண்ட காலை இந்நூற் கவியுட் சில சொல்லக் கேட்டுப் பெரிதும் வியப்புற்று இவரை என் தந்தையார் ஸ்ரீமத் இராமசாமிக்கவிராயர் அவர்கள் சமூகத்தில் அழைத்துச் சென்றேன். அவர்களும் கேட்டுப் பேருவகை கொண்டு, முன் பாடிய தன்றிப் புதிதாக ஒரு ஏகபாதச் செய்யுள் பாடுக எனப் பணிப்ப அவ்வாறே இவ்வாசிரியர் ஒரு செய்யுட் பாடினர். பின்னும் அவ்வாறே என் தந்தையாரைக் காணும் போதெல்லாம் நாளொரு செய்யுளாகப் பாடி நூற்றந்தாதி யாக்கினர். முதற்கட் பாயிரமாக மூன்று ஏகபதம் வேறாக உடைமையான் நூற்றுமூன்று ஏகபாதச் செய்யுள் உள்ளன. இந்நூலுக்கு நூலாசிரியரே கருப்பொருள் என ஒன்றெழுதியிருக்கின்றனர். அது கொண்டு இவ்வுரை எழுதப்பட்டது.

இவ்வுரைக்கண் வழுவுள வாயினும் நாடாகி, குணமே கொண்டு மகிழப் பிரார்த்திக்கின்றேம்.

ஸ்ரீ முருகக் கடவுள் திருவடிகளே சரணம்.

இங்ஙனம்
*முரா. கந்தசாமிக் கவிராயர்,*
***விவேகபாநு பத்திராதிபர்,***
மதுரை.

நூல்

சிவமயம்

கணபதி துணை

# சோழவந்தானூர் அரசஞ் சண்முகன் பாடிய ஏகபாத நூற்றந்தாதியும், கருப்பொருளுரையும்.

## தற்சிறப்புப் பாயிரம்

## முதலாவது பாட்டு

### ஏகபாதம்

*அம்பா லிகையத்தங் கோடலங் கஞ்சத் தனத்தனையே*

இதற்குக் கருப்பொருட்பாயிரம் உரைத்துக் கருப்பொருள் உரைக்கற்பாற்று.

### கருப்பொருட் பாயிரம்

நூல்செய்தான் உரைசெயல் முன்னோர் வழக்கன்றாம். ஆயினும் நாற்கவிராச நம்பி முதலாய பின்னோர் நூலும் உரையும் தாமே செய்தமையானும் இந்நூல் ஏகபாதமும் நூலுட்பல ஏக பாதங்கள் பலப்பல சிலேடையும் உடைய ஆதலால் கருத்துரைக்காவழிப் பொருள் கோடல் அரிதாம் ஆகலானும் இந்நூற்குப் பொருள் காணப் புக்கார்க்குக் கருவியாகுமாறு கருத்தும் சொல்வகையும் அருஞ் சொற்பொருளுங் குறிப்பும் என நாற்பாலதாக யான் உரைக்கப்புக்க கருப்பொருளுங் கொள்ளற் பாற்று.

இப்பாட்டு எழுத்தொப்புமையான் ஒன்றே ஆயினும் முத்தகமும் குளகமுமாக நிற்றலான் இரு விகற்பமும், கடவுள்

வாழ்த்தும் காஞ்சியும் இயலிடங் கூறலும் என்ற துறை வகையான் மூன்று விகற்பமும், அடி வகையால் நான்கு விகற்பமும், சீர்வகையான் ஐந்து விகற்பமும் உடைத்து.

இது ஓரடியே நான்கடியாய் ஒருபாட்டாகித் தனி நின்று முடிதலான் முத்தகமும், எட்டடியாய் இருபாட்டாகி ஒரு பொருளின் வினை கொண்டு முடிதலாற் குளகமும், நாலடிப்பாட்டும் ஐந்தடிப்பாட்டும் ஆறடிப்பாட்டும் ஏழடிப்பாட்டும் ஆகி நிற்றலான் நான்கு விகற்பமும். ஐஞ்சீரடியும் அறுசீரடியும் பன்னிருசீரடியும் நாற்சீரடியும் எண் சீரடியும் ஆகி நிற்றலான் ஐந்து விகற்பமும் ஆயிற்று.

இவற்றுள் முத்தகம் நான்கடிப் பாட்டாதலேயன்றி ஐந்தடியும், ஆறடியும் ஆதலுடைத்து. அவற்றுள் நான்கடிப் பாட்டொன்றே ஏழடிப் பாட்டாகவும் அமையும். குளகம் எட்டடி கொண்ட இருபாட்டாதலன்றிப் பிறிதாகாமையின் ஒரு விகற்பமேயுடைத்து. நான்கடிப்பாட்டுச் சீர் விகற்பம் ஐந்தும் பெறும். ஐந்தடிப் பாட்டு ஐஞ்சீரும் அறுசீரும் என இரு விகற்பம் பெற்று ஓரடிமேல் வைப்பெனப்படும். ஆறடிப்பாட்டும் அவ்விரு விகற்பமே பெற்று ஈரடிமேல் வைப்பெனப்படும். ஏழடிப்பாட்டு அடிதொறும் நாற்சீராகி ஈற்றயல் முச்சீராகி நேரிசை ஆசிரியப்பா எனப்படும். நாற்சீரடியே இரட்டித்து எண்சீர்ப்பாட்டாம். ஆறு சீரடியே இரட்டித்துப் பன்னிருசீர்பாட்டாம்.

## *ஐஞ்சீரடிப் பாட்டு வருமாறு:*

*அம்பா லிகையத்தங் கோடலங் கஞ்சத் தனத்தனையே*
*அம்பா லிகையத்தங் கோடலங் கஞ்சத் தனத்தனையே*
*அம்பா லிகையத்தங் கோடலங் கஞ்சத் தனத்தனையே*
*அம்பா லிகையத்தங் கோடலங் கஞ்சத் தனத்தனையே*

இந்நான்கடியுடன் ஓரடிகூடின் ஐந்தடிப்பாட்டும் ஈரடி கூடின் ஆறடிப்பாட்டும் ஆகும் என்க. பின்னும் இதுவே அறுசீரடிப் பாட்டு வருவாறு:

*அம்பா லிகையத் தங்கோட லங்கஞ் சத்த னத்தனையே*
*அம்பா லிகையத் தங்கோட லங்கஞ் சத்த னத்தனையே*

*அம்பா லிகையத் தங்கோட லங்கஞ் சத்த னத்தனையே*
*அம்பா லிகையத் தங்கோட லங்கஞ் சத்த னத்தனையே*

இப்பாட்டின் அடிகளே இருமுறை தனித்தனி மடங்கிப் பன்னிரு சீரடிப் பாட்டாகு மென்க

## *நாற்சீரடிப் பாட்டு வருமாறு:*

*அம்பாலிகை யத்தங்கோ டலங்கஞ்சத் தனத்தனையே*
*அம்பாலிகை யத்தங்கோ டலங்கஞ்சத் தனத்தனையே*
*அம்பாலிகை யத்தங்கோ டலங்கஞ்சத் தனத்தனையே*
*அம்பாலிகை யத்தங்கோ டலங்கஞ்சத் தனத்தனையே*

இப்பாட்டின் அடிகளே இருமுறை தனித்தனி மடங்கின் எண்சீர்ப் பாட்டாகும் என்க.

## *ஏழடிப்பாட்டு வருமாறு:*

*அம்பா லிகையத் தங்கோ டலங்கஞ்*
*சத்த னத்த னையே அம்பா*
*லிகையத் தங்கோ டலங்கஞ் சத்த*
*னத்த னையே அம்பா லிகையத்*
*தங்கோ டலங்கஞ் சத்தனத் தனையே*
*அம்பா லிகையத்தங் கோட*
*லங்கஞ் சத்த னத்த னையே.*

இவ்வேகபாதம் இவ்வாறு அடியானும் சீரானும் பலவிகற்ப முறலாற் பாவினப் புணர்ப்பென்னுஞ் சித்திர கவியாதலுங் காண்க.

இனி இப்பாட்டின் பொருள் விகற்பம் துறை வகையான் மூன்றே ஆயினும் மிகுதி பற்றிய உரைவகையாற் பத்தும் சிறப்புப் பற்றிய குழூஉப் பொருள் வகையாற் பதினான்கும், சிறப்புப் பற்றிய வர்க்கப் பொருள் வகையான் நூறும், தெளிவு பற்றிய தனிப்பொருள் வகையான் இருநூறும், மிகுதியும் அர்த்தாதிக்கமும் பற்றிய சேகரப்பொருள் வகையாற் பதினாயிரமும், மிகுதிபற்றிய விளி விகற்ப வகையான் ஓரிலக்கமும், மிகுதி பற்றிய பயனிலை வகையாற் பத்திலக்கமும், மிகுதி பற்றிய பயனிலை விகற்ப வகையாற் கோடியும் ஆதலுடைத்து. இவ்வகை எல்லாம் தனித்தனி

எண்ணப்புகின் வரையறை கடந்து கோடியின் மேலும் பல்கலின் ஓராற்றான் ஈண்டெண்ணப் பட்டன என்க.

## உரை வகை வருமாறு

முதற் பதின்மூன்று சீர் பயனிலைப் பொருளும் ஏனைய எழுசீர் விளிப்பொருளுமாவது முதலாவது வகையுரை.

பத்துச்சீர் பயனிலையும் பத்துச்சீர் விளியுமாவது இரண்டாவது வகையுரை.

எட்டுச்சீர் பயனிலையும் பன்னிரண்டு சீர் விளியுமாவது மூன்றாவது வகையுரை.

ஆறுசீர் பயனிலையும் பதினான்கு சீர் விளியுமாவது நான்காவது வகையுரை

ஐந்து சீர் பயனிலையும் பதினைந்து சீர் விளியுமாவது ஐந்தாவது வகையுரை

மூன்று சீர் பயனிலையும் பதினேழு சீர் விளியுமாவது ஆறாவது வகையுரை

முதற்சீர் பயனிலையும் ஏனைய பத்தொன்பது சீர் விளியுமாவது ஏழாவது வகையுரை.

இறுதிச்சீர் பயனிலையும் ஏனைய பத்தொன்பது சீர் விளியுமாவது எட்டாவது வகையுரை.

இருபது சீரும் பயனிலை யாவது ஒன்பதாவது வகையுரை.

இருபது சீரும் விளியாவது பத்தாவது வகையுரை.

இவற்றுள் கூற்றுவகை இரண்டும் குளகத்திற்கும், ஏனைய முத்தகத்திற்குங் கொள்க.

எண்சீரடி முத்தகத்திற்கும் பன்னிரு சீரடி முத்தகத்திற்கும் முன்னிரண்டடிச்சீர் பயனிலையும், பின்னிரண்டடிச் சீர் விளியுமாகக் கொள்க. விளியாதலே அன்றிச் சில பொருள் எழுவாயும் செயப்படு பொருளும் ஆகி வருமாயினும் மிகுதி பற்றி ஈண்டு விளிப் பொருள் எனப் பட்டது.

விளிப் பொருளுட் பல, உரை வகையுட் பல பெற்று நடக்கும். சிலமுற்றுப் பெறும். இப்பத்து வகை உரையன்றிச் சிறுபான்மை கோடற்பாலவாய வேறு சில வகையும் உள. அவை சிலபொருட்கண் அருகி நடக்கும். அவற்றோடு ஐந்தடிப் பாட்டுரை வகையும், ஆறடிப் பாட்டுரை வகையும் எண்ணப் பல பத்தாக விரியுமாயினும் ஏனைய மிக்கு வாராமையான் மிகுதி பற்றிய உரை வகை பத்தெனப்பட்ட தென்க. இவ்வகைகளும் தனித்தனிப் பல விகற்பமுறும். அவற்றைப் பின்னர்க் காண்க.

இப்பாட்டுச் சீரானும் அடியானும் பல்வகைப் படினும் ஏனைய பாட்டெல்லாம் ஐஞ்சீர் கொண்ட நாலடிப் பாட்டே ஆதலின் அதுபற்றி இதனையும் இருபது சீருடைத்தெனக் கொண்டு உரைவகை சொல்லப்பட்டதென அறிக.

## குழூஉப் பொருள் வகை வருமாறு:

குமாரர் வகையும், அயன் வகையும், அரிவகையும், அரன் வகையும், உமைவகையும், திக்குப் பாலகர் வகையும், கோள் வகையும், புலவர் வகையும், வள்ளியோர் வகையும், பத்தினிப் பெண்டிர் வகையும்,அடியார் வகையும், ஆதுனிக மதவகையும், குரவர் வகையும், பிறவகையும் எனக் குழூஉப் பொருள் பதினான்கு வகைப்படும். நகர் வகை மலைவகை முதலாய சிறப்பாலாயவும் பிறவுண்மையிற் சிறப்புப் பற்றிய குழூஉப் பொருள் வகை பதினான் கெனப்பட்டது.

## வர்க்கப் பொருள்வகை வருமாறு:

கணபதி, வல்லவை , கந்தன், வள்ளி, தெய்வயானை, வைரவன், வீரபத்திரன், காளி, ஐயனார், மாகாளன் என இப்பத்து வர்க்கமுங் குமாரர் வகை (1-10)

அயன் , கலைமகள், அருகன், தரும தேவதை என இந்நான்கு வர்க்கமும் அயன் வகை (11-14)

திருமால், திருமகள், நிலமகள், ஆகாயவாணி, மற்சம், கூர்மம், வராகம், நரசிங்கம், வாமனன், பரசுராமன்,இராமன், பலபத்திர ராமன், கண்ணன், கற்கி, சனகாதியர், நாரதர்,

அயக்கிரீவர், மோகினி, வியாசர், தன்வந்தரி, புத்தரென இவ்விருபத்தொரு வர்க்கமும் அரிவகை(15-35)

சிவன், ஐம்பூதம், அட்டமூர்த்தம்,நந்தி என இந்நான்கு வர்க்கமும் அரன் வகை.(36-39)

உமை, கங்கை, துர்க்கை, சத்தமாதர், பஞ்சகன்னிகைகள் என இவ்வைந்து வர்க்கமும் உமை வகை. (40-44)

இந்திரன், அக்கினி, இயமன்,நிருதி, வருணன், வாயு, குபேரன், ஈசானன் என இவரும் இந்திராணி முதலிய இவர் மனைவியரும் என இவ்வெட்டு வர்க்கமுந் திக்குப் பாலகர் வகை.(45-52)

சூரியன், சந்திரன், செவ்வாய், புதன், வியாழன், சுக்கிரன், சனி, இராகு, கேது என இவரும் இவர் மனைவியரும் என ஒன்பது வகையும் நவக்கோள் வகைஒன்றும் தேவ இருடியர் வகைஒன்றும் என இப்பதினொரு வர்க்கமுங் கோள் வகை. (53-63)

அகத்தியரோடு உலோபா முத்திரையும் தொல் காப்பியனாரும் இறையனாரும் உருத்திரசன்மரும் நக்கீரனாரும் பாண்டியரும் பொற்கைப் பாண்டியனும் வள்ளுவர் முதலாயினாரும் என இவ்வெட்டு வர்க்கமும் புலவர் வகை (64-71) ததீசி, கண்ணன், குமணன் என இம்மூன்று வர்க்கமும் வள்ளியோர் வகை:(72-74)

அருந்ததி, அநசூயை, கண்ணகி, என இம்மூன்று வர்க்கமும் பத்தினிப் பெண்டிர் வகை.(75-77)

திருஞான சம்பந்தர்,திருநாவுக்கரையர், சுந்தரர், மாணிக்க வாசகர், இயற்பகையார், முதலாயினார் திருநீல கண்ட யாழ்ப்பாணர், அநுமன், பொய்கையார், கடகோபர், பெரியாழ்வார், திருமங்கையாழ்வார், திருப்பாணாழ்வார் என இப்பன்னிரண்டு வர்க்கமும் அடியார் வகை. (78-89)

இயேசு, முகம்மது என இவ்விரண்டு வர்க்கமும் ஆதுனிக மத வகை.(90-91)

ஈன்ற தாய், வளர்த்த தாய், தாயின் தந்தை, தந்தை, ஓர் உபகாரி, வித்தியாகுரு, குலகுரு என இவ்வேழு வர்க்கமும் குரவர் வகை. (92-98)

புறப் பொருளிற் காஞ்சியும் அகப்பொருளில் இயலிடங் கூறலுமென இவ்விரண்டும் பிற வகை.(99-100)

இப்பதினான்கு வகையினும் வர்க்கம் நூறாதல் காண்க.

இவற்றுட் சில பொருள் வர்க்கமுடையனவல்ல. ஆயினும் பெரும்பான்மைய வர்க்கமுடைமையின் அது பற்றி வர்க்கப் பொருள் நூறெனப்பட்டது. ஈண்டுரைத்த இந்நூறு வர்க்கமே அன்றிச் சிறப்பிலதாகவும் உரைத்தன கொண்டு தாமே உணர்பவும் பிறவுண்மையின் சிறப்புப் பற்றிய வர்க்கப் பொருள் நூறெனப் பட்டது.

## *தனிப் பொருள் வகை வருமாறு:*

மேலுரைத்த வர்க்கப் பொருளிற் பெரும்பான்மைய பொருள் தாய் தந்தை குரு சகோதரர் புத்திரர் மனைவியர் இவர் தந்தையர் இவர் மனைவியர் எனத் தெளியாப் பொருள் கொண்டு கணக்கிடல் கூடாமையில் தெளிவுபற்றிய தனிப் பொருள் இருநூறெனப் பட்டது. இதுவும் வரையறையன்று. வரையறை செய்யப்புகின் மிகும் என்க.

## *சேகரப் பொருள் வகை வருமாறு:*

மேலுரைத்த பொருள்களுட் பெரும்பான்மைய கணபதி கந்தன், கணபதி அயன், கணபதி அரி, கணபதி அரன், என்றாங்கு இருபொருளும் , கணபதி கந்தன் அயன், கணபதி கந்தன் அரி, கணபதி கந்தன் அரன் என்றாங்கு முப்பொருளும், கணபதி கந்தன் அயன் அரி, கணபதி கந்தன் அயன் அரி அரன் என்றாங்கு ஐம்பொருளும் இங்ஙனம் அறுபொருளும் எழுபொருளும் பத்துப் பொருளுமெனத் தம்முள் இயைந்து வருமாயினும் அறுபொருட் சேகரம் முதலாயின சிறுபான்மை யாகலின் மிகுதிபற்றி ஐம் பொருட் சேகரம் வரை கொள்ளப்பட்டது. இந்நான்கு சேகரத்தினுந் தனித்தனி ஐந்நூற்றின் மேற்படின் ஆயிரம் என்றும், கீழ்ப்படிற்

கணக்கிடாது தள்ளியுங் கொள்ளப் படாமையின் அர்த்தாதிக்கத்தால் கொண்டது பதினாயிரம் எனப்பட்டது.

நூறுவர்க்கத்தில் ஐம்பூதம், அட்டமூர்த்தம், சத்தமாதர், பஞ்ச கன்னியர், நவக்கோள், தொல்காப்பியர், பாண்டியர் முதலாய சில வர்க்கஞ் சேகரம் ஆதற்கியலாமையின் அவற்றை நீக்கி எண்ண இருபொருட்சேகரம் நாலாயிரத்துச் சில்லவாகும். சில்ல ஐந்நூற்றின் மேற்படாமையின் நாலாயிரமே கொண்டு இங்ஙனமே ஏனைய சேகரமுங் கொண்டு சேகரத்தொகை பதினாயிரம் எனப்பட்டது. இதுவும் வரையறையன்று. வரையறுப்பின் இன்னும் மிகும்.

### *ஏனைய விகற்பங்கள் வருமாறு:*

வர்க்க முதலாக மேற்காட்டியவற்றுட் பல்பொருள்கள் தனித்தனி பன்முறை வேறு வேறு விளிகோடலின் விளிவிகற்பம் இலக்கமாயிற்று. அவ்விகற்பங்கள் தனித்தனி பயனிலை பல கோடலிற் பயனிலை வகை பத்திலக்க மாயிற்று. அவ்வகையும் தனித்தனி பல விகற்பமுறலின் அதுபற்றி அவ்விகற்பம் கோடியெனப்பட்டது. இவையும் வரையறை யல்ல. வரையறுப்பான் புகிற் பின்னும் பல்கும் என்க.

கருப் பொருட் பாயிரம் முடிந்தது.

இனித் துறைவகையுள் முதலாவதாகிய கடவுள் வாழ்த்திற்குக் கருப்பொருள் உரைக்கற் பாற்று.

## *கருப்பொருள்*

ஐஞ்சீர் கொண்ட நாலடிப் பாட்டு

***அம்பா லிகையத்தங் கோடலங் கஞ்சத்த னத்தனையே***
***அம்பா லிகையத்தங் கோடலங் கஞ்சத்த னத்தனையே***
***அம்பா லிகையத்தங் கோடலங் கஞ்சத்த னத்தனையே***
***அம்பா லிகையத்தங் கோடலங் கஞ்சத்த னத்தனையே***

## கருத்து

இப்பாட்டு இந்நூல் இடையூறின்றி இனிது முடிந்து பன்னூல் ஆய்ந்த செந்நாப் புலவர் சிந்தையில் என்றும் நின்று நிலவுமாறும், புலவர் பாடும் புகழும் அத்தமும் வலவன் ஏவா வானவூர்தியும் எய்துமாறும் சிலேடையாற் பலப்பல தெய்வங்களையும் பெரியோரையும் வாழ்த்துதல் கருதிற் றென்க.

## குறிப்பு

இனி உத்தேசமுறையாற் கணபதி முதலாக மேற்கொண்டு பலரைத் தனித்தும் சிலரைத் தொகுத்தும் சிலரைத் தனித்தும் தொகுத்தும் உரைப்பல்.

## குமாரரர் வகையுள் முதலாவது பொருள் கணபதி

இப்பொருளின் பத்து வகை உரையுள் முதலாவது வகையின் முதலாவது விகற்பக் கருப்பொருள் உரைத்து முறையே பிறவிகற்பமும் உரைத்து ஏனைய விகற்பமும் உரைக்கப்படும்.

முதலாவது வகையின் முதலாவது விகற்பச் சொல்வகை.

1 வது அடி : அம்-பாலி-கை-அத்தம்-கொள்தல்-அங்கம் - சத்தம்-ந-தன்னை-ஏய்=சொல்பத்து.

2 வது அடி: அம்- பாலி- கை- அத்து அம்கோடல் அங்கு அஞ்சுஅத்தம்-நத்தல்- நை-ஏ: சொல் பன்னிரண்டு.

3 வது அடி: அம்பால்- இரு-ஐயத்து - அம் - கோடலம் கஞ்சத்தன் அத்தன்- ஐயேம் சொல் எட்டு.

4 வது அடி: அம்பு-ஆலி- கை- அத்தம்- கோடு- அலங்கு-அஞ்சு அத்த-ந-தன்னையே:.சொல்பத்து.

இவ்விகற்பத்தில் நான்கடியினுஞ் சொற்கள் நாற்பது. இவ்விகற்பத்தின் அருஞ்சொற் பொருள்:

1.அம்-மேகம். பாலி - புகழ். கை - ஒழுக்கம். சுத்தம் - நான்கு. கோடல்- கொள்தல். அங்கம்- ஆறும், எட்டும். சத்தம்- நாதத்துவம். தன்னை - தாய்.

2. அம்- கருணை. பாலி, நை, கோடல்- பயனிலை. அங்கு - ஆங்கு என்பதன் குறுக்கம். அத்தம் - செல்வம்.

3. அம்பால்- அம்பிகை. ஐயம்- கோழை, ஐயவுணர்வு, இரத்தல். அம்பு - நீர், அழகு. அத்தன் - தலைவன், பாதியாயவன்.

4. அம்பு- நீர், ஆலி - மழை, ஆலங்கட்டி. கை- கைசெயல். அத்தம் - பொன், பொன்மலை, காடு. கோடு- மலை, கொம்பு, தன்னை - தந்தை.

### குறிப்பு

இனி முதலாவது வகையின் விகற்ப மெல்லாம் தொகுத்துக் காட்டுவல்.

## சொல்வகை

*முதலாவது அடியின் முதற்சீர் விகற்பம் இருவகை:*

1. அம்- பாலி- கை 2. அம்பாலிகை.

### மூன்றாஞ்சீர் இருவகை:

1. கொள்தல் 2. கோடு - அல்

### ஏனைச் சீர் ஏழு வகை:

1. சத்தம் - ந- தன்னை- ஏய்

2. நீ தன்னை - ஏ.

3. நத்து - அன்னை- ஏய்

4. நத்து- அன்னை- ஏ

5. நத்தம்- நத்தன் - ஐ - ஏய்.

6. சத்தம் - நத்தன்- ஐ - ஏ

7. சத்தம் - நத்தனை - ஏய்

### இரண்டாவது அடியில் முதற்சீர் ஒழிந்த ஏனைய பதினேழு வகை:

1. கை- அத்து - அம்- கோடல்- அங்கு - அஞ்சு - அத்தம் - நத்தல்

2. கை- அத்து - அம்- கோடல்- அம்- கஞ்சம் - தனத்து- அல்.

3. கை - அத்து - அம் - கோடல் - அங்கு - அஞ்சு - அகனத்து - அல்

4. கை - அத்தம்- கோடல்- அங்கு - அஞ்சு - அத்தம்- நத்தல்.

5. கை - அத்தம் - கோடு - அலம் - கஞ்சத்து - அன்னத்து - அல்.

6. கை - அத்தம்- கோடு - அலம் - கஞ்சம் - தனத்து- அல்.

7. கை - அத்தம் - கோடலம் - கஞ்சத்து - அன்னத்து - அல்

8. கை - அத்தம் - கோடலம் - கஞ்சத்தனத்து- அல்

9. கை - அத்தம் - கோடல் - அம் - கஞ்சத்து - அன்னத்து - அல்

10. கை - அத்தம்- கோடல்- அம் - கஞ்சத்தனத்து - அல்

11. கையத்து - அம்- கோடலம் - கஞ்சத்தனத்து - அல்.

12. கையத்து - அம் - கோடலம்- கஞ்சத்து- அன்னத்து- அல்.

13. கையத்து- அங்கு - ஓடலம் - கஞ்சத்தனத்து - அல்.

14. கையத்து - அங்கு - ஓடலம்- கஞ்சத்து - அன்னத்து - அல்.

15. கையத்து - அங்கு - ஓடல் - அங்கு - அஞ்சு - அ - தனத்து - அல்.

16. கையத்து - அங்கு - ஓடல் - அம் -கஞ்சத்தனத்து - அல்.

17. கையத்து -அங்கு - ஓடல் - அம் - கஞ்சத்து - அன்னத்து - அல்.

### *மூன்றாவது அடி முற்பகுதி இருவகை:*

1. அம் - கோடலம். 2. அங்கு -ஓடலம்.

### *பிற்பகுதி பதினொரு வகை:*

1. கஞ்சத்தன் - அத்தன் - ஐயே.

2. கஞ்சத்தன் - நத்தன் - ஐயே.

3. கஞ்சத்த - நத்தன் - ஐயே.

கஞ்சத்து - அம் - நத்தன் - ஐயே.

கஞ்சத்து - அன்னத்தன் - ஐயே.

6. கம் - சத்தம் - நத்தன் - ஐயே.

7. கஞ்சம் - தனத்தன் - ஐயே.

8. கஞ்சம் - தனம் - தன்னை - ஏய்

9. கஞ்சத்து - அன்னம் - தன்னையே.

10. கஞ்சத்த - நந்து - அன்னையே.

11. கஞ்சத்தன் - அத்தனையே.

## நான்காவது அடி முற்பகுதி ஒன்பது வகை.

1. அம்பு - ஆலிகை - அத்தக்கோடு - அலங்கு - அஞ்சு - அத்த.
2. அம்பு - ஆலி - கை -அத்தம் - கோடு - அலங்கு - அஞ்சு - அத்த.
3. அம் - பாலி - கயத்து - அம் - கோடு - அலங்கு - அஞ்சு - அத்த.
4. அம்பு - ஆலி - கயத்து - அம் - கோடு - அலங்கு - அம் - சத்த.
5. அம் - பாலி - கையத்து - அம் - கோடு - அலங்கு - அம்- சத்த.
6. அம்பு - ஆலி - கையத்து - அம்- கோடு - அலங்கு - அம் - சத்த.
7. அம்பு - ஆலிகை - அத்தம் -கோடு - அலங்கு - அம் - அ -சத்த.
8. அம்பாலிகை - அத்தம் - கோடு - அலங்கு - அஞ்சு - அத்த.
9. அம்பால் - இகை - அத்தம் - கோடு - அலங்கு - அம் - சத்த.

இப்பகுதி இன்னும் பல்வகைப்படும். அவற்றை ஈண்டு உரைத்தன கொண்டும் இனி உரைப்பன கொண்டும் தாமே உரைத்துக் கொள்க.

## *பிற்பகுதி விகற்பம் ஆறுவகை :*

1. அஞ்சத்த - ந - தன்னையே.

2. அஞ்சத்த - நந்து - அன்னையே.

3. அஞ்சத்த - நத்து - அன்னையே.

4. அஞ்சத்தன் - நத்து - அன்னையே.

5. அஞ்சத்தன் - அத்தனையே.

6. அஞ்சத்தன் - ந - தன்னையே.

## *ஏனைய விகற்பங்களின் அருஞ்சொற் பொருள்:*

அம்பாலிகை அத்தம் = தருமதேவதையின் செல்வமாகிய அறம். அங்கம் =அழுக்காறு, அவா , வெகுளி, இன்னாச் சொல்இன்மை. கோடு - அல் = கோடுதல் இல்லாத. ஏ - அசை. கை - அத்தம் = வெறுக்கின்ற செல்வம். கஞ்சம் =நீர் ; அன்னம்; சோறு. கஞ்சம் = தாமரை; நீர்; பதுமநிதி. நந்து = சங்கு; சங்கநிதி . கம்= விண். சத்தம் = இலக்கணம். அத்தங்கோடு = அத்தமுங்கோடும். கயம்= யானை; பெருமை. அம்பு = மேகம். ஆலித்தல்- களித்தல். அத்து= சாரியை. சத்து=உண்மை. சத்தன்= மெய்ப்பொருள்; கோடும் சத்தனும் ஆகிய கணபதி. அத்தன் = செல்வப் புதல்வன். இகை=கொடை; ஈகையின் குறுக்கமுமாம். ந- தன்னையே= அஞ்சத்தனுக்கு உயர்ந்த தாயே; தந்தையே. நத்து - அன்னையே = அஞ்சத்தனே அவனத்துகின்ற தேவியாகிய அன்னையே. அஞ்சத்தன் அத்தனையே = அஞ்சத்தனாகிய அத்தனே; அஞ்சத்தனுக்குத் தந்தையாகிய சிவனே; அஞ்சத்தனுக்குத் தம்பியாகிய கந்தனே; வைரவனே; வீரனே; ஐயனே என்க . அத்தன் = தந்தை, குரு, கடவுள், மூத்தோன், செல்வமன்னோன், கையன்ன துணைவன், சகோதரன்.

### குறிப்பு.

விளிபொருட் சீர் ஏழுள் மூன்றாவதடி ஈற்றுச்சீர் இரண்டும் பொதுவிளி; ஈற்றடிச் சீரை நந்துஞ் சிறப்பு விளி. சிறப்பு விளி விகற்பங்கள் எல்லாம் தனித்தனிக் கொள்க. தனித்தனிக் கொள்ளுமிடத்துப் பொது விளி விகற்பங்களுட்

சிறப்பு விஷி விகற்பங்களுக்கு மாறாவன விடுத்து மாறின்றி அமைவன கொள்க.

கணபதியின் முதலாவது வகைக் கருப்பொருள் முடிந்தது. கற்போர்க்கு எளிதாதற்பொருட்டுக் கருப்பொருள் முடியின் அன்றி இடை இடை ஆங்காங்கு உரை எழுதத்துணிந்தாம்.

## *ஏக பாதக் கருப்பொருளுரை*

### *உரைக் காப்பு*

*இருபாதத் தெழுபுவியு மளந்தானு மளக்கவொணா*
*விருந்தாநத்தேய்*
*குருபாதந் தலைமிசைக்கொண் டரசஞ்சண்*
*முகனெனும்பேர்க் குரிசில் பாடும்*
*ஒருபாதத் தொருநூற்று முப்பாட்டுக் குரைவகுப்ப*
*வுளத்தெ ழுந்து*
*வருபாத வன்றனையொத் திருள்சீக்கு மொருத்தனிரா*
*மயன்றாள் காப்பே.*

### இதனுரை

ஒருத்தல் நிராமயன் எனவும், ஒருத்தன் நிராமயன் எனவும் கொள்க. ஒருத்தல் -யானைமுகக் கடவுள். ஒருத்தன் - ஒப்பற்ற கடவுளுங் குருவும். ஒரு - தன்- நிராமயன் எனக் கொண்டு தன் என்பதைச் சாரியை ஆக்கினும் அமையும். ஒரு - ஆடு .ஒரு நிராமயன் - ஆட்டு வாகனமுடைய கந்தனும் அக்கினி தேவனும். ஆதவன் ஆகிய தன்னைத்தானே ஒத்து இருள் கடியும் ஒருத்தனாகிய நிராமயன் எனவும் உரைக்க. ஒருத்தல் நிராமயன் எனற்கு ஒருத்தலை வாகனமாகவுடைய நிராமயன் என உரைத்துச் சாத்தன், இந்திரன் முதலாயினார்க்கு ஆக்கலும் ஒன்றும்.

இருபாதத்து எழுபுவியும் அளந்தோர் - திருமாலும் வள்ளுவரும். மாபலி கொடுத்த தானத்தை அளந்த திருமாலும் அளக்க முடியாத ஞான தானத்தையுடைய குருவென்க.

இருபாதமுடைய குறளால் எழுபுவியும் அளந்த வள்ளுவனாரும் இதனை அளத்தற்கு எண்ணும்படி ஒள்ளிய

நாவினது விருந்தாகப் பாடிய ஏகபாத நூற்றந்தாதி எனவும் உரைக்க. அளக்க ஒண்ணா விருந்தெனினும் அமையும்.

விருந்தா - விருந்தாக என்க. விருந்து - புதுமை. இப் பொருட்கு நந்து ஏய் குரு வெனக் கொண்டு சங்கம் போன்ற தூய குருவென்க. இப்பாட்டு ஏகபாத உரைக்குக் காப்பாதலே யன்றி நூலுக்கு உரைகாரன் செய்த பாயிரமும் ஆம்.

நூலாசிரியர் எழுதிய கருப்பொருள் கொண்டு இந்நூலுக்குப் பதவுரையும், உரைவிகற்பங்களும், விசேடவுரையும், பொழிப்புரையும் ஆங்காங்கு எம் உணர்ச்சிக்கு எட்டிய அளவில் எழுதுதும்.

## *முதலாவது வகையின் பதவுரை*

அம் பாலி - குறியெதிர்ப் பின்றிக் கொடுக்கும் மேகத்தின் புகழும் கை - ஒழுக்கமும்

அத்தம் - ஒழுக்கத்தின் பயனாக எய்துகின்ற அறம் பொருள் இன்பமும் வீடும்.

கொள்தல் அங்கம் - அப்புருடார்த்தம் எய்துதற்குக் கருவியாகக் கொள்ளுதலையுடைய வேதாங்கம் ஆறனது வளர்ச்சியும்,யோகாங்கம் எட்டனது முயற்சியும்.

சத்தம் - யோக முதிர்ச்சியிற் காணப்படுகின்ற நாத தத்துவ தரிசனமும்

ந தன்னை ஏய் அம் - அத்தரிசனத்தின் பயனாக எய்துகின்ற உயர்வுடைய அன்னையின் கருணை போன்று எல்லா உயிர்களிடத்துஞ் செல்லுகின்ற அழகிய கருணையும்

பாலி - எமக்குளவா மாறு பாலித் தருள்க.

(கை அத்து அம்கோடல்) அத்து அம் கோடற் கை - சிவந்த அழகிய காந்தளன்ன கையினையுடைய மாதரையும்

அங்கு அஞ்சு அத்தம் - அஞ்சத் தக்க பொருளையும்

நத்தல் நை - விரும்புதலை ஒழித்தருளுக.

அம்பால் இரு ஐயத்து அம் கோடலம் - அம்பு போலக் கொல்லும் கோழையாகிய நீரால் முத்தி நெறி கோடி இறவேம்;

கஞ்சத்தன் அத்தன் ஐயே - பிரமனுக்கும் அவன் தந்தை யாகிய மாலுக்குந் தலைவனே; பிரமனை ஒரு பாதியிற் கொண்ட உருத்திரனுக்குத் தலைவனே,

அம்பு ஆலி கை- நீரும் மழையும் அலங்கரிக்கின்ற; அத்தக்கோடு அலங்கு - பொன்மலை போல விளங்குகின்ற; அஞ்சு அத்த - ஐந்து கையினையுடைய கணபதியே; ந தன்னையே - உயர்ந்த தந்தையே. (எ-று)

## உரைவிகற்பம்

### முதலாவது அடி

அம்பாலிகை எனக் கொள்ளுமிடத்துத் தரும தேவதையின் செல்வமாகிய அறமும் அவ்வறத்தினது கோடுதல் இல்லாத அங்கமாகிய அழுக்காறு அவா வெகுளி இன்னாச் சொல் இன்மையும், அவ்வறத்துக்குத் துணைக் கருவியாகிய இந்திரனை ஒத்த செல்வமும் பாலிக்க. மாதரையும் பொருளையும் நத்தலை ஒழிக்க என்க.

சத்தம் நத்தன் ஐ எனற்கு ஐந்திரம் என்னும் இலக்கண நூலை விரும்பிச் செய்த ஐயனாகிய இந்திரன் என்க. சத்தம் நத்தனை ஏய் எனற்கு இந்திரனை ஒத்த என்க. இவ்வுரைக்கு மூன்றாவது அடியில் அங்கு ஓடலம் எனக் கொண்டு ஐய உணர்ச்சியால் பிறரிடம் செல்லேம் என்க. இரத்தல் தொழில் கொண்டு பிறரிடம் செல்லேம் எனவும் உரைக்க. நத்து அன்னை எனற்கு விரும்புகின்ற அன்னை என்க.

ஏ அசையாகுமாயின் அன்னை அம், தன்னை அம், நத்தன் ஐ அம் என்புழி அன்னையின் அம், தன்னையின் அம், சத்த நத்தனாகிய ஐயின் அம் என ஆறாவது விரிக்க.

இவ்விகற்பங்களுட் பின்வருமுறைக்கு மாறின்றி இயைவ வற்றை இயைத்துக் கொள்க.

## இரண்டாவது அடி

முதலாவது விகற்பம் மேல் உரைத்தாம்.

2. கை அத்து அம் கோடல் அம் கஞ்சத்தனத்து அங் நை - கையாகிய சிவந்த அழகிய காந்தளையும் அழகிய தாமரை அரும்பு அல்லது கைத்தாளம் போன்ற தனத்தையும் உடைய மாதர்களது ஆசை என்னும் இருளை ஒழிக்க என்க.

3. கை அத்து அம் கோடல் அங்கு அஞ்சு அ தனத்து அல் நை-கையாகிய காந்தளையுடைய மாதராசையும், அஞ்சத் தக்க அச் செல்வத்தின் ஆசையும் ஆகிய இருளை ஒழிக்க என்க.

4. கை அத்தம் - வெறுக்கத்தக்க பொருளையும்; கோடல் அங்கு அஞ்சு அத்தம் - காந்தள் அஞ்சுகின்ற கையினையுடைய மாதரையும்; நத்தல் நை - விரும்புதலை ஒழிக்க என்க.இவ்வுரையை ஈற்றடியில் அஞ்சு அத்த எனக் கையை உணர்த்தும் பொருட்குக் கொள்ளாது ஏனைய விக்ற்பங்களுக்குக் கொள்க.

5. கை அத்தம் கோடு அலம் கஞ்சத்து அன்னத்து அல் நை - வெறுக்கத்தக்க ( தீ நெறியால் வந்த ) பொருள் மேலும் தீ நெறியால் வந்த மாறுபாட்டையுடைய துன்பத்தை விளைக்கின்ற நீரும் உணவும் என இவற்றின் மேலும் உளதாகும் ஆசையாகிய இருளை ஒழிக்க என்க. இவ்வுரைக்குக் கோடல் அங்கம் எனவும், ஐயத்து அங்கு ஓடலம் எனவும் கொள்க.

6. கை அத்தம் கோடு அலம் கஞ்சம் தனத்து அல் நை- வெறுக்கின்ற தீநெறிப் பொருளாலும் மாறு பாட்டையுடைய துன்பத்தை விளைக்கின்ற மாதராலும் **விளைகின்ற தீவினை** இருளை ஒழிக்க என்க.

7. கை அத்தம் கோடலம்- வெறுக்கத் தக்க பொருளாசையான் மனக்கோட்டமடையேம். கஞ்சத்து அன்னத்து அல் நை-நீராலும் உணவாலும் உளதாகும் ஆசையாகிய இருளை ஒழிக்க என்க.

8. கை அத்தம் கோடலம் கஞ்சம் தனத்து அல் நை - பொருளாசையிற்கோட்டமடையேம்; கஞ்சமன்ன தனத்தாரது ஆசையை ஒழிக்க என்க.

9. கை அத்தம் கோடல் -நூலோர் வெறுக்கின்ற தீநெறிப் பொருளைக் கொள்ளுதலும், அம் கஞ்சத்து அன்னத்து - அத்தகைய நீரும் உணவும் கொள்ளுதலாலும் உளதாகின்ற. அல் நை- தீ வினையாகிய இருளை ஒழிக்க என்க.

இவ்வுரைக்குக் கோடு அல் அங்கமெனவும், ஐயத்து அங்கு ஓடலம் எனவும் கொள்க.

10. கை அத்தம் கோடல் அம் கஞ்சத் தனத்து அல் நை- தீநெறிப் பொருளைக் கொள்ளுதலாலும் மாதராலும் விளைகின்ற இருளை ஒழிக்க என்க.

11-12 கையத்து அம் கோடலம் - நூலோர் வெறுக்கின்ற தீநெறியால் மனக் கோட்டம் அடையேம் என்க.ஏனைய மேல் உரைத்தாங்கும் கொள்க.

13-14. கையத்து அங்கு ஓடலம் - நூலோர் வெறுக்கின்ற தீநெறியிற் செல்லேம். ஏனைய மேல் உரைத்தன கொள்க.

15-17 கையத்து அங்கு ஓடல் நை - தீநெறியிற் செல்லுதலை ஒழிக்க என்க. ஏனைய மேல் உரைத்தன கொள்க.

இப்பதினேழு வகைகளுட் பின்னும் முன்னும் வரும் உரைக்கு மாறின்றி இயைபவற்றை இயைத்துக் கொள்க.

## மூன்றாவது அடிப் பிற்பகுதி

1. கஞ்சத்தன் அத்தன் ஐயே - தாமரை நண்பனாகிய சூரியனும் அவன் தந்தையாகிய காசிப முனிவரும் பூசித்த ஐயனே என மற்றொரு பொருளும் உரைத்துக் கொள்க.

2. கஞ்சத்தன் நத்தன் ஐயே - தாமரையில் வாழும் பிரமனுக்கும் சங்கமுடைய திருமாலுக்கும் தலைவனே. தாமரை வடிவமுடைய நிதியுடையானும் சங்க

வடிவமுடைய நிதியுடையானும் ஆகிய குபேரனுக்குத் தலைவனே என்க.

இவ்வுரை கொள்ளுமிடத்துக் கஞ்சத்தனம் - தாளம் போன்ற தனம் என்க. இன்னுந் தாமரை நண்பனாகிய சூரியனுக்கும் இராக் காலத்தையுடைய சந்திரனுக்குந் தலைவனே எனவும் கூறுக. நத்தம்- இரவு.

3. கஞ்சத்த நத்தன் ஐயே - நீரின் கண்ணதாகிய சங்கு ஏந்திய மாலுக்குத் தலைவனே, நீரின்கண் ஆக்கத்தையுடைய வருணனுக்குத் தலைவனே என்க.

4. கஞ்சத்து அம் நத்தன் ஐயே - நீரின் கணுள்ள அழகிய சங்கேந்திய மாலுக்குத் தலைவனே, நீரின்கண் அழகிய ஆக்கமுடைய வருணனுக்குத் தலைவனே என்க.

5. கஞ்சத்து அன்னத்தன் ஐயே - தாமரையில் வாழ்வோனாகிய அன்னப் பறவையையுடைய பிரமனுக்குத் தலைவனே, நீரின் கண்ணதாகிய அன்னப் பறவையையுடைய பிரமனுக்குந் தலைவனே என்க.

6. கம்சத்தம் நத்தன் ஐயே- வானுலகத்துள்ள ஐந்திரம் என்னும் இலக்கண நூலை விரும்பிச் செய்த இந்திரனுக்குத் தலைவனே என்க.

7. கஞ்சம் தனத்தன் ஐயே - தாமரை வடிவமுடைய தனத்தையுடைய குபேரனுக்குத் தலைவனே என்க. இவ்வுரைக்குக் கஞ்சத் தனத்து அல் எனலும், அங்கு அஞ்சு அத்தனத்து அல் எனலும் கொள்ளற்க.

8. கஞ்சத்தனம் தன்னை ஏய் - (இதற்கு ஈற்றடியில் அஞ்சத்தன் நத்து அன்னையே எனக் கொண்டு) கஞ்சமன்ன தனங்களையுடைய ஒப்பாவார் பிறர் இன்மையால் தன்னைத் தானே ஒத்த அஞ்சத்தன் விரும்புகின்ற தேவியும் எம் அன்னையும் ஆகிய சித்தியே புத்தியே வல்லவையே என்க. அஞ்சத்தனுக்கு விருப்பமுடைய தாயாகிய உமாதேவியே என்றும் உரைத்துக் கொள்க.

9. கஞ்சத்து அன்னம் தன்னை ஏய் - கஞ்சத்தில் வசிக்கும் அன்னம் போன்ற நடையினையுடைய தன்னைத் தானே ஒத்த அஞ்சத்தன் நத்துகின்ற அன்னையே என்க.

10.கஞ்சத்த நந்து அன்னையே - நீரில் வாழும் வலம்புரிச் சங்கம்அன்ன தூயோய் என்க. இவ்வுரைக்கு ஈற்றடியில் நந்து அன்னை என்றும் விகற்பம் கொள்ளற்க.

11. கஞ்சத்தன் அத்தனையே- பிரமனுக்குத் தலைவனே என்க. இப்பதினொரு விகற்பங்களுட் பின்னும் முன்னும் வரும் உரைகட்கு மாறின்றி இயைவவற்றை இயைத்துக் கொள்க.

## *ஈற்றடி முற்பகுதி*

முதலாவது விகற்பம் மேல் உரைத்தாம்.

2. அம்பு ஆலி கை அத்தம் கோடு அலங்கு அஞ்சு அத்த - நீரும் மழையும் அலங்கரிக்கின்ற மேருமலையாகிய ஏடும் கொம்பாகிய எழுத்தாணியும் விளங்குகின்ற ஐங்கரனே என்க.

3. அம் பாலி கயத்து அம் கோடு அலங்கு அஞ்சு அத்த- அழகிய புகழுடைய யானைமுகமும் அழகிய கொம்பும் விளங்குகின்ற ஐங்கரனே எனவும், அழகிய புகழுடைய பெரிய அழகிய மலை போல விளங்குகின்ற ஐங்கரனே எனவும், புகழுடைய யானையாகிய மலையே விளங்குகின்ற ஐங்கரனே எனவும் மூவகை உரைக்க.

4. அம்பு ஆலி கயத்து அம் கோடு அலங்கு அஞ்சு அத்த - மேகம் போலக் களிக்கின்ற யானை முகத்தையுடைய கொம்பு விளங்குகின்ற ஐங்கரனே எனவும், பெரிய கொம்பு விளங்குகின்ற ஐங்கரனே எனவும், மேகங்கள் கவிந்து களிக்கின்ற பெரிய அழகிய மலைபோல விளங்கும் ஐங்கரனே எனவும், மேகம்போலக் களிக்கின்ற யானையாகிய மலையே ஐங்கரனே எனவும் நால்வகை உரைக்க.

5. அம் பாலி கையத்து அம் கோடு அலங்கு அம் சத்த புகழுடைய கையின்கட் கொம்பு விளங்குகின்ற அழகிய மெய்ப்பொருளே என்க.

6. அம்பு ஆலி கையத்து அம் கோடு அலங்கு அம் சத்த- மேகம்போற் களிக்கின்ற சத்தன் எனவும், கையிற் கோடு விளங்குஞ் சத்தன் எனவும் உரைத்துக் கொள்க.

7. அம்பு ஆலி கை அத்தக்கோடு அலங்கு அம் சத்த- மேகம்போற் களிக்கின்ற கையினையுடைய பொன் மலையே, விளங்குகின்ற அழகிய சத்தனே என்க.

8. அம்பாலிகை அத்தம் கோடு அலங்கு அஞ்சு அத்த - உமாதேவியின் செல்வப் புதல்வன் ஆகிய கொம்பு விளங்குகின்ற ஐங்கரனே,மலைபோல விளங்கும் ஐங்கரனே என்க.

9. அம்பால் இகை அத்தம் கோடு அலங்கு அம் சத்த மேகம்போற் கொடுக்கின்ற கையின்கட் கொம்பு விளங்குகின்ற அழகிய சத்தனே என்க.

இவ்விகற்பங்களை ஏனைய வகைகளுக்கும் கொள்க.

## ஈற்றடிப் பிற்பகுதி

முதலாவது விகற்பம் மேல் உரைத்தாம்

2. அஞ்சத்த நந்து அன்னையே - அஞ்சத்தனாகிய கணபதியே வலம்புரிச் சங்கம் அன்ன தூயோனே,

3. அஞ்சத்த நத்து அன்னையே - அஞ்சத்தனாகிய கணபதியே, அவன் நத்துகின்ற தேவியும் எம் அன்னையுமாகிய சித்தியே புத்தியே வல்லவையே,

4. அஞ்சத்தன் நத்து அன்னையே - அஞ்சத்தன் நத்துகின்ற தேவியாகிய அன்னையே,

5. அஞ்சத்தன் அத்தனையே - அஞ்சத்தனாகிய அத்தனே, அஞ்சத்தனுக்குத் தந்தையாகிய சிவனே, அஞ்சத்தனுக்குத் தம்பியாகிய கந்தனே வைரவனே, வீரனே, ஐயனே.

6. அஞ்சத்தன் ந தன்னையே - அஞ்சத்தனுக்குயர்ந்த தந்தையாகிய சிவனே, அஞ்சத்தனுத்குயர்ந்த அன்னையாகிய உமையே.

இவ்வறுவகையையும் அஞ்சு அத்தன் எனவும் அம் சத்தன் எனவும் வருகின்ற ஈற்றடிவிகற்பம் ஒன்பதொடும் ஒட்டுக.

## *விளிவிகற்பங்களின் பொழிப்புரை.*

அயன் மால் உருத்திரன் குபேரன் வருணன் இந்திரன் சூரியன் காசிபன் இவர்களுக்குத் தலைவனும், நந்தினை அன்னாயும், அஞ்சத்தனும் தந்தையுமாகிய கணபதியே என்று பாலி முதலாய பயனிலை விகற்பங்களுள் இயைவன கூட்டி முடிப்பது விளிப் பொருளின் முதலாவது விகற்பம்.

அயன் மால் உருத்திரன் குபேரன் வருணன் இந்திரன் சூரியன் காசிபன் இவர்களுக்குத் தலைவனும் அஞ்சத்தனும் நந்தினை அன்னாயும் ஆகிய கணபதி என்று பாலி முதலாய பயனிலை விகற்பங்களுள் இயைவன கூட்டி முடிப்பது விளிப்பொருளின் இரண்டாவது விகற்பம்.

அயன் மால் உருத்திரன் குபேரன் வருணன் இந்திரன் சூரியன் காசிபன்இவர்களுக்குத் தலைவனும் நந்தினை அன்னாயும் அஞ்சத்தனும் ஆகிய கணபதியே. கணபதி நத்தும் அன்னையாகிய சித்தியே புத்தியே வல்லவையே என்று பயனிலை விகற்பங்களுள் இயைவவற்றைத் தனித் தனி கூட்டி வினை முடிவு செய்வது விளிப்பொருளின் மூன்றாவது விகற்பம்.

நந்தினை அன்னாயும் அஞ்சத்தன் நத்துகின்ற கஞ்சமன்ன தனமுடைய அன்னையும் அல்லது அஞ்சத்தனத்துகின்ற கஞ்சத்து அன்னம் போன்ற தன்னையேய்ந்த அன்னையும் ஆகிய சித்தியே புத்தியே வல்லவையே என்று பயனிலை விகற்பங்களுள் இயைவன கூட்டி முடிப்பது விளிப் பொருளின் நான்காவது விகற்பம். உருத்திராதிபர் தலைவனும் நந்தினை அன்னாயும் அஞ்சத்தனுக்கு அத்தனுமாகிய கணபதியே என்பது ஐந்தாவது விக்றபத்தின் முதலுரை.

மாலாதியர் தலைவனும் நந்தினை அன்னாயும் அஞ்சத்தனுக்குத் தந்தையுமாகிய சிவனே என்று பயனிலை விகற்பங்களுள் இயைவன கூட்டி முடிப்பது ஐந்தாவது விகற்பத்தின் இரண்டாவதுரை.

இவ்வுரையில் கஞ்சத்தன் அத்தனையே. எனக் கொண்டு கஞ்சத்தனைப் பாதி வடிவத்திற் கொண்டோனே எனவும் உரைக்க.

மாலாதியர் தலைவனும் நந்தினை அன்னாயும் அஞ்சத்தனுக்குத் தம்பியுமாகிய கந்தனே என்று பயனிலை விகற்பங்களுள் இயைவன கூட்டி முடிப்பது ஐந்தாவது விகற்பத்தின் மூன்றாவதுரை.

இவ்வுரையில் கஞ்சத்தன் அத்தன் ஐயே எனற்குக் கஞ்சத்தனைப் பாதியாக உடைய சிவனுக்குக் குருவே என்றும் உரைத்துக் கொள்க.

இங்ஙனம் அஞ்சத்தனுக்குத் தம்பியாகிய வைரவனே வீரபத்திரனே, சாத்தனே என உரைப்பன ஐந்தாவது விகற்பத்தின் நான்காவது உரையும் ஐந்தாவது உரையும் ஆறாவது உரையுமாம்.

அஞ்சத்தனுக்குத் தந்தையாகிய சிவனே எனவும், அஞ்சத்தனுக்குத் தாயாகிய உமையே எனவும் உரைப்பன ஆறாவது விகற்பத்தின் முதலுரையும் இரண்டாவதுரையுமாம். இவ்விகற்பங்களைப் பின்னும் ஒட்டுக.

## உரைக்குறிப்பு

இங்ஙனம் ஈற்றடி முற்பகுதி விகற்பம் ஒன்பதுடன் பிற்பகுதி விகற்பம் ஆறும் உறழச் சிறப்பு விளிப்பொருள் விகற்பம் ஐம்பத்து நான்காயிற்று. சில்சொல் பல்கருத்துடைமையிற் கருத்துவகை பற்றி ஈண்டு எண்ணிலம். சிறப்பு விளிப் பொருள் விகற்பம் ஐம்பத்து நான்கும் பொது விளிப் பொருள் விகற்பம் பதினொன்றிற் பலவற்றொடு தனித்தனி இயைந்து பன்னூறு வகைப்படும். அவையும் பயனிலை வகையாலும் அவற்றின் விகற்பத்தாலும் பல்லாயிரம் வகைப்படும். இவை கணபதி வர்க்கத்தின்

முதலாவது வகை உரையின் விகற்பங்களாம். இவ்வாறே ஏனைய ஒன்பது வகை உரைக்கும் எண்ணப் பல பதினாயிர விகற்பமாம். இங்ஙனம் ஏனைய பொருளுக்கும் எண்ண உரைவிகற்பம் கோடியின் மேலாதல் உணர்க.

## *விசேடவுரை*

இவ்வுரையில் முதற் பதின்மூன்று சீர் பயனிலையும் ஏனைய ஏழுசீர் விளியுமாதல் காண்க.

"தோன்றிற் புகழொடு தோன்றுக" என்பதால் புகழை முற்கூறினார். பல்வகைப் புகழினும் கொடைப் புகழே சிறந்த தாகலானும் கொடையினும் கைம்மாறு கருதாக் கொடையே சிறந்தது ஆகலானும் மேகம் போற் கொடுக்கும் கொடையான் வரும் புகழென்றார்.

எப்புகழும் ஒழுக்கம் பிழைத்தால் அழியும் ஆகலானும், ஒழுக்கமின்றிப் புருடார்த்த மெய்தாமையானும், புருடார்த்தங்களில் அறம் பொருள் இன்பம் அடைதற்கு நூலுணர்ச்சியும் வீடடைதற்கு யோக முதிர்ச்சியும் இன்றியமையாது வேண்டும் ஆகலானும் யோகானுபவத்திற்குச் சான்று நாத தரிசனம் ஆகலானும், அங்ஙனம் யோக முதிர்ச்சி இன்றிப் பெருங்கருணை அமையாமையானும் அவற்றை முறையே கூறிப் பாலிக்க என்றார். "அவாப் பிறப்பீனும் வித்து" ஆகலின் அது புகழ் முதலியவற்றை அழித்துப் பிறப்பீனும் எனக் கருதிப் புகழ் முதலிய பாலித்தலொடு அவா நீக்கலும் வேண்டும் என்றார்.

அவாப் பிறவாற்றானுந் தோன்று மாயினும் இயற்கையும் மிகுதியும் சிறப்பும் நோக்கிப் பெண்ணாசை பொன்னாசை எனக் கூறினார்.

இங்ஙனம் எய்தின் "மருளறு செய்தி மூவகைக் காலத்தும்" உடையராய் இறப்பின்றிச் சிறப்பொடு நிலைபெறல் தேற்றம் ஆகலானும் வாதம் முதலாய மூன்றனுள் உயிர் பிரிப்பது ஐயமே ஆகலானும் பாலிநை என வேண்டு கொண்டு அவற்றை அடுத்து ஐயத்தாற் கோடல மென்றார். அம் என்பது புகழை அடுத்து நிற்றலான் மேகத்தை உணர்த்திற்று.

பால் -. வெண்மை. பாலி வெண்மையுடையது அது ஈண்டுப் புகழை உணர்த்திற்று. "ஒப்பனை படையுறுப் பொழுக்கஞ் சிறுமை, கரமும் பின் பிறந்தாளுங் கையே" எனப் பல்பொருள் உணர்த்தும் ஆயினும் சார்பு நோக்கிக் கையினை ஒழுக்க மென்றார்.

நக்கீரன் என்புழிப் போல நத்தன்னை என்பதில் நகாரம் உயர்வு குறித்து வந்தது. அஃதிடைச் சொல் ஆதலின் ஈற்றடியினும் ந தன்னை எனக் கொள்ளப்பட்டது. அன்றி வேறு வேறாய பிற விகற்பங் கொள்ளினும் அமையும்.

தன்னை - இடைக்குறை. குற்றமின்றி மக்களைச் சபித்த காசிபன் மனைவியாகிய சுத்திருப் போல்வாரும் உண்மையின் அவரை நீக்கற்கு நத்தன்னை என்றார். சத்தம் நத்தனை என்ப நிலைமொழி ஈற்று மகரம் கெட்டுச் சத்த நத்தனை எனப் புணர்ந்து நகாரம் னகாரமாக மயங்கிச் சத்தனத்தனை என நின்றன. இங்ஙனம் நகாரமும் னகாரமும் திரிபு யமகம் சிலேடை முதலாய செய்யுளுட் பெருவரவினவாக மயங்கலை ஆண்டுக் காண்க. இவ்விதி "*கிளந்த வல்ல செய்யுளுள் திரிநவும்*" *என்ற புறனடைச் சூத்திரத்தாற் கொள்க.*

'மயல்' என்பதன் அகரம் ஐகாரமாக மயங்கி 'மையல்' என நிற்பினும் 'அகம்' என்பதன் மகாரம் னகாரமாக மயங்கி 'அகன்' என நிற்பினும் பொருள் வேறுபடாமை போலச் செய்யுளுள் நகார னகாரங்கள் தம்முள் மயங்கினும் பொருள் வேறுபாடு இன்றென உணர்க.

தாய்க்குக் கருணையே அழகாகலிற் கருணையை 'அம்' என ஆகு பெயராற் கூறினார்.

கை அத்து அம் கோடல் - அன்மொழித் தொகை. கோடல் வெண்காந்தளை உணர்த்திக் கைக்கு நிறத்தாலன்றி வடிவத்தால் உவமை யாதலின் நிறத்தையும் உணர்த்தற்கு அத்து என்றார். இனிக் கோடல் காந்தளின் பொதுமை குறித்து நின்றதெனினும் ஒக்கும். இங்ஙனம் , "துணைப் பானலிற் கோடல் கண்டே" மென்றார் பிறரும்.

'அங்கு' அசை அஃது ஆங்கு என்னும் உரையசையின் திரிபு. அசையெனக் கொள்ளாது உலகறிசுட்டு இடைச் சொல்லாகக் கொண்டு அங்குள்ள நீத்தோர் அஞ்சுகின்ற செல்வம் . எனக் கூறினும் அமையும். மேலும் இதுவே.

'நையே' என்பதில் 'ஏ' அசை.

அம்பல் - வேற்றுமை மயக்கம். 'அம்பால்' என்றற்கு அம்பின் என்று கருப் பொருள் உரைத்தமையால் 'ஆல்' உருபு உறழ்ச்சிப் பொருளில் வரும் 'இன்' உருபாக மாற்றி , அம்பு போல எனப் பொருள் கொள்க என்றார் ஆயிற்று.

இரு என்பதன் முற்றுகரக் கேடு இலேசாற் கொள்க. அம்பாற் கோடலம் என மூன்றாவது விரிக்க. அம் எனற்கு நீர், அழகு எனச் சொற்பொருள் கூறினமையால் ஐயத்து அம் கோடலம் எனற்கு ஐயத்தால் அழகாக அமைந்த அறிவு கோடேம் எனக் கூறலும் நூலாசிரியர் கருத்தென்க. இப்பொருள் கொள்ளுமிடத்து முன்னர் 'அம்கோடல்' என்புழி அம் சாரியை என்க.

அத்தம் எனப் புருடார்த்தம் கூறவே அப்புருடார்த்தத்துள் ஒன்றாகிய அறத்துள் ஒழுக்கம், அடங்கலிற் கையென அதனை வேறு கூறல் அமையாதெனின் ஒழுக்கம் அறத்தை விளைக்கும் வினையும், அறம் அவ்வினையின் காரியமாய் நன்மை விளைக்கும் ஊழுமாகி இரண்டும் வேறாதல் உடைமையின் அமையும் என்க.

பொன்மலை முதலாய சில் பொருளில் அத்தக்கோடு எனற்பாலது தொடை நோக்கி, 'அத்தங்கோடு' என மெலிந்து நின்றது.

" ஆரணங் குதிரையாரைப் பாடுமென் வாய்க் கவிதை" என்றார் பிறரும்.

'அஞ்சு' - ஐந்து என்னும் எண்ணுப் பெயரின் திரிபு.

அழுக்காறு முதலாயின இன்மையே அறத்துக்கு அங்கமாதலை

"அழுக்கா றவாவெகுளி இன்னாச்சொல் நான்கும்
இழுக்கா இயன்ற தறம்"

என்னும் குறளான் உணர்க. ' கோடு அல் ' என்புழிக் 'கோடு' முதனிலைத் தொழிற்பெயர். 'அல்' இன்மை குறித்து நின்றது.

'கையத்தங் கோடலங் கஞ்சத்தனம்' என்பது அடையொடு வந்த அன்மொழித் தொகை. இங்ஙனமன்றிக் கையத்தங் கோடலும், அம் கஞ்சத் தனமும் இரண்டு அன்மொழித் தொகை எனக் கொள்ளிற் கோடற் கையரும் , கஞ்சத் தனத்தருமாகிய மாதர் என்க.

அகரம் உலகறிசுட்டு. விதியையும் விலக்கையும் இருள் போல அறிவிற்குத் தோன்ற ஒட்டாது மறைத்தலால் ஆசையை 'அல்' என்றார்.

கை அத்தம் - கைக்கின்ற அத்தம் என்புழி வினைத்தொகை. கோடல் அஞ்சு அத்தம் - அன்மொழித் தொகை. அஞ்சுதல் ஈண்டு உவம உருபாகிக் கோடல் போன்ற கையெனப் பொருள் பயந்து நின்றது. அன்னத்து - இடைக்குறை

அத்தங்கோடலம் - அத்தத்தாற் கோடலம் என மூன்றாவது விரிக்க. கையத்து என்பதில் அத்துச்சாரியை . அத்துச்சாரியை உயிர்ப்பின் கெடாது நிற்றலைப் புறனடையாற் கொள்க.

கஞ்சத்த - குறிப்புப் பெயரெச்சம். கஞ்சம் - தாமரை வடிவாகிய பதுமநிதி. நந்து - சங்கு வடிவாகிய சங்கநிதி. "தாமரையுஞ் சங்கும் போற்றந்" தென ஆன்றோர் கூறுமாற்றாற் பதுமநிதி, சங்கநிதி என்பன பதுமம் சங்கம் என்ற பெயராலும், அவற்றின் பரியாயங்களாலும் வழங்கலை அறிக.

அன்னத்தன் - இடைக்குறை. அன்னத்தைக் கொடியும் வாகனமுமாகக் கொண்ட பிரமன் என்க.

சத்தம் இலக்கணமாதலைச், "*சத்தமும் சோதிடமும் என்றாங்கு இவை*" யென்ற நாலடியானும் உணர்க. *அன்னம், தன்னை என்பன இடைக்குறை.*

நந்து அன்னையோடு இயைந்து 'நத்தன்னை' யென வன் தொடர் ஆயிற்று . அன்னை என்னும் முன்னிலைக் குறிப்பு வினைப்பெயர் 'அனை' என இடைக் குறைந்தது.

'அத்தம்' பொன்மலை எனக் கொள்ளும் இடத்து அத்தமும் கோடும் என விரித்துக் கொள்க. "அத்த மென்னும் பொன்னஞ் சிலம்பென ஆன்றோர் கூறுமாற்றால் அத்தம் பொன்மலைக்குப் பெயராதல் அறிக. மேருவிற் கொம்பாற் பாரதம் எழுதினமையால் அத்தமும் கோடும் விளங்கிய கையன் " என்றார்.

"*பனிக்கோட்டு மால்வரையிற் பாரதப்போர் தீட்டும்*
*தனிக்கோட்டு வாரணம்*"

எனப் பெருந்தேவனாரும்,

"*ஏடாக மாமேரு வெற்பாக அங்கூர் எழுத்தாணிதன்*
*கோடாக*"

என வில்லிபுத்தூராரும் கூறலான் இதனை அறிக.

'கயத்து' என்பது 'கையத்து' என மயங்கி வந்தது.

"*தம்பொருள் என்பதம் மக்கள்*" என்பதால் அம்பாலிகையின் அத்தம் எனற்கு உமையின் செல்வமாகிய புதல்வன் என்றது பொருத்தமாதல் உணர்க.

"*வான வரம்பனை நீயோ பெரும*"

என்னும் புறப்பாட்டிற்போல அஞ்சுஅத்தன் அத்தனையே, அம்சத்தன் அத்தனையே, கஞ்சத்தன் அத்தனையே என்பவற்றில் ஐகாரம் முன்னிலைக்கண் வந்தது.

அத்தம்-கை. அத்தன்-கைபோல உதவுகின்ற சகோதரன். "உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே இடுக்கண் களை தற்குச் சகோதரன் உரியன் ஆதலின் அத்தன் என்றார்.

"அத்தா இதுகேளென ஆரியன் கூறுவான்"

*என்று கம்பநாடர் கூறுமாற்றாலும் அத்தன் தம்பிக்கும் பெயராதல் அறிக*

இம்முதலுரையிற் கூறிய பயனிலை விகற்பங்களிலும் பொருள் விகற்பங்களிலும் இயைவவற்றை வரும் உரைகட்கும் ஒட்டிக்கொள்க.

## இரண்டாவது வகைக் கருப்பொருள்.

### *சொ-கை*

3 வது அடி: அம்பாலிகை அத்தம் கோடல் அங்கம் சத்தன் அத்தனையே-முதற்பத்துச்சீர் பயனிலை

ஈற்றடிமேல் உரைத்தாங்குக் கொள்க.

### *கு-பு*

முதல் அடியில் அம்பாலிகை கோடல் என்ற விகற்பங்கள் கொள்ளற்க. ஏனையவற்றொடு அம்பால் இகு ஐயத்து அம்கோடலம் எனவும், அங்கு ஓடலம் எனவும் கம் சத்தன் நத்தனை ஏய் அம்பாலிக்க எனவும் உரைத்துக் கொள்க.

ஈற்றடியில் அம்பாலிகை என்ற விகற்பம் ஒன்றும் சத்த என்ற விகற்பம் நான்கும் கொள்ளற்க. ஏனைய நான்கு கொள்க. அம்பாலிகை என்ற விகற்பம் ஒன்றொழிய ஏனைய எட்டுள் கோடு அலங்கு என்பது வரை கொண்டு பின் அஞ்சத்தன் அத்தனையே எனத்தனித்தனி கூட்டி எட்டு விகற்பமாக்கி உரைத்துக் கொள்க.

இரண்டாவது அடிவகை பதினேழும் கொள்க.

3 வது அடிக்கும் இன்னும் இயைவன பிறவும் உளவாயினும் விரிவஞ்சி விடுத்தனம். அவற்றைக் கிளந்தன கொண்டு முடித்துக் கொள்க. பின்னும் இதுவே.

### *அ-ள்*

அத்தம்-பாதி. சத்தன்-சிவன். அத்தனையே-புதல்வனே.

அஞ்சத்தன்-அன்னம்.

ஏனையமேல் உரைத்தன கொள்க.

*ப-ரை*

3 வது அடி: அம்பாலிகையைப் பாதியிற் கொள்ளுதலையுடைய தேகத்தையுடைய சத்தனாகிய சிவபிரானுக்குப் புதல்வனே எனவும் அம்பாலிகைக்கும் சிவனுக்கும் புதல்வனே எனவும் உரைத்துக் கொள்க.

ஏனையவற்றுக்கு முன்னுரைத்தன கொள்க.

*பொ-ரை*

"சிவ குமாரனே, உமைக்கும் சிவனுக்கும் குமாரனே, ஐங்கரனே, கோடு அலங்கு அஞ்சத்தன் அத்தனே கோடலம் ஓடலம் பாலி நை" என முடிக்க.

*வி-ரை*

இவ்வுரையில் முதற்பத்துச்சீர் பயனிலையும் ஏனைய விளியும் ஆகுதல் காண்க. ஈற்றடியிற் பிற்பகுதி விகற்ப மாறும் அஞ்சு அத்த என்ற முதற்பகுதி விகற்பங்கள் நான்கனொடும் இயையும். ஈற்று விகற்பம் ஆறனது உரைகளில் அஞ்சத்தனுக்குத் தந்தையே என்ற உரை ஒழிய ஏனைய கொள்க.

அஞ்சம் வடமொழித் தற்பவம். "அஞ்சத் துவசம் உயர்த்தோன் செந்நாவும் மகளும்" என்றார் பிறரும்.

## மூன்றாவது வகைக் கருப்பொருள்:

*சொ-கை*

2-வது அடி பிற்பகுதியிற் கஞ்சத்தன அத்தன் ஐயே முதலாய பதினொரு விகற்பமும் கொள்க. ஏனைய மேலது போற் கொள்க.

*வி-ரை*

பதவுரை முதலான மேல் உரைத்தன கொள்க.

இவ்வுரையில் முதலெண்சீர் பயனிலையும், ஏனைய விளியும் ஆதல் காண்க.

முதலடியில் அங்கு ஓடலம் எனக் கொளின் 2-வது அடியிற் கையத்து அம் கோடலம் என்க.

முதலடியில் ஐயத்து அம் கோடலம் எனக் கொண்டு முன்போல் உரைக்க.

"கஞ்சத்தனுக்கும் அத்தனுக்கும் ஐயனும் அம்பாலிகைக்குஞ் சத்தனுக்கும் புதல்வனும் அஞ்சு அத்தனுமாகிய கணபதியே கோடலம் பாலி ஓடலம்" **எனக் கூட்டுக.**

## *நான்காவது வகைக் கருப்பொருள்:*

### *சொ-கை.*

2 வது அடி: கை அ தங்கு ஓடு அலங்கு அஞ்சத்தன் அத்தன் ஐ ஏ.

ஏனைய மேல் உரைத்தவற்றுள் மாறின்றி இயைவன கொள்க. ஓடு -பிரமகபாலம்.

### *பொ-ரை*

"கையிற்றங்கிய அப்பிரமகபாலம் என்னும் ஓடு விளங்குகின்ற, பிரமனைப் பாதியில் உடையானும் அப்பாலிகையைப் பாதியில் உடையானுமாகிய சிவகுமாரனே, கொம்பு அசைக்கின்ற ஐங்கரனே, புகழ் முதலாயின பாலிக்க என முடிக்க.

ஈங்கு முதல் ஆறுசீர் பயனிலையும் ஏனைய விளியுகமாகக் காண்க.

## *ஐந்தாவது வகைக் கருப்பொருள்:*

முதலடி அம்பாலிகை என்க. கை அத்து அம் என்பது முதலாய பதினேழு விகற்பங்களுள் இயைவன கொள்க.

இரண்டாவது அடி அம்பால் இகை அத்தம் கோடு அலங்கு அஞ்சத்தன் அத்தனையே என்க.

ஈண்டு அலங்கல் அசைதல் என்க. ஏனைய அடிகளுக்கு இரண்டாவது வகையுரைத்தன கொள்க. ஈற்றடியில் அஞ்சத்தன் அத்தனையே என்ற விகற்பம் எட்டும் கோடு கொம்பென உரைக்கும் விகற்பமும் கொள்ளற்க. ஈண்டு அலங்கல் விளங்கல் என்க.

*ப-ரை*

அம்பால்கை அத்தம் - மேகம் போற் கொடுக்கும் கையின் கண்

கோடு அலங்கு -கொம்பு விளங்குகின்ற

அஞ்சத்தன் அத்தனையே - பிரமனுக்குத் தலைவனே எ-று

*பொ-ரை*

அழகு பொன் முதலாயவற்றை விரும்பலை ஒழிக்க,

கையில் கொம்பு விளங்குகின்ற கடவுளே பிரமனுக்குத் தலைவனே சிவகுமாரனே உமைக்கும் சிவனுக்கும் குமாரனே ஐங்கரனே என்க.

இவ்வுரையில் முதலைந்துசீர் பயனிலையும் ஏனைய விளியும் ஆதல் காண்க.

## ஆறாவது வகைக்கருப் பொருள்:

*சொ-கை*

முதலடி முற்பகுதியில் அம்பாலி எனவும், கை அத்தம் கோடலம் எனவும், கையத்து அம்கோடலம் எனவும், கையத்து அங்கு ஓடலம் எனவும், அம்பால் இகு ஐயத்து அம் கோடலம் எனவும் அம்பால் இகு ஐயத்து அங்கு ஓடலம் எனவும் ஐவகை கொள்க.

முதலடி பிற்பகுதியில் கஞ்சத்தன் அத்தன் ஐயே என்பது முதலாய பதினொன்றுங் கொள்க.

இரண்டாவது அடி, அம்பு ஆலி கையத்து அம்கோடு அலங்கு அஞ்சத்து அம் நத்தன் ஐ ஏ என்க.

ஏனையமேல் உரைத்தாங்குக் கொள்க.

இரண்டாவது அடிப்பொருள் மாலாகிய தலைவன் என்க.

*ப-ரை*

(இரண்டாவது அடி) நீரிலும் ஆலிலும் துயில்வோனும் கையின்கண் அழகிய சங்கம் விளங்குகின்ற அன்னத்தின்

வடிவத்தை விரும்பி ஏற்று வேதம் அருளிய திருமாலுமாகிய ஐயனையும் என்க.

*பொ-ரை*

அயன் முதலாயினார்க்கு ஐயனே நந்தினை அன்னோனே கஞ்சத்தனுக்கு அத்தனும் அழகனும் அம்பிலும் ஆலிலும் துயில்வோனும் கையிற் கோடலங்குகின்ற அன்னவடிவங் கொண்டு வேதத்தை அருளியவனும் ஆகிய திருமாலையும் அம்பாலிகையையும் வலப்பாதியிலும் இடப்பாதியிலும் கொண்ட அங்கத்தையுடைய சத்தனுக்குப் புதல்வனே எனவும் ஏனைய மேல் உரைத்தாங்கு உரைத்துப் பாலி முதலாய பயனிலையுங் கூட்டி முடித்துக் கொள்க.

*வி-ரை*

இவ்வகையில் மூன்று சீர் பயனிலையும் ஏனைய விளியுமாதல் காண்க. அபௌர்சேயமாகிய வேதத்தை அன்னவடிவங்கொண்டு அயனுக்கு உரைத்தமையின் அஞ்சத்து அம் நத்தன் என்றார். அயனை ஒரு பாதியிலும், ஒருபாதி உமையவளும் கொண்டமையின் நத்தனும் அம்பாலிகையும் அத்தங் கோடலங்கமுடையின் என்றார்.

## *ஏழாவது வகைக் கருப்பொருள்:*

*சொ-கை*

முதலாவது அடி: அம்பாலிகையத்து அம்கோடு அலங்கு அஞ்சத்து தன் ந தன் ஐயே.

இரண்டாவது அடி: அம்பாலிகை அத்தம் கோடல் அம் கஞ்சத் தனத்து அன்னை ஏ.

ஏனைய மேல் உரைத்தாங்குக் கொள்க.

*அ-ரை*

அம்-மேகம். பாலிகை -அதரம். அன்னையாகிய அம்பாலிகை என்க.

முதலாவது அடி: மேகம்போற் பாலிக்க. கையிற் கொம்பு அசைகின்ற அயன் மாலுக்குத் தலைவனே.

இரண்டாவது அடி: அழகிய அதரமும் கையாகிய காந்தளும் அழகிய கஞ்சம் அன்ன தனமுமுடைய அன்னை.

"அயன்மாலுக்குத் தலைவனே பாலிகையுங்கோடலும் தனமுமுடைய அன்னையாகிய அம்பாலிகையைப் பாதியில் உடைய சிவகுமாரனே ஐயங்கரனே மேகம் போற் பாலிக்க " எனக் கூட்டுக.

அஞ்சத்தனுக்கும் நத்தனுக்கும் தலைவனுமாகிய கையிற் கோடு அசைகின்ற ஐயன் என்க.

இவ்வகையில் முதற்சீர் பயனிலையும் ஏனைய விளியும் ஆதல் காண்க.

## எட்டாவது வகைக் கருப்பொருள்:

### கு-பு

முதற்சீர்க்கு மேகம் போன்ற புகழுடைய என்க. ஈற்றுச் சீரை நத்தல் நையே எனக் கொண்டு அவாவை ஒழிக்க என்க. ஏனைய மேலதுபோற்கொள்க.

### பொ-ரை

மேகம் போலும் புகழுடைய கையிற் கொம்பு அசைகின்ற அயன்மாலுக்குத் தலைவனே, சிவகுமாரனே, ஐங்கரனே, நத்தலை நை என முடிக்க.

இவ்வகையில் இறுதிச்சீர் பயனிலையும் ஏனைய விளியும் ஆதல் காண்க.

## ஒன்பதாவது வகைக் கருப்பொருள்:

### கு-பு

இறுதிச்சீரையும் நந்தனையே எனக் கொள்க.

### வி-ரை

இவ்வகையில் இருபது சீரும் விளியாதல் காண்க. இதனைக் குளகத்தின் முதற்பாட்டாகக் கொண்டு பத்தாவது வகையில் உரைக்கும் பயனிலைகளைக் கூட்டி வினை முடிவு செய்க.

## *பத்தாவது வகைக் கருப்பொருள்:*

*சொ-கை*

1. அம்பாலிகை-அத்தம்-கோடு-அலம்-அம்-சத்தம்-ந-தன்னை-ஏய்

2. அம்பாலி-கையத்து-அங்கு-ஓடல்-அம்கஞ்சம்-தனம்-தன்னை ஏய்

3. அம்பாலிகை-அத்தம்-கோடல்-அம்-கஞ்சம்-தனத்து-அன்னை - ஏய்

4. அம்பாலிகை-அத்தம்கோடு-அலம்-கஞ்சத்து-அன்னத்து-அல்-நையே

*ப-ரை*

*முதலாவது அடியும் இரண்டாவது அடியில் அம்பாலியும்:*

மேகம் போலும் புகழ் முதலாயின பாலிக்க.

கையத்து அங்கு ஓடல்-நூலோர் வெறுக்கின்ற தீநெறியில் செல்லுதலாலும்

அம்கஞ்சம் தனம் தன்னை ஏய் அம்பாலிகை -அழகிய கைத்தாளம் போன்ற தனங்களையும் தன்னைத் தானே ஒத்த அதரத்தையும்,

அத்தம் கோடல்-கையாகிய நந்தனையுமுடைய மாதாலும் அம் கஞ்சத் தனத்து அன்னை அம்பாலிகை அத்தம் -நீரிலுள்ள தாமரையில் வசிக்கும் தனச்செல்வியும் அன்னையும் பாலிகையுமாகிய இலக்குமி கடாட்சத்தால் எய்தும் பொருளாலும்

கோடு அலம் கஞ்சத்து அன்னத்து-மாறுபாட்டையுடைய துன்பத்தை விளைக்கின்ற நீராலும் உணவாலும் எய்துகின்ற

அல்நை-தீவினையாகிய இருளை ஒழிக்க எ-று

*வி-ரை*

ஈண்டு இருபது சீரும் பயனிலையாதல் காண்க.

இவ்வினைகளை மேல் உரைத்த விளிப்பொருளோடு கூட்டி ஒருமுடிபாக்குக.

தன்னை ஏய் அம் என்பதில் அம் சாரியை

முதலாவது பொருளின் உரைவகைக் பத்தும் முடிந்தன.

## 2-ஆவது பொருள்

### வல்லவை.

*சொ-கை*

3 வது அடி: அம்பு ஆலி கை அத்தக்கோடு அலங்கு அஞ்சு அத்தன் அத்தனை ஏய்

4 வது அடி: அம் பாலி கயத்து அம் கோள் தலம் கஞ்சத்து அம் நந்து அன்னையே.

*அ-ரை*

கயத்து அம்- ஆழமாகியநீர்

நந்து அன்னை- நந்து வடிவாய் இருந்த வல்லவை

இயைவன பிற உரைவகை முன் உரைத்தன கொண்டு கண்டு கொள்க. பின்னும் இதுவே.

*ப-ரை*

3 வது அடி: பொன்மலைபோல விளங்கும் ஐங்கரனாகிய அத்தனிடத்துப் பொருந்திய

அம்பாலி - அழகிய புகழுடைய

கயத்து அம் கோள் தலம் - ஆழமாகிய நீரைக்கொண்ட இடமாகிய யமுனை நதிக்கரையில்

கஞ்சத்து அம் நந்து அன்னையே - தாமரை மலரின்கண் அழகிய சங்கு வடிவமாக வீற்றிருந்த அன்னையாகிய வல்லவையே எ-று

### வி-ரை

முதற்பத்துச் சீரைப் பயனிலையாக்கி முன்னுரைத்த உரைகளில் இயைவன கொள்க. மேலும் அதுவே.

யமுனையில் தாமரைமலர்மேல் சங்கின் வடிவமாக வீற்றிருந்து பெண் வடிவாகி மரீசி முனிவரிடத்து வளர்ந்த வல்லபை தேவியைக் கணபதி மணந்தான் என்பது புராண வரலாறு.

அஞ்சத்த -குறிப்புப் பெயரெச்சம்.

அத்தனையே எனக் கொண்டு அத்தனே அன்னையே என்றுரைத்துக் கணபதி வல்லபை என இருவர்க்கும் ஆக்குதலும் பொருந்தும்.

# 3-ஆவது பொருள்

## கந்தன்

### கு-பு

ஈற்றடி முற்பகுதிச் சொல்வகை விகற்பகம் அறுவகை. ஏனைய கணபதியின் முதலாவது வகைபோற்கொண்டு அவ்வுரைகளில் இயைவன கொள்க.

பிற்பகுதி விகற்பத்தில் அத்தன் எனற்கு மூத்தோன் எனவும் உரைக்க. நத்துகின்ற அன்னை வள்ளியும் தெய்வானையும்.

### சொ-கை

*ஈற்றடி முற்பகுதி:*

1. அம்பு ஆலி கை அத்தக்கோடு அலங்கு அஞ்சு அத்து
2. அம்பு ஆலி கை அத்தக்கோடு அலங்கு அஞ்சு சத்த
3. அம்பு ஆலி கயத்து அம் கோடு அலங்கு அஞ்சு அத்த
4. அம்பு ஆலி கயத்து அம் கோடு அலங்கு அம் சத்த
5. அம்பாலிகை அத்தம் கோடு அலங்கு அம் சத்த

6. அம்பாலிகை அத்தம் கோடல் அங்கம் சத்த

### *அ-ள்*

அத்தம் - காடு. கோடு-மலை. அஞ்சு-அச்சம். கயம் -யானை.

அத்தம் - கை. அலங்கல் -விளங்கல், ஆடல்.

### *ப-ரை*

1. நீரும் மழையும் அலங்கரிக்கின்ற காட்டையுடைய மலைகளில் விளங்குகின்ற அல்லது ஆடுகின்ற (அசுரர்) அஞ்சத்தக்க கையினையுடையானே அல்லது அஞ்சத்தக்க அத்தனே என்க.

2. மேல் உரைத்தாங்கு உரைத்து மெய்ப்பொருளே என்க.

3-4 மேகம்போற் களிக்கின்ற யானை வாகனத்தும் அழகிய மலையிலும் விளங்குவோனே எனவும், யானை வாகனமாகிய அழகிய ம்லைமேல் விளங்குவோனே எனவும், அம் கோட்டுக் கயம் என மாறி அழகிய கொம்பினையுடைய யானையில் விளங்குவோனே எனவும் மூவகை உரைத்து அஞ்சு அத்தன் எனவும் அம்சத்தன் எனவும் தனித்தனி கூட்டுக.

5. உமாதேவியின் கையிலும் மலையிலும் விளங்கும் மெய்ப்பொருளே என்க.

6. உமையின் கையிற் கொள்ளுதலையுடைய அங்கத்தையுடைய சத்தனே என்க.

### *வி-ரை*

*முதற்பதின்மூன்று சீர் பயனிலை:*

அயன்மாலாதியர் தலைவனே, சிவகுருவே, நந்தினை அன்னோனே, அத்தனே, சத்தனே, தந்தையே என்று பாலி முதலிய வினைகளைக் கூட்டி உரைக்க.

அத்தனே சத்தனே தந்தையே எனவும், கந்தனே கந்தன் நத்துகின்ற அன்னையாகிய வள்ளியே தெய்வானையே எனவும், கந்தன் நத்துகின்ற தேவியே என்று வள்ளியே தெய்வானையே எனவும், கந்தனாகிய அத்தனே, கந்தனுக்குத் தந்தையாகிய

சிவனே, கந்தனுக்கு மூத்தோனாகிய கணபதியே, கந்தனுக்குச் சகோதரனாகிய வைரவனே, வீரபத்திரனே, சத்தனே எனவும், கந்தனுக்கு உயர்ந்த தந்தையாகிய சிவனே, உயர்ந்த தாயாகிய உமையே எனவும் இவற்று விகற்பங் கொள்க.

# 4-ஆவது பொருள்

## *வள்ளியம்மை*

### *சொ-கை*

3. அம்பு ஆலி கை அத்தக்கோடு அலங்கு அம் சத்தன் அத்தன் ஐ ஏய்

4. அம் பாலி கயத்து அம் கோடல் அங்கு அஞ்சு அ தனத்து அன்னையே

### *அ-ள்*

கயம்-யானை முகக் கடவுள். அம்-நீர்

### *ப-ரை*

3. மலைகளில் விளங்குஞ் சத்தனும் அத்தனும் கடவுளுமாகிய கந்தன் மணந்த

4. அம்பாலி - அழகிய புகழையுடைய. கயத்து - யானையாக வந்த கணபதியைக் கண்டு. அம்கோடல் அங்கு அஞ்சு- நீர் கொள்ளற்குச் சென்ற அச்சுனையின்கண் அஞ்சிய. அத்தனத்து அன்னையே- அச்செல்வமுடைய அன்னையாகிய வள்ளியே எ-று

### *வி-ரை*

முதற்பத்துச்சீர் பயனிலை. அத்தனையே எனக் கொண்டு அத்தனே அன்னையே என்று கந்தன் வள்ளி என இருவர்க்கும் ஆக்குதலும் பொருந்தும்.

# 5-ஆவது பொருள்

## தெய்வயானை

### சொ-கை

3. வள்ளியம்மைக்கு உரைத்தாங்குக் கொண்டு ஈற்றில் அத்தனை ஏய் என்க.

4. அம்பாலி கயத்து அம் கோடல் அங்கு அஞ்சு அத்தம் நத்து அன்னையே

### அ-ள்

பாலி கயம் - வெள்ளை யானை

### ப-ரை

3. மலைகளில் விளங்குஞ் சத்தனும் அத்தனுமாகிய கந்தனை மணந்த.

4. அம்பாலி கயத்து - அழகிய வெண்ணிறத்ததாகிய யானை வளர்த்த
அம்கோடல் அஞ்சு அத்தம் -அழகிய காந்தள் அஞ்சுகின்ற கையினையுடைய
நத்து அன்னையே -விரும்புகின்ற அன்னையாகிய தெய்வயானையே (எ-று)

### வி-ரை

முதற்பத்துச் சீர் பயனிலை. அத்தனே அன்னையே என்று இருவர்க்கும் ஆக்குதலும் பொருந்தும்.

# 6-ஆவது பொருள்

## வைரவன்

### சொ-கை

3. அம்[illegible]ி கை அத்தக்கோடு அலங்கு அஞ்சத்தன் அத்தன் ஏ.

4. அம்பால் இகு ஐ அத்தம் கோடல் அம் கம் சத்த
ஈற்றடிப் பிற்பகுதி விகற்பத்துள் இயைவன கொள்க பின்னும் இதுவே.

*அ-ள்*

ஐ அத்தம் -பெரிய கை. கம்-தலை

*ப-ரை*

3. பொன்மலை போல விளங்கும் பொன்மேனியுடைய அன்னத்தனும் அத்தனும் ஆகிய பிரமனை

4. அம்பால் இகு ஐ அத்தம் கோடல்-அம்புபோல வருத்திய பெரிய வகையின்கட் கொள்ளுதலையுடைய
அம் கம் சத்த -அழகிய அப்பிரமகபாலத்தை ஏந்திய சத்தனே எ-று.

*வி.ரை*

முதற்பத்துச்சீர் பயனிலை. வைரவனுக்குத் தாயாகிய உமையே, தந்தையாகிய சிவனே, சகோதரனாகிய கணபதியே கந்தனே வீரனே ஐயனே என்க. இனிவரும் பொருள்களினும் கூறாவிடினும் ஈற்று விகற்பத்துள் இயைவனவற்றைத் தாமே இயைத்துக் கொள்க.

# 7-ஆவது பொருள்

## வீரபத்திரன்

*சொ-கை*

2. கஞ்சத்தன் அத்தனை ஏ

3. அம்பால் இகு அயத்து அம் கோடல் அம் கம் சத்தம் நத்தனை ஏய்.

4. அம்பால் இகை அத்தக்கோடு அலங்கு அஞ்சு அத்த.

*அ-ள்*

இகு - இகுத்து. அயம் -ஆடு. அம்பால் -அம்பின்

அம்பு -மேகம். அத்தக்கோடு - மேருமலைச் சிகரங்கள்

அத்தம் -மேரு சிகரந் தலைக்குவமை. மலைபண்புவமை.

*ப-ரை*

கஞ்சத்தன் அத்தனை - பிரமதேவன் புதல்வனாகிய தக்கனை அம்பால் இகு - அம்புபோலக் கொன்று

அயத்து அம் கோடல் அம் கம் -ஆட்டினது அழகுமாறுதலையுடைய தலையை

சத்த நத்தனை ஏய் அம்பால் இகை- ஐந்திர நூலைச் செய்த இந்திரனுக்கு வாகனமாகப் பொருந்திய மேகம் போலக் கொடுத்து உயிர்ப்பித்த

அத்தக்கோடு அலங்கு அஞ்சு அத்த - பொன்மலை போல விளங்குகின்ற அஞ்சத்தக்க கையினையுடைய வீரபத்திரனே(எ-று)

*வி-ரை*

*முதல் எட்டுச்சீர் பயனிலை*

இகு என்னும் முதனிலை 'வரிப்புனை பந்து' என்புழிப்போல இகுந்து என்னும் வினை எச்சப்பொருளில் வந்தது. தக்கனை அம்புபோலக் கொன்று மேகம்போல, ஆட்டுத்தலையை ஒட்டி பிழைக்கச் செய்த கையினையுடையோன் எனக் கூட்டுக.

வீரன் ஆயிரந்தலையும் பொன்னிறமும் உடையோன் ஆதலின் ஆயிரஞ்சிகரமுடைய பொன்மலையை உவமை கூறினார்.

கோடல் அம் கம் என்பதில் அம்-சாரியை.

ஈற்றுவினைவிகற்பம் எல்லாம் கொள்க. அத்தன் நத்தும் தேவியாகிய காளியே எனவும் உரைக்க.

# 8-ஆவது பொருள்

## காளிதேவி

### சொ-கை

3. அம்பாலிகை அத்தம் கோடல் அங்கம் சத்தன் அத்தனை ஏய்

4. அம்பாலிகை அ தங்கு ஓடு அலங்கு அஞ்சு அத்தம் நத்து அன்னையே

### அ-ள்

அத்தம் -கோடல்-அங்கம் = கையிற்றோன்றுதலைக் கொண்ட உடல் பாதியிற் கோடலங்கமுடைய சிவனெனினும் அமையும்.

### ப-ரை

அம்பாலிகை அத்தம் -உமாதேவியின் கையிடத்துத் தோன்றிய

(கோடல் அங்கம்) அங்கம் கோடல் - வடிவத்தைக் கொள்ளுதலையுடைய

சத்தன் அத்தனை ஏய்- சத்தனாகிய சிவபிரான் புதல்வனாகிய வீரபத்திரனை மணந்த

அம்பாலிகை - அழகிய பாலிகையே

அ தங்கு ஓடு அலங்கு -தங்கிய அந்தத் தலையோடுகள் விளங்குகின்ற

அஞ்சு அத்தம் நந்து அன்னையே - அஞ்சத்தக்க கையினையுடைய விரும்புகின்ற அன்னையாகிய காளிதேவியே(எ-று)

### வி-ரை

*முதற்பத்துச்சீர் பயனிலை*

சத்தன் அத்தனே அன்னையே என இருவர்க்கும் ஆக்குதலும் பொருந்தும். அம்பாலிகையைப் பாதியிற்

கொண்ட அங்கத்தையுடைய சிவனது குமாரனாகிய வீரனை மணந்த எனவும் உரைக்க.

## 9-ஆவது பொருள்

### ஐயன்

### இதற்கு இரு விகற்பம் உரைப்பல்

### 1-ஆவது விகற்பம்

#### சொ-கை

3. கஞ்சத்தனத் தனையே

4. அம் பாலி கயத்து அம் கோடு அலங்கு அம் சத்தன் அத்தனையே.

அஞ்சு அத்தன் அத்தனையே

#### அ-ள்

சத்தன்-சிவன். அலங்குகின்ற அத்தன் என்க.

அஞ்சு அத்தன் -ஐம்படைக் கையனாகிய திருமால்

#### ப-ரை

3. இந்திராதியார் தலைவனே

4. அழகிய வெண்ணிறத்து யானையாகிய மலைமேல் விளங்குகின்ற அழகிய சத்தனாகிய சிவனுக்குப் புதல்வனாகிய ஐயனே எனவும் அம்மலைமேல் விளங்குகின்ற ஐம்படைக் கையனாகிய திருமாலின் புதல்வனே எனவும் கொள்க.

#### வி-ரை

முதற் பதின்மூன்று சீர் பயனிலை. அஞ்சு - ஐம்படை. அத்தம் - கை. அஞ்சு அத்தம் - ஐம்படை தாங்கியகை. அஞ்சு ஈண்டு எண்ணியற் பெயராதலின் ஐம்படையை உணர்த்திற்று. ஐம்படை - சங்கு சக்கரம் முதலாயின.

## 2-வது விகற்பம்

*சொ-கை*

2. கை அத்தக் கோடு அலங்கு அஞ்சு அத்தம் நந்தனை ஏய்

3. அம்பாலிகை அத்தம் கோடல் அம் கஞ்சத்தனத்து அன்னை ஏ

4. அம்பாலிகயத்து அம் கோடு அலங்கு அம் சத்த.

*அ-ள்*

அத்த நத்தம் - பொன்னகர். அன்னை -சசி. பாலி-பாலித்த.

*ப-ரை*

2. அலங்காரமுடைய பொன்மலை போல விளங்குகின்ற பகைவர் அஞ்சத்தக்க பொன்னாட்டையுடைய இந்திரனை மணந்த.

3. பாலிகையும் அத்தமாகிய கோடலும் அழகிய கஞ்ச ம்னனதனம்முடைய இந்திராணியை.

4. அம்பாலி -சூரனாயர் வருத்தாவண்ணம் அழகாகக் காத்த (கயத்து அம்கோடு அலங்கு) அம்கோட்டுக் கயத்து அலங்கு - அழகிய நாற்கொம்பையுடைய வெள்ளை யானைமேல் அசைந்து செல்கின்ற)

அம் சத்த - அழகிய சத்தனாகிய ஐயனே எ-று

*வி-ரை*

*முதல் ஆறுசீர் பயனிலை*

சூரனுக்குப் பயந்து இந்திரன் தன் நகரத்தை இழந்து மறைந்திருக்குங் காலத்தில் இந்திராணியை அசுரர் கைப்பற்றாத வண்ணம் ஐயனார் பாதுகாத்தமை ஈண்டுக் குறிக்கப்பட்டது.

வெள்ளை யானையிற் செல்லுகின்ற சத்தனாகிய ஐயனுக்குத் தாயாகிய திருமாலே, தந்தையாகிய சிவனே என்றும், சத்தனாகிய அத்தனே சத்தனுக்குத் தந்தையாகிய சிவனே என்றும், சத்தனுக்கு மூத்தோன் ஆகிய கணபதியே வைரவனே வீரனே கந்தனே அயனே வேளே என்றும்,

சத்தனாகிய ஐயனே அவ்வையன் நத்தும் தேவியும் எம் அன்னையுமாகிய பூரணையே புட்கலையே என்றும், சத்தன் நத்தும் அன்னையாகிய பூரணையே புட்கலையே என்றும் உரைத்துக் கொள்க.

# *10-ஆவது பொருள்*

## *மாகாளன்*

### *சொ-கை*

3. அம்பாலி கயத்து அம் கோடு அலங்கு அஞ்சு அத்தன் அத்தனை ஏய்

4. அம்பு ஆலி கை அத்தக்கோடு அல் அங்கம் சத்த.

### *பரை*

3. அழகிய வெள்ளையாகிய அழகிய கொம்பினையுடைய யானைமேல் விளங்குகின்ற ஐம்படைக் கையன் புதல்வன் ஆகிய ஐயனிடத்துப் பூத கணத்தலைவனாகப் பொருந்திய

4. நீரும் மழையும் அலங்கரிக்கின்ற காட்டையுடைய மலையும் இருளும் ஒத்த பெரிய இருண்ட உடலையுடைய சத்தனாகிய மாகாளனே எ-று.

### *வி-ரை*

*முதற்பத்துச்சீர் பயனிலை*

இம்மாகாளன் கறுப்பணன் என்ற பெயரால் தமிழ் நாட்டில் விளங்குகின்றனன். ஈற்று விகற்பத்துள் இயைவன காள்க.

சிவகுமாரனாகிய ஐயனுக்குப் படைத்தலைவன் ஆதல்பற்றி மாகாளனையும் உடன் கூறினார்.

கணபதி முதல் மாகாளன் இறுதியாக உள்ள இப்பத்தும் குமார வகை என்க. இனி அயன் வகை உரைக்கப்படும்.

# 11-ஆவது பொருள்

## அயன்

### கு-பு

3. வது அடியீற்று விகற்பங்களில் அயன்மால் உருத்திரற்குத் தலைவனே எனும் பொருள் கொள்ளற்க. ஏனையவற்றோடு கஞ்சத்த எனற்குக் கஞ்சத்தனே என்க. இவற்றொடு கஞ்சத்து அன்னத்து அன்னையே எனவும் இருவகை கூட்டி இவற்றை நாமகட்கு ஆக்குக.

ஈற்றடி முற்பகுதியில் மூன்று விகற்பங் கொள்க. அஞ்சத்தன் அத்தனையே என்னும் விகற்பத்திற்கு அஞ்சத்தன் புதல்வனே என்று எல்லாப் புதல்வர்க்கும் தனித்தனி கொள்க. ஈற்றடிப் பிற்பகுதி விகற்பமின்றி முற்றும் ஒரு விகற்பமாகவும் கொள்க.

### சொ-கை

*ஈற்றடி விகற்பம்*

1. அம்பு ஆலி கை அத்தக்கோடு அலங்கு அஞ்சத்த
2. அம் பாலி கயத்து அம் கோடு அலங்கு அஞ்சத்த
3. அம்பால் இகை அத்தம் கோடல் அம் கஞ்சத்த
4. அம்பால் இகை அத்தம் கோடல் அம் கஞ்சத்து அன்னத்தனையே

### அ-ள்

கயம்-நீர். கோடு-சங்கு

### சொ-கை

*மூன்றாவது அடி-பிற்பகுதி*

1. கஞ்சத்தனத்தனையே
2. கஞ்சத்து நந்து அன்னையே
3. கஞ்சத்து அன்னத்து அன்னையே ஏய்
4. கஞ்சத்து அன்னத்து அன்னையே.

COLLEGE

## ப-ரை

### ஈற்றடி

1. நீரும் மழையும் அலங்கரிக்கின்ற பொன்மலை போல விளங்கும் பொன் மேனியையுமுடைய அன்னவாகனமுடைய பிரமனே என்க.

2. அழகிய புகழுடைய நீர் வாழ்கின்ற அழகிய சங்கமொத்த வெண்ணிறமுடைய விளங்குகின்ற அன்னத்தனே என்க.

3. மேகம்போற் கொடுக்குங் கொடையைக் கையிற் கொள்ளுதலையுடைய அழகிய கஞ்சத்தனே என்க.

4. கொடையை கையிலுடைய நீர்வாழும் அன்னத்தனே என்க.

### மூன்றாவது அடி

1. இந்திராதியர் தலைவனே காசிபன் தந்தையே என்க

2. தாமரையில் வாழ்வோனே சங்கமன்ன தூயோனே என்க.

3. தாமரையில் வசிப்பவளாகிய அன்னம் போன்ற வெண்ணிறமுடைய நாமகள் பொருந்திய என்க.

4. கஞ்சத்தில் வாழும் அன்னம் போன்ற அன்னையாகிய நாமகளே என்க.

## வி-ரை

### முதற்பதின்மூன்று சீர் பயனிலை

இந்திராதியர் தலைவனும் காசிபன் தந்தையும் தாமரையில் வாழ்வோனும் நந்து அன்னோனும் நாமகள் ஏய்ந்த அன்னத்தனும் ஆகிய தந்தையே என்க.

தலைவனும் தந்தையும் கஞ்சத்தனும் நாமகள் ஏய்ந்த அன்னத்தனும் ஆகிய நந்து அன்னோய் என்க.

அன்னத்தனே அன்னத்தன் நத்துகின்ற அன்னையாகிய நாமகளே, அவன் நத்துகின்ற காயத்திரியே, அவன் நத்துகின்ற சாவித்திரியே என மூன்று மனைவியர்க்கும் தனித்தனி கூறி நால்வர்க்கும் கொள்க.

அஞ்சத்தனாகிய அத்தனே எனவும், அஞ்சத்தனுக்குத் தந்தையாகிய மாலே எனவும், அஞ்சத்தனைப் பாதியிற் கொண்ட சிவனே எனவும் அஞ்சத்தனுக்குத் தலைவனாகிய கணபதியே கந்தனே எனவும், அஞ்சத்தன் புதல்வனே எனத் தனித்தனி கொண்டு அத்திரியே, மரீசியே, அங்கிராவே, வசிட்டனே, புலத்தியனே, புலகனே, பிருகுவே, நாரதனே, கிருதுவே,தக்கனே எனவும் பிறவும் உரைக்க.

அஞ்சத்தனுக்கு உயர்ந்த தந்தையாகிய மாலே என்க.

அஞ்சத்தனுக்கு உயர்ந்த தாயாகிய இலக்குமியே என்க.

# *12-ஆவது பொருள்*

## *நாமகள் (கலைமகள்)*

### *சொ-கை*

*3- வது அடியீறு:*

கஞ்சத்து அன்னத்தனை ஏய் என்க.

ஈற்றடி: அம் பாலிகை அத்தம் கோடல் அம் கஞ்சத்த நந்து அன்னையே என்க.

### *பொ-ரை*

நீர்வாழ்கின்ற அன்ன வாகனத்தையுடைய பிரமனைப் பொருந்திய அழகிய அதரத்தையும் கையாகிய காந்தளையும் உடைய அழகிய வெண்டாமரையில் வீற்றிருக்கின்ற சங்கமன்ன வெண்ணிறமுடைய நாமகளே எ-று

### *வி-ரை*

*முதற் பதின்மூன்று சீர்ப் பயனிலை:*

கஞ்சத்தனத்து அன்னையே எனக் கொண்டு பிரமனிடத்துப் பொருந்திய அதரத்தையும் காந்தளையும் கஞ்சம்போன்ற தனத்தையும் உடைய அன்னையே எனக் கூறலும் அமையும். இதுவும் அன்று அன்னத்தனையே என்று

கொண்டு அன்னத்தனே அன்னையே என இருவர்க்கும் ஆக்குக.

# *13-ஆவது பொருள்*

## *அருகன்*

## இது இருவிகற்பமுடையது

### *முதலாவது - சொ-கை*

3 வது அடியீறு: கஞ்சத்து நந்து அன்னையே

ஈற்றடி: அம்பாலிகை அத்தம் கோள் தலம் கம் சத்த ந தன்னையே எனவும், சத்தம் நந்தனையே எனவும் கொள்க.

### *அ-ள்*

அம்பாலிகை - தருமதேவதை. அத்தம் - புருடார்த்தம். கம்-தலை. சத்தம் - ஏழ்நிலம். நத்தம் -கோயில். நத்தன் - சமவசரணம் என்னும் கோயிலையுடையான்.

### *ப-ரை*

கஞ்சத்த -தாமரை மலரை வாகனமாகக் கொண்டோனே
நந்து அன்னையே - தூய்மையாற் சங்கம் அன்னோனே

அம்பாலிகை அத்தம் கோள் தலம் கம் சத்த - தருமதேவதையின் புருடார்த்தங்களைக் கொண்ட தலமாகிய முடியின்கண் வீற்றிருக்கும் மெய்ப்பொருளே

ந தன்னையே- உயர்ந்த தந்தையாகிய அருகனே எ-று

இனிச் சத்தம் நத்தனையே எனற்கு அம்பாலிகையின் முடிமேல் வீற்றிருக்கின்ற மானாங்கனை முதலிய ஏழ் நிலத்தையுடைய சினாலயத்தையுடையோனே எனவும் உரைக்க.

*முதற்பதின்மூன்று சீர் பயனிலை*

"அருகனை முடிதரித்தாள் அம்பாலிகை என்றும் சாற்றலாமே" என்பது நிகண்டு ஆதலின் அம்பாலிகை தருமதேவதைக்குப் பெயராதலையும், அவள்முடியில் அருகன் வீற்றிருத்தலையும் உணர்க.

கொள், 'கோள்' என நீண்டது. நத்தம் நகர்க்குப் பெயராயினும் ஈண்டுக் கோயிலை உணர்த்திற்று. அக்கோயில் இந்திரன் ஏவலால் குபேரன் செய்த பொன்னெயிற் கோயில். அது பன்னிரெண்டு யோசனைத்தாய் மும்மதிலும் ஏழ்நிலமும் உடைத்தாய சமவசரணம் என்க.

*"திருக்கிளர் குரவர் கோமான் ஏவலிற் குபேரன் செய்த*
*விருப்புறு பொன்னெ யிற்குள் விளங்காவண்ணெழுத்தி ரண்டும்*
*பரப்பிய ஆதி மூர்த்தி'*

எனவும்,

*"என்னெஞ்ச மேயிடமேயுடைத்தே இந்திராதி விண்ணோர் பின்னோர்*
*முன்னஞ்செய் பன்னிரண் டோசனைத்தாய் முழுமாமணித்தூண்*
*மன்னிஞ்சி மூன்றொடு மாறங்கண முதலேழ் நிலத்துப்*
*பொன்னின்சி னாலய மாயிற்றன்றோ எங்கள்புங் கவற்கே".*

*எனவும் கூறுமாற்றல் இதனை உணர்க.*

மும்மதிலாவன: உதயதரம், பிரீதிதரம், கல்யாணதரம் என்பனவாம்.

ஏழ்நிலமாவன: மானத்தம்பம், சலகாதிகை, புட்பவனம், சைத்திய விருட்சம், துவச பூமி, சித்தார்த்த விருட்சம் தாலதர்சாவலி என்பனவாம்.

கமல ஊர்தி என்பது அருகன் பெயராதலிற் கஞ்சம் அவன் வாகனமாதல் உணர்க. அயனே அருகனாயினானென்பார் மதம்

பற்றி அருகனை அயன் வகையுட் சாரவைத்தாரென்க. இதுவன்றி உத்தேசமுறையென முன்னுரைத்தமையால் எத்தேவரை எங்ஙனம் வைப்பினும் உடன்பாடாதலும் உணர்க.

ஈற்று விகற்பத்துள் இயைவன கொள்க.

## *2-வது சொல்வகை*

**3 வது அடியீறு: கஞ்சம் தனத்தன் ஐயே.**

ஈற்றடி: அம்பாலிகை அத்தக்கோடு அலங்கம் சத்தம் நத்தனையே

*ப-ரை*

கஞ்சத்தனத்தன் ஐ- தாமரை வடிவாகிய தனத்தையுடைய ஐயனாகிய குபேரன் செய்த

அம்பாலிகை - அழகிய புகழுடைய அலங்காரமுடைய

அத்தக்கோடு அலங்கம் - பொன்மலை போன்ற (மூன்று) பொன்மதிலையுடைய

சத்து நத்தனையே - ஏழ்நிலத்தையுடைய கோயிலையுடைய அருகனே எ-று.

*வி-ரை*

*முதற்பதின்மூன்று சீர் பயனிலை*

கஞ்சத்த நத்தன் ஐயெனக் கொண்டு கஞ்சமும் நந்துமாகிய இருநிதிக் கிழவனாகிய குபேரன் என்றும் அமையும். அலங்கம்-மதில்உறுப்பு. ஈண்டு ஆகுபெயராகி மதிலை உணர்த்திற்று. பொன்மலை போன்ற மதில் எனவே பொன்மதில் என்பது பெற்றாம். "அத்துக்கோடு அலங்கு அஞ்சு அத்தம் நத்தனையே" எனப்பிரித்து அத்தக்கோடு போல விளங்குகின்ற பாவிகள் அஞ்சுகின்ற பொற்கோயிலுடையானே எனக் கூறலும் அமையும். இவ்வுரை விகற்பம் உரைத்தன கொண்டு உரையாதனவும் உணர்க எனக் கருப்பொருளின் உரைத்தமையால் கொள்ளப்பட்டது. மேலும் இதுவே.

# 14-ஆவது பொருள்

## தருமதேவதை

### சொ-கை

3 வது அடியீறு : கம் சத்தம் நத்தனை ஏய்

ஈற்றடி: அம்பாலிகை அத்தம் கோடல் அம் கஞ்சம் தனத்து அன்னையே

### ப-ரை

கம் சத்தம் நத்தனை ஏய் அம்பாலிகை -முடிமேல் ஏழ் நிலங்களையுடைய கோயிலுடையானாகிய அருகனைத் தரித்த அம்பாலிகையே

அத்தம் கோடல் அம் கஞ்சத்தனத்து அன்னையே -கையாகிய காந்தளும் அழகிய கஞ்சம் போன்ற தனமும் உடைய அன்னையாகிய தருமதேவதையே எ-று.

### வி-ரை

*முதற் பதின்மூன்று சீர் பயனிலை*

அருகனை முடிதரித்தலில் தருமதேவதையை அவனைச் சாரவைத்தார். அயன் முதலாகத் தருமதேவதை ஈறாக உடைய இந்நான்கும் அயன்வகை என்க. இனி அரிவகை உரைக்கப்படும்.

# 15-ஆவது பொருள்

## அரிவகையுள் திருமால்

### சொ-கை

3 வது அடியீற்றில் மேல் உரைத்த பதினொரு விகற்பத்துள் மாறின்றி இயைவன கொள்க. அவற்றொடு கஞ்சத்தன் அத்தனையே, கஞ்சத்த நத்தனையே, கஞ்சத்தனம் தன்னை ஏய், கஞ்சத்தனம் தன்னையே என்ற

விகற்பங்களும் கொள்க ஏற்பழிக் கஞ்சத்தனத்து அன்னையே எனவும் உரைக்க.

ஈற்றடி முற்பகுதி : அம்பு ஆலி கயத்து அம்கோடு அலங்கு அஞ்சு அத்த எனவும்,

அம்பால் இகை அத்தம் கோடு அலங்கு அம்சத்த எனவும், இருவிகற்பம் கொள்க. இப்பகுதி விகற்பம் இன்னும் பலவுள. உரைத்தன கொண்டு அவற்றையுங் கொள்க. பிற்பகுதி விகற்ப மாறில் அத்தன் ந தன்னையே என்பது கொள்ளற்க.

*அ-ள்.*

கயம்-பெருமை. கோடு-சங்கு கயத்தங்கோடு - அத்திகிரி அஞ்சு - அஞ்சுதல், ஐம்படை, அம்பால் இகைஅத்தம் - வலக்கை. வலக்கரத்தில் சங்கம் தாங்கிய திருவேங்கடம் என்க.

*ப-ரை*

3 வது அடிப்பிற்பகுதி விகற்பம்

கஞ்சத் தனத்தனையே - அயன் முதலாயினார் தலைவனே, சங்கமன்ன தூயனே

கஞ்சத்தன் அத்தனையே - பிரமன் தந்தையே

கஞ்சத்த நத்தனையே - நீர்வாழும் சங்கு ஏந்தியே.

கஞ்சத்தனம் தன்னை ஏய் - செந்தாமரையில் வாழும் தனச்செல்வியும் அன்னையுமாகிய இலக்குமி பொருந்திய

கஞ்சத்தனம் தன்னையே கஞ்சத்தனத்து அன்னையே - கஞ்சத்தில் வாழும் தனச்செல்வியே அன்னையே

## ஈற்றடி முற்பகுதி விகற்பம்

அம்பு ஆலி - நீரிலும் ஆலிலும் துயில்வோனே

கயத்து அம்கோடு அலங்கு - பெருமை பொருந்திய அழகிய பாஞ்ச சன்னியம் என்னும் சங்கம் விளங்குகின்ற

அஞ்சு அத்த - பகைவர் அஞ்சத் தக்க கையினையுடைய திருமாலே

கயத்து அம்கோடு அலங்கு - அத்தி கிரியில் விளங்குகின்ற

அஞ்சு அத்த - ஐம்படை தாங்கிய கையனே

அம்பால் இகை அத்தம் - மேகம் போற் கொடுக்கும் வலக்கையின் கண்

கோடு அலங்கு - சங்கம் விளங்குகின்ற

அம் சத்த - அழகிய சத்தனாகிய திருவேங்கடமுடையானே எ-று

**வி-ரை**

***முதற்பதின் மூன்று சீர் பயனிலை***

அயனாதியர் தலைவனே, நந்தன்னாய், அயன்றந்தையே, சங்கேந்தியே, இலக்குமி பொருந்திய அஞ்சத்தக்க கையனே, தந்தையே என்று பாலி முதலிய வினை கூட்டி முடிக்க.

இவ்வாறு கையனே நந்தன்னாய் என முடிக்க.

கையனே, கையனத்தும் அன்னையாகிய திருமகளே, நிலமகளே, நீளாதேவியே எனத் திருமாலுக்கும் அவன் தேவியர் மூவர்க்கும் கொள்க. கஞ்சத்தில் வாழும் தனச் செல்வியாகிய தன்னையே, கையன் நத்தும் அன்னையே எனத் திருமகட்குரைக்க. கையனாகிய அத்தனே, கையனுக்குப் பாதியாகிய சிவனே, கையனுக்குப் புதல்வனாகிய அயனே, வேளே, சாத்தனே என்க.

அஞ்சு - ஐம்படையை உணர்த்தலின் எண்ணியற்பெயர் .

ஐம்படை - வில் வாள் கதை சங்கு சக்கரம்

மேகம்போற் கொடுக்கும் கை எனவே வலக்கரம் என்பது பெற்றாம். திருவேங்கடம் ஒழிய ஏனைப்பதிகளில் இடக்கரத்தில் சங்கம் தரித்தலால் வலக்கரத்திற் சங்கம் உடையான் எனவே திருவேங்கட நாதன் என்பது பெற்றாம்.

கயத்து அம்கோடு அலங்கு அம்சத்த எனப்பிரித்து அத்திகிரியில் வாழும் சத்தனே எனினும் அமையும். கையத்து அம்கோடு அலங்கு அம்சத்த எனப்பிரித்துக் கையிற்சங்கம் விளங்குகின்ற சத்தனே எனவும் உரைத்துக் கொள்க.

# *16-ஆவது பொருள்*

## திருமகள்

### சொ-கை

*3 வது அடியிறுதி :*

கஞ்சத்த நத்தனை ஏய்

ஈற்றடி : அம்பாலிகை அத்தம் கோடல் அம் கஞ்சம் தனத்து அன்னையே

### ப-ரை

கஞ்சத்த நத்தனை ஏய் - நீரின்கணுள்ள சங்கம் ஏந்திய திருமாலிடத்துப்பொருந்திய.

அம்பாலிகை அத்தம் கோடல் - அழகிய அதரத்தையும் கையாகிய காந்தளையும் உடைய.

அம் கஞ்சத் தனத்து அன்னையே - அழகிய செந்தாமரையில் வீற்றிருக்கும் தனச் செல்வியும் எம் அன்னையுமாகிய திருமகளே எ-று.

### வி - ரை

*முதற் பதின்மூன்று சீர் பயனிலை.*

நத்தனையே எனக் கொண்டு நத்தனே அன்னையே என இருவர்க்கும் ஆக்கலும் பொருந்தும்.

# *17-ஆவது பொருள்*

## நிலமகள்

### சொ - கை

**3** வது அடியீறு : கஞ்சத்த நத்தனை ஏய்

ஈற்றடி : அம்பு ஆலிகை அத்தம் கோள் தலம் கஞ்சத்தனத்து அன்னையே.

*அ-ள்.*

அம்பு - கடல். அத்தம் - செல்வம். கடலும் செல்வமும் கொண்ட தலம் பூமி.

*பொ - ரை.*

நீர்வாழும் சங்கேந்திய திருமாலை மணந்த கடலையும் களிக்கின்ற அலங்காரமுடைய பல்வகைச் செல்வங்களையும் கொண்ட பூமியாகிய கஞ்சமன்ன தனங்களையுடைய அன்னையே என்க. முன் உரைத்தாங்கு நத்தனே அன்னையே எனவும் உரைக்க.

முதற்பதின்மூன்றுசீர் பயனிலை.

# *18-ஆவது பொருள்*

## *ஆகாயவாணி*

*சொ - கை.*

**3** வது அடியீறு : கஞ்சத்த நந்து அன்னையே

**4** வது அடி : அம் பாலிகை அத்தம் கோடல் அம் கம் சத்தம் நத்து அன்னையே.

*அ-ள்.*

கம்-விண் சத்தம்-ஒலி

*பொ-ரை*

நீர்வாழும் சங்கமன்ன தூய்மையுடையாளே.

அழகிய அதரமும் கையாகிய காந்தளும் உடைய அழகிய ஆகாயத்துள்ள ஒலிவடிவாகிய விரும்புகின்ற அன்னையாகிய ஆகாயவாணியே எ - று.

*வி - ரை*

முதற்பதின்மூன்று சீர் பயனிலை.

இனம்பற்றி ஆகாயவாணியை நிலமகளொடுசாரவைத்தார்.

# 19-ஆவது பொருள்

## திருமாலது தசாவதாரத்தில்

### மற்சம்

**சொ - கை**

3 வது அடி. மேல் உரைத்தாங்குக் கொள்க.

ஈற்றடி : அம்பாலி கயத்து அங்கு ஓடல் அங்கம் சத்த என்க அம்பு ஆலி என லும் ஆம்.

**அ - ள்**

கயம் - நீர். அங்கம் - மீன்வடிவம்

**ப - ரை**

அம் பாலி கயத்து அங்குஓடல் அங்கம் சத்த - அழகிய புகழுடைய நீரில் ஓடுதலையுடைய அங்கத்தைக் கொண்ட மீனாக அவதரித்த சத்தனாகிய மாலே எ-று

**வி-ரை.**

முதற்பதின்மூன்றுசீர் பயனிலை.

ஈற்று விகற்பத்துள் இயைவன கொள்க.

அப்பு ஆலி - அப்பிலும் ஆலிலும் துயில்வான் என்க. ஏனைய முன்போற் கொள்க.

# 20-ஆவது பொருள்

### கூர்மம்

**சொ-கை**

ஈற்றடி : அம்பாலி கயத்து அங்கு ஓடு அலங்கு அஞ்சு அத்த என்க. அம்பு ஆலி எனவுங் கொள்க.

**அ-ள்**

ஓடு - ஆமையோடு. அஞ்சு - ஐந்துறுப்பு

*ப-ரை.*

கலத்து அங்கு ஓடு அலங்கு அஞ்சு அத்த - நீரின்கண் அங்கு மந்தாகிரியைத் தாங்கிய ஓடும் விளங்குகின்ற ஐந்துறுப்பும் உடைய ஆமையாகிய அத்தனே எ-று

**வி - ரை.**

முதற்பதின்மூன்று சீர்களும் பயனிலை. மூன்றாவது அடிப்பிற்பகுதியை விளியாக்கி இயைவன கொள்க. மேலும் இதுவே.

# *21-ஆவது பொருள்*

## *வராகம்*

*சொ-கை.*

ஈற்றடி : அம்பாலி கயத்து அம்கோடு அலங்கு அம் சத்த

*அ-ள்*

பாலி - வெண்ணிறமுடையது, அது சுவேத வராகம். கோடு அலங்கும் பாலி என்க. பாலியாகிய சத்தன் என்க

*பொ - ரை.*

அழகிய வெண்மையுடையதாகிய பெரிய அழகிய கொம்பு விளங்குகின்ற ஆதிவராக வடிவங் கொண்ட சத்தனே எ-று முதற்பதின்மூன்றுசீர் பயனிலை.

# *22-ஆவது பொருள்*

## *நரசிங்கம்*

*சொ-கை.*

**3** வது அடி: அம்பால் இகு ஐ அத்தம் கோடல் அங்கம் சத்தன் அத்தன் ஞை ஏ.

**4** வது அடி : அம்பாலி கையத்து அம் கோடுஅலங்கு அஞ்சு அத்த

கோடல் அங்கம் - வளைதலையுடைய அங்கமாகிய நகம் சத்தம் - பிரகலாதன். அத்தனை என இரண்டாவது இயைக்க. அம்பாலிகு அங்கமென இயையும்

***ப - ரை***

அம்பால் இகு ஐ அத்தம் கோடல் அங்கம் - அம்பு போலக் கொல்லத்தக்க பெரிய கையின்கணுள்ள வளைந்த அங்கமாகிய நகத்தால்

சத்தன் அத்தன் நை-சத்தனாகிய பிரகலாதன் தந்தையாகிய இரணிய கசிபுவைக் கொன்ற

அம்பாலி - அழகிய புகழுடைய

கையத்து அம்கோடு அலங்கு அஞ்சு அத்த - கையின்கண் சங்கம் விளங்குகின்ற ஐம்படையையுடைய ஐயனே எ-று

***வி-ரை.***

முதற்பத்துச்சீர் பயனிலை. ஈற்றுவிகற்பத்துள் இயைவன கொள்க. கோடலங்கு அத்தன் எனவும் ஐம்படை அத்தன் எனவும் கூட்டுக.

## *23-ஆவது பொருள்*

### ***வாமனன்***

***சொ - கை.***

**2** வது அடியீறு : கஞ்சத்தன் அத்தன் ஐ ஏ.

**3** வது அடி : அம்பால் இகை அத்தம் கோள் தலம் கம் சத்தம் நத்தனை ஏய்

ஈற்றடி : அம்பாலி கையத்து அம்கோடு அலங்கு அம்சத்த

***அ-ள்***

அம்பால் - நீருடன். தலம் கம் - மண்ணும் விண்ணும்

அத்தன் - செல்வம் போன்ற மரபில் வந்த மாபலி

*ப-ரை*

கஞ்சத்தன் அத்தன் - பிரமனது செல்வம் போன்ற மரபிற்பிறந்த மாபலி என்போன்.

ஐ அம்பால் இகை - அழகிய நீருடன் கொடுத்த தானத்தை, அத்தம் கோள் தலம் அம் - தன்கையில் ஏற்றுக் கோடலாற் கிடைத்த பூமியும் வானுலகும்.

சத்தம் நத்தனை ஏய் அம்பாலி-ஐந்திரம் செய்த இந்திரனை அடைந்த அழகிய புகழையுடைய

கை அத்து அம் கோடு அலங்கு அம்சத்த - கையின்கட் சங்கம் விளங்கு கின்ற அழகிய சத்தனாகிய திருமாலமிசமாகிய வாமனனே எ-று

*வி-ரை*

***முதல் எட்டுச்சீர் பயனிலை** :*

ஈற்றடிப் பிற்பகுதிவிகற்பம் ஆறில் நத்து அன்னையே என்ற இரு விகற்பங் கொள்ளற்க. வாமனனாகிய தந்தையே, வாமனனாகிய நந்து அன்னாய், வாமனனாகிய அத்தனே, வாமனனுக்கு அத்தனாகிய காசிபனே, வாமனனுக்கு மூத்தோன் ஆகிய இந்திரனே, தந்தையாகிய காசிபனே, தாயாகிய அதிதியே என்க.

# *24*-ஆவது, பொருள்

## *பரசுராமன்*

*சொ-கை*

**3** வது அடி: அம்பால் இகை அத்தம் கோடல் அம் கஞ்சத்தன் அத்தனை ஏ.

ஈற்றடி: அம்பால் இகு ஐ அத்தக்கோடு அலங்கு அஞ்சு அத்த.

*அ-ள்*

அத்தன் - செல்வம் போன்ற மரபினன் ஆகிய கார்த்தவீரியன். கோடு-மலை.

*ப-ரை*

அம்பால் இகை அத்தம் கோடல் - மேகம்போற் கொடுக்கும் கையின்கட் கொள்ளுதலையுடைய

அம்கஞ்சத்தன் அத்தனை - அழகிய தாமரை மலரையுடைய சூரியனுக்குச் செல்வம் போன்ற மரபினனாகிய கார்த்த வீரியனை

அம்பால் இகு ஐ ஃ தன். அம்புபோல மழுவினாற் கொன்ற ஐயனே

அத்தக்கோடு அலங்கு அஞ்சு அத்த - காட்டையுடைய மலை அசைந்து பிளந்த அஞ்சத்தக்க கையினையுடைய பரசுராமனே எ-று

*வி-ரை.*

***முதற்பத்துச்சீர் பயனிலை :***

ஈற்றடிப் பிற்பகுதி விகற்பமாறில் நத்து அன்னையே என்னும் விகற்பம் இரண்டும் கொள்ளற்க. அஞ்சு அத்தனாகிய தந்தையே, நந்தன்னாய், அஞ்சு அத்தனாகிய அத்தனே, அஞ்சு அத்தனுக்கு அத்தனாகிய சமதக்கினியே, அத்தனுக்குத் தம்பியாகிய தொல்காப்பியனே, அத்தனுக்குத் தந்தையே, தாயாகிய இரேணுகையே என்க.

சிவன்பால் பரசுராமனும் முருக வேளும் வித்தை பயின்றபின் விற்பயிற்சியை அறியும் பொருட்டுச் சிவன் கட்டளையிட ஒரு மலையை ஒரு பாதி செவ்வேளும் மற்றொரு பாதி பரசுராமனும் பிளந்தனர் என்க.

# *25-ஆவது பொருள்*

## ***இராமன்***

***சொ - கை***

3 வது அடி : அம்பு ஆலி கை அத்தக்கோடு அலம் கஞ்சத்த நத்தனை ஏ.

ஈற்றடி : அம்பால் இகு ஐ அத்தம் கோடு அலங்கு அம்சத்த.

*அ-ள்*

அத்தம் - மேரு. கோடு -சிகரம், கஞ்சத்தநத்தம் - இலங்கை.

*ப-ரை*

அம்பு ஆலி கை அத்தக்கோடு - மேருமலையின் சிகரம் என்று சொல்லப்பட்ட,

அலம் கஞ்சத்த நத்தனை - அமைவுடைய நீரின்கணுள்ள நகரமாகிய இலங்கைக்குக் அரசனாகிய இராவணனை

அம்பால இகு ஐ - தன் பெயருடைய அம்பினால் கொன்றவனே,

அத்தம் கோடு அலங்கு அம்சத்த - கையிற்சங்கம் விளங்குகின்ற சத்தனது அமிசமாகிய இராமனே எ-று.

# *36-ஆவது பொருள்*

## *அரன்வகையுள் சிவன்*

இவ்வர்க்கம் ஒன்பது பொது விகற்பமும் சிறப்புவிகற்பமும் உடைத்து.

பொதுவில் முதலாவது விகற்பம்

*சொ-கை*

ஈற்றடி : அம்பு ஆலி கை அத்தக் கோடு அலங்கு அஞ்சு அத்த

ஈற்றடிப்பிற்பகுதி விகற்பம் ஆறில் அத்தன் ந தன்னையே என்ற விகற்பம் ஒழித்து ஏனைய ஐந்தும் கொள்க. மூன்றாவதடி ஈற்று விகற்பம் எல்லாம் கொள்க. இவ்வர்க்கம் இன்னும் பலவிகற்பமுடைத்து.

அவற்றை எல்லாம் உரைத்தன கொண்டு முடித்துக் கொள்க.

*பரை*

அம்பு ஆலிகை அத்தக்கோடு அலங்கு - பொன்மலையே வில்லாக விளங்குகின்ற

அஞ்சு அத்த - திரிபுரத்தார் அஞ்சிய கையினையுடையானே எ-று.

*வி-ரை.*

முதற்பதின்மூன்று சீர் பயனிலை. அஞ்சிய அத்தமுடையானே தந்தையே எனவும், அத்தனே நந்தன்னாய் எனவும், அத்தனே அவ்வத்தன் விரும்பும் அன்னையாகிய உமையே கங்கையே எனவும், அவ்வத்தன் விரும்புகின்ற உமையே கங்கையே எனவும், அத்தமுடையனாகிய அத்தனே எனவும் அத்தனுக்குச் செல்வப்புதல்வனாகிய கணபதியே கந்தனே வைரவனே வீரனே ஐயனே எனவும், அத்தனுக்குக் குருவாகிய கந்தனே எனவும் விகற்பித்துக் கொள்க. மால் அயன் இந்திராதியர் தலைவனும் நந்து அன்னாயும் ஆகிய சிவனே எனவும், கஞ்சத்தனைப் பாதியில் உடையனாகிய சிவனே எனவும், கஞ்சத் தனமுடைய தன்னை ஏய்ந்த சிவன் நத்தும் அன்னை எனவும், கஞ்சத்து அன்னம் போன்ற தன்னை ஏய்ந்த சிவன் நத்தும் அன்னை எனவும் கூட்டுக. பின்வருவனவற்றிற்கும் ஈதொக்கும். சிவகுமாரன் ஆதலின் ஈற்று விகற்பத்தால் அச்சுவத்தாமனையும் கொள்க.

## இரண்டாவது விகற்பம்

*சொ-கை.*

அம் சத்த எனவும் ஏனைய மேலைச் சொல்வகை போலவும் கொள்க.

*பொ-ரை*

பொன்மலையில் விளங்கும் அழகிய மெய்ப்பொருளாகிய சிவனே என்க.

## மூன்றாவது விகற்பம்

*சொ-கை*

ஈற்றடி: அம் பாலிகை அத்தக் கோடு அலங்கு அம்சத்த

பாலி - கைலை.

*பரை.*

அம்பாலி - நீர்வளமுடைய வெண்ணிறத்ததாகிய கைலைமலையிலும்

கை அத்தக்கோடு - அலங்காரமாகிய மேருமலையிலும்

அலங்கு அம் சத்த - விளங்குகின்ற அழகிய சத்தனை எ-று.

*வி-ரை.*

அலங்கு அஞ்சத்தன் அத்தனையே எனக் கொண்டு கைலையிலும் மேருவிலும் விளங்குகின்ற அன்னவாகனனைப் பாதியாகக் கொண்ட சிவனே எனவும் கூறுக.

## நான்காவது விகற்பம்

*பொ-ரை.*

அழகிய வெண்ணிறத்ததாகிய பெரிய நீர்வளமுள்ள கைலையில் விளங்குகின்ற அழகிய அத்தனே என்க.

## ஐந்தாவது விகற்பம்

*பொ-ரை.*

மேகம்போற் களிக்கின்ற கொடையினையுடைய கையின்கண் அழகிய மேருமலை வில்லாக விளங்குகின்ற அழகிய சத்தனே எனவும், கையின்கண் மேருமலை விளங்குகின்ற அன்னத்தனைப் பாதியாக உடையானே எனவும் உரைக்க.

## ஆறாவது விகற்பம்.

*பொ.ரை.*

உமாதேவியை இடப்பாகம் ஆகிய பாதியிற் கொண்டவனும் மலையாகிய வில் விளங்குகின்ற அஞ்சத் தக்க கையனும் ஆகிய சிவனே என்க

## ஏழாவது விகற்பம்

### பொ.ரை.

மேகம் போலுங் களிக்கின்ற கொடையினையுடைய கையின்கண்ணே தங்கிய அப்பிரமகபாலம் என்னும் ஓடு விளங்குகின்ற அழகிய சத்தனே என்க.

## எட்டாவது விகற்பம்

### பொ-ரை.

மேகம்போற் கொடுக்கும் கொடையினையுடைய கையின்கண்ணே மலையாகிய வில் விளங்குகின்ற அழகிய சத்தனே என்க.

## ஒன்பதாவது விகற்பம்.

### பொ.ரை.

அம்பாலிகையைப் பாதியிற் கொள்ளுதலையுடைய அங்குசத்தையுடைய சத்தனாகிய சிவனே என்க.

### வி.ரை.

முதல் விகற்பம் போலவே ஏனை விகற்பங்களுக்கும் பதின்மூன்று சீரைப் பயனிலையாக்குக.

## சிறப்பு விகற்பம்

### கு-பு.

இவை தலங்களைப் பற்றி வருதலிற் சிறப்பாயின

## முதலாவது-காஞ்சி

### சொ-கை.

4. அம்பாலிகை அத்தம் கோடு அலங்கு அம் சத்த.

### அ-ள்

கோடு - வளையலின் சுவடு.

*பொ-ரை.*

காஞ்சிபுரத்தில் அம்பாலிகையாகிய காமாட்சியின் கையில் அணிந்த வளையற்சுவடு விளங்குகின்ற அழகிய லிங்க வடிவாகிய சத்தனே எ-று

*வி-ரை.*

கோடு-ஆகுபெயர். வளையற்சுவடு விளங்கிய எனவே அதுலிங்கவடிவம் என்பதும் அது நிகழ்ந்தது காஞ்சி என்பதும் பெற்றாம்.

## இரண்டாவது - திருவானைக்கா

*சொ.கை.*

4. அம்பு ஆலி கயத்து அகோள் தலம் கஞ்சத்தன் அத்தன் ஐயே.

*ப.ரை.*

அம்பு ஆலி கயத்து - மேகம்போல் களிக்கின்ற யானையால்

அம்கோள் தலம் - அழகைக் கொள்ளுதலையுடைய தலமாகிய

திருவானைக்காவில் வீற்றிருக்கின்ற

கஞ்சத்தன் அத்தன் ஐயே- அயன் அரிக்குத் தலைவனே எ-று

## மூன்றாவது - திருவண்ணாமலை

*சொ.கை.*

3. கஞ்சத்தன் நத்தன் நை ஏய்

4. அம்பாலி கயத்து அம்கோடு அலங்கு அம் சத்த

*ப.ரை.*

கஞ்சத்தன் நத்தன் நை ஏய் - அயனும் அரியும் அடிமுடி தேடலால் நைதலைப் பொருந்திய

அம்பாலி - அழகிய புகழ்வடிவுடைய

கயத்து அம் கோடு அலங்கு - பெரிய அழகிய அண்ணாமலையாக விளங்கிய

அம்சத்த - அழகிய சத்தனே எ-று.

# 37-ஆவது பொருள்

## சிவவடிவத்துள் ஐம்பூதம்

*சொ-கை.*

3. அம்பால் இகு ஐயத்து அங்கு ஓடல் அம் கஞ்சத்து அம் நத்து அன்னையே

4. அம்பால் இகை அத்தம் கோள் தலம் கம் சத்த நந்து அன்னையே.

*அ-ள்.*

ஓடல் - ஓடுதலுடைய காற்று. கஞ்சத்து அன்னை -தீ

*ப-ரை.*

அம்பால் இகு ஐயத்து அங்கு ஓடல் - அம்புபோல் வருத்தும் ஐயவுணர்வுபோல ஓடுகின்ற காற்றும்

அம்- நீரும்

கஞ்சத்து அம் நத்து அன்னையே - நீருக்கு அழகிய விருப்புடைய தாயாகிய நெருப்பும்

அம்பால் இகை அத்தம் கோள் தலம் - மேகம்போற் கொடுக்கும் பல்வகைச் செல்வங்களைக் கொண்டமண்ணும்

கம்-ஆகாயமும் ஆகிய

சத்த நந்து அன்னையே - மெய்ப்பொருளே, நந்தினைஅனைய தூய்மையுடயோயே எ-று.

*வி-ரை*

*முதற்பத்துச்சீர் பயனிலை*

இனிப் பூதமே தெய்வம் என்பார் மதம்பற்றிக் காற்றே நீரே நெருப்பே மண்ணே, விண்ணே எனத்தனித்தனி விளிப்பினும் அமையும். இப்பொருட்குச் சத்தம் ஓசை எனக்கொண்டு கம் என்ற பெயருடைய ஓசையைத் தனக்குக் குணமாகவுடைய நந்தன்ன தூய ஆகாய பூதமே என்க.

*கொள் - கோள் என நீண்டது, "படைகுடி கூழமைச்சு நட்பரண் ஆறு" என்புழிப் போலச் செய்யுள் ஆதலின் ஐம்பூதங்கள் முறையின்றி நின்றன.*

*"வானாகி மண்ணாகி வளியாகி ஒளியாகி "என்றமையால் ஐம்பூதமும் சிவவடிவாதல் உணர்க. தீயினின்றும் நீர்பிறத்தலால் அக்கினியைக் கஞ்சத்தின் அன்னை என்றார். இவ்வாறு வில்லிபுத்தூரரும் "அம்மனைக் கம்மனை பயந்து" எனக் கூறல் காண்க. இது நோக்கி வடநூலார் தீயைக் 'கிருபீடயோனி' என்பர்.*

# *38-ஆவது பொருள்*

## *சிவவடிவத்துள் அட்டமூர்த்தம்*

### *சொ-கை.*

1. அம் பாலி கை அத்தம் கோடல் அங்கம் சத்த நத்தனையே
2. அம்பு ஆலி கை அத்து அம் கோடு அல் அங்கு அஞ்சு அ தனத்தனை ஏய்

ஏனைய மேலைய போற் கொள்க. முதற்சீர் ஒன்றே பயனிலை.

### *அ-ள்*

அத்தம் - கண்ணாடி. சத்து - சத்தாகிய ஆன்மா. நத்தன் இராக் காலத்தையுடைய சந்திரன் கை-கிரணம். ஆலி-மழை.

### *ப-ரை.*

அம்பாலி - அழகு பாலிக்க

கைஅத்தம் அங்கம் கோடல் சத்த - கைக்கண்ணாடி எதிர்ப்பட்ட வடிவத்தைக் கொண்டாற்போல் அவாவின் முன் எதிர்ப்பட்ட வடிவத்தைக் கொள்ளுதலையுடைய சத்தாகிய ஆன்மாவே.

நத்தனையே - சந்திரனே,

அம்பு ஆலி - நீராகிய மழையைப் பெய்விக்கின்ற

(கை அத்து அம்) அத்து அம்கை - சிவந்த அழகிய கிரணங்களையுடைய கோடு அல் அங்கு அஞ்சு - உலகத்தை வளைந்த இருள் அஞ்சுகின்ற

அ தனத்தனையே - அத்தகைய பிரகாசமாகிய செல்வத்தையுடைய சூரியனே.

3-4. காற்றே நீரே நெருப்பே மண்ணே விண்ணே எ-று.

*வி-ரை.*

ஈற்றடியில் சத்தம் எனக்கொண்டு ஓசை என்றுரைக்க. இரதப் பூச்சில்லாத கண்ணாடியில் உருவம் தோன்றாமையின் அதனை நீக்கற் பொருட்டுக் கைக்கண்ணாடி என்றார். கைக்கண்ணாடி முகம் பார்க்கும் கண்ணாடி என்க. கண்ணாடியிற் பலவடிவம் தோன்றி நின்றதாயினும் அக்கண்ணாடிக்கு யாதொருமாசும் இன்மைபோல ஆன்மாவும் வடிவம் தோன்றி நின்று அழியினும் அவ்வான்மாவிற்கு யாதொருமாசும் அடைந்திலது என்பது இவ்வுவமையாற்பெற்றாம்.

# *39-ஆவது பொருள்*

## *நந்திதேவர்*

### *சொ-கை.*

3. நம் பாலி கை அத்தக்கோடு அலங்கு அஞ்சு அத்தன் அத்தனை ஏய்

4. அம்பாலி சுயத்து அம் கோடு அலங்கு அம் சத்த

*அ-ள்*

பாலிக்கோடு - கைலை. ஏ- ஏய்ந்து. கோடு - கொம்பு.

சத்தன் - நந்தி

*ப-ரை.*

அம்பாலிகை அத்தக் கோடு - நீர்வளமுள்ள வெண்ணிறத்த அலங்காரமாகிய் காட்டையுடைய கைலைமலையை

அலங்கு அஞ்சு அத்தன் அத்தனை ஏய் - அசைகின்ற ஐங்கரன் தந்தையாகிய சிவபிரானை அடைந்து

அம்பாலி - அழகாகக் காக்கின்ற

கயத்து அம் கோடு அலங்கு - பெரிய அழகிய இடபத்தின் கொம்பு விளங்குகின்ற

அம்சத்த - அழகிய இடபமுகத்தையுடைய சத்தனாகிய நந்திதேவரே எ - று

***வி - ரை.***

***முதற்பத்துச்சீர் பயனிலை.***

சிவபிரான் சந்நிதியைச் சார்ந்து கைலையைக் காக்கின்ற நந்தி எனக் கூட்டுக. ஈற்று விகற்பம் இயைவன கொள்க.

சிவகணத் தலைவராதலின் நந்தியையும் உடன் கூறினார். **36** வது பொருள் முதல் இந்நான்கும் அரன்வகை.

இனி உமைகை உரைக்கப்படும்.

# *40-ஆவது பொருள்*

## ***உமைவகையுள் உமை***

இப்பொருட்கும் ஓராற்றான் ஐந்து விகற்பம் உரைப்பல். இயைவன பிறவும் கொள்க.

### *முதலாவது விகற்பம்*

*சொ.கை.*

3-அடி : முன்னுரைத்தவற்றில் இயைவன கொண்டு கஞ்சத்தன் அத்தனை ஏய் எனவும் கொள்க.

4-அடி : அம்பாலிகை அத்தம் கோடல் அம் கஞ்சத்தனத்து அன்னையே என்க.

### பஹரை.

கஞ்சத்தன் அத்தனை ஏய் அம்பாலிகை - கஞ்சத்தனை பாதியிற் கொண்ட சிவனிடத்துப் பொருந்திய அம்பாலிகையே

அத்தம் கோடல் அம் கஞ்சத்தனத்து அன்னையே - அத்தமாகிய கோடலையும் கஞ்சம் போன்ற தனத்தையும் உடைய அன்னையே எ.று.

அத்தனே அன்னையே எனவும் உரைத்து இருவர்க்கும் கொள்க.

## இரண்டாவது விகற்பம்.

### சொகை.

3: கஞ்சம் தனம் தன்னை ஏய்

4: அம்பாலிகை அத்தக்கோடு அலங்கு அஞ்சு அத்தன் நத்து அன்னையே.

### பொரை.

கஞ்சம் போன்ற தனத்தையுடைய தன்னைத் தானே ஒத்த அம்பாலிகையே அத்தக்கோடு விளக்குகின்ற கையினையுடைய சிவன் விரும்பிய அன்னையே என்க. அம் சத்த எனக்கொண்டு அத்தக் கோட்டில் விளங்கிய அழகிய சத்தன் விரும்பும் அன்னையே எனினும் அமையும்.

## மூன்றாவது விகற்பம்

### சொகை.

3 : கஞ்சம் தனம் தன்னை ஏய்

4 : அம்பாலிகை அ தங்கு ஓடு அலங்கு அஞ்சு அத்தன் நத்து அன்னையே

### பொரை.

அம்பாலிகையே அவ்வோடு விளங்கும் கையனாகிய சிவன் விரும்பும் அன்னையே என்க.

### வி.ரை.

அஞ்சு அத்தம் நத்து அன்னையே எனக் கொண்டு அம்பாலிகையே அவ்வோடு விளங்குகின்ற அஞ்சத் தக்க கையினையுடைய நந்தினை அன்னாய் ஆகிய உமையே எனவும், விரும்புகின்ற அன்னையாகிய உமையே எனவும் உரைப்பினும் அமையும்

## நான்காவது விகற்பம்

### சொ.கை.

அம்பாலிகை எனவும் ஏனைய மேலைச் சொல்வகை போலவும் கொள்க.

### அ-ள்.

பாலிகை - முளைப் பாலிகை

### பொ.ரை.

அழகிய முளைப்பாலிகையும் அவ்வோடும் விளங்குகின்ற அஞ்சத்தக்க கையினையுடைய நத்து அன்னையே என்க.

### வி.ரை.

துர்க்கை காளி பைரவி காடுகிழாள் என இவரும் ஒருகையிற் பாலிகையும் மற்றொரு கையிற் பிரம கபாலமும் உடையராதலின் இவ்வுரையை ஏனையோர்க்கும் கொள்க.

## ஐந்தாவது விகற்பம்

### சொ.கை.

3: கஞ்சத்தனுக்கு அத்தனை ஏய்

4: அம்பாலிகை அத்தக்கோடு அலங்கு அஞ்சத்த நத்து அன்னையே.

### பொ.ரை.

கஞ்சத்தனுக்கு அத்தனாகிய சிவனிடத்துப் பொருந்திய அம்பாலிகையே அத்தக் கோடாகிய இமயமலையிற் பத்திரியாக விளங்கிய அன்னத்தின் நடையினையுடைய

விரும்பகின்ற அன்னையே என்க. முன் உரைத் தாங்கு அத்தனே, அன்னையே என இருவருக்கும் கொள்க.

இவ்வைந்து விகறபத்திற்கும் முதற்பதின்மூன்று சீர் பயனிலை

## 41-ஆவது பொருள்

### கங்கை:

#### சொ-கை.

3:அம்பு ஆலி கை அத்தக் கோடு அலங்கு அஞ்சு அத்தன் அத்தனை ஏய்

4:அம்பாலிகை அத்தம் கோடல் அம் கஞ்சத் தனத்து அன்னையே.

#### அ-ள்.

அத்தம் - கை. அம் - நீர்.

#### பொ-ரை.

பொன்மலையாகிய விற்கையனை மணந்த அம்பாலிகையின் கையில் உற்பத்தியாகிய கொள்ளுதலையுடைய நீர்வடிவாகிய கங்கை என்னும் அன்னையே.

#### வி-ரை

முதற்பத்துச் சீர் பயனிலை. கங்கை உமையவள் கரத்தில் உற்பத்தி எனலைக் கங்கைக்கு 'உமைகரநதி' என்னும் பெயருண்மையால் அறிக. அஞ்சு அத்தன் அத்தனே, அன்னையே எனவும் உரைத்து இருவர்க்கும் கொள்க.

## 42-ஆவது பொருள்

### துர்க்கை:

#### சொ.கை

2: கயத்து அம்கோடு அல் அங்கம் சந்தம் நந்தனை ஏ

3: அம்பால் இகு ஐ அத்தம் கோடல் அம் கஞ்சம் தனத்து அன்னையே.

அம் பாலிகை அத்து அம் கோடல் அங்கு அஞ்சு அத்தம் ந தன்னையே.

*அ -ள்*

கயத்துக்கோடு - பெரிய கொம்பு. நத்தம் - இரவு. நத்தன் நிசிகரன் ஆகிய அசுரன். ஐ அத்தம் - பெருஞ்செல்வமாகிய வெற்றி

*பஉரை.*

கயத்து அம்கோடு - பெரிய அழகிய கொம்பினையுடைய. அல்அங்கம் சந்தம் - கரிய எருமையின் வடிவத்தைக் கொண்ட அழகிய. நத்தனை அம்பால் இகு- இரவிற் சரிப்போனாகிய அசுரனை அம்பாற் கொன்ற. ஐ அத்தம் கோடல் - பெரிய வெற்றிச் செல்வத்தைக் கொள்ளுதலையுடைய

அம் கஞ்சம் தனத்து அன்னையே - அழகிய கஞ்சமன்ன தனமுடைய அன்னையே

அம்பாலிகை - அழகிய பாலிகையைக் கொண்ட

சத்து அம்கோடல் அங்கு அஞ்சு அத்தம் - சிவந்த அழகியகாந்தள் அஞ்சுகின்ற கையினையுடைய

ந தன்னையே - உயர்ந்த தாயே எ-று.

*வி.ரை.*

***முதல் ஆறுசீர் பயனிலை.***

"முத்தை வரூஉம் காலத்தான" எனத் தொல்காப்பியத்துள் வந்தாற் போலச் சந்தம் என்பது சத்தமெனத் தொடை நோக்கி வலிந்து நின்றது. அத்தம் அதற்குக் காரணமாய வெற்றியை உணர்த்தலின் ஆகு பெயர். இங்ஙனம் நிலந்தரு திருவிற் பாண்டியன் அவையத்து என்புழிப் போர்த்திருவினையுடைய பாண்டியன் என உரையாசிரியர் கூற்றுக் காண்க. வெற்றியைக் கொள்ளும் அன்னை எனவே அதற்குரிய துர்க்கை என்பது பெற்றாம். துர்க்கைகுச் சயமகள்,

வீரச்செல்வி முதலாய பெயருண்மையும் நோக்குக. கோடும் அல் அங்கமுமுடைய அசுரன் எனவே மயிடாசுரன் என்பது பெற்றாம். துர்க்கை உமையின் அமிசமாயினும் சிவபிரான் தேவி என்னும் இயைபு பற்றிக் கங்கையும் உடன்கூறி அதனை அடுத்துக் கூறினார்.

## 43-ஆவது பொருள்

### சத்தமாதர்.

### சொகை.

1. அம்பால் இகை அத்தம் கோடு அலம் கஞ்சத்தன் அத்தன் நை ஏய்
2. அம்பாலிகை அத்து அம் கோடல் அங்கு அஞ்சத்தன் நத்தனை ஏ
3. அம்பாலிகை அத்தம் கோடு அலங்கு அம் சத்தன் அத்தனை ஏய்
4. அம்பாலி கயத்து அங்கு ஓடல் அம் கஞ்சத்தனத்து அன்னையே

#### அ-ள்.

அம்பால் இகை அத்தம் - அம்பின் அத்தம் ஈக என்க. கோடு அலம் - வளைந்தகலப்பை. கஞ்சத்தன் அத்தன் - சிவன். நை ஏய் அம் - வருத்தலைக் கொண்ட அழகியபடை அம்பால் அத்தம் இகை என மாறுக. அம்பாலிகை அத்தம் சிவன்.

கோடு அலம் என்பதனோடும் பாலிகை அத்து அம் கோடல் . எனலைத் தனித்தனி கூட்டுக. ஓடல் அம் கஞ்சத்தனத்து அன்னை எனலை அஞ்சத்தனை ஏய், நத்தனைஏய், அம்பாலிகை அத்தனைஏய், சத்தன் அத்தனைஏய், கயத்து என இவ்வைந்தனொடும் தனித்தனி கூட்டுக. பயனிலையைத் தனித்தனி கூட்டி வினைமுடிவு செய்க.

முதற்சீர் இரண்டும் பயனிலை. முதலாவது பொருளிலும் இப்பயனிலை வகையுரைத்தல் கூடுமாயினும் உரைத்தன கொண்டு தாமே உணருமாறு விடுக்கப்பட்ட தென்க. மேலும் இதுவே.

*பதரை.*

அம்பால் அத்தம் இகை - மேகம் போலப் புருடார்த்தங்களைக் கைம்மாறின்றி அருளுக

கோடு அலம் பாலிகை அத்து அம்கோடல் - வளைந்த கலப்பையைப் பாலிக்கின்ற கையாகிய சிவந்த காந்தளையுடைய வராகியே

கஞ்சத்தன் அத்தன் நை ஏய் அம்பாலிகை அத்து அம் கோடல் - பிரமனைப் பாதியிற் கொண்ட சிவனது வருத்துதலைப் பொருந்திய அழகிய படையாகிய சூலத்தைப் பாலிக்கின்ற கையாகிய சிவந்த காந்தளையுடைய காளியே

அஞ்சத்தனை ஏய் ஓடல் அம் கஞ்சத்தனத்து அன்னையே - பிரமதேவனைப் போல அன்ன வாகனத்திற் செல்லும் அன்னையாகிய அபிராமியே

நத்தனை ஏய் ஓடல் அம் கஞ்சத்தனத்து அன்னையே - திருமாலைப் போலக் கருட வாகனத்திற் செல்லுகின்ற அன்னையாகிய நாராயணியே

அம்பாலிகை அத்தம் ஏய் ஓடல் அம் கஞ்சத்தனத்து அன்னையே - அம்பாலிகையைப் பாதியிற் கொண்ட சிவனைப்போல இடபவாகனத்திற் செல்லுகின்ற மாயேச்சுரியே

கோடு அலங்கு அம் சத்தன் அத்தனை ஏய் ஓடல் அம் கஞ்சத்தனத்து அன்னையே - மலைகளில் விளங்குகின்ற அழகிய சத்தனும் அத்தனும் ஆகிய கந்தனைப் போல மயில் வாகனத்தில் செல்லுகின்ற அன்னையாகிய கௌமாரியே

அம்பாலி கயத்து ஓடல் அம் கஞ்சத்தனத்து அன்னையே - அழகிய வெள்ளையாகிய யானைவாகனத்திற் செல்லுகின்ற அன்னையாகிய இந்திராணியே எ-று.

***வி.ரை.***

முன்னர் அலம் என ஆயுதப்பெயர் வந்தமையானும் சிவனது நைதலைப் பொருந்திய அழகு என்றமையானும் கஞ்சத்தன் அத்தன் நை ஏய் அம் என்பது அன்மொழியாகிச் சிவனது சூலப்படையை உணர்த்திற்று. அச்சூலத்தைப் பாலிக்கின்ற கையினள் எனவே காளி என்பது பெற்றாம். அலத்தைப் பாலக்கினற கையினள் எனவே வராகி என்பது பெற்றாம். அயன் மால் சிவன் கந்தனை ஒப்ப ஓடலையுடைய அன்னை எனவே அபிராமியும், நாராயணியும், மாயேச்சுரியும் கௌமாரியும் என்பது பெற்றாம். கயத்து ஓடல் அன்னை எனவே இந்திராணி என்பது பெற்றாம். இங்ஙனம் சத்த மாதரைக் கூறினமை காண்க.

*சத்த மாதருள் துர்க்கையும் ஒருத்தி ஆதலில் துர்க்கையை அடுத்துச் சத்த மாதரைக் கூறினார்.*

## *44-ஆவது பொருள்*

### *பஞ்சகன்னிகைகள்.*

1:அம் பாலி கை அத்தம் கோள் தலம் கம் சத்தன் அத்தனை ஏ

2:அம்பால் இகு ஐயத்து அம் கோடு அல் அம் கஞ்சத்தன் நத்தனை ஏ

3: அம்பு ஆலி கை அத்தக்கோடு அல் அம் கஞ்சத்த நத்தனை ஏய்

4:அம் பாலிகை அத்தம் கோடல் அங்கு அஞ்சு அத்தம் நத்து அன்னையே.

***அ-ள்***

அத்தக்கோள் - பொற்கோள். சத்தன் - சத்தநூலைச்- செய்த இந்திரன். சத்தன் அத்தன் - இந்திரனுக்குக் குருவாகிய

வியாழன். கஞ்சத்தன் - தாமரை மலர் புனைந்த கௌதம முனி. நத்தன் - திருமாலின் அவதாரமாகிய இராமபிரான். கஞ்சத்த நத்தன் - இலங்கைக்கரசனாகிய இராவணன். அத்தம் கோடல் - பாணிக் கிரகணம் என்னும் விவாகச் சடங்கு. அஞ்சு அத்தம் ஐந்து வலக்கை, அத்தக்கோளாகிய அத்தனை ஏய் பாலிகை எனவும் கஞ்சத்தனை ஏய் பாலிகை எனவும், நத்தனைஏய் பாலிகை எனவும், கஞ்சத்த நத்தனைஏய் பாலிகை எனவும், தனித்தனி கூட்டுக. பாலிகை அன்னை என்பவற்றோடு பாலி என்னைத் தனித்தனி கூட்டி வினைமுடிவு செய்க. முதற்சீர் ஒன்றே பயனிலை.

*பரை.*

அம் பாலி - எல்லா அழகும் பாலிக்க. கை அத்தம் கோள்-ஒழுக்கமுடைய பொற்கோளாகிய

தலம் கம் சத்தன் அத்தனை ஏய் பாலிகை - பூமியிலும் வானிலும் வழங்குகின்ற ஐந்திர நூலைச் செய்த இந்திரன் குருவாகிய வியாழனைக் கணவனாகப் பொருந்திய கன்னிகையாகிய தாராதேவியே. அம்பால் இகு ஐயத்து - அம்புபோல் வருத்தும் ஐயவுணர்ச்சியால்.

அம்கோடு அல் - ஞான அழகு கோடுதல் இல்லாத

அம் கஞ்சத்தனை ஏய் பாலிகை - அழகிய தாமரைமலர்மாலை புனைந்த கௌதம முனிவரைப் பொருந்திய கன்னிகையாகிய அகலிகையே

நத்தனை ஏய் பாலிகை - திருமாலாகிய இராமபிரானைப் பொருந்திய கன்னிகையாகிய சீதா தேவியே.

அம்பு ஆலி கை அத்தக் கோடு - நீரும் மழையும் அலங்கரிக்கின்ற மேருவின் சிகரமாகிய

அல் அம் கஞ்சத்த - இருண்ட அழகிய கடல் நீரின் நடுவேயுள்ள

நத்தனை ஏய் பாலிகை - இலங்கையாகிய நகரையுடைய இராவணனைப் பொருந்திய கன்னிகையாகிய மண்டோதரியே

அத்தம் கோடல் அங்கு - கையைப் பற்றுதல் என்னும் பாணிக்கிரகணம் ஆகிய விவாகச் சடங்கு நடக்கும் அவ்விடத்தில்.

அஞ்சு அத்தம் நத்து அன்னையே - பாண்டவருடைய ஐந்து கைகளை விரும்பிப்பற்றிய அன்னையாகிய திரௌபதா தேவியே எ-று.

**வி-ரை.**

கஞ்சத்தன் நத்தன் என்பன சார்பு பற்றி ஏனைய அந்தணரையும் ஏனைய திருமால் அவதாரங்களையும் நீக்கிக் கௌதமரையும், இராமபிரானையும் உணர்த்தின.

விவாக காலத்தில் ஐந்து கைகளைப்பற்றிய அன்னை எனவே ஐவராகிய பாண்டவரை மணந்த பாஞ்சாலி என்பது பெறப்பட்டது. தொகை பெற்று வழங்கலில் சத்தமாதரை அடுத்துப் பஞ்ச கன்னியரைக் கூறினார். 40 முதல் இவ்வைந்தும் உமைவகை.

இனித் திக்குப் பாலகர் வகை உணரக்கப்படும்.

# 45-ஆவது பொருள்

## திக்குப் பாலகருள் இந்திரன்

## இது நான்கு வகையுடைத்து.

### முதல் விகற்பம்

**சொகை**

1. கஞ்சத் தனத்தன் ஐயே.

2. அம்பாலிகை அத்தக்கோடு அலங்கு அஞ்சு அத்தம் நத்தனையே.

**அ-ள்**

அத்த நத்தன் - பொன்னகமுடையான்

*ப.ரை.*

3. குபேரன் வருணன் முதலாயினார்க்குத் தலைவனே நந்தன்னோனே

4. பொன்மலைபோல் விளங்குகின்ற பகைவர் அஞ்சுகின்ற பொன்னகரத்தையுடைய இந்திரனே எ-று.

## இரண்டாவது விகற்பம்.

*சொ.கை.*

3. முன்போற் கொள்க.

4. அம் பாலி கயத்து அம்கோடு அலங்கு அஞ்சு அத்தம் நத்தனையே

*அ-ள்*

அம் - மேகம்

*ப.ரை.*

மேகவாகனத்தும் வெண்ணிறத்த யானையாகிய அழகிய மலையினும் விளங்குகின்ற அஞ்சத்தக்க பொன்னகர்க்கிறைவன் ஆகிய இந்திரனே என்க.

*வி.ரை.*

அம்பு ஆலி எனப்பிரித்து அம்பு-மேகம், ஆலி-அமுதம் என்று உரைத்து மேகத்தும் அமுதமன்ன வெண்ணிறத்த யானை மீதும் விளங்கும் இந்திரனென்றும், மேகமன்ன வடிவும் அமுதமன்ன நிறமும் உடைய யானை என்றும் உரைப்பினும் அமையும்.

## மூன்றாவது விகற்பம்

*சொ.கை.*

3. முன்போற்கொள்க.

4. அம் பாலி கயத்து அம்கோடு அலங்கு அம் சத்த. இதற்கு ஈற்று விகற்பம் ஆறும் கொள்க. இம்மூன்றுக்கும் முதற்பதின் மூன்றுசீர் பயனிலை.

*பொ.ரை.*

மேகத்தும் வெள்ளையானை மேலும் விளங்கும் சத்தனும் தந்தையுமாகிய இந்திரனே, சத்தனாகிய நந்தன்னாய் என்க. சத்தனே, சத்தன் நத்தும் அன்னையாகிய இந்திராணியே என இருவரையும், சத்தன் நத்து அன்னை எனக்கொண்டு இந்திராணியையும் கொள்க சத்தனாகிய அத்தனே, சத்தனுக்கு அத்தனாகிய காசிபனே என்க. சத்தனுக்குத் தந்தையே, அத்தனுக்குத் தாயாகிய அதிதியே என்க.

## நான்காவது விகற்பம்.

## இந்திராணி

*சொ.கூ.*

3. அம் பாலி கயத்து அம் கோடு அலங்கு அம் சத்தன் அத்தனை ஏய்

4. அம்பாலிகை அத்தம் கோடல் அம் கஞ்சத் தனத்து அன்னையே

*பொ.ரை.*

இந்திரனை நாயகனாகப் பொருத்திய பாலிகையும் கோடலும் தனமும் உடைய இந்திராணியே என்க. சத்தன் அத்தனையே எனக்கொண்டு இந்திரனே, இந்திராணியே என இருவரைக் கூறலும் அமையும்:

*வி-ரை.*

முதற்பத்துச்சீர் பயனிலை.

# 46-ஆவது பொருள்

## அக்கினி

*சொ.கை.*

3. கஞ்சத்து அம் நத்து அன்னையே

4. அம்பால் இகு அயத்து அம் கோடு அலங்கு அம் சத்த.

பொ.ரை.

3. நீருக்கு அழகும் விருப்பும் உடைய தாயாகிய அக்கினி தேவனே

4. அம்புபோலக் கொல்லுகின்ற அழகிய கொம்பினையுடைய ஆட்டு வாகனத்தில் விளங்குகின்ற அழகிய சத்தனே எ.று.

*வி.ரை.*

ஈற்று விகற்பத்துள் இயைவன கொள்க. அயத்து அம்கோடு என்பது அங்கோட்டு அயம் என மாற்றி உரைக்கப் பட்டது. முதல் பதின்மூன்றுசீர் பயனிலை.

# *48-ஆவது பொருள்*

## *நிருதி*

## *இதுவும் இருவகைத்து*
## *முதல் விகற்பம்*

*சொ.கை.*

2. அம்பு ஆலி கை அத்தக்கோடு அல் அங்கம் சத்த நந்து அன்னையே

3. அம் பாலிகை அ தங்கு ஓடல் அம் கஞ்சத்து அம் நத்து அன்னையே

4. அம் பாலிகை அத்தம் கோடல் அங்கு அஞ்சு அத்த.

*அ-ள்*

ஓடல் - ஓடுதலையுடைய ஓடம். கஞ்சத்து அன்னை - நெருப்பு. ஈண்டுத் தீபமும் ஆம். தீபமும் பாலிகையும் கையில் உடையது கன்னிராசி.

*ப.ரை.*

2. மலையும் இருளும் அன்ன பெரிய கரிய வடிவத்தையுடைய அழகிய சத்தனே சங்கமன்ன தூயோனே

3. அம் பாலிகை - மேகமன்ன கரியநிறத்தையுடைய கன்னி என்னும் இராசியானது.
(அத்தங்கு ஓடல் அம்கஞ்சத்து) அம் கஞ்சத்துத் தங்கு அவ்வோடல் - அழகிய நீரில் தங்குதலையுடைய அந்த ஒழுகுதற்றொழிலையுடைய ஓடத்தின் மேலிருந்து.
அம் நத்து அன்னை - நீருக்கு விருப்பமுடைய தாயாகிய நெருப்பையும்

4. அம் பாலிகை - முளைப்பாலிகையையும்

அத்தம் கோடல் அங்கு - கையிற் கொண்டு வீற்றிருத்தலையுடைய அத்தென்மேற்கின்கண் நிலைபெற்ற

அஞ்சு அத்த - கண்டார் அஞ்சத்தக்க தோற்றமுடைய அத்தனே எ.று.

*விரை.*

ஈற்றுவிகற்பத்துள் இயைவன கொள்க. அம்பாலிகை என்பதில் அம் அசைச்சொல். அம்ம என்னும் உரையசையின் திரிபு எனினும் அமையும். முளைப்பாலிகை என்பது நெற்பயிருடைய ஒரு மட்கலம். முதல் ஐந்துசீர் பயனிலை

## இரண்டாவது விகற்பம்

## நிருதியும் தேவியும்

*சொகை.*

மேலைச் சொல்வகையில் ஈற்றடியை மூன்றாமடியாவும். மூன்றாம் அடியை இரண்டாம் அடியாகவும் கொள்க.

முதல் இரண்டுசீர் பயனிலை

*பொரை.*

அம்பு போல அத்தம் மீக சத்தனும் நந்து அன்னாயும், அஞ்சு அத்தனும் தந்தையும் ஆகிய நிருதியே, நிருதியாகிய அத்தனை மணந்த அன்னையாகிய துர்க்கா தேவியே என்க.

அத்தன் ந தன்னை ஏய் எனப்பிரித்து அத்தனாகிய தந்தையை மணந்த தேவியே என்று அவன் தேவிக்கு மாத்திரம் ஆக்கலும் ஒன்று.

# 51-ஆவது பொருள்

## குபேரன்

## இதுவும் இருவகைத்து

## முதல் விகற்பம்

*சொ.கை.*

3.கஞ்சத்த நத்தனையே

4. அம்பு ஆலி கை அத்தக்கோடு அலங்கு அஞ்சு அத்தம் நத்தனையே

*அ.ள்.*

நத்தன் - சங்கநிதியுடையான், நகரையுடையான் அத்தம்- செல்வம்.

*ப.ரை*

3. தாமரைவடிவமுடைய நிதியுடையானே சங்கின் வடிவமுடைய நிதியுடையானே

4. பொன்மலை யென்ன விளங்குகின்ற அஞ்சத்தக்க செல்வமுடைய அளகை என்னும் நகரையுடைய குபேரனே எ-று

## இரண்டாவது விகற்பம்

## குபேரன் தேவி

*சொ.கை.*

2. கஞ்சத்த நத்தனையே

3. அம்பு ஆலி கை அத்தக்கோடு அலங்கு அஞ்சு அத்தம் நத்தனை ஏய்

4. அம்பாலிகை அத்தம் கோடல் அம் கஞ்சத்தனத்து அன்னையே

*ப.ரை.*

குபேரனை மணந்த அன்னையாகிய சித்திர ரேகையே எ.று.

*வி.ரை.*

கஞ்சத்தனே நத்தனே அத்த நத்தனே எனவும் அவனை மணந்த அன்னையே எனவும் இருவர்க்கும் ஆக்குக.

# *52 -ஆவது பொருள்*

*ஈசானன்*

## *இதுவும் இருவகைத்து*
## *முதல் விகற்பம்*

*சொ.கை.*

3. அம்பு ஆலி கை அத்தக்கோடு அலங்கு அஞ்சத்தன் அத்தனை ஏய்

4. அம் பாலி கயத்து அங்கு ஓடல் அங்கு அம் சத்த

*ப.ரை.*

அம்பு ஆலி கை அத்தக்கோடு - மேகமும் மழையும் அலங்கரிக்கின்ற காட்டையுடைய மலையாகிய. அஞ்சத்தன் அத்தனைஏய் அம்பாலி - அன்னத்தையுடைய பிரமனைப் பாதியில் உடைய சிவபிரானைத் தன்னிடத்துப் பொருந்திய நீர்வளமுடைய வெண்ணிறமுடையதாகிய கைலையையும்

கயத்து அங்கு ஓடல் - நீரில் ஓடுதலையுடைய மீனராசியையும் உடைய, அங்கு அம் சத்த - வடகீழ்த் திசையாகிய அங்குள்ள அழகிய சத்தனாகிய ஈசானனே எ-று

*வி.ரை.*

கயத்து அங்கு என்பதில் அங்கு அசை.

முதற் பத்துச்சீர் பயனிலை. ஈற்றுவிகற்பத்துள் இயைவன கொள்க.

## இரண்டாவது விகற்பம்.

## ஈசானனும் அவன் தேவியும்

*சொ.கை.*

2. அம்பு ஆலி கை அத்தக்கோடு அலங்கு அஞ்சத்தன் அத்தனை ஏய்

3. அம் பாலி கயத்து அங்கு ஓடல் அங்கு அம் சத்தன் அத்தனை ஏய்

4. அம் பாலிகை அத்தம் கோடல் அம் கஞ்சத்தனத்து அன்னையே

*பொ.ரை.*

கைலையும் மீனராசியும் உடைய வடகீழ்த்திசையாகிய அத் திக்கைப் பாலிக்கின்ற சத்தனும் அத்தனுமாகிய ஈசானனை மணந்த அன்னையாகிய பார்வதி தேவியே என்க. சத்தன் அத்தனையே எனக்கொண்டு ஈசானனே, ஈசானன் தேவியே எனவும் உரைக்க.

முதல் ஐந்துசீர் பயனிலை.

# 53-ஆவது பொருள்

## கோள்வகையுள் சூரியன்

## இது மூவகைத்து

## முதலாவது விகற்பம்

*சொ.கை.*

2. அம்பு ஆலி கை அத்து அம் கோடு அல் அங்கு அஞ்சு அ தனத்தனையே

3. அம்பால் இகு ஐயத்து அங்கு ஓடு அலங்கு அம் சத்தம் நத்தனையே

4. அம்பாலி கை அத்தம் கோடு அல் அம் கஞ்சத்த.

*அ.ள்.*

ஆலி-மழை. கை-கிரணம். சத்தம் - சத்தமாவென்னும் குதிரை

*குபு.*

சூரியமண்டலம் நிலையுடையதாயினும் உலகத்தைச் சுற்றி ஓடுவது போலக் காணப்படுதல் கொண்டு தற்குறிப்பேற்றத்தால் ஓடுகின்ற குதிரையுடையான் என்று உரைத்துக் கொள்க.

*பகரை.*

அம்பு ஆலி - நீராகிய மழையைப் பெய்விக்கின்ற

(கை அத்து அம்) அத்து அம் கை - சிவந்த அழகிய கிரணங்களையுடைய.

கோடு அல் அங்கு அஞ்சு - உலகத்தை வளைத்த இருள் அஞ்சுகின்ற. அ.தனத்தனையே - அத்தகைய பிரகாசமாகிய செல்வத்தை உடையானே. அம்பால் இகு ஐயத்து - அம்பு போல வருந்தி ஒரு பக்கலும் நிலையின்றி ஓடுகின்ற ஐயஉணர்ச்சி போல. அங்கு ஓடு - ஓரிடத்தும் தங்காது மேருவைச் சுற்றி ஓடுகின்ற. அலங்கு அம் சத்தம் நத்தனையே - விளங்குகின்ற அழகிய ஏழு குதிரைகளையுடைய ஆக்கமுடையானே அம்பாலி - மேகமன்ன புகழுடைய. கை அத்தம் கோடு அல் அம் கஞ்சத்த - கையாகிய அத்தத்தில் கோட்டமில்லாத தாமரையை உடையானே எ-று

*விரை.*

முதல் ஐந்துசீர் பயனிலை. சூரியகிரணத்தால் கடலில் வற்றிய நீராவியே மேகமாகி மழைபெய்தலின் மழையைத் தரும் கிரணத்தை உடையான் என்றார். ஈற்றுவிகற்பமெல்லாங் கொள்க.

## இரண்டாவது விகற்பம்

### சொ.கை

1: அம் பாலிகை அத்தம் கோடல் அங்கம் அத்த ந தன்னையே என்க. ஏனைய மூன்றடிகளும் முன்போற் கொள்க. ஈற்றடி ஈற்றில் நத்தல் நையே என்க.

### அ-ள்

அம் பாலிகை-அழகிய கன்னிராசி. அத்தங்கோடல் செல்வங் கொள்ளலையுடைய ஆதாயத் தானமாகிய பதினொன்றாம் இடம். இது தற்பொருட்டு

### பஉரை

1. அழகிய கன்னிராசி என்று சொல்லப்பட்ட செல்வங்கொள்ளு தலையுடைய எனது லாபத்தானத்திருக்கின்ற பெருமை யுடைய மெய்ப்பொருளே உயர்ந்த தந்தையே எ.று.

2,3, 4: தனத்தனே, நத்தனே, கஞ்சத்தனே, பிறவிக்கு வித்தாகிய அவாவை ஒழிக்க என்க.

### வி.உரை.

ஈற்றுச்சீர் ஒன்றே பயனிலை. இவ்வுரைக்கு ஈற்றுவிகற்பங்கள் இயையா. நூலாசிரியர் தமது செனன காலத்திற் சூரியன் நின்ற நிலை நோக்கிக் கன்னியாகிய ஆதாய தானத்து நின்ற சத்தனே என்றார். இவ்வாற்றான் இது தற்பொருட்டாயிற்று. பின்வரும் இடங்களிலும் இவ்வாறே கொள்க.

பதினோராம் இடமாகிய கன்னியிற் சூரியன் எனவே இவர் சென்மராசி விருச்சிகம் என்பதும், இவர் பிறந்த திங்கள் புரட்டாசி என்பதும் பெறப்பட்டன். பதினோராம் இடத்தை லாபத்தானம் என்பது சோதிட நூல் வழக்கு.

கஞ்சத்தன் அத்தனையே எனக்கொண்டு கஞ்சத்தனுக்குத் தாயாகிய அதிதிதேவியே எனவும், கஞ்சத்தனுக்குத் தந்தையாகிய காசிப முனிவனே எனவும் கஞ்சத்தனுக்குப் புதல்வனாகிய மனுவே அசுவினிதேவரே இயமனே சனியே எனவும், கஞ்சத்தனுக்குப் புதல்வனும் உபக்கிரமுமாகிய

காலனே எனவும் உரைத்துக்கொள்க. அசுவினிதேவரைக் கொள்ளுமிடத்து ஒவ்வொருவரையும் தனித்தனி கூறிக் கொள்க. கஞ்சத்தனுக்குப் புதல்வனாகிய கண்ணனே எனினும் அமையும்.

### மூன்றாவது விகற்பம்

*சொ.கை.*

3. நத்தனை ஏய்

4. அம் பாலிகை அத்தம் கோடல் அம் கஞ்சத்தனத்து அன்னையே. ஏனைய முன்போற் கொள்க.

*பொ.ரை.*

சூரியனை மணந்த அன்னையாகிய சாயாதேவியே உஷாதேவியே என்க. சூரியனே, சூரியன் தேவியாகிய சாயாதேவியே, உஷா தேவியே எனவும் உரைக்க, முதல் ஐந்து சீர் பயனிலை.

## 54-ஆவது பொருள்

### சந்திரன்
### இதுவு மூவகைத்து
### முதலாவது விகற்பம்

*சொ.கை.*

1: அம்பாலி கை அத்து அம் கோடல் அம் கஞ்சத்தனத்து அன்னை ஏய்

2: அம் பாலி கயத்து அம் கோள் தலம் கஞ்சத்து அம் நத்தனையே

3: அம்பு ஆலி கைஅத்தம் கோடு அலங்கு அஞ்சு அத்தன் அத்தனையே

4: அம்பாலிகை அத்தம் கோடல் அம் கம் சத்த

கயம்.நீர். நீர்நோய்-கயரோகம்,குறைவு. அத்தம் கோடு அலங்கு அத்தன் அஞ்சு அத்தன் அத்தன் என்க. அத்தங்கோடலங்கு அத்தன் - காடும் மலையும் தன் மண்டலத்து விளங்கும் அத்தன். சந்திரமண்டலம் இவ்வுலகு போல் காடும் மலையும் மிகவுடைத்தென்பது கோளநூற்றுணிவு. இக்கொள்கை உடன்பாடிலார்க்கு அத்தத்திற்கோடு விளங்குகின்ற அஞ்சு அத்தன் என்க. அஞ்சு அத்தன் - ஐம்படைக் கையனாகியமால். ஆலி-அமுதம். கை-கிரணம். அமுதகிரணமுடைய அத்தன் என்க. நத்தன் நந்தலைச் செய்வோன். நந்தல் - அழிதல். கஞ்சத்து அம் நத்தன் - தாமரையின் அழகை நந்தச் செய்வோன். இனி இருதய தாமரையை நந்தச் செய்வோன் எனவும் கொள்க. இவ்வுரைக்கு நத்தன் ஆக்கம் செய்வோன் அழிவு செய்வோன் என இருபொருள் கொள்க. சந்திரன் மனத்தின் அதிதெய்வம். ஆதலின் ஆக்கஞ் செய்வோன் என்க. சந்திர கிரகணத்தாற் பைத்தியநோய் வளரலின் அழிவைச் செய்வோன் என்க. இதனை 'லூநாடிக்' என்ற ஆங்கிலமொழியும் வற்புறுத்துகின்றது. மேலும் டாக்டர் புரூவர் என்னும் ஆங்கில வித்துவான் தாமியற்றிய அகராதியில் 'லூநாடிக்ஸ்' எனற்குச் சந்திரனாற்றாக்குண்டவர் என்றும், உரோமர்கள் மனமானது சந்திரனாற் பீடிக்கப்படும் எனவும் சந்திரகலை வளர வளரப்பைத்திய நோயும் வளருமென நம்பியிருந்தார்கள் எனவும் உரைத்தல் காண்க. முதற்சீர் ஒன்றே பயனிலை.

பரை.

அம் பாலி - மேகம்போற் பாலிக்க

கை அத்து அம்கோடல் அம் கஞ்சத்தனத்து அன்னை அம்பாலி - கையாகிய கோடலையும், கஞ்சத்தனத்தையும் உடைய அன்னைக்குக் காரகனாகப் பொருந்திய அழகிய புகழையுடைய. கயத்து அம்கோள் - நீரின் தண்மையையுடைய அழகிய கோளே. தலம் கஞ்சத்து அம் நத்தனையே - பூமியிற்றாமரையின் அழகை நந்தச் செய்வோனே.

அம்பு ஆலிகை - நீரினது குளிர்ச்சியைக் கொண்ட அமுத கிரணத்தையுடைய

அத்தம் கோடு அலங்கு - காடும் மலையும் தன் மண்டலத்து விளங்குகின்ற

அஞ்சு அத்தன் அத்தனையே - ஐம்படைக் கையனாகிய திருமாலின் இருதய கமலத்துத் தோன்றிய புத்திரனே

அம் பாலிகை அத்தம் கோடல் அம் கம் சத்த அம்பாலிகையைப் பாதியிற் கொள்ளுதலையுடைய சிவனது அழகிய தலையில் வசிக்கின்ற சத்தனே எ-று.

### *வி.ரை.*

கயத்து அம் கோள் எனற்கு இன்னும் சலரோகத்துக்கும், கயரோகத்துக்கும் காரகன் ஆகிய கோளெனவும், குறைந்து தேய்தலையுடைய கோள் எனவும் உரைக்க. அத்தங்கோடு அலங்கு அஞ்சு அத்தன் அத்தனையே எனற்குக் கையிற் சங்கம் விளங்குகின்ற ஐம்படைக் கையனுக்குப் புதல்வனே எனவுங் கூறுக. இராக்காலத்தில் ஈன்ற தாய்குங் கயரோகத்ததுக்கும் பிறவற்றுக்குஞ் சந்திரன் காரகன் எனச் சோதிட நூல் கூறும். சத்தனத்தும் அன்னையாகிய உரோகணியே, தாரையே என்க. சத்தனுக்குத் தந்தையாகிய பிரமனே, திருமாலே, அத்திரி முனிவரே, அக்கினியே சத்தனுக்குப் புதல்வனாகிய புதனே என்க. சந்திரன் திருமால் இதயத்தும் அத்திரிமகாரிசியின் கண்ணிலும் அக்கினிதேவன் முகத்திலும் கடலிலும் பிறந்தான் என்க. சத்தனுக்குத் தாயே என்று அநசூயை முதலாயினாரையும் கொள்க. இவ்வர்க்கத்தில் சந்திரன் புதல்வனும் உபக்கிரகமுமாகிய கலைக்ஞாநபாதனும் கொள்ளப்படும்.

## *இரண்டாவது விகற்பம்*

### *சொ.கை.*

4. அம்பால் இகு ஐ அத்தம் கோடல் அங்கு அம் சத்த என்க. ஏனைய முன்போலக் கொள்க.

*அ.ள்.*

ஐ அத்தம் - வெற்றி, அத்தம் கோடல் அங்கு - வெற்றியைக்குறித்துக் கோடற்கிடமாகிய பத்தாவது பாவம்.

*பொ.ரை.*

அம்பாற் கொல்லுதல் எய்தும் பெருஞ்செல்வமாகிய வெற்றியைக்குறிக்கும் எனது பத்தாம் இடத்தில் நின்ற சத்தனே எ.று.

*வி.ரை.*

பயனிலை முன்போற் கொள்க. பத்தாம் இடத்தில் நின்ற சந்திரன் எனவே இவரது சென்மராசியாகிய விருச்சிகத்துக்குப் பத்து சிங்கராசி ஆதலாற் சந்திரன் நின்றராசி சிங்கம் என்பது பெறப்பட்டது. பத்தைச் சயத்தானம் கருமத்தானம் எனக் கூறுவது சோதிட நூல் வழக்கு.

## மூன்றாவது விகற்பம்
## சந்திரன் தேவிமார்

*சொ.கை.*

3. அத்தனை ஏய் எனவும் 4. அம் பாலிகை அத்தம் கோடல் அம் கஞ்சத்தனத்து அன்னையே எனவும் ஏனைய முன்போலவும் கொள்க. இதற்கும் பயனிலை முதற்சீரே.

*பொ.ரை.*

கோளும் நத்தனும் அத்தனுமாகிய சந்திரனை மணந்த அசுவினியே, பரணியே, கார்த்திகையே என்று இருபத்தேழு நாளையும் உரைத்துக் கொள்க. இனிக்கோளும் அத்தனுமாகிய சந்திரனே, சந்திரன் மணந்த அசுவினி முதலிய தேவிமாரே எனவும் உரைத்துக் கொள்க.

# 55-ஆவது பொருள்

## செவ்வாய்

## இதுவும் மூவகைத்து

## முதலாவது விகற்பம்.

### சொ.கை.

3. அம்பு ஆலி கை அத்து அம் கோள் தலம் கஞ்சத்தனம் தன்னை ஏய்

4. அம்பால் இகை அத்தம் கோடல் அங்கம் சத்த.

### அவ்

அம்பு - ஈண்டு ஆயுதப்பொதுமை குறித்து நின்றது. அங்கம் - பெருமை. ஆயுத காரகன் செவ்வாய்

### ப.ரை.

அம்பு அலி கை அத்து அம் கோள் - ஆயுத காரகனாகிய களிக்கின்ற அலங்காரமாகிய சிவப்பு நிறத்தையுடைய அழகியகோளே

தலம் கஞ்சத்தனத்தன்னை ஏய் - பூமிதேவியே கஞ்சமன்னதனத்தையுடைய அன்னையாகப் பொருந்திய

அம்பால் இகை அத்தம் கோடல் அங்கம் சத்த - மேகம் போற்கொடுக்கும் கொடையினைக் கையிற் கொள்ளுதலையுடைய பெருமை பொருந்திய சத்தனாகிய அங்காரகனே எ.று.

### வி.ரை.

*முதற்பத்துச்சீர் பயனிலை.*

பரத்துவாச முனிவர் இந்திரியத்தால் பூமியிற் பிறந்து பூமிதேவியால் வளர்க்கப்பட்டமையால் பூமியைத் தாயாக் உடையோன் என்றார். தலந்தன்னையாக ஏய்ந்த சத்த எனக்கூட்டுக. செவ்வாய் குருதி நிறத்தன் ஆதலின் அத்துக்கோள் என்றார். சேயின் புதல்வனாகிய உபக்கிரகத்தையும் உரைத்துக் கொள்க.

## இரண்டாவது விகற்பம்

### சொ.கை.

2. அம் பாலி கை அத்தம் கோடல் அங்கம் சந்த ந தன்னையே என்க. கோடலங்கம், அங்கம் கோடலெனமாற்றுக. ஏனையமுன்போலக் கொண்டு ஈற்றுவிகற்பத்துள் ந தன்னையே என்பது கொள்ளற்க.

### அ-ள்

அத்தம் - செல்வம், விளி. அங்கம்கோடல்- உடலைக்கோடுதலைக் குறிக்கும் எட்டாவது பாவம்.

### பரை

அம் பாலி கை அத்தம் - அழகிய புகழுடைய ஒழுக்கமுள்ள எமது செல்வமாயவனே

அங்கம் கோடல் சந்த - தேகங்கோடுதலாகிய மரணத்தைக் குறிக்கும் எமது எட்டாம் இடத்தில் நின்ற அழகனே. ந தன்னையே உயர்ந்த தந்தையே எ.று.

### வி.ரை.

முதல் ஐந்துசீர் பயனிலை. எட்டாம் இடத்தில் நின்றவன் எனவே அங்காரகன் விருச்சிகத்துக்கு எட்டாகிய மிதுனராசியில் நின்றான் என்பது பெறப்பட்டது. எட்டாமிடத்தை மரணத்தானம் என்பது சோதிடநூல் வழக்கு.

## மூன்றாவது விகற்பம்

## செவ்வாயும் பூமியும் செவ்வாயின் தேவியும்

### சொ.கை.

3. கஞ்சத்த நந்து அன்னையே

4. அம் பாலிகை அத்தம் கோடல் அம் கஞ்சத்தனம் தன்னையே ஏனைய முன்போற் கொள்க.

### பரை

அம்பு ஆலி கை அத்து அம் கோள் - அங்காரகனே

தலம் கஞ்சத்த நந்து அன்னை - அங்காரகனைப் பெற்ற பூமிதேவியாகிய நந்தன்ன தூய்மையை யுடையாளே

4-அங்காரகன் தேவியாகிய கஞ்சமன்ன தனமுடைய தன்னையே

*விரை.*

பயனிலை முன்னுரைத்தாங்குக் கொள்க.

கோள்களை ஒப்ப ஓரண்டம் ஆதல் ஒப்புமைபற்றியும். செவ்வாய்க்கு அன்னையாதல் இயைபு பற்றியும் பூமியை முன்னர்த் தனித்துரைத்ததே அன்றி ஈண்டுச் சேர்த்தும் கூறினார்.

# 56-ஆவது பொருள்

## புதன்

### இதுவும் மூ வகைத்து.

### முதலாவது விகற்பம்

*சொகை.*

2. கஞ்சத்த நத்தன் ஐ ஏ

3. அம் பாலி கயத்து அம் கோள் தலம் கஞ்சத்து அம் நத்தனை ஏய்

4. அம் பாலிகை அத்தம் கோடல் அங்கம் சத்த.

*அ - ள்.*

நத்தன் - மால். ஐ -அழகிய நாமம். அம் மேகம். பாலிகை-தாரை. அத்தம் -கை.

*பஉரை.*

2. நீரிலுள்ள சங்கேந்தியின் அழகிய மால் என்னும் நாமத்தைக் கொண்ட

3. அம் பாலி-மேகமன்ன நிறமும் புகழுமுடைய கயத்து அம் கோள் தலம் கஞ்சத்து அம் நத்தனை ஏய்

அம் பாலிகை-கயரோக காரகனும், கோளும், கஞ்சத்தின் அழகை நத்தச் செய்வோனுமாகிய சந்திரனைக் கூடிய அழகிய பஞ்ச கன்னிகைகளில் ஒருத்தியாகிய தாரை என்பவள்.

4. அத்தம் கோடல் அங்கம் சத்த -தன்கையிற் கோடலையுடைய தேகத்தைக் கொண்ட புத்திரனாகிய புதனே

*வி.ரை.*

முதல் எட்டுச் சீர் பயனிலை. சத்தனுக்குத் தாயாகிய தாரையே சத்தனுக்குத் தந்தையாகிய சந்திரனே என்க. சத்தனுக்குப் புதல்வனே என்று உபக்கிரகத்தையும் கொள்க.

## இரண்டாவது விகற்பம்.

*சொ.கை.*

2. அம் பாலிகை அத்தம் கோடு அல் அங்கு அம் சத்த ந தன்னையே என்க.

ஏனைய முன்போற் கொள்க.

*அ-ள்*

அம் பாலிகை-நீர்மேலுள்ள கன்னிராசி. அம்பாலிகை-அழகிய அதரத்தையுடைய தாரை.

அத்தம் கோடு அல் அங்கு -செல்வம் கோடுதல் இல்லாத இலாபத்தானம் ஆகிய அவ்விடம்.

*ப.ரை.*

அம் பாலிகை அத்தம் கோடு அல் அங்கு -நீரின் மேலுள்ள கன்னி ராசி என்ற அத்தங் கோடுதல் இல்லாத ஆதாயம் என்ற பதினோராம் இடத்தில் நின்ற

அம் சத்த - அழகிய சத்தனாகிய புதனே எ-று.

*வி-ரை.*

முதல் ஐந்து சீர் பயனிலை. இதனால் புதனும் சூரியனோடு கன்னியில் இருப்பது பெறப்பட்டது. ஏனைய முன் போலக் கொள்க.

## மூன்றாவது விகற்பம்

## புதன் தேவி.

### சொ.கை.

1. அம் பாலி கை அத்தம் கோடலம் கஞ்சத்தனத்து அல் நை ஏயம்

2. பாலி கயத்து அம் கோள் தலம் கஞ்சத்து அம் நத்தனை ஏய்

3. அம் பாலிகை அத்தம் கோடல் அங்கம் சத்தன் ந தன்னை ஏ

4. அம் பாலிகை அத்து அம் கோடல் அங்கு அஞ்சு அத்தம் நத்து அன்னையே.

### ப.ரை.

1. மேகம் போற் பாலிக்க. வெறுக்கத் தக்க அத்தத்தாற் கோடேம். கஞ்சத்தனத்து மாதராசை என்னும் இருளால் நைதலையடையேம்.

2. வெள்ளை நிறத்தையுடையானாகிய கயத்துக் கோளாகிய

பூமியில் தாமரையின் அழகை அழிக்கின்ற சந்திரனை மணந்த.

3. நீர்போற் குளிர்ந்த தன்மையை யுடைய கன்னிகையாகிய தாமரையின் கையிற் கொள்ளுதலுடைய அங்கத்தைக் கொண்ட சத்தனும் தந்தையுமாகிய புதனுடைய தேவியாகிய

4. பாலிகையும் அத்தமும் உடைய அன்னையே எ-று.

### வி-ரை.

முதலடியும் இரண்டாவது அடியின் முதல் அசையும் பயனிலை.

புதனே, புதன் தேவியே எனவும் உரைக்க.

# 57-ஆவது பொருள்

## வியாழன்.

## இதுவும் மூவகைத்து.

## முதல் விகற்பம்

### சொ.கை.

2. கஞ்சத்த நந்து அன்னையே.

3. அம்பால் இகை அத்தம் கோள் தலம் கம் சத்தம் நத்தன் ஐயே.

4. அம்பு ஆலி கை அத்தக் கோடு அலங்கு அம் சத்த

### அ-ள்.

அத்தக் கோள் -பொற் கோள்.

### பொ.ரை.

நந்து அன்னாய் மேகம் போலும் கொடையுடைய பொற்கோளே, பூமியிலும் விண்ணிலும் வழங்கும் ஐந்திரஞ் செய்த இந்திரனுக்குக் குருவே, மலை போல் விளங்கும் சத்தனே, என்க.

### வி.ரை.

முதல் எட்டுச்சீர் பயனிலை. சத்தனுக்குத் தந்தையாகிய அங்கிராவே என்க. தாயே என்க. பெயர் வந்துழிக் காண்க. புதல்வனாகிய எமகண்டனே என்றும் உரைக்க. வியாழனுக்குப் பொன்னவன் என்னும் பெயருண்மையால் அத்தக் கோள் என்றார். பொன்னுக்குக் காரகனாகிய கோள் எனினும் அமையும். இரண்டாவது விகற்பம்.

### சொ.கை.

2. அம் பாலி கயத்து அங்கு ஓடல் அங்கம் சந்த ந தன்னையே, ஏனைய முன்போற் கொள்க .

### அ-ள்

கயத்து அங்கு ஓடல் - நீரில் ஓடுதல் உடைய மீனம்

*பொ.ரை.*

அழகிய புகழுடைய நீரில் ஓடுதல் உடைய மீன ராசியில் நின்ற பெருமையுடைய அழகிய உயரந்த தந்தையே எ-று.

*வி.ரை.*

முதல் ஐந்து சீர் பயனிலை. மீனத்தில் நின்றான் எனவே வியாழன் ஐந்தாம் இடத்தில் நின்றான் எனபது பெறப்பட்டது.

## *மூன்றாவது விகற்பம்.*

*சொ.கை.*

3. ஐ ஏய்.

4. அம் பாலிகை அத்தம் கோடல் அம் கஞ்சத்தனத்து அன்னையே. ஏனைய முன் போற் கொள்க.

*பொ.ரை.*

வியாழன் தேவியாகிய அன்னயே என்க. நத்தன் ஐயே எனக் கொணடு வியாழனே வியாழன் தேவியே என்க. பயனிலை முன்போற் கொள்க.

# *58--ஆவது பொருள்*

## *சுக்கிரன்.*

## *இதுவும் மூவகைத்து.*

## *முதல் விகற்பம்.*

*சொ.கை.*

3. அம் பாலி கை அத்தம் கோள் தலம் கஞ்சத்தனத்து அன்னை ஏ.

4. அம் பாலிகை அத்தம் கோடு அலங்கு அம் சத்த என்க. சத்தம் நத்தனையே எனவும் கொள்க.

*அ-ள்.*

பாலி, அத்தம் - வெண்பொன். தலம் -பேரில். பாலிகை -மனைவி. அத்தம் -சீதனம். கோடு -மலை, ஊதுகொம்பு. சத்தம் - வாச்சியம், அன்னை -பகற் காலத் தாய்.

*பஉரை.*

அம் பாலி கை அத்தம் கோள் - மேகத்திற்கும் வெண்ணிறத்ததாகிய சிறுமையுடைய பொன்னாகிய வெள்ளிக்குங் காரகனாகிய கோளே.

தலம் -பெரிய இல்லத்துக்கும்

கஞ்சத்தனத்து அன்னை - பகல் ஈன்ற கஞ்ச மன்ன தனமுடைய அன்னைக்கும்.

அம் பாலிகை - அழகிய இளம் பெண்ணாகி மனைவிக்கும்

அத்தம் - மனைவி கொணர்ந்த சீதனமாகிய செல்வத்துக்கும் காரகனாகிய

கோடு அலங்கு அம் சத்த - மலை போல் விளங்குகின்ற அழகிய ஓசையுடைய ஏனைய வாத்தியங்களுக்கும் காரகனும் தந்தையுமாகிய சுக்கிரனே எனவும் உரைக்க.

*விஉரை.*

முதற் பத்துச் சீர் பயனிலை. சத்த என்புழி ஈற்று விகற்பம் ஆறும் கொள்க. பேரில் எற்காய் தாசர் பசு பெண்டிருற வூர்தி பேரிசை வாத்திய முதற் சங்கீத நடப்பிரியமென்று இன்னும் பலவுரைத்துச் சோதிட நூல் சுக்கிரனுக்குக் காரகங் கூறுவதால், இங்ஙனம் உரைத்தால். சுக்கிரன் கண்ணடிக்கும் காரகன் ஆகலின் அத்தங் கண்ணாடி எனினும் அமையும். செம்பொன்னை நோக்க வெண்பொன் சிறுமையுடைத் தாதலிற் கை அத்தம் என்றார். வெள்ளி என்னும் பெயருடைய கோள் எனினும் ஒக்கும், சத்தனுக்குத் தந்தையாகிய பிருகுவே தாயே என்க. தாய் பெயர் வந்துழிக் காண்க. சத்தனுக்குப் புதல்வனே என்று உபக்கிரகத்தையும் கொள்க.

## இரண்டாவது விகற்பம்

### சொ.கை.

2. அம்பால் இகை அத்தம் கோடல் அங்கம் சத்த ந தன்னையே என்க. ஈற்றடியில் அத்தக் கோடு அலங்கு அம் சத்தம் நத்தனையே என்க. ஏனைய முன்போற் கொள்க.

### அ-ள்

ஈகை அத்தம் கோடல் - ஈகையாகிய தருமமும் அத்தமாகிய பாக்கியமும் குறிக்கும் இடமாகிய ஒன்பதாவது பாவம். அந்தக் கோடு-கையி லுள்ள ஊது கொம்பு.

### பொ.ரை.

மேகம் போற் கொடுக்கும் தருமமும் அத்தமாகிய பாக்கியமும் கொள்ளும் இட மாகிய ஒன்பதாம் இடத்தில் நின்ற பெருமை யுடைய சத்தனும் தந்தையுமாகிய சுக்கிரனே எ-று.

### வி.ரை.

முதல் ஐந்து சீர் பயனிலை. ஒன்பதாம் இடத்துக் கோள் எனவே சுக்கிரன் விருச்சிகத்துக்கு ஒன்பதாகிய கர்க்கடக ராசியில் நின்றான் என்பது பெறப்பட்டது. ஒன்பதைத் தருமத் தானம் பாக்கியத்தானம் என்பது சோதிட நூல் வழக்கு.

## மூன்றாவது விகற்பம்.
## சுக்கிரன் தேவி.

### சொ.கை.

2. அம் பாலிகை அத்தம் கோள் தலம் கஞ்சத்தனம் தன்னையே

3. அம் பாலிகை அத்தம் கோடு அலங்கு அம் சத்தம் ந தன்னையே

4. அம் பாலிகை அத்து அம் கோடல் அங்கு அஞ்சு அத்தம் நத்து அன்னையே.

*பொழிப்புரை.* 

முன் உரைத்தாங்குச் சுக்கிரன் தேவியே என்றும், சந்திரனே சந்திரன் தேவியே என்றும் உரைத்துக் கொள்க.

முதல் ஐந்து சீர் பயனிலை.

# *59-ஆவது பொருள்*

## *சனி*

## இதுவும் மூவகைத்து
## முதல் விகற்பம்

*சொற்கை*

2. அம்பால் இகு அயத்து அம் கோடு அலங்கு அஞ்சு அத்தன் அத்தன் ஐயே

3. அம் பாலி கை அத்தம் கோடல் அம் கஞ்சத்தன் அத்தனையே

4. அம்பு ஆலி கை அத்தக் கோடல் அல் அங்கம் சத்த.

*அ-ள்.*

இகு-முதனிலைத் தொழிற் பெயர். அயம் -இரும்பு. கோடு-மரக்கிளை, வஞ்சனை அஞ்சு அத்தன் அத்தன் - மாலின் புதல்வனாகிய சாத்தன்.

*பரை.*

அம்பால் இகு - அம்பு போல வருத்தும் மரண வேதனைக்கும்

அயத்து - இரும்புக்கும்

அம் கோடு - அழகிய கிளையோடு கூடிய மரங்களுக்கும்.

அலங்கு அஞ்சு அத்தன் அத்தன் ஐயே - விளங்கும் ஐம்படைக் கையனாகிய திருமாலின் புதல்வனாகிய சாத்தனுக்குங் காரகன் ஆகிய

அம் பாலி - அழகிய புகழுடைய

கை அத்தம் கோடல் அம் கஞ்சத்தன் அத்தனையே - கையாகிய அத்தத்திற் கொண்ட தாமரைக்கு, நண்பனாகிய சூரியனுக்குப் புத்திரனே

4. காட்டையுடைய மலையும் இருளும் போன்ற பெரிய கரிய வடிவமுடைய சத்தனாகிய சனி பகவானே எ-று.

### வி.ரை.

முதல் ஐந்து சீர் பயனிலை. ஈற்று விகற்பத்துள் இயைவன கொள்க. சனியின் புதல்வனாகிய குளிகனே என்றும் உரைத்துக் கொள்க.

## இரண்டாவது விகற்பம்.

### சொ.கை.

4. அம்பு ஆலி கை அத்தம் கோடு அல் அங்கம் சத்த.
ஏனைய முன்போற் கொள்க.

### அ-ள்

அங்கம் -உடலாகிய இலக்கினம்.

### பொ.ரை.

மேகம் போலும் கரிய நிறத்தையுடைய களிக்கின்ற ஒழுக்கமுள்ள எமது செல்வம் போல்வானே, அங்கமாகிய இலக்கினத்தில் நின்ற சத்தனாகிய சனிபகவானே எ-று.

### வி.ரை.

இலக்கினத்தில் நின்றான் எனவே சனி விருச்சிகத்தில் உண்மை பெறப்பட்டது. இலக்கினத்தை உடல் எனவும் உயிர் எனவும் கூறல் சோதிட நூல் வழக்கு. பயனிலை முன்போற் கொள்க. மூன்றாவது விகற்பம்.

## சனியின் தேவி.

### சொ.கை.

2. அத்தன் ஐ ஏ

3. அத்தனை ஏய்

4. அம் பாலிகை அத்து அம் கோடல் அங்கு அஞ்சு அத்தம் நத்து அன்னையே
ஏனைய முன்போற் கொள்க.

*பொ.ரை.*

முன் போலச் சனியின் தேவியே என்றும், சனியே சனியின் தேவியே என்றும் உரைக்க. முதல் ஐந்து சீர் பயனிலை.

## *60-ஆவது பொருள்*

### இராகு
### இதுவும் மூவகைத்து
### முதல் விகற்பம்

*சொ.கை.*

3. அம் பாலி கயத்து அம் கோள் தலம் கஞ்சத்து அம் நத்தனை ஏ

4. அம்பால் இகு ஐ அத்தக் கோடு அல் அங்கம் சத்த என்க.

*அ-ள்.*

நத்தன் - சந்திரன். அல் -இருள்.

*பொ.ரை.*

கிரணத்திற் பாலியும் கயத்துக் கோளும் கஞ்சத்தை நந்தச் செய்வோனும் ஆகிய சந்திரனை அம்பு போல வருத்துகின்ற ஐயனே காட்டையுடைய மலையும் இருளும் ஒத்த பெரிய கரிய அங்கத்தையுடைய சத்தனாகிய இராகுவே எ-று.

*வி.ரை.*

முதற் பத்துச் சீர் பயனிலை. இராகுவுக்கு மதிப்பகை என்றும் கரும் பாம்பென்றும் பெயராதலிற் சந்திரனை வருத்தும் ஐயன் என்றும், அல் அங்க முடையான் என்றும் கூறினார். ஈற்றுவிகற்பத்துள் இயைவன கொள்க.

## இரண்டாவது விகற்பம்

*சொ.கை.*

2. அம்பு ஆலி கயத்து அங்கு ஓடல் அங்கு அம் சத்த ந தன்னையே, ஏனைய முன்போற் கொள்க. ஈற்றடியில் அங்கஞ் சந்த எனக் கொள்க .

*அ-ள்*

கயத்து ஓடல்-தீர்த்த யாத்திரை. அது பத்தாவது பாவம்.

*ப.ரை.*

அம்பு ஆலி கயத்து -மேகங்கள் களிக்கின்ற ஆழமாகிய

அங்கு -சமுத்திரம் முதலாய அத்தீர்த்தங்களிடத்து

ஓடல் அங்கு - யாத்திரை செல்லுதலைக் குறிப்பதாகிய பத்தாம் இடமாகிய அவ்விடத்தில் நின்ற

அம்சத்த - அழகிய சத்தனே எ-று.

*வி-ரை.*

முதல் ஐந்து சீர் பயனிலை. பத்தில் ராகு எனவே அது சிங்கராசி என்பது பெறப்பட்டது . சந்திரனும் சிங்கத்தில் நின்றான் என முன் உரைத்தமையால் இவ்விருவருங் கூடி நிற்றல் பெற்றாம். பத்தாமிடத்தைத் தீர்த்தயாத்திரைத் தானம் எனவும் சோதிட நூல் கூறும்.

## மூன்றாவது விகற்பம்
## இராகுவின் தேவி.

*சொ.கை.*

3. அங்கம் சத்தன் அத்தனை ஏய்

4. அம் பாலிகை அத்தம் கோடல் அம் கஞ்சத் தனத்து அன்னையே

*பொ.ரை.*

முன் போல் இராகுவின் தேவியே இராகுவே எனவும் உரைக்க.

# 61-ஆவது பொருள்

## கேது.

## இதுவும் மூவகைத்து.

## முதல் விகற்பம்.

*சொ.கை.*

3. அம்பால் இகை அத்தம் கோடல் அம் கஞ்சத்தன் அத்தனை ஏ

4. அம்பால் இகு ஐ அத்து அம் கோடு அல் அங்கம் சத்த என்க.

*பொ.ரை.*

கிரகணகாலத்திற் கஞ்சத்தனும் அத்தனுமாகிய சூரியனை அம்பு போல் வருத்துகின்ற ஐயனே, சிவந்த அழகிய வளைதல் இல்லாத அங்கத்தையுடைய சத்தனாகிய கேதுவே எ-று.

*வி.ரை.*

முதற்பத்துச் சீர் பயனிலை, "*கதிர்ப்பகை, செம்பாம்பு*" *என்பன கேதுவின் பெயர்கள்*

## இரண்டாவது விகற்பம்.

*சொ.கை.*

2. அம் பாலி கை அத்தக் கோடல் அங்கு அம் சத்த ந தன்னையே

ஏனைய முன்போற் கொள்க.

*அ-ள்*

கைக்கோடல் - அன்னை. அது நான்காவது பாவம்.

*பொ.ரை.*

அழகாகப் பாலிக்கின்ற கையாகிய காட்டிலுள்ள காந்தளையுடைய அன்னையினது தான மென்ற நான்காம் இடமாகிய அவ்விடத்தில் நின்ற அழகிய சத்தனே என்க.

*வி.ரை.*

முதல் ஐந்து சீர் பயனிலை. நான்கிற் கேது எனவே அது கும்பமெனப் பெற்றாம் . நான்காம் இடத்தை மாதுர்த்தானம் எனல் சோதிட நூல் வழக்கு.

## மூன்றாவது விகற்பம்

## கேதுவின் தேவி.

*சொ.கை.*

3. அங்கம் சத்தன் அத்தனை ஏய்

4. அம் பாலிகை அத்தக்கோடல் அங்கு அஞ்சு அத்தன் நத்து அன்னை

*பொ.ரை.*

முன்போலக் கேதுவே, கேதுவின் தேவியே என்க.

முதல் ஐந்து சீர் பயனிலை.

# *62-ஆவது பொருள்*

## நவக்கோள்.

*சொ.கை.*

1. அம்பு ஆலி கயத்து அம் கோள் தலம் கஞ்சத்தன் அத்தனையே.

2. அம் பாலி கை அத்தம் கோடு அல் அங்கம் சத்தம் நத்தன் ஐயே

3. அம்பால் இகு ஐயத்து அங்கு ஓடு அலங்கு அம் சத்தம் நத்து அன்னையே

4. அம்பால் இகை அத்து அம் கோடல் அங்கம் சத்த நத்தல் நை ஏ

*கு.பு.*

அம்பு ஆலிக்கோள் கயத்துக் கோள் தலத்துக்கு அத்தன் கஞ்சத்தனுக்கு அத்தன் என்க. பாலியின் கைப் பொருளாகிய

புதல்வன் என்க. அங்கம் அங்கத்தையுடைய இராகு வென்க. அங்கம் -பெருமை. மழை

ஊண் போர் ஆயுள் கல்வி முயற்சி தனம் புதல்வர் தந்தை ஞானம் என்னும் முறைபற்றிக் கோளின் முறை கொள்க.

*பரை.*

அம்பு ஆலிக் கோள் - நீருக்கும் மழைக்கும் காரகன் ஆகிய சுக்கிரன் என்னும் கோளே,

கயத்து அம் கோள் - கயரோகக் காரகனாகிய சந்திரன் என்னும் கோளே.

தலம் அத்தனையே - பூமிக்குப் புதல்வனாகிய செவ்வாயே

கஞ்சத்தன் அத்தனையே - தாமரை நண்பனாகிய சூரியனுக்குப் புதல்வனாகிய சனியே

அம் பாலி கை அத்தம் - நீரினது குளிர்ச்சியும் வெள்ளை நிறமும் உடைய சந்திரனுக்குக் கைப்பொருளன்ன புதல்வனாகிய புதனே

கோடு அல் அங்கம் - மலையும் இருளும் அன்ன பெரிய கரிய அங்கத்தையுடைய இராகுவே

சத்தம் நத்தன் ஐயே - ஐந்திரநூலைச் செய்த ஆக்கமுடைய இந்திரனுக்குக் குருவாகிய வியாழ பகவானே

அம்பால் இகு ஐயத்து அங்கு ஓடு அலங்கு அம்சத்தன் நத்து அன்னையே-அம்பு போல வருத்துகின்ற ஐய உணர்ச்சி போல் ஓரிடத்தும் நிலையின்றி மேருவைச் சுற்றி அங்கே ஓடுகின்ற விளங்கு கின்ற அழகிய ஏழு குதிரைகளையுடைய சங்கமன்ன தூயோனாகிய சூரியனே

அம்பால் இகை - மேகம் போலும் கொடையினையுடைய

அத்து அம் கோடல் - சிவப்பு நிறத்தையும் அழகையும் கொள்ளுதலையுடைய. அங்கம் சத்த - பெருமை பொருந்திய சத்தன் ஆகிய கேதுவே

நத்தல் நை - அவாவை ஒழிக்க எ-று.

**வி.ரை.**

***ஈற்றுச் சீர் ஒன்றே பயனிலை.***

"மழையின்றி மாநிலத்தார்க் கில்லை" என்பவாகலின் மழைக் கோளாகிய சுக்கிரனை முற் கூறினார். மழையால் வரும் உணவில் வழி உடலும் இல்லையாகலின் உணவின் கோளாகிய சந்திரனை அதன் பிற் கூறினார். மழையும் உணவும் மிக்குளதோடு போர் வல்லுநர் உலகத்தைக் காவாவிடின் பயன் இன்மையால் யுத்தக் கோளாகிய செவ்வாயை அதன்பிற் கூறினார். போர் வல்லுநர் காப்பினும் ஆயுளின்றேல் மக்கள் அழிவராதலின் ஆயுட் கோளாகிய சனியை அதன்பிற் கூறினார். ஆயுள் மிக்கிருப்பினும் கல்வியின்றேல் மக்கள் விலங்கோடு ஒப்பர் ஆகலின் வித்தைக் கோளாகிய புதனை அதன்பிற் கூறினார். வித்தை மிக்கு இருப்பினும் முயற்சியின்றேல் இன்மை புகுத்திவிடும் ஆதலின் முயற்சிக் கோளாகிய இராகுவை அதன் பிற் கூறினார். முயற்சி திருவினையாக்கும் என்பது தேற்றமாயினும் தனம் மிக் கிருப்பினும் புதல்வர் இல்வழிப் பயன் இன்மையாலும் தனக்கோளும் புத்திரக் கோளும் ஆகிய வியாழனை அதன்பிற் கூறினார். அப்புதல்வர்க்குத் தந்தை சொல்மிக்க மந்திரம் இல்லை என்ப ஆகலிற் பிதாவின் கோளாகிய சூரியனை அதன்பிற் கூறினார். பிதுர் வாக்கிய பரிபாலனஞ் செய்வார்க்கு ஞானமுறுதல் ஒருதலையாகலின் ஞானக்கோளாகிய கேதுவை அதன் பிற் கூறினார் என்க. நத்தல் நை என்பதை ஒன்பதின்மர்க்கும் தனித்தனி கூட்டி வினைமுடிவு செய்க. 53 வது முதல் இப்பத்தும் கோள்வகை.

# 63-ஆவது பொருள்

## தேவர்கள் ( தேவ இருடியர்)

### சொகை.

1. கஞ்சத்து அன்னத்தனை ஏ

2. அம்பு ஆலி கை அத்தக் கோடு அலங்கு அஞ்சத்தன் அத்தனை ஏய்

3. அம்பால் இகை அத்தம்கோடு அல் அங்கு அஞ்சு அ தனத்தன் ஐ ஏ

4. அம் பாலி கை அத்து அம் கோடல் அங்கம் சந்தம் ந தன்னையே

*அ-ள்*

அங்கம் - பெருமை. கை-கிரணம். அத்து அம்கை-தாங்கிச் செல்லும் தன்னையர் என்க. அன்னத்தனையும் அஞ்சத்தனத்தனையும் ஒத்தவர் என்க. அம்பால் இகை அத்தமுடையவரென்க. அஞ்சத்தன் அத்தன் - திருமாலும் சிவனும் என்க.

*பரை.*

1-2 அன்னத்தனையும் அவன் தந்தையாகிய மாலையும் அவனைப் பாதியிற் கொண்ட சிவனையும் ஒத்த அம்பால் இகை அத்தம் மேகம்போற் கொடுக்கும் கையினையுடைய கோடு அல் அங்கு அஞ்சு அ தனத்தன் - மாறுபாட்டையுடைய இருள் அஞ்சுகின்ற பிரகாசம் ஆகிய செல்வத்தையுடையானும்.

(ஐ அம் பாலி) அம்பாலி ஐ -அழகிய புகழுடைய ஐயனுமாகிய சூரியனது. (கை அத்து அம்) அத்து அம் கை -சிவந்த அழகிய கிரணங்களை. கோடல் அங்கம் - உலகத்தை வருத்தாவண்ணம் தாங்கி அச்சூரியனோடு செல்கின்ற பெருமையினையுடைய சந்த ந தன்னையே - அழகிய உயர்ந்த தந்தையரே எ-று.

# 64-ஆவது பொருள்

## புலவர் வகையுள் அகத்தியர்
## இது இருவகைத்து.
## முதல் விகற்பம்

### சொ.கை.

3. அம் பாலி கயத்து அம் கோடு அலங்கு அம் சந்தம் நத்தனை ஏய்

4. அம்பு ஆலி கை அத்தக்கோடு அலங்கு அம் சத்த.

### அ - ள்

கயம் - பெருமை. கோடு - கிளை. சந்தம் - மரம். நத்தன் - மால்

அம்பு - மேகம். அத்தக்கோடு - பொதியில்.

### ப.ரை.

அம் பாலி - அழகும் புகழுமுடைய

கயத்து அம் கோடு அலங்கு அம் சந்தம் - பெரிய அழகிய கிளைகள் அசைகின்ற அழகிய சந்தன மரங்களையுடைய

நத்தனை ஏய் அம்பு ஆலி - திருமாலை ஒத்த கரிய மேகங்கள் களிக்கின்ற

கை அத்தக்கோடு அலங்கு - அலங்காரமாகிய காட்டையுடைய பொதியில் என்னும் மலையின் கண் விளங்குகின்ற

அம்சத்தம் - அழகிய சத்தராகிய அகத்திய முனிவரே எ-று.

### வி.ரை.

அம் சத்தம் - அழகிய தமிழ் இலக்கணம். முதற்பத்து சீர் பயனிலை. ஈற்று விகற்பத்துள் இயைவன கொள்க.

சத்தன் அத்தனையே எனற்குச் சத்தனக்குப் பொன் போல்வானே என்று அகத்தியர் மாணாக்கர் பன்னிருவரையும்

தனிதனியுரைத்துக் கொள்க. சந்தன மரமுடைய மலை எனவே பொதியில் என்பது பெறப்பட்டது.

## இரண்டாவது விகற்பம்

## உலோபா முத்திரை

இதற்கு ஐந்தடிப் பாட்டுக் கொள்க.

*சொ.கை.*

4. சத்தன் அத்தனை ஏய் சத்தம் நத்தனை ஏய்

5. அம் பாலிகை அத்தம் கோடல் அம் கஞ்சத்தனத்து அன்னையே. ஏனைய மேலைச் சொல்வகைபோற் கொள்க.

*பொ.ரை.*

பொதியிலில் விளங்குகின்ற சத்தனும் அத்தனுமாகிய அழகிய தமிழ் இலக்கண நூலைச் செய்த அகத்திய முனிவரை மணந்த அன்னையாகிய உலோபா முத்திரையே என்க.

# 65-ஆவது பொருள்

## தொல்காப்பியனார்

இதற்கு ஆறடிப் பாட்டுக் கொள்க.

*சொ.கை.*

1. அம்பாலிகை அத்தம் கோடு அலங்கம் சத்தம் நத்தனையே

2. அம் பாலி கயத்து அம் கோடு அலங்கு அம் சந்தம் நதன்னை ஏ

3. அம்பு ஆலி கை அத்தக்கோடு அலங்கு அஞ்சத்தன் அத்தனை ஏய்

4. அம் பாலிகை அத்து அம் கோடல் அங்கு அஞ்சு அத்தம் நத்து அன்னை ஏ

5. அம் பால் இகு ஐயத்து அங்கு ஓடல் அம் கஞ்சத்து அனத் தம் நை ஏ

6. அம்பால் இகை அத்தம் கோடல் அம் கம் சத்த.

*அ-ள்*

கோடு - நீண்டது. இது வழுவமைதி. அலங்கம் - அசையேம்

சத்தம் - தொல்காப்பியம். அம் - அசை. கோடு - பொதியில்

அன்னை - உலோபா முத்திரை. ஓடல் அம் கஞ்சம் - வையையிற் பெருகி ஓடிய நீர். அனத்தம் - கேடு. நை - வினையெச்சம்.

அத்தம் - உட்கருத்து. அம்பாலிகை அந்தங்கோடு என்பதும் அலங்கம் என்பதும் பயனிலை. ஏனைய விளி.

*பஎரை.*

1. அம் பாலிகை அத்தம் கோடு - தரும தேவதையின் செல்வமாகிய அறத்தை எமக்கு அருளுக

அலங்கம் - யாம் ஒன்றானும் அசையேம்

சத்தம் நத்தனையே - தொல்காப்பியம் என்னும் இலக்கண நூலை விரும்பிச் செய்தருளிய முனிவரே.

2. அம் பாலி - புகழுடைய

கயத்து அம்கோடு அலங்கு அம்சந்தம் - பெரிய அழகிய கிளைகள் அசைகின்ற அழகிய சந்தன மரங்களையுடைய

ந தன்னை ஏய் - உயர்வால் தன்னைத் தானே ஒத்த

3. அம்பு ஆலி கை அத்தம் கோடு அலங்கு - நீரும் மழையும் களிக்கின்ற காட்டையுடைய பொதியில் என்னும் மலையில் விளங்குகின்ற

அஞ்சத்தன் அத்தனை ஏய் - பிரமன் புதல்வனாகிய அகத்தியனாரை மணந்த

4. அழகிய அதரமும் சிவந்த அழகிய காந்தள் அஞ்சுகின்ற கையுமுடைய விரும்புகின்ற அன்னையாகிய உலோபாமுத்திரையை

5. அம் பால் இகு ஐயத்து அங்கு ஓடல் அம்கஞ்சத்து - அம்புபோல் வருத்துகின்ற ஐயம் போல ஓரிடத்து நிற்றலின்றி ஓடுகின்ற அழகிய வையை நதி நீரின்கண் அனத்தம் நை - நேரிட்ட கெடுதியை நீக்கி

6. அம் பால் இகை - மேகம் போற் கொடுத்த ஈகையினால் அத்தம் கோடல் அங்கம் சத்த - அகத்தியனார் கருத்து மாறுபடுதல் பெருமையாகக் கொண்ட மெய்யனாகிய திரணதூ மாக்கினி என்னும் தொல்காப்பியனாரே எ-று.

***வி -ரை.***

ஈற்று விகற்பத்துள் இயைவன கொள்க. தந்தையாகிய சமதக்கினியே தாயாகிய ரேணுகையே, மூத்தோனாகிய பரசுராமனே, குருவாகிய அகத்தியனே என்க.

மிக்கோன் இரப்புரையாகிய 'கொடு' எனலை ஈண்டுரைத்தலின் வழுவமைதி என்றார். அகத்தியனார் கட்டளையால் அவர் தேவியார் உலோமுத்திரையாரை அழைத்துச் செல்லுழி வையை ஈர்ப்ப அவரைக் காத்தற் பொருட்டு " முன்னாகப் பின்னாக நாற்கோல் நெருங்கற்க " என்ற ஆசிரியர் கட்டளை இகந்து, நெருங்கி ஓர் வெதிர்ங்கோலை நீட்டி உலோபா முத்திரையாரை நீர் ஈர்த்துச் செல்லாவண்ணம் காத்துத் தொல்காப்பியனார் தம் ஆசிரியர்க்கு அளித்தார். அங்ஙனம் அளித்தது குற்றம் என்று ஆசிரியர் அகத்தினார் கருத்துமாறுபட்டுச் சபித்தனர். அங்ஙனம் ஆசிரியர் கட்டளை இகந்ததும் அவர் மனைவியாரைக் காத்தற் பொருட்டேயாதலின் ஆசிரியர் கருத்து மாறுபாட்டிற்கு அஞ்சாமையின் அத்தங் கோடலை அங்கமாகக் கொண்டோன்

# 66-ஆவது பொருள்

## இறையனார்.

### சொ.கை.

3. அம்பாலிகை அத்தம் கோடல் அங்கம் சத்தம் ந தன்னை ஏய் 4. அம் பால் இகை அ தங்கு ஓடு அலங்கு அஞ்சு அத்த

### அ -ள்.

அங்கச்சத்தம் - மகளிரை அங்கமாகக் கொண்ட அகப்பொருள் இலக்கணம்.

### பரை.

அம்பாலிகை அத்தம் கோடல் - அழகிய அதரத்ததையும் கையாகிய காந்தளையும் உடைய மகளிரை

அங்கச் சத்தம் - தனக்கு அங்கமாக உடைய களவியல் என்னும் இலக்கண நூலை

ந தன்னை ஏய் அம்பல் இகை - உயர்ந்த அன்னை போலவும் வாடிய காலத்து எய்திய மேகம் போலவும் தமிழ்நாட்டுக்குக் கொடுத்தருளிய

அ தங்கு ஓடு அலங்கு அஞ்சு அத்த - தங்கிய அவ்வோடு விளங்குகின்ற அஞ்சத்தக்க கையினையுடைய சிவபிரான் கூறாகிய இறையனாரேஎ-று.

### வி - ரை.

முதற்பத்துச்சீர் பயனிலை. ஈற்று விகற்பங்களுள் இயைந்தன கொள்க.

# 67-ஆவது பொருள்

## உருத்திரசன்மர்.

### சொ.கை.

1. கஞ்சத் தனத்து அன்னை ஏ

2. அம் பாலிகை அத்தம் கோடல் அங்கு அஞ்சத்தன் அத்தன் நை ஏய் 3. அம்பால் இகை அத்தம் கோடல் அங்கம் சத்த ந தன்னையே.

4. அம் பாலிகை அத்தம் கோடல் அங்கம் சத்தம் நத்தனையே.

*அ - ள்*

அத்தம் - வேதப்பொருள் . அம்பு - அம்பு போன்ற சாபம்.

*பரை.*

கஞ்சத்தனத்து அன்னை அம்பாலிகை - கஞ்சமன்ன தனமுடைய அன்னையாகிய உமாதேவி.

அத்தம் கோடல் அங்கு - வேதப்பொருளை உபதேசத்தாற் கொள்ளுதலுடைய அக்காலத்தில்

அஞ்சத்தன் அத்தன் நை ஏய் அம் பால் - பிரமனைப் பாதியிற் கொண்ட சிவபிரான் கொடுத்த நைதலைப் பொருந்திய அம்பு போன்ற சாபத்தால்

இகை அத்தம் - தமிழ் மக்களுக்கு ஈகைக்குரிய செல்வம் போறகிடைத்த, கோடல் அங்கம் சத்த - ஊமையாக மாறுபட்ட அங்கத்தைக் கொண்ட சத்தனாகிய உருத்திர சன்மனே

ந தன்னையே - உயர்ந்த தந்தையே

அம் பாலிகை அத்தம் கோடல் அங்கம் - பாலிகையும் கோடலும் உடைய மகளிரை அங்கமாகவுடைய

சத்தும் நத்தனையே - இறையனார் களவியல் என்னும் அகபொருள் இலக்கண நூலுரையை விரும்பிக் கேட்டருளியக் கடவுளே எ.று.

*விரை.*

முதன் மூன்று சீர் பயனிலை. சிவபிரான் உமையவட்கு உபதேசிக்கும் பொழுது தேவி பராமுகமாக இருந்ததாற் சபிக்க, அது கண்டு முருகக் கடவுள் தேவி கையில் இருந்த வேத நூலைப் பறித்து " இதனாலன்றோ சாபம் நேர்ந்த "

தெனக் கடலில் எறிந்தனர். அக்காலைச் சிவ பிரான் "ஊமனாக" வெனச் சாபங் கொடுத்தார் என்க.

## 68-ஆவது பொருள்

### நக்கீரனார்.

#### சொ.கை.

1. அம் பாலிகை அத்தம் கோடல் அம் கஞ்சத்தன் அத்தன் ஐ, ஏ 2. அம் பாலிகை அத்தம் கோடல் அங்கம் சத்தம் நத்து அன்னை ஏய்

3. அம்பால் இகை அத்தம் கோடு அலங்கு அம் சத்த.

#### ப.ரை.

அம் பாலிகை அத்தம் கோடல் - உமாதேவியைப் பாதியிற் கொள்ளுதலையுடைய

அம் கஞ்சத்தன் அத்தன் ஐ - அழகிய பிரமனைப் பாதியில் உடையானும் ஐயனுமாகிய சிவபிரான் செய்த

அம் பாலிகை அத்தம் கோடல் அங்கம் சத்தம் - அழகிய பாலிகையும் அத்தமுடைய மகளிரை அங்கமாகக்கொண்ட அகப்பொருள் இலக்கணத்தைத் தான் உணர்ந்து,

நத்து அன்னை ஏய் அம்பால் இகை அத்தம் - விருப்புடைய அன்னை போலவும் பொருந்திய மேகம் போலவும் கொடுத்த அக்களவியற் பொருள்.

கோடு அலங்கு அம்சத்த - மலை போல் வாதத்தால் அசையாது விளங்குகின்ற அழகிய சத்தனாகிய நக்கீரனை எ - று.

#### வி.ரை.

முதலாவது சீர் பயனிலை. ஈற்று விகற்பத்துள் இயைவன கொள்க.

தந்தையார் மதுரைக் கணக்காயனார். தாய் பெயர் வந்துழிக் காண்க. அத்தனாகிய ஐயனது சத்தம் என ஆறாவது

விரிக்க. இது செய்யுட்கிழமை, கபிலரது பாட்டு என்புழிப்போலக் கொள்க.

சத்தத்தின் அத்தம் என்க. இதுவும் தற்கிழமையில் வந்த ஆறாவது வேற்றுமை. அன்னையும் அம்பும் போலக் கொடுத்த அத்தம் என்க. அவ்வத்தம் விளங்குதற்குக் காரணனாயிருந்த சத்தன் என்க. நாற்பதிற்றொன்பதின்மர் கண்ட பொருள்களுள் நக்கீரனார் கண்ட பொருளே குற்றமின்மையால் மலைபோல அசையாது நிலையாயின் அத்தம் கோடலங்கு சத்தன் என்றார்.

# 69-ஆவது பொருள்

## பாண்டியர்கள்

### இப்பொருட்கு ஐந்தடிப்பாட்டுக் கொள்க.

*அம் பால் இகு ஐயத்து அங்கு ஓடலம் கஞ்சத்தன்*
*அத்தன் ஐ ஏ*

*அம்பு ஆலி கை அத்தம் கோடு அலங்கு அம் சத்தன்*
*நத்து அன்னை ஏய்*

*அம்பாலி கை அத்தம் கோடு அல் அங்கம் சத்தம் ந*
*தன்னையே.*

*அம்பால் இகை அத்தம் கோடல் அங்கம் சத்தம்*
*நத்து அன்னையே*

*அம் பாலி கை அத்தம் கோடலங்கம் சந்தம்*
*நத்தனையே*

### அ -ள்.

கஞ்சத்தன் அத்தன் - கஞ்சத்தனைச் சாரதியாகக் கொண்ட அத்தன் என்க. கஞ்சத்தன் அத்தனும் ஐயனுமாகிய திரிபுரம் எரித்த விரிசடைக் கடவுள் என்க. அம்பு ஆலிகை அத்தம் எனலைக் கோட்டுக்கு அடையாக்கிக் கோடு அலங்கு அம் சத்தன் எனற்குக் குன்றெறிந்த முருகவேள் எனவும், பொதியிலின் விளங்குகின்ற அகத்தியன் எனவும் உரைக்க. இனி அம்பு போற்களிக்கின்ற கையாகிய அத்தத்தில் கோடு

விளங்குகின்ற கூடலழகர் எனவும் கொள்க . அத்தம் - பொருளுடைய தமிழ் மொழி என்க. சங்கமிருந்து தமிழாய்ந்தார் விரிசடைக் கடவுளும் வேளும் அகத்தியனாரும் என்க. கூடலழகரும் ஒரு காலத்துத் தமிழாய்ந்தாரென ஒரு சாரார் கூறுப. அங்கம் - வழக்கும் செய்யுளும். கஞ்சத்தனம் - நீரில் உளதாய தனமாகிய முத்து. நத்தன் பாண்டியன் தனித்தனி கூறி முச்சங்கத்துமுள்ள எல்லாப்பாண்டியரையும் கொள்க. சத்தன் - ஆற்றலுடையான்.

*ப.ரை.*

அம்பால் இகு. ஐயத்து அங்கு ஓடலம் - அம்பு போல வருத்துகின்ற ஐயவுணர்ச்சியாற் பன்னெறிகளிற் செல்லேம்

கஞ்சத்தன் அத்தன் ஐ - கஞ்சத்தனைச் சாரதியாகக் கொண்ட அத்தனும் ஐயனுமாகிய திரிபுரம் எரித்த விரிசடைக் கடவுளும்

அம்பு ஆலிகை அத்தம் கோடு அலங்கு அம் சத்தன் - நீரும் மழையும் அலங்கரிக்கின்ற காட்டையுடைய மலையின் கண் தங்கிய அசையாத அழகிய ஆற்றலுடைய குன்றெறிந்த முருகவேளும், அக்காட்டையுடைய பொதியின் மலையில் விளங்குகின்ற அகத்தியனாரும், மேகம் போற் களிக்கின்ற கையின்கட் சங்கம் விளங்குகின்ற கூடலழகரும்.

நத்து - விரும்பி ஆராய்ந்த

அன்னை ஏய் அம்பாலி - தாயை அன்ன அழகிய புகழையுடைய, கை அத்தம் - ஒழுக்கமுடைய புருடார்த்தங்களைத் தன்னிடத்துக் கொண்ட தமிழ் மொழிக்கும்

கோடல் அங்கம் - அத்தமிழ் கொள்ளுதலையுடைய அங்கமாகிய வழக்கிற்கும் செய்யுட்கும்

சத்தம் - அவற்றால் எய்திய இலக்கண நூலுக்கும்

ந தன்னையே - உயர்ந்த அன்னை போல்வாராகி அவற்றைப் பாதுகாத்த அரசர்களே

அம் பாலி கை அத்தம் - நீரில் உளதாய வெள்ளிய அலங்காரமுடைய செல்வமாகிய முத்தையும்

கோடு அலங்கும் அம் சந்தம் - கொம்பு அலங்குகின்ற அழகிய சந்தன மரங்களையுமுடைய

நத்தனையே - நாடுடைய ராகிய பாண்டியர்களே.

*விரை.*

முதல் மூன்று சீர் பயனிலை, மலை கொம்பு இவற்றில் ஒன்றுக்கு விளங்கற் பொருளும், மற்றொன்றுக்கு அசைதற் பொருளும் கொள்க. இது பன்மையில் ஒருமை வந்த வழுவமைதியாகித் தனித்தனி ஓரொரு பாண்டியனோடும் கூட்டி எல்லாப் பாண்டியர்க்கும் கொள்க. முத்தும் சந்தனமும் உடைய நாடு பாண்டிய நாடு. நத்தம் - நாடு. நத்தன் - நாட்டையுடைய பாண்டியன்.

# *70-ஆவது பொருள்*

## *பொற்கைப்பாண்டியன்.*

*சொ.கை.*

2. கஞ்சத்தன் அத்தன் ஐ ஏ

3. அம்பு ஆலி கயத்து அங்கு ஓடல் அங்கு அஞ்சு அ தனத்து அன்னை ஏ

4. அம் பாலி கை அத்தம் கோடல் அங்கம் சத்த.

*அ - ள்.*

கஞ்சத்தன் - தாமரை புனைந்த அந்தணன். ஓடல் - தீர்த்தமாடக் குறித்து செல்லல். தன்னம்-சிறுமை. பாலி - பாலித்தற்கண் முதற்கண் அங்கு அசை. கை அத்தம் - பொற்கை.

*பரை.*

கஞ்சத்தன் அத்தன் ஐ - தாமரை மலர் மாலையனும் அத்தனும் ஐயனும் ஆகிய ஓரந்தணன்.

(அம்பு ஆலி கயத்து ஓடல்அங்கு) ஆலி கயத்து அம்பு ஓடல் அங்கு களிக்கின்ற பெருமையுடைய தீர்த்த மாடல் குறித்துச் சென்ற அக்காலத்தில்.

அஞ்சு அ தன்னத்து அன்னை - அஞ்சிய சிறுமையையுடைய அவன் மனைவியை

அம்பாலி - அழகாகப் பாலித்தலின்கண்

(கை அத்தம் கோடல்) அத்தம் கோடல் கை - தன்கையை வெட்டிய பின் பொன்னாற் செய்த கையைப் பெற்றுக்கொண்ட அங்கம் சத்த - பெருமையை உடைய பொற்கைப்பாண்டியனே எ.று.

***வி.ரை.***

முதல் எட்டுச் சீர் பயணிலை தீர்த்த யாத்திரை செல்லாநின்ற ஓர் அந்தணனை நோக்கி அவன் மனையாள், "நீர் வரும் வரை என்னை உணவளித்துக் காப்பார் யார்" என அவன் " அரசன் காப்பான் " என்று போய பின் அப்போது நகர் சோதனை செய்து வந்தமையால் அது கேட்ட அரசன் அவளை மாத்திரம் காப்பின் எய்தாப்பழி எய்தும் எனக் கருதி அந்நகரத்திலுள்ள அந்தணர் யாவர்க்கும் மறு நாள் முதலாக ஆடை, உணவு முதலியன கொடுத்து வந்தான். இங்ஙனம் காத்து வரும் நாளில் ஒரு நாள் யாத்திரை சென்ற அந்தணன் மீண்டு தன்னில்லம்புக்கு இரவில் தன் மனையாளொடு இன்னுரையாடிக் களித்திருந்தான். அதுகாலை நகர் ***சோதனை*** செய்து அங்கு வந்த அரசன் யாத்திரை போய அந்தணன் மனையாளொடு யாரோ ஓர் அயலான் இருக்கின்றான் எனக் கருதிக் கதவந்தட்டி அவள் கணவன் என்றறிந்து, அங்ஙனம் அயிர்த்துக் தட்டிய குற்றம் நீங்கத் தன் கையை வாளால் வெட்டினான். மன்னன் பொன்னாற்கை செய்து புனைந்து கொண்டமையின் அது முதல் அவனுக்குப் பொற்கைப் பாண்டியன் எனப் பெயர் வழங்கிற்று. இவன் தமிழ் வளர்த்த தொண்டேயன்றி நீதியிலும் சிறந்தோன் ஆகலின் இவனை வேறாகவும் வாழ்த்தினார்.

# 71-ஆவது பொருள்

## வள்ளுவர்.

### சொகை.

2. கயத்து அங்கு ஓடு அல் அம் கஞ்சத்து அனத்தம் நை ஏய்

3. அம்பால் இகு ஐ அத்து அம் கோடல் அங்கு அஞ்சு அத்தம் நத்து அன்னை ஏய்.

4. அம்பால் இகை அத்தம் கோடல் அம் கஞ்சத்த.

### குபு.

முன் உரைத்த ஈற்று விகற்பம் ஆறுடன் கஞ்சத்தன் நந்தனையே என்றும், மூன்றாவதடி ஈற்றில் அன்னையே என்றுங் கொள்க. முதல் ஆறு சீர் பயனிலை.

### அ - ள்

கயம் - ஆழம். ஓடு அல் - ஓடுதல் இல்லாத. அன்னை - ஆதப்புலைச்சி. கஞ்சத்தன் - தாமரை மாலை புனைந்த யாளிதந்த முனிவன். அத்தன் - புதல்வன் கபிலன் முதலாயினாரைத் தனித் தனி உரைத்துக் கொள்க. நந்தனை - மகள் ஔவை முதலாயினாரைத் தனித் தனி உரைத்துக் கொள்க.

### பரை.

கயத்து அங்கு ஓடு அல் அம் கஞ்சத்து - ஆழமாகிய ஓடுதல் இல்லாத கூவல் நீரின்கண்

அனத்தம் நை - கேட்டையடைந்து வருந்திய

அம்பால் இகு - அம்பு போன்ற ஓராயுத்தால் தன்னால் வெட்டி வீழ்த்தப்பட்ட

ஐ அத்து அம் கோடல் அங்கு அஞ்சு அத்தம் - அழகிய சிவந்த காந்தள் அஞ்சுகின்ற கையினையுடைய

நத்து அன்னை ஏய் - விரும்புகின்ற அன்னையாகிய ஆதையை மணந்த

அம்பால் இகை அத்தம் கோடல் - மேகம் போன்ற கொடையைக் கொண்ட

அம் கஞ்சத்தன் அத்தனையே - அழகிய தாமரை மலர் மாலை அணிந்த அந்தணனாகிய யாளிதந்த முனிவனுக்குப் புத்திரனாகிய கபிலரே. அதிகமானே வள்ளுவரே

கஞ்சத்தன் நந்தனையே - அம்முனிவன் புத்திரியாகிய ஔவையே உப்பையே குறுவையே வள்ளியே எ-று.

*வி.ரை.*

கஞ்சத்த ந தன்னையே என்பது முதலிய விகற்பங்களுக்கு யாளிதத்தனாகிய தந்தையே என்றும், அன்னையே, யாளிதத்தனே என்றும், யாளிதத்தனுக்குத் தாயே தந்தையே என்றும் ஏனையவும் உரைத்துக் கொள்க.

நந்தனை - தொடைநோக்கி வலிந்து நின்றது. அம், அங்கு-அசை. அன்னைக்கும் கஞ்சத்தனுக்கும் புதல்வன் புதல்வி எனவும் உரைக்க.

*கபிலர் அதிகமான் கான்குறவர் பாவை*
*முகிலனைய கூந்தல் முறுவை - நிகரில்லா*
*வள்ளுவர் ஔவை வயலூற்றூக் காட்டிலுப்பை*
*எள்ளில் எழுவர் இவர்.*

இவ்வெண்பாவால் அவ்வெழுவர் பெயரும் அறிக.

"*யாளி, கூவற்றாண்டும் ஆதப்புலைச்சி*
*காதற் காணி யாகி மேதினி*
*இன்னிசை எழுவர்ப் பயந்தோள் ஈண்டே*"

*இஞ்ஞானாமிர்தப் பாட்டாலும் இதன் உரையாலும் யாளிதந்த முனிவர்க்கும் ஆதப்புலைச்சிக்கும் இவ்வெழுவர் பிறந்த வரலாற்றைக் கண்டு கொள்க.*

ஞானமிர்த உரை வருமாறு

"*யாளி_யீண்டே*" என்பது. யாளிதந்த முனிவன் தனக்கு விகிர்தமாய்த் தன்னாலே வெட்டுண்டு கிணற்றிலே தள்ளப்பட்ட அறிவில்லாத சண்டாளப் பெண்ணை ஓர் பிராமணன் எடுத்துக் கொண்டு போய் உத்தர பூமியிலே

வளர்த்துப் பின்பு இவனுக்கே கொடுக்கச் சினேகத்துக் கிருப்பிடம் ஆனவளாய்ப் பிரா மணியாய்ப் பூமியிலே நிற்கும் இனிய கீர்த்தியையுடைய கபிலர் உள்ளிட்ட ஏழு பிள்ளைகளையும் பெற்றனன் அன்றோ. இவ்விடத்திலே எ-று.

64 முதல் இவ்வெட்டும் புலவர்வகை. இனி வள்ளியோர் வகை , உரைக்கப்படும்.

# 72-ஆவது பொருள்

## வள்ளியோர் வகையுள் ததீசி முனிவர்

### சொ.கை.

3. அம்பால் இகு ஐ அத்து அம் கோடு அல் அங்கம் சத்தம் நத்தன் ஐ.

4. அம்பால் இகை அத்தக்கோடு அலங்கு அம் சத்த.

### அ - ள்

அத்து -இசைப்பு. அங்கம் - முதுகெலும்பு, ஐ - ஐயனுக்கு

### பஉரை.

(அம்பால் இகு ஐ அத்து) இகு ஐ அம்பால் அத்து - கொல்லுகின்ற அழகிய தேவாசுரருடைய அம்புகளினால் இசைந்த

அம்கோடு அல் அங்கம் - அழகிய கோடுதல் இல்லாத தன் முதுகெலும்பை

சத்த நந்தன் ஐ - ஐந்திர நூல் செய்த இந்திரனாகிய ஐயனுக்கு

அம்பால் இகை-மேகம்போற் கைம்மாறின்றிக் கொடுத்த

அத்தக் கோடு அலங்கு அம் சத்த - பொன்மலைபோல் நிலையிற்றிரியாது விளங்குகின்ற அழகிய சத்தனாகிய ததீசி முனிவரே எ-று.

### வி-ரை.

முதற் பத்துச் சீர் பயனிலை. ஈற்று விகற்பம் இயைவன கொள்க.

"அன்புடையார் என்பு முரியர் பிறர்க்கு" என்ற படி என்புமளித்த சிறந்த கொடையினர் ஆதலின் இவர் முற்றத் துறந்த முனிவர் ஆயினும் வள்ளியோர் வகையுட் சேர்க்கப் பட்டார் என்க.

# *73-ஆவது பொருள்*

### *கன்னன்.*

#### *சொ.கை.*

2. அம்பால் இகு ஐ அத்து அம் கோடு அலங்கு அம் சத்து அம் நத்தன் ஐ ஏ

3. அம்பால் இகை அத்தம் கோடல் அம் கஞ்சத்தன் அத்தனையே

4. அம்பு ஆலி கை அத்தம் கோடு அல் அங்கம் சந்தம் நத்தனையே.

#### *அ - ள்.*

அம்பால் இகு ஐ - இகு ஐ அம்பால் என மாற்றுக . அத்து அம்-செந்நீராகிய இரத்தம். கொடு - நீண்டது. சத்து - சத்தாகிய அறம். நத்தன் - மால். ஐ - ஐயனுக்கு. நத்தம் - நாடு. அங்க நத்தன் - அங்க தேசாதிபதி.

#### *ப.ரை.*

இகு ஐ அம்பால் - அர்ச்சுனன் எய்த அம்பினால் வந்த

அத்து அம்கொடு - சிவந்த நீராகிய இரத்தத்தைக் கொண்டு

அலங்கு அம் சத்து - விளங்குகின்ற அழகிய மெய்ப்பொருளாகிய தான் செய்த அறத்தை

அம் நத்தன் ஐ - மேகம் போன்ற கரிய சங்கேந்தியும் ஐயனுமாகிய திருமாலுக்கு

அம்பால் இகை அத்தம் கோடல் - மேகம் போற்கொடுத்த கொடையினைக் கையிற் கொள்ளுதலையுடைய

அம் கஞ்சத்தன் அத்தனையே - அழகிய தாமரை நண்பனாகிய சூரியன் புத்திரனே

அம்பு ஆலி கை அத்தம் கோடுஅல் - நீரும் மழையும் அலங்கரிக்கின்ற செல்வமிக்க கோடுதல் இல்லாத

அங்கம் சந்தம் நத்தனையே-அங்கம் என்னும் பெயருடைய அழகிய தேசத்துக்கு அரசனாகிய கன்னனே எ-று.

***வி-ரை.***

முதல் ஐந்து சீர் பயனிலை. அருச்சுனன் எய்த அம்பால் அடிபட்டுப் போர்க் களத்து வீழ்ந்து குற்றுயிராகக் கிடந்த கன்னனைத் திருமால் இரந்த பொழுது அவன் தன்னறத்தை நீருடன் கொடுத்தற்கு எண்ணி ஆங்குத் தண்ணீர் கிடையாமையிற் றன் மார்பில் ஊன்றிய ஓரம்பைப் பறித்து அதன் வழியாக வந்த இரத்தத்தைக் கொண்டு தான் செய்த அறம் எல்லாவற்றையும் தாரைவார்த்துற் கொடுத்தமையால் அத்து அம் கொடுத்த ஈகையான் என்றார். கொடையிற் சிறந்தார் யாவராயினும் வாழ்த்தற் குரியர் ஆதலின் கன்னனையும் ததீசி முனிவரோடு சாரவைத்து வாழ்த்தினார் என்க.

# *74-ஆவது பொருள்*

***குமணன்.***

அம்பு ஆலி கை அத்தம் கோள் தலம் கம் சாத்தன் நத்தன் ஏ.

அம்பால் இகை அத்தக் கோடு அலங்கு அம் சத்த.

***அ-ள்.***

அத்தம் - காடு. கம்-தலை. சாத்தன் - பெருந்தலைச் சாத்தனார்.

*பதவுரை.*

அம்பு ஆலி கை அத்தம் கோள் தலம் - நீரும் மழையும் அலங்கரிக்கின்ற காட்டைக் கொண்ட பூமியாகிய வனத்தில்

கம் சாத்தன் நத்தனை அம்பால் இகை - தன் தலையைக் கொய்து கொள்ளுமாறு பெருந்தலைச்சாத்தனாராகிய தன்னை விரும்பி வந்தடைந்த புலவர் பெருமானுக்கு மேகம் போற் கொடுத்த

அத்தக் கோடு அலங்கு அம் சத்த - பொன்மலைபோல் விளங்குகின்ற கீர்த்தியுடைய சத்தனாகிய குமணனே எ-று.

*வி-ரை.*

முதற்பத்துச் சீர் பயனிலை. ஈற்று விகற்பமெல்லாம் கொள்க .

சாத்தன் - சத்தன் எனக் குறுகிற்று. தம்பியால் நாடு கொள்ளப்பட்டுக் காடு பற்றியிருந்த குமணனைப் பெருந்தலைச் சாத்தனார் கண்டு, அவன் தலை கொணர்வார்க்குப் பெரும்பொருள் தருவலெனத் தம்பி பறைசாற்றிய தறிந்தோன் ஆதலில் தன் தலையைக் கொய்து தம்பிகைக் கொடுத்துப் பொருள் கொள்க எனத் தன் கை வாளை அப்புலவர்க்குக் கொடுத்தான் என்க.

இது, *"வாள் தந்தனனே தலை எனக்கீய"* என *அப்புலவர் பெருமான் அவ்வாளைத் தம்பிக்குக் காட்டிப் பாடிய பாட்டால் அறியப்படும்.*

72 முதல் இம்மூன்றும் வள்ளியோர் வகை. இனிப்பத்தினிப் பெண்டிர் வகை உரைக்கப்படும்.

# 75--ஆவது பொருள்

## பத்தினிப் பெண்டிர் வகையுள் அருந்ததி.

*சொ.கை.*

1. அம்பு ஆலி கை அத்தக்கோடு அலம் கம் சந்தம் நந்து அன்னையே

2. அம் பாலி கை அத்தம் கோடு அல் அம் கஞ்சத்தன் அத்தனை ஏய்

3. அம்பு ஆலி கை அத்தம் கோடல் அம் கஞ்சத்தனத்து அன்னையே.

*அ - ள்.*

அம்பு - மேகம், நீர், ஆலி - ஆலித்தல், மழை. கோடு அலம் கம் - கோட்டையுடைய வடக்கின் கண் உள்ள ஆகாயம். கை அத்தம் கோடேல் - கைப்பொருளாகக் கொள்ளல்.

*ப.ரை.*

அம்பு ஆலிகை - மேகங்கள் களிக்கின்ற அலங்காரமாகிய

அத்தக் கோடு அலம் கம் - பொன்மலையுடைய அமைவுடைய வடக்குத் திக்கிலுள்ள ஆகாயத்தில் விளங்குகின்ற

சந்தம் நந்து அன்னையே - அழகிய சங்கமன்ன தூயாளே

அம் பாலி கை அத்தம் - ஞான அழகும் புகழும் ஒழுக்கமும் புருடார்த்தமும்.

கோடு அல் - மாறுபடுதல் இல்லாத

கஞ்சத்தன் அத்தனை ஏய் - பிரமனுக்குச் செல்வமன்ன புத்திரனாகிய வசிட்ட முனிவரைக் கணவராகப் பொருந்திய

அம்பு ஆலி - நீராகிய மழையை

கை அத்தம் கோடல் - பெய்யெனப் பெய்தலாற் கைப்பொருள் போலக் கொள்ளுதலையுடைய

அம் கஞ்சத்தனத்து அன்னையே - அழகிய கஞ்சமன்ன தனங்களையுடைய அன்னையாகிய அருந்ததியே எ-று.

*வி-ரை.*

முதல் ஐந்து சீர் பயனிலை. பொன்மலையுடைய விண் எனவே வடக்கு ஆதல் பெற்றாம். 'வடமீன்' என்பது அருந்ததிக்கு ஒரு பெயர்.

*" தெய்வம் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்*
*பெய்யெனப் பெய்யும் மழை ".*

என்ப வாகலிற் கற்புடையார்க்கு மழை கைப் பொருள் போல ஏவிய போதெல்லாம் பயன்படலின் மழையைக் கைப்பொருளாகக் கொண்ட அன்னை என்றார்.

# 76--ஆவது பொருள்

## *அநசூ யை,*

*சொ.கை.*

3. அம்பாலிகை அத்தம் கோடு அல் அம் கஞ்சத்தன் நத்தனை ஏ

4. அம் பால் இகை அத்தம் கோடல் அம் கஞ்சத்தனத்து அன்னையே.

*அ-ள்.*

அத்தம் - செல்வப் புதல்வர். முதலாவது அம் சாரியை. முத்தேவரையும் புதல்வராகக் கொண்ட அநசூயை என்க.

*பஉரை.*

அம்பாலிகை அத்தம் - உமா தேவியைப் பாதியிற் கொண்ட சிவபிரானும்

கோடு அல்கஞ்தத்தன் - கோடுதல் இல்லாத பிரமனும்

நத்தனை - சங்கேந்திய திருமாலும் என இம்மூவரையும்

அம்பால் இகை - அழகிய முலைப்பால் ஈகைக்குரிய

அத்தம் கோடல் - செல்வமாகிய புதல்வராகக் கொள்ளுதலையுடைய

அம் கஞ்சத்தனத்து அன்னையே-அழகிய கஞ்சமன்ன தனமுடைய அன்னையாகிய அநசூயையே எ-று.

### வி-ரை.

*முதற் பத்துச் சீர் பயனிலை*

அத்திரி முனிவரின் பத்தினியாகிய அநசூயை தன் கற்பைப் பரிசோதிக்க வந்த மூவரையும் குழவிகள் ஆக்கித் தொட்டிலேற்றிப் பாலூட்டி வளர்த்தமையின் மூவரை அத்தமாகக் கொண்ட அன்னை என்றார். அத்தம் கை எனக் கொண்டு மூவரைக் கையிற் கொண்டு வளர்த்தலையுடைய அன்னை எனினும் அமையும்.

# 77--ஆவது பொருள்

## கண்ணகி.

### சொ.கை.

3. அம் பாலி கை அத்தம் கோடு அலங்கு அம் சந்தம் நத்தம் நை ஏய்

4. அம் பாலிகை அத்தம் கோடல் அம் கஞ்சம் தனத்து அன்னையே

### அ-ள்.

நத்தம் - அத்தமும் சந்தமுமுடைய மதுரை. நை - கணவன் வெட்டுண்டமையால் ஆகிய துன்பம். அத்தம் கோடல் தனம்-அத்தத்தாற் றிருகிக் கோடலையுடைய தனம்.

### ப.ரை.

3. அம் ஃநத்தம் - நீரின்கணுளவாகும் வெண்மைத்தாகிய அலங்காரமாகிய முத்தையும் பொதியின் மலையில் விளங்குகின்ற அழகிய சந்தனத்தையும் உடைய மதுரை நகர்க்கண்

நை ஏய் அம் பாலிகை - கணவனாகிய கோவலன் வெட்டுண்டமையால் துன்பத்தை அடைந்த பாலிகையாகிய கண்ணகியே

அத்தங்கோடல் அம் கஞ்சத்தனத்து அன்னையே - கோவலனைக் குற்றமின்றி வெட்டிய பாண்டியன் நகரம் அழியும் பொருட்டு வலக்கையால் திருகிக் கொண்ட அழகிய கஞ்சமன்ன தனத்தையுடைய அன்னையே எ-று.

*வி.ரை.*

முதற்பத்துச் சீர் பயனிலை. இக் கதையின் விரிவைச் சிலப்பதிகாரத்துட் காண்க. 75-முதல் இம்மூன்றும் பத்தினிகள் வகை. இனி அடியார் வகை உரைக்கப்படும்.

# 78--ஆவது பொருள்

## திருஞான சம்பந்தர்

*சொ.கை.*

1. அம் பாலி கை அத்து அம் கோடல் அங்கம் சந்த நத்தனை

2. அம்பால் இகை அத்தக் கோடு அலங்கு அஞ்சத்து அம் நத்து அன்னையே

3. அம்பாலிகை அ தங்கு ஓடு அலங்கு அஞ்சு அத்தன் நத்து அன்னை ஏ

4. அம் பால் இகை அத்தம் கோடல் அங்கம் சத்த்

*ப.ரை.*

அம் பாலி - அழகாகிய ஞானத்தைப் பாலிக்க.

கை அத்து அம் கோடல் அங்கம் - கையாகிய சிவந்த அழகிய காந்தளையுடைய பூம்பாவை என்னும் ஒரு கன்னிகையின் எலும்பை

சந்த நந்தனை அம்பால் இகை - மீண்டும் அழகிய மகளாம்படி பெண்ணுருவாக்கிக் கொடுத்த மேகம் போலுங் கொடையினையுடைய

அத்தக் கோடு அலங்கு அஞ்சத்து அம் நத்து அன்னையே-காட்டையுடைய மலைகளில் ஆடுகின்ற முருகவேளின் அமிசையிற்றோ ன்றிய அழகிய சங்க மன்ன தூயோனே.

அம்பாலிகை அ தங்கு ஓடு அலங்கு அஞ்சு அத்தன் நத்து அன்னை -அம்பாலிகையும் அத்தன் நத்தும் அன்னையும் ஆகிய உமாதேவி கொடுத்த

அம் பால் - அழகிய ஞானங் கலந்த முலைப்பாலை

இகை அத்தம் கோடல் அங்கம் - பொன்போலும் கையால் ஏற்றுப் பருகிய பெருமையையுடைய

சத்த - சத்தனாகிய திருஞான சம்பந்த மூர்த்தியே எ-று.

*வி.ரை.*

ஈகை - பொன் வள்ளமுமாம். சந்தம் நந்தனை - தொடை நோக்கி வலிந்து நின்றன. முதற்சீர் ஒன்றே பயனிலை.

ஈற்று விகற்பத்துள் இயைவன கொள்க .

தாய் பெயர் பகவதியார். தந்தையார் சிவபாத விருதயர்.

# 79--ஆவது பொருள்

## திருநாவுக்கரையர்

*சொ.கை.*

3. கஞ்சத்த நத்து அன்னையே

4. அம்பு ஆலி கயத்து அங்கு ஓடல் அங்கம் சத்த

*பொ.ரை.*

4. மேகங்கள் களிக்கின்ற சமுத்திர சலத்தில் மிதத்தலையுடைய தேகத்தையுடைய சத்தனாகிய திருநாவுக்கரசே எ-று.

*வி-ரை.*

முதற்பதின்மூன்று சீர் பயனிலை. ஈற்று விகற்பத்துள் இயைவன கொள்க.

தாய் மாதினியார்; தந்தை புகழனார்.

மேகங்கள் களிக்கின்ற கயம் எனவே கடல் நீர் எனபது பெற்றாம்.

சமணர் கல்லுடன் கட்டிக் கடலில் வீழ்த்திய காலத்து அக்கல்லுடன் மிதந்தமையால் கயத்து ஓடல் அங்கம் சத்தன் என்றார். ஓடல் மிதத்தற் பொருள் பயத்தலைக் "கடலோடும் நாவாயும்" எனவும், "திரை கடலோடியும்" எனவும் ஆன்றோர் கூறுமாற்றான் உணர்க.

## *80--ஆவது பொருள்*

### *சுந்தரர்.*

#### *சொகை.*

அம் பாலி கயத்து அம் கோடு அலங்கு அஞ்சு அத்தன் அத்தனை ஏய்

அம் பாலி கை அத்தம் கோடல் அங்கம் சத்த.

#### *அ-ள்*

அத்தம் - கண்ணாடி.

#### *பஎரை.*

அம் பாலி கயத்து -மேகம் போலும் வடிவமுடைய வெள்ளையாகிய யானையின் மேல் ஏறிச்சென்று

அம்கோடு அலங்கு அஞ்சு அத்தன் அத்தனை ஏய்-அழகிய கைலை மலையையும் விளங்குகின்ற ஐங்கரனுக்குத் தந்தையாகிய சிவபிரானையும் அடைந்த

அம் பாலி - அழகிய புகழையுடைய

(கை அத்தம் கோடல் அங்கம்) கை அத்தம் அங்கம் கோடல் - கைக் கண்ணாடியிற் சிவனது சாயையாற்றோன்றிய வடிவத்தைக் கொள்ளுதலையுடைய

சத்த - சத்தனாகிய சுந்தர மூர்த்தியே எ-று.

வி.ரை.

*முதற் பத்துச்சீர் பயனிலை*

சிவனது சாயையாற் கண்ணாடியிற் றோன்றிய ஆலால சுந்தரரே வன் றொண்டராக அவதரித்தமையின் அத்தத்தின் அங்கங் கோடலுடைய சத்தன் என்றார். ஈற்று விகற்பத்துள் இயைவன கொள்க. தாய் இசைஞானியார், தந்தை சடையனார்.

# 81--ஆவது பொருள்

## மாணிக்க வாசகர்.

சொ.கை.

1. அம் பாலி கை அத்தம் கோடு அலங்கு அம் சந்தம் நத்தன் ஐ ஏ
2. அம் பாலி கை அத்தம் கோடல் அங்கு அஞ்சு அத்தம் நத்தம் நை ஏய்
3. அம்பால் இகு அயத்து அங்கு ஓடு அலம் கஞ்சத்து அம் நத்து அன்னையே
4. அம்பால் இகை அத்தம் கோடு அலங்கு அம் சத்த.

அ-ள்.

ஓடு - முதனிலைத் தொழிற் பெயர். நத்தன் - பாண்டியன். அம்பால் இகை அத்தம் - முத்து. நத்தம் - இரா. அயம் - நரிக்குதிரை. பாலிப்பிற் கஞ்சமும், அத்தத்தில் அம்மும் அலத்தில்நந்தும் அன்னாய் என்க. அம் - மேகம். பாலி -பாலிப்பு. ஈற்றில் முன் உரைத்தன அன்றி நத்து அன்னையே எனற்கு அன்னை போல்வானே நத்துக எனப் பயனிலையாகவும் உரைக்க.

ப.ரை.

அம் பாலி கை அத்தம் - நீரில் உண்டாகிய வெள்ளை நிறமுடைய அலங்காரமுள்ள செல்வமாகிய முத்தையும்.

கோடு அலங்கு அம் அத்தம் -கிளைகள் அசைகின்ற அழகிய சந்தன மரங்களையும் உடைய.

நத்தன் ஐ அம் பாலி - நாட்டையுடைய அரசனாகிய பாண்டியனது அழகிய காத்தல் தொழிலின் கண்ணும்.

கை அத்தம் கோடல் அங்கு அஞ்சு அத்தம் - கையாகிய அத்தத்திற் பாண்டியன்பாற் கொள்ளுதலால் அங்குக் கிடைத்த அஞ்சத்தக்க பொருளிலும்

நத்தம் நை ஏய் அம்பால் இகு - இரவில் நைதலைப் பொருந்திய அம்பு போல வருத்திய

அயத்து அங்கு ஒடு அலம் - சிவபிரான் கொணர்ந்த நரிக்குதிரைகளின் ஓட்டத்தால் வந்த துன்பத்திலும்.

கஞ்சத்து அம் நத்து அன்னையே தாமரை இலையையும் மேகத்தையும் சங்கினையும் அன்னாய். மேகம் போற் கொடுக்கும் கையினையுடைய மலைபோல நிலையிற்றிரியாது விளங்குகின்ற அழகிய சத்தனாகிய திருவாத வூரரே எ-று

**வி-ரை**

சத்தனே தன்னையே என விளித்து அன்னாய் எனலைப் பயனிலையாக்குக இதுவன்றி அன்னையே நத்து என இறுதிச்சீரைப் பயனிலையாக்கல் மற்றொரு வகை.

நீரில் உண்டாகிய வெள்ளிய செல்வம் எனவே முத்து என்பது பெற்றாம். முத்துஞ் சந்தமும் உடைய நாடு எனவே பாண்டிய நாடு என்பது பெற்றாம். "பூழியர் கோன் தன்னாடு முத்துடைத்து" என்பதாலும், பொதியின்மலை சந்தன சயிலம் எனப்படலாலும் பாண்டியன் கடலையும் பொதியின் மலையையும் உடையன் ஆதலாலும் முத்துஞ் சந்தமும் உடைய நத்தன் எனவே பாண்டியன் என்பது பெற்றாம்.

தாமரை இலை தண்ணீரைத் தாங்கி நின்றும் அதனைத் தான் சாராத வாறு போலப் பாண்டியனது பாலிப்பாகிய மந்திரியதிகாரத்தைத் தான் தாங்கி நின்றும் பற்றின்றி இருந்தமையால் நத்தன் ஐயின் அம்பாலிப்பிற் கஞ்சத்து அன்னையே என்றார்.

மேகம் உலகத்தார் உண்ணத் தகுதியற்ற கடல் நீரை ஏற்று அவருண்ணத் தக்க நன்னீராக்கிப்பெய்தாற் போலக் கடவுள் ஏற்றற்குத் தகுதியில்லாது கிடந்த பாண்டியன் பொருளை அவன் பாலேற்றுத் தகுதியுடையதாக்கிக் கடவுளுக்குக் கொடுத்தமையாற் கையத்தத்தாற் கோடலையுடைய அஞ்சத்தக்க அத்தத்தில் அம் அன்னையே என்றார். சங்கு சுட்டாலும் வெண்மையிற் குன்றாதவாறு போலக் கடவுள் பாண்டியன் கொடுத்த பொருளுக்காக நரிகளைக் குதிரையாக்கிக் கொணர்ந்து கொடுத்த நாளில் அக்குதிரைகள் இரவில் மீண்டும் நரிகளாகி முன்னுள்ள குதிரைகளையும் கொன்று ஓடவே அது கொண்டு பாண்டியன் நம் பொருளை வஞ்சிக்க இவன் மாயஞ்செய்தான் என்று வருத்திய காலத்திலும் தன் மனநிலை குன்றாமையால் நத்தத்தில் அயத்தினது ஓடலால் வந்த அலத்தில் நத்து அன்னையே என்றார்.

" நிலையிற் றிரியா தடங்கியான் றோற்றம் மலையினும் மாணப் பெரிது" என்றார். ஆதலின் கோடு அலங்கு அம் சத்தன் என்றார். ஈற்று விகற்பத்துள் இயைவன் கொள்க. தாய் ஞானாவதி; தந்தையார் சம்பு பாதாகிருதர்.

# 82-ஆவது பொருள்

## இயற்பகை முதலாயினார்

### சொ கை.

1. கஞ்சம் தனம் தன்னை ஏய்
2. அம் பாலிகை அத்து அம் கோடல் அங்கு அஞ்சு அத்தம் நத்து அன்னை ஏ
3. அம்பால் இகு ஐயத்து அங்கு ஓடல் அம் கஞ்சத்தன் அத்தன் ஐ ஏ
4. அம்பால் இகை அத்தக்கோடு அலங்கு அம் சத்த.

*அ - ள்*

அன்னையே எனவும் ஐக்கு எனவும் விரிக்க. சத்தன் எனற்கு இயற்பகை எனவும் வல்லாளன் எனவும் வரகுணன் எனவும் உரைக்க

*பஉரை*

கஞ்சம் தனம் தன்னை ஏய்-கஞ்சமன்ன தனமுடைய தன்னை மணந்த, அம்பாலிகை - அழகிய அதரமும்

அத்து அம்கோடல் அஞ்சு அத்தம் - சிவந்த காந்தள் அஞ்சுகின்ற கையுமுடைய

நத்து அன்னை - விரும்புகின்ற எம் அன்னையாகிய தன் மனைவியை,

அம்பால் இகு ஐயத்து அங்கு ஓடல் - அம்பு போல வருத்துகின்ற இரத்தல் தொழில்கொண்டு அங்கே செல்லுதலையுடைய

அம்கஞ்சத்தன் அத்தன் ஐ - அழகிய பிரமனைப் பாதியிற் கொண்ட ஐயனாகிய சிவபிரானுக்கு

அம்பால் இகை - மேகம் போற் கைம்மாறின்றிக் கொடுத்தலையுடைய

அத்தக்கோடு அலங்கு அம்சத்த - பொன்மலை போல் விளங்கும் அழகிய சத்தனே எ-று.

*வி-ரை.*

முதன் மூன்று சீர் பயனிலை. அன்னையை அத்தனுக்குக் கொடுத்த அத்தன் எனக் கூட்டுக. ஈற்று விகற்பம் இயைவன கொள்க. இயற்பகையார் ஒப்ப வரகுண பாண்டியரும் வல்லாளனும் தம் மனைவியரைக் கடவுட்குக் கொடுத்தாராகலின் அவர்க்கும் இவ்வுரை கொள்க.

# 84--ஆவது பொருள்

## அநுமன்

### சொ.கை.

1. கஞ்சத்த நத்தனை ஏ
2. அம் பாலிகை அத்தம் கோடல் அம் கஞ்சம் தனத்து அன்னை ஏ
3. அம்பால் இகை அத்து அம் கோள் தலம் கஞ்சத்தன் அத்தனை ஏய்
4. அம்பு ஆலி கை அத்தக்கோடு அலங்கு அம் சத்தம் நத்தனையே.

### அ-ள்.

கஞ்சத்த நத்தனை - உருபு மயக்கம். நந்தினையுடைய திருமாலுக்கு.

கஞ்சத்தன் - சூரியன். ஏய் - ஏய்ந்து . சத்தம் - வியாகரணம்.

கோடல் அம் என்பதில் அம் சாரியை.

### பஉரை.

1. கஞ்சத்த நத்தனை - நீரின் கணுள்ள சங்கேந்திய திருமாலாகிய இராமபிரானுக்கு
2. அழகிய பாலி கையும் அத்தமாகிய கோடலும் கைத்தாளம் போன்ற தனமுடைய அன்னையாகிய சீதாபிராட்டியை
3. அம்பால் இகை - தேடிக் கண்டு மேகம் போற் கொடுத்த ஈகையையுடைய

அத்து அம் கோள் தலம் கஞ்சத்தன் அத்தனை ஏய் - சிவப்பு நிறமுடைய அழகிய கோளும் பூமியிலுள்ள தாமரை நண்பனும், அத்தனுமாகிய சூரியனை யடைந்து. அம்பு ஆலிகை அத்தக் கோடு அலங்கு - பொன்மலை போல நிலையிற் றிரியாது விளங்குகின்ற.

அம் சத்தம் நத்தனையே - அழகிய வியாகரணத்தை விரும்பிக் கற்ற அநுமனே எ-று.

*வி.ரை.*

முதல் மூன்று சீர் பயனிலை. ஈகையையுடைய அநுமன் எனக் கூட்டுக.

இராமபிரான் சீதையை அடைதற்குச் சுக்கிரீவன் முதலாய பிறரும் உதவி புரிந்தாராயினும் அநுமனே சிறந்த துணையாதலின், நத்தனுக்கு அன்னையை அளித்த அநுமன் என்றார்.

# *96--ஆவது பொருள்*

## *ஓருபகாரி.*

*சொ.கை.*

3. அம் பாலி கயத்து அம் கோடல் அங்கு அஞ்சத்தன் அத்தனை ஏய்

4. அம் பாலி கை அத்தம் கோடு அலங்கு அம் சத்த.

*கு-பு.*

பாலப்பருவத்து மதுரை மாரி கோயிலின் அருகுள்ள தடாகத்து நீராடுங்காலைப் படியினின்று வழுக்கி நீந்தறியாமையால் நீரில் அமிழ்ந்துழி அயலுள்ளார் எல்லாரும் வாளா இருப்பச் சேணின் றோடி வந்து என்னைத்தூக்கி நீந்திக் கரையிற் சேர்த்து உயிர் தந்தமையின் இவரையுங் குரவர் வகையுட் கொண்டு வாழ்த்தலாயிற்று . இவர் உத்தமபாளையம் சுப்பிரமணிய முதலியார் என்ற ஒரு கனவான்.

*ப.ரை.*

அம் பாலி - அழகிய வெண்மைத்தாகிய

கயத்து அம் கோடல் அங்கு - தடாகத்து நீர் அமிழ்திக் கோடலையுடைய அவ்விடமாகிய மாரி கோயிலின் அருகே

அஞ்சத்தன் அத்தனை ஏய் - பிரமன் பிதாவாகிய திருமாலை ஒப்ப.

அம் பாலி கை - அழகிய பாலித்தற் றொழிலைக் கொண்ட கையினையுடைய

அத்தம் - செல்வமே

கோடு அலங்கு அம் சத்த - மலையென விளங்கிய அழகிய புகழுடைய சத்தனே எ-று.

*வி.ரை.*

முதற் பத்துச்சீர் பயனிலை. தன்னுயிர் காத்த நன்றி நினைந்து அத்தம் என்றார்.

***முதல் ஏகபாதத்தில் கீழ்வரும் பொருட்பகுதி கிடைத்தில***

26 பலபத்திரராமன் 27. கண்ணன் 28. கற்கி 29. சனகாதியர் 30. நாரதர் 31. அயக்கிரீவர் 32. யோகினி 33. வியாசர்

*34. தன்வந்தரி 35. புத்தர் (திருமால் வகை) (10)*

*47. இயமன் 49. வருணன் 50. வாயு (திக்குப்பாலகர் வகை) (3)*

*83. திருநீலகண்டர் 85.பொய்கையார் 86.சடகோபர் 87. பெரியாழ்வார் 88 திருமங்கையாழ்வார் 89. திருபாணாழ்வார் (அடியார் வகை) (6)*

*90. இயேசு 91. முகம்மது (ஆதுனிக மத வகை) (2)*

*92 ஈன்றதாய் 93. வளர்த்ததாய் 94. தாயின்தந்தை 95. தந்தை 97. வித்தியாகுரு 98 குலகுரு (குரவர் வகை) (6)*

*99. காஞ்சி (புறப்பொருள் வகை) (1)*

*100. இயலிடம் கூறல் (அகப்பொருள் வகை) (1)*

*முதல் ஏகபாதம் 100 பொருள்களுள் கிடைக்காதவை 29*

*கிடைத்து எழுதப்பெற்றவை. 71*

*ஆக 100*

பாயிரம் 2,3 ஏக ப்ர்தங்கள் உரைவகையுடன் முழுமையாகக் கிடைத்துள.

நூல் 100 ஏக பாதங்களும் கிடைத்துள.

*நூற் பாயிரத்துள் இரண்டாவது ஏகபாதம்.*

*காசி நகரனல் கஞ்சத்த கத்த கவலையின்றே*
*காசி நகரனல் கஞ்சத்த கத்த கவலையின்றே*
*காசி நகரனல் கஞ்சத்த கத்த கவலையின்றே*
*காசி நகரனல் கஞ்சத்த கத்த கவலையின்றே*

# கருப்பொருள்

இச் செய்யுள் பத்துப் பொருள் உணர்த்தும்.

## முதலாவது பொருள்

### கணபதி

#### சொ-கை

கா - சிநகரம் - நன்மை - கஞ்சத்து - அகதது - அகம் - அல்-அயின்று ஏகு.

ஆசு - இன - அகரன் - அல் - கஞ்சத்த - கத்து - அகவு - அலை- இன் - தே. காசு -இல்- நகு - அரசன் -அலகு - அஞ்சத்து - அகம் - தகவு. வல்லையின்-தே

காசி-நகரன் -நல்கு - அஞ்சு - அத்த - கத்த - கவலை -இன்று -ஏ.

#### அ-ள்

கஞ்சம் - நெஞ்சமாகிய தாமரை; அயின்று காவெனக் கூட்டுக;

ஆசு ஏகு அகரன் என்க. கஞ்சத்த - நீரையுடைய; அலை-கடல்,

தே-கருணை, அல்கல் -நிலைபெறல், அஞ்சத்து - அன்னம் போன்ற தகவு, கடைக்குறை, வல்லை, இடைக்குறை.

(ப.ரை.)

(கா-சினகரம் - நன்மை - கஞ்சத்து - அகத்து - அகம்-அல்-அயின்று)

சினகர நல்கஞ்சத்து அகத்து - கோயிலாகிய (நல்ல மனமென்று சொல்லப்பட்ட) தாமரை மலரின் நடுவே வீற்றிருந்து,

அக அல் அயின்றுகா - அகவிருளாகிய அஞ்ஞானத்தைக் கெடுத்துக் காத்தருள்க.

(ஏகு ஆசு இன் அகரன்) ஆசு ஏகு இன் அகரன் - குற்றம் நீக்கிய இனிய அகரம் போல்வானும்,

அல் கஞ்சத்த கத்து அக, அலை- கரிய நீரையுடைய ஒலிக்கின்ற அசைகின்ற கடல் போன்ற,

இன்தே - இனிய கருணையையுடைய,

காசு இல் நகு அரன் - குற்றமில்லாத விளங்குகின்ற அரனும், அல்கு அஞ்சத்து - நிலைபெற்ற அன்னம் போன்ற,

அகத் தகவு - அகத்தின் கண் விளங்குகின்ற தகுதியையுடைய,

வல்லை இன்தே - எல்லாம் வல்ல உமாதேவியார்க்குத் தேவனுமாகிய,

காசி நகரன் நல்கு - காசி நகரையுடைய சிவபிரான் பெற்ற,

அஞ்சு அத்த - ஐந்து திருக்கரங்களையுடைய விநாயக மூர்த்தியே,

கத்த - கருத்தனே,

கவலை இன்று - பிறப்பென்னுங்கவலை இல்லையாம். எ-று.

**வி-ரை**

*"அகரனும் அரனும் தேவும் நகரனும் ஆகிய சிவபிரான் நல்கு ஐந்து கரமுடையானே கருத்தனே அக அல் அயின்று கா கவலை இன்று "எனக் கூட்டுக.*

சினகரம் ஆகிய கஞ்சம் எனவே மனம் பெறப்படலின் அகத்து என்பதனை ஏழன் உருபாகக் கொள்க.

கஞ்சத்த அலை, கத்து அலை, அகவு அலை-என்க. கடலை உணர்த்தலின் அலை ஆகுபெயர். அலை போன்ற இனிய கருணையையுடைய அரன், காசில்லாத அரன் - என்க.

அல்கு வல்லை, அஞ்சத்துவல்லை, அகத்து வல்லை, தகவுவல்லை - என்க.

எழுதப்படும் அகரம் தோன்றி நின்று அழியுங் குற்றமுடைத்து ஆகலானும் நாபிக் கமலத்துள்ள நாதமாகிய அகரத்துக்கு அக்குற்றம் இன்மையானும் குற்றம் நீங்கிய அகரம் எனவே எழுதப் படுதலும் தோன்றிநின்று அழிதலும் இல்லாத நாதமாகிய அகரம் என்பது பெறப்பட்டது.

திருக்கோவையாரிற் 'கொடுங்கால் குலவரை' என்புழி லகரந் திரியாமைபோல் ஈண்டும், 'நற்கஞ்சம்', 'அற்கஞ்சம்' எனத் திரியாது தொடை நோக்கி, 'நல்கஞ்சம்', 'அல்கஞ்சம்' என நின்றது. 'நகு' என்புழி முற்றுகரக் கேடு இலேசாற் கொள்க

'வல்லை' வன்மையுடையாளை உணர்த்தலின் உயர்திணைப் பெண்பாற் பெயர்.

'அயின்று' என்பது ஐயின்றென மயங்கிற்று.

அஞ்சம் போன்ற நடையினையுடைய வல்லை என்னாது 'அஞ்சத்து வல்லை' என்றமையால் தொகையுவமம்.

# இரண்டாவது பொருள்

## கந்தன்

### (சொகை)

ஈற்றடியிற் 'காசிநகரன் நல்கு அம்சத்த' எனவும் ஏனைய முன் போலவும் பிரித்துப் பொருள் கொள்க.

### (பொ-ரை)

'அகரனும் அரனும் தேவுமாகிய காசி நகரன் விரும்பிய அழகிய உண்மையாகிய பிரணவப் பொருளையுடைய முருகக் கடவுளே கருத்தனே அகவிருளை அயின்று கா கவலை இன்றே' என உரைக்க.

### (வி-ரை)

நல்கல் -விரும்பல். 'நல்கினும் நல்காராயினும்' என்னும்

புறப்பாட்டானும், 'நசைஇயார் நல்கார் எனினும்' என்னும் குறளானும் நல்கற்கு அப்பொருள் உண்மை காண்க.

சத்து - உண்மைப் பொருள்

'காசி நகரனுக்கு நல்கிய சத்தன்' எனக் கூறினும் அமையும். இப்பபொருட்கு, 'ஐந்தவித்தான் ஆற்றல்' என்புழிப் போலக் குவ் வுருபு தொக்கதாகக் கொள்க.

# மூன்றாவது பொருள்

## அரன்.

*(சொ-கை)*

ஈற்றடியிற், 'காசி நகர நல்கு அம் சத்த' எனவும் ஏனைய முன்போலவுங் கொள்க.

*(பொ-ரை)*

அகரன், அரன், தே, காசி நகரன், சத்த, கத்த என்பவற்றை விளியாக்கி, " அகரனே, அரனே, தேவே, காசி நகரனே, எல்லாம் படைத்தருளிய அழகிய சத்தனே, கத்தனே அகவிருளை அயின்று கா, கவலை இன்று" என உரைக்க.

நல்கல் -படைத்தல்.

# நான்காவது பொருள்

## அகத்தியர்

*(சொ-கை)*

ஈற்றடியிற், 'காசி நகரன் நல்கு அம்சத்த கத்த' எனவும், ஏனைய முன்போலவுங் கொள்க.

*(பொ-ரை)*

'அகரனும் அரனும் தேவும் ஆகிய காசி நகரன் உபதேசித்தருளிய அழகிய தமிழ் இலக்கணத்துக்குக்

கருத்தனாகிய அகத்திய முனியே அகவிருளை அயின்று கா, கவலை இன்றே' என உரைக்க.

## ஐந்தாவது பொருள்

### உமையம்மை

*(சொ-கை)*

மூன்றாவது அடி, "*காசி நகரன் அல்கு அம் சத் தகத்த கவலை இன்று ஏ* "எனவும்,

ஈற்றடி "*காசின் நகு அரன் நல்கு அஞ்சத்து அகம் தகவு வல்லை இன்றே*"எனவும்,

முதலிரண்டடியும் முதலுரைத் தாங்குக் கொள்க.

*(ப-ரை)*

காசி நகரன் அல்கு அம்சத்த கத்த - காசி நகரனும் நிலைபெற்ற மெய்ப்பொருள் என்னப்பட்ட கருத்தனுமாகிய,

கவலை இன்று காசின் நகு - துன்பமின்றிப் பொன்போல் விளங்கும், அரன் நல்கு அஞ்சத்து - சிவபிரான் விரும்பிய அன்னம் போன்ற,

அகத் தகவு வல்லை - அகத்தின்கண் விளங்குகின்ற தகுதியையுடைய, எல்லா வன்மையுமுடைய உமையம்மையே,

இன்றே-இப்பொழுதே எ-று

*(வி-ரை)*

"அகரனும் காசி நகரனும் சத்தனும் கர்த்தனும் அரனும் ஆகிய சிவபெருமான் விரும்பிய வல்லையே இப்போதே அகவிருளை அயின்று கா " வெனக் கூட்டுக.

"இன்றி" என்னும் எச்சம் செய்யுளாகலின் ஞஇன்றுஞ எனத் திரிந்தது. காசு-பொன்.

# ஆறாவது பொருள்

## *மலர் மகளிர்*

*(சொ -கை)*

முதலடி, "கா சினகரம் நன்மை கஞ்சத்து அகம் தகவு வல்லை இன்று ஏகு" எனவும்,

மூன்றாவதடி, "***காசி நகரன் அல்கு அஞ்சு அத்த கத்த கவ்வு அல் அயின்றே***" **எனவும்,**

ஈற்றடி." காசின் நகு அரன் நல்கு அம் சத்து அகத்த கவலை இன்றே" எனவும்,

இரண்டாவதடி முதலுரைத் தாங்குக் கொள்க.

அல்கு - வறுமை. அத்தம் - செல்வம்..

*(ப-ரை)*

சினகர நல் கஞ்சத்து அகம் தகவு வல்லை - கோயிலாகிய நல்ல தாமரைப் பூவின்கண் வீற்றிருக்குந் தகுதி பொருந்திய வன்மையுடையாள் ஆகிய கலைமகளே, திருமகளே,

இன்று கா-இப்போதே காக்க.

அல்கு அஞ்சு அத்த கத்த - வறுமை அஞ்சத்தக்க செல்வமுடையானுங் கர்த்தனுமாகிய,

கவ்வு அல் அயின்றே காசின் நகு அரன் நல்கு - அகத்தே கவ்வி மறைக்கின்ற அடியாரது அஞ்ஞான இருளையுண்டு பொன்போல் விளங்குஞ் சிவ பிரான் முனிவர்க்குபதேசித்தருளிய,

அம் சத்து அகத்த - அழகிய மெய்பொருளெல்லாம் மனதின் கண்ணே உளவாம்.

கவலை இன்று -பிறவிச் கவலையும் ஒழியும் (எ-று)

ஏனைய முதலுரை போறக் கொள்க.

(வி -ரை)

கஞ்சத் துள்ள வல்லையே இன்று காத்தருள்க. காப்பின் அகரனும் காசி நகரனும் அத்தனும் கத்தனும் அரனுமாகிய சிவபிரான் முனிவர்க்கு உபதேசித்த வேதப் பொருளெல்லாம் எம்மகத்தவாகும் கவலையும் இன்றாமெனக் கூட்டுக.

அல்கு -சுருங்கக் காரணமாகிய மிடியை உணர்த்திற்று. இப்பொருளில் இலக்குமியே நீ வறுமையினின்றுங் காத்தல் செய்யிற் கவலை இன்மையால் காசிநகரன் நல்கிய மெய்ப்பொருளெல்லாம் அகத்தின்கண் நிலைபெறும் எனக் கருத்துரைத்துக் கொள்க.

CENTRAL COLLEGE LIBRARY, MADURAI.

# ஏழாவது பொருள்

## சூரியன்

(சொ-கை)

முதலடி, "காசி னகரம் நன்மை கஞ்சத்து அகத்த கவ் அல் அயின்று ஏகு" எனவும், இரண்டாவதடியில், "ஆசு இன் கரன் " எனவும், மூன்றாவதடியில், " நல்கு " எனவும், ஈற்றடியில், "அல்கு" எனவும்

ஏனைய முதலுரைத்தாங்குக் கொள்க.

(ப-ரை)

சினகர நல்கஞ்சத்து அகத்த - கோயிலாகிய மனமென்னும் நல்ல தாமரை மலரின்கண் உள்ளானே

கவ் அல் அயின்று ஏகு ஆசு இனகர -உலகத்தை மூடி மறைக்கின்ற இருளை உண்டு செல்லுகின்ற விரை வினையுடைய கூட்டமாகிய கிரணங்களையுடையானே,

காசி நகரன் அல்கு அம் சத்த கத்த - காசிநகரன் தங்கிய அழகினையுடைய மெய்ப்பொருளாகிய கர்த்தனே எ-று.

*(வி-ரை)*

*"நல்கு வல்லை" எனக் கொண்டு உலகெலாம் படைத்தருளிய வல்லை என்க. ஏனைய முதலுரை போற் கொள்க.*

சூரிய மண்டலத்தின் நடுவே சிவபிரான் வீற்றிருத்தலிற் "காசி நகரன் அல்கு அம் சத்த" என்றார். சூரியனுக்கு இனன் என்பதும் பெயராதலின் "இனன் ஆகிய கரனே" எனலும் பொருந்தும். இது வன்றி ஆசின எனவும் கரன் எனவும் கொண்டு இருளையுண்டு செல்லுகின்ற விரைவினையுடைனவாகிய கிரணங்களை யுடையாய் என்றும் உரைத்துக் கொள்க. கரம்-கிரணம். கஞ்சத்து அத்தனே இனனே கரனே இனகரனே ஆசினவாகிய கரனே அல்கஞ்சத்த கத்து அகவு அலை போன்ற இனிய கருணையுடைய காசில்லாத நகுகின்ற அரனும் நல்கிய அஞ்சம் போன்ற அகத்தின் கணுள்ள தகவினையுடைய வல்லையின் தேவனும் காசி நகரனுமாகிய சிவபிரான் தங்கிய அழகிய மெய்ப் பொருளே, கர்த்தனே கா கவலை இன்று எனக் கூட்டி யுரைக்க.

# எட்டாவது பொருள்

## பிரமன்

*(சொ-கை)*

முதலடி, "*கா சினகரம் நன்மை கஞ்சத்து அகத்த கவ் அல் அயின்று ஏகு*" எனவும்,

மூன்றாவதடி, "*காசு இல் நகு அரன் அல்கு அம்சத்து அகத்தகவு வல்லை யின்தே*" எனவும்,

ஈற்றடி, காசி நகரன் நல்கு அஞ்சத்த எனவும் ஏனைய முதல் உரைத்தாங்குக் கொள்க.

*(ப-ரை)*

சினகர நல் கஞ்சத்து அகத்த -கோயிலாகிய தாமரையில் வீற்றிருக்கும் பிரமதேவனே

கவ் அல் அயின்றுகா - மனத்தைக் கவ்விமறைக்கின்ற அஞ்ஞான இருளை அழித்துக் காத்தருள்க

காசி நகரன் நல்கு அஞ்சத்த -காசி நகரன் அளித்த அன்ன வாகனம் உடையானே ( எ -று )

### (வி -ரை)

அல்கு அம்சத்து -நிலைபெற்ற அழகிய மெய்ப் பொருள் எனவும்

அகத் தகவு வல்லை - அகத்தின் கணுள்ள தகுதியுடைய வல்லவன் எனவும் ஏனைய முதல் உரைத்தாங்குக் கொள்க.

"கஞ்சத்து அத்தனே அகரனும் அரனும் சத்தும் வல்லையின் தேவனும் நகரனும் ஆகிய சிவபிரான் நல்கிய அஞ்சத்தனே, சுத்தனே, கவ்விய அல்லினை அயின்று கா, கவலை இன்"றெனக் கூட்டுக.

சிவனை நோக்கித் தவஞ் செய்து அன்னவாகனம் பெற்றான் என்பது புராணக்கதை. இது வன்றிக் காசி நகரனை விரும்பிய அன்ன வாகனத்தனே எனக் கூறலும் பொருந்தும். இப் பொருளிற் "பல்லோர் அறியுஞ் சொல்" என்புழிப் போல இரண்டாவது தொக்கதாகக் கொள்க. இது வன்றிக் "காசி நகரன் விரும்பிய" என எழுவாய் ஆக்கினும் அமையும்.

# ஒன்பதாவது பொருள்

## திருமால்

### (சொ-கை)

கா சினகரம் நல் கஞ்சத்து அகத்து அக அல் அயின்று ஏகு ஆ சினகரன் அல்க அஞ்சு அத்த கத்து அகவு அலையான் தே காசு இல் நகு அரன் நல்கு அம்சத்து அகத்தகவு வல் ஐ இன்தே காசி நகரன் அல்கு அஞ்சு அத்த கத்த கவலை இன்றே

அஞ்சு -ஐம்படை, காசின் நகர் - பொன்னகர்.

*(ப -ரை)*

சினகர நல் கஞ்சத்து அகத்து -சினகர நல்கஞ்சத் தகத்து வீற்றிருந்து

அக அல் அயின்று கா - அகவிருளை அயின்று காக்க.

ஏகு ஆ சின - பகைவர்பாற் செல்லும் விரைவினையுடையவாகிய

கரன் அல்கு அஞ்சு -கரத்தின்கண்ணே தங்கிய பஞ்சாயுதத்தையுடைய

அத்த - அத்தனே

கத்து அகவு அலையின் தே -கத்துகின்ற அகவுகின்ற அலையின்கண் வசிக்கின்ற தேவனே,

காசு இல் நகு அரன் நல்கு - குற்றமில்லாத விளங்குகின்ற உருத்திரன் விரும்பிய

அம்சத்து - அழகிய மெய்ப் பொருளே,

அகத் தகவு வல் ஐ -எமது அகத்தின் கண்ணே விளங்குகின்ற தகுதியுடைய வலிய ஐயனே,

இன்தே காசின் நகரன் - இனிய கருணையுடைய பொன்னாலாகிய அமராவதி நகரத்தையுடைய இந்திரனது.

அல்கு அஞ்சு அத்த - வறுமை அஞ்சத் தக்க கைகளை உடையானே,

கத்த -கருத்தனே,

கவலை இன்று - கவலை இல்லை (எ-று)

*(வி - ரை)*

*"கரன் அல்கு அஞ்சு அத்தனே, அலையின் தேவே, சத்தே, ஐயே, அல்கு அஞ்சு அத்தனே, கர்த்தனே, அகவிருள் அயின்று கா. கவலையின்று "எனக் கூட்டுக.*

"ஆசினவாகிய அஞ்சு" என்க. "அஞ்சு" எண் குறித்து நின்ற பொருட்பெயர்.

திருமால் கையில் ஆயுதம் எடுப்பின் இந்திரன் செல்வத்தைக் கவர்ந்து சென்ற பகைவர் அழிவர் ஆதலால், "இந்திரனது வறுமை அஞ்சுகின்ற கை" என்றார்.

அலையின் என்புழி "இன்" ஏழனுருபு. திருக் கோவையில் "ஏழையின்" என்புழி இன் ஏழனுரு பென்றும், அது புற நடையாற் கொள்ளப் பட்ட தென்றும் பேராசிரியரும் உரைத்தமை காண்க.

"அரன் நல்கு சத்து "என எழுவாய் ஆக்கினும் அமையும்.

# பத்தாவது பொருள்

## பல் கடவுளர்

*(சொ-கை)*

*கா சினகரம் நன்மை கஞ்சத்து அகத்த கவ்வு அல்*
*அயின்று ஏகு*
*ஆசு இன் கரன் அல்கு அஞ்சு அத்த கத்து அகவு*
*அலையின் தே*
*காசு இல் நகு அரன் நல்கு அம்சத்து அகம் தகவு*
*வல்லை இன் தே*
*காசின் நகர நல்கு அஞ்சு அ தகத்த கவலை இன்று*
*ஏ*

*(கு-பு)*

அயன் ஞாயிறு அரி வருணன் அரன் பரசிவன் துர்க்கை இந்திரன் அக்கினி என இவரை முறையே கொள்க. அருகன், சந்திரன். மாரன் காளி இயமன் புத்தன் தேவரென இவருங் கொள்ளப்படும்.

*(ப-ரை)*

கா - காக்க

சினகர நல் கஞ்சத்து அகத்த - கோவிலாகிய நல்ல தாமரைப் பூவில் வீற்றிருக்கும் பிரமதேவனே,

கவ்வு அல் அயின்று ஏகு ஆசு இன - உலகத்தைக் கவ்வி மூடுகின்ற இருளை உண்டு செல்லுகின்ற விரைவினையுடைய சூரியனே,

கரன் அல்கு அஞ்சு அத்த -கரத்தின் கண்ணே தங்கிய பஞ்சாயுதங் களையுடைய அத்தனாகிய திருமாலே,

கத்து அகவு அலையின் தே - கத்துகின்ற அகவுகின்ற அலையையுடைய சமுத்திர தேவனாகிய வருணனே,

காசு இல் நகு அரன் - குற்றமில்லாத விளங்குகின்ற உருத்திரனே,

நல்கு அம்சத்து - எல்லாம் படைத்தருளிய அழகிய மெய்ப்பொருளாகிய பரசிவமே,

அகத் தகவு வல்லை - என் மனத்து விளங்கும் தகுதியையுடைய வல்லணங்கு என்னும் பெயரையுடைய துர்க்கையே,

இன் தே காசின் நகர - இனிய கிருபையையுடைய பொன்னாலாகிய அமராவதி நகரத்தையுடைய இந்திரனே,

நல்கு அஞ்சு அ தகத்த - விரும்புகின்ற அஞ்சத்தக்க அத்தகித்தலையுடைய அக்கினி பகவானே,

கவலை இன்று - கவலை இல்லை (எ-று)

***(வி-ரை)***

உடனிலைச் சிலேடையால் "கஞ்சத்து அகத்த" எனற்கு மலர்மிசை ஏகிய அருகனே எனவும் "இன" எனற்கு இருளை உண்ணும் விரைவினையுடைய உடுக்கூட்டங்களையுடைய சந்திரனே எனவும், "வல்லை" எனற்கு வல்லணங்காகிய காளியே எனவும், "தகத்த" எனற்கு உயிர்களைத் தகிக்கின்ற இயமனே எனவும், "கஞ்சத்து அகத்த" எனலைக் கஞ்சம் போன்ற தூய அகத்த என விரித்துத் தாமரை மலர் போனற தூய மனமுடைய புத்தனே எனவும், "இன்தே" எனற்கு இனிய தேவர்களே எனவும் உரைத்துக் கொள்க.

பிரமனே அருகனே புத்தனே சூரியனே சந்திரனே திருமாலே மாரனே வருணனே உருத்திரனே பரசிவனே

துர்க்கையே காளியே தேவர்களே இந்திரனே அக்கினியே இயமனே காக்க கவலையின்றெனக் கூட்டுக.

"ஆசின" வெனக் கொண்டு விரைவினையுடையாய் என இரவி, மதி இருவர்க்குந் தனித்தனி கூறலும் அமையும்.

"கா கவலை இன்று" எனலை எல்லார்க்குந் தனித்தனி கூட்டி வினை முடிவு செய்க.

கவ்வு அல் கவ்வலென்றாகித் தொகுத்தல் பெற்றுக் கவலென நின்றது. "தகம்" தகித்தல் தகனத்தின் இடைக்குறையுமாம். இப்பொருள்களை ஏதுக்கள் கூறி நுண்ணியதாக உரைப்பான் புகின் விரியும் ஆதலின் பதப்பொருள் மாத்திரையே விளக்கினும் மேலும் அது முருகக் கடவுளே ஏனைத் தெய்வமுமாக விளங்கும் என்னுஞ் சமரச நிலை கொண்டு சிலேடையால் இங்ஙனந் தேவர் பலரை வாழ்த்தினார். அந்தாதியுள்ளும் பல செய்யுள் இப்பெற்றிய அவை ஆங்காங்கு விளக்கப்படும்.

### *நூற்பாயிரத்துள் மூன்றாவது ஏகபாதம்*

*வேலு மயிலுந் துணையென் றிருக்க வினாவகமே*
*வேலு மயிலுந் துணையென் றிருக்க வினாவகமே*
*வேலு மயிலுந் துணையென் றிருக்க வினாவகமே*
*வேலு மயிலுந் துணையென் றிருக்க வினாவகமே*

இச்செய்யுள் ஒரு பொருள் உடைத்து.

*(சொ-கை)*

*வேலும் அயிலும் துணை என் திருக்க இன்னா அகம் மே வேல்*
*உம்மையில் உந்து உள் நை யென் திரு கவின் ஆவ கம் மேவு*
*ஏலும் அயலும் துணை என் திரு கவி நா அகமே*
*வேலும் மயிலும் துணை என்று இருக்க வினாவு அகமே.*

*(அ-ள்)*

திருக்கு - மாறுபாடு. அகம் -பாவம். உந்துதல் -செலுத்துதல்.

நையென் - நையேன். திரு-இருவகைச் செல்வம்.

கவின் - இருவகையழகு.

*(ப-ரை)*

வேலும் - ஏனையோர் ஆயுதங்களும்,

அயிலும் - முருகனது வேலாயுதமும்

துணை என் திருக்க - ஒப்பென்று மதிக்கும் மாறுபாட்டையுடைய

இன்னா அகம் மேவேல் - துன்பத்தை விளைக்கும் பாவத்தை விரும்பற்க.

உம்மையில் உந்து - முற்பிறப்பினும் மிகுதியாக இப்பிறப்பில் அதன்கண் நினைவைச் செலுத்து

உள் - அதற்கு ஒப்பில்லை என்று நினை

நையென் - இங்ஙனஞ் செய்யின் யான் வருந்தேன்.

இரு கவின் ஆவ -கல்வி செல்வம் என்னும் இருவகைப் பொருளும் அவற்றாலெய்தும் ஞானமும் புகழும் என்னும் இருவகை அழகும் தாமே உளவாம்

கம் மேவு ஏலும் - மறுமையில் விண்ணுல கடைதலும் எய்தும்

அயிலுந்துணை என்- அங்குள்ள போகத்திற்குப் புசிக்குங் கால அளவு ஏது (இல்லையாம்)

திரு கவி நா அகமே - அழகிய பாக்கள் நாவின் முயற்சி இன்றித் தாமே உளவாம் ஆதலால்

வேலும் மயிலும் துணை என்று இருக்க - முருகனது வேற்படையும் மயில் வாகனமும் நமக்குத் துணையாம் என்று சிந்தித் திருக்கக் கடவாய்.

வினாவு அகமே - உண்மை உணர வினாவுகின்ற மனமே (எ-று)

*(வி-ரை)*

"வினாவு கின்ற அகமே மேவேல் உந்து உள் துணை என்று இருக்க திருக்கவின் ஆவ கம் மேவு ஏலும் திருக்கவிநா அகமே யாவ நையேன் எனக் கூட்டுக.

திருக்க - குறிப்புப் பெயரெச்சம். இன்னா-இடைக்குறை.

உம்மையில் உமையில் என இடைக் குறைந்து உமையில் என மயங்கிற்று. நையென் என்பதில் என் தன்மை ஒருமை விகுதி. நாவகமே யாவ வெனப் பின்னுங் கூட்டுக.

கம்மேவுகமே எனத் தொகுத்தல் பெற்றது . மேவு முதனிலைத் தொழிற்பெயர். இருக்க - வியங்கோள்.

இப்பிறப்பில் வேலாயுதத்தின்பால் அன்புளதாதற்குக் காரணம் முற்பிறப்பினும் இருத்தல் வேண்டுமென நினைந்து உம்மையாயினும் உந்து என்றார். உம்மையினும் என்றதன்கண் உம்மை தொக்கது விகாரம் "தவமுந் தவமுடையார்க் காகும்" எனக்குறளும், " மேலைத் தவத்தாற் றவஞ்செய்யா தாரென" நாலடியாரும் கூறலாம் இப்பிறப்பில் செய்யுந் தவத்துக்கு முற்பிறப்பிற் செய்த தவம் காரண மாதலை யுணர்க.

நூற்பாயிரம் முடிந்தது.

உ

## நூல்

*திருத்தகை யாகத்த மாலை யதணித் திலகவையே*
*திருத்தகை யாகத்த மாலை யதணித் திலகவையே*
*திருத்தகை யாகத்த மாலை யதணித் திலகவையே*
*திருத்தகை யாகத்த மாலை யதணித் திலகவையே*

இச்செய்யுள் இரு பொருள் உடைத்து.

முதற் பொருளுக்குச் சொல்வகை.

1. திரு தகு ஐயா கத்த மாலையது அணித்து இல கவ்வை ஏ

2. திருத்தகை யாகத்த மாலைய தண் நித்தில கவ்வையே

3. திருத்தகை ஆகத்த மால் ஐய தணித்து இலக வை ஏ

4. திருத்தகை ஆகு அத்தம் ஆலய தணி திலக ஐயே.

### அ - ள்

அத்தம் - விளி, கவ்வை - ஒலி, பழி. தண்ணித்திய மாலைய எனவும் தணிய எனவும் கூட்டுக. திலகனுக்கு ஐயே என ஏனைய பொருள் கொள்க.

### ப - ரை

திருத்தகு ஐயா - அழகினையுடைய தகுதி பொருந்திய ஐயனே, கத்த - கர்த்தனே

மாலையது அணித்து - மாலைப்பொழுதோ அணித்தாயிற்று (இலகவ்வை ) கவ்வை இல - பறவை முதலியவற்றின் ஒலியும் இலவாயின, திருத்த - பூரணனே.

கையாகத்தம் ஒழுக்கமுள்ள வேள்வித் தலைவா (மாலையதண் நித்தில) தண் நித்தில மாலைய - தண்ணிய முத்துமாலை அணிந்தோனே

கவ்வையே - இப்போது தலையளி செய்யிற் பழியாகுமோ? ஆகாது. திரு தகை ஆகத்த மால் ஐய - இலக்குமி வசிக்கும் பெரிய மார்பத்தையுடைய விண்டுவுக்குத் தலைவா தணித்து இலக வைகாம வேட்கையைத் தணித்து விளங்கக் கிருபா நோக்கம் வைத்தருள்க. திருத்த - எமது வாட்டம் திருத்துக.

கை ஆகு அத்தம் - கையின் கண் உள்ள பொருளை ஒப்பாய் (ஆலய தணி திலக) தணி ஆலய திலக - திருத்தணிகை ஆலயத்து விளங்கும் திலகம் போல்வானே.

ஐயே - அழகனே எ -று.

### வி - ரை

"மாலையது அணித்து ; கவ்வை இல, கவ்வையோ தணித்து இலகவை; திருத்த" எனக் கூட்டுக.

'திருத்த' ஒன்று விளி; ஒன்று வியங்கோள்.

கவ்வை - இடைக்குறை. கவ்வையே வினா.

அடியார்க்கு எளியனாதல் பற்றிக் கையாகு அத்தம் என்றாள். ஏகாரம் அசைநிலை.

இது பாட்டுடைத் தலைமகனையே கிளவித்தலை மகனாகக் கொண்ட தூதிடையாடற்றுறை.

## இரண்டாவது பொருள்:

ஈற்றில் தணித்திலக வையே என்பதற்குத் தணிகைக்குத் திலகம் போன்ற முருகக் கடவுளுக்குத் தந்தையாகிய சிவபிரானே எனப் பொருள் கூறி ஏனையவும் இணங்க உரைத்துச் சிவபிரான் பாட்டாகக் கொள்க.

*கந்தனை யத்தனை யந்தரங் கத்தலங் கண்டனமே.*
*கந்தனை யத்தனை யந்தரங் கத்தலங் கண்டனமே.*
*கந்தனை யத்தனை யந்தரங் கத்தலங் கண்டனமே.*
*கந்தனை யத்தனை யந்தரங் கத்தலங் கண்டனமே.*

இதுவும் இருபொருள் உடைத்து.

முதற் பொருட்குச் சொல்வகை.

1. கந்தன் அயத்தன் நயந்து அரங்கத்து அலங்கு அண்டன் அம் மேகம்

2. தன் ஐ அத்தனை அந்தரங்கத்து அல் அம் கண்டன் அம் மே.

3. கந்து அன்னை அத்தனை அம் தரங்கம் தலம் கண்டனம் ஏகு.

4. அந்தம் கை அத்தனை அந்தம் அங்கத்து அலம் கண்டனமே.

கந்து - பற்றுக் கோடு - தரங்கத்தலம் - சீரலைவாய்

***அ-ள்***

அண்டனுக்கும் மேகத் தின் - ஐயனுக்கும் அத்தன் என்க. கண்டனதுகந்து என்க. நை-துன்பம். அந்தர் அங்கம் - சூக்குமகாரண சரீரங்கள்.

***ப - ரை***

கந்தன் அயத்தன் - கந்தனும் ஆட்டுவாகனமுடையானும் நயந்து அரங்கத்து அலங்கு அண்டன் - விரும்பித்

திருவரங்கத்து விளங்கும் தேவனுக்கும், அம் மேகம் தன் ஐ - நீரையுடைய மேகவாகனத்திற் பொருந்திய இந்திரனுக்கும்

அத்தனை - தலைவனும்

அந்தரங்கத்து - அடியாரது மனத்தின் கண் விளங்கும்

அல் அம் கண்டன் - இருள்போலும் அழகிய கண்டத்தையுடைய சிவபிரானது, அம் மே கந்து - அழகு மேவிய பற்றுக் கோடாயவனும், அன்னை அத்தனை- தாய் தந்தையாயவனும் ஆகிய முருகக் கடவுளை, அம் தரங்கத் தலம் கண்டனம் - அழகிய அலை வீசப் பெற்ற திருச்செந்திற் பதியிற் றரிசித்தோம் ஆதலால்.

ஏகு அந்தம் - உடலைவிட்டு உயிர் நீங்கும் முடிவு காலத்தில் நை அத்தனை- ( தூல சரீரத்தின் கண் உளவாகும்) துன்பம் அவ்வளவும், அந்தர் அங்கத்து அலம் - உள்ளிடத்தனவாகிய சூக்கும காரண சரீரத்துன்பம் அவ்வளவும். கண்டனமே - கண்டிக்கப் படுவனவேயாம் எ - று

**வி - ரை**

அயத்தன், 'ஐயத்தன்' எனவும், நயந்து, 'நையந்து ' எனவும் மயங்கின. தன் - சாரியை. மேவு - கடைக்குறை , அன்னை- இடைக்குறை . நை - முதனிலைத் தொழிற்பெயர். பின்னர், 'அந்தர்' என வருவதால் முன்னர்த் தூல தேகம் என வருவித்து உரைக்கப்பட்டது. அத்தனையும் என்னும் முற்றும்மை விகாரத்தால் தொக்கது.

## இரண்டாவது பொருள்.

இரண்டாவது அடியில் அம் தரங்கம் எனவும், மூன்றாவது அடியில் அ தரங்கம் எனவும் பிரித்துக் கொள்க. ஏனைய முன்போலக் கொள்க.

கந்தனும் அத்தனும் ஆகிய முருகனுக்கும் நயந்து அரங்கத்து அலங்கு அண்டனுக்கும் அம் மேகத்தின் தலைவனுக்கும் , அத்தனும் அழகிய கடல் போலும் இருள்போலும் கரிய அழகிய கண்டனும் அம் மேவு கந்து

அன்னையும் அத்தனுமாகிய சிவபிரானை அந்தரங்கமாகிய தலத்தின் கண்ணே தரிசித்தோம் ஆதலின் நை அத்தனையும் அலமத்தனையும் கண்டனமாம் என உரைத்துச் சிவபிரான் பாட்டாகக் கொள்க.

தரங்கம் - ஆகுபெயர்.

3) *கந்தா வலவனம் பாரங் கதமரு கத்தனையே*
*கந்தா வலவனம் பாரங் கதமரு கத்தனையே*
*கந்தா வலவனம் பாரங் கதமரு கத்தனையே*
*கந்தா வலவனம் பாரங் கதமரு கத்தனையே*

இதுவும் இரு பொருட்டு.

*மு.சொ. கை*

1. கந்து ஆவல அன்னம் பார் அங்கு அதமர் உகத்தல் நை ஏ

2. கந்தா வல்லவ நம் பாரங்கத மருகு அத்தன் ஐயே

3. கந்தா வலவன் அம்பு ஆர் அங்க தமருகத்தன் ஐ ஏ கம்

4. தாவு அலவன் அம்பு ஆர் அங்கதம் மருவுகத்தன் ஐயே.

மருகு அத்தன் - விளி. கத்தனுக்கு ஐயே என்க.

*ப - ரை.*

கந்து ஆவல - பற்றுக் கோடாகிய அன்பினையுடைய

அன்னம் பார் - அன்ன மனையாளைப் பார்த்தருள்க

அங்கு அதமர் உகத்தல் நை - அங்குக் கீழ்மக்கள் பலரும் அலர் தூற்றிக் களித்தலைக் கெடுத்தருள்க

கந்தா வல்லவ - கந்தனே வல்லவனே

நம் பாரங்கத - எமது கல்விக் கரை கண்ட கடவுளே

மருகு அத்தன் ஐயே - எம் ஊர்க்கு மருகனே பிதாவே அழகனே

கந்தா வலவன் அம்பு ஆர் - அழிவில்லாத திருமாலாகிய அம்பைப் பொருந்திய

அங்க தமருகத்தன் ஐ ஏ கம் - அங்கத்தையுடைய துடியுடையானும் கடவுளும் ஏகனும்

தாவு அலவன் அம்பு ஆர் அங்கதம் மருவு கத்தன் - தாவுகின்ற சந்திரனும் கங்கை நீரும் ஆத்திமாலையும் பாம்பும் பொருந்திய கர்த்தனுமாகிய சிவனுக்கு ஐயே - குருவே எ - று.

### வி - ரை

ஆவல - குறிப்புப் பெயரெச்சம். அன்னம் ; வல்லவ - இடைக்குறை. மருவு - கடைக்குறை. ஏகாரம் - அசை.

இது பாங்கி தலைவனுக்கு அலர் அறிவுறுத்து வரைவு கடாதல்.

தன் தலைவியை மணத்தல் கருதி மருகென்றும் , தான் அவரை இரத்தல்பற்றி அத்தன் என்றும் , வடிவு பற்றி அழகன் என்றும் கூறினாள்.

## இரண்டாவது பொருள்

### பதப்பிரிவு .

முதலடி ஈற்றேகாரத்தொடு இரண்டாவதடி முதற்கணுள்ள கம் என்பது கூட்டி ஏகாமனவும், தாவல்லவன் எனவும், இரண்டாவதடி ஈற்றில் அத்தனையே எனவும், மூன்றாவதடியில் தமருகத்தனையே எனவும், ஈற்றடியில் கம் தா அலவன் எனவும் ஏனைய முன்போலவும் பிரித்துக் கொள்க.

### உரை

"கந்து ஆவல அன்னம்பார் அங்கு அதமர் உகத்தல் நை ஏ கமே எல்லாம் கடந்த வல்லவனே நம்பாரங்கதனே எம்மூர் மருகனே அத்தனே கந்தா வலவனை அம்பாகவுடைய அங்கமுடையானே தமருகத்தனே பிரம கபாலமும் வலிய அலவனும் அம்பும் ஆகும் அங்கதமும் மருவு கத்தனே ஐயே" என உரைத்துச் சிவபிரான் பாட்டாகக் கொள்க. தாஒன்று தொழிற்பெயர். ஒன்று வலி. "வான வரம்பனை நீயோ பெரும" என்னும் புறப்பாட்டிற்போல அத்தனையே தமருகத்தனையே என்னும் இரண்டும் முன்னிலைக்கண் வந்தன. கம் - தலை.

4. *கங்கையி லாயவை யானனத் தானஞ்சக் கண்டனையே*
*கங்கையி லாயவை யானனத் தானஞ்சக் கண்டனையே*
*கங்கையி லாயவை யானனத் தானஞ்சக் கண்டனையே*
*கங்கையி லாயவை யானனத் தானஞ்சக் கண்டனையே*

## இதுவும் அது

## முதற் சொல் வகை

1. கங்கை இல் ஆய ஐ யானம் நத்து ஆன் நஞ்சம் கண்டன் ஐ ஏ

2. கம் கயிலாயம் ஐ யானைத்தான் அஞ்சக்கு அண்டன் நை ஏகம்

3. கை இல் ஆய் அவையான் நல் நத்தான் அம்சக்கு அண்டன் ஐ ஏகு

4. அங்கு அயில் ஆய வை யான் அன்னத்தான் அஞ்ச கண் தன்னை ஏ

*அ - ள்*

அஞ்சத்துக்கு அண்டனை வருந்திய ஏகன் என்க.

கை இல் ஆய் - வெறுத்தல் இல்லாத தாய் போல்வான்

அண்டன் - அண்டுதல் உடையான். யான் அயில் ஆயக்கண்ணை வையெனக் கூட்டுக.

*ப - ரை*

கங்கை இல் ஆய ஐ - கங்கையை இல்லாளாகக் கொண்ட கடவுளும்.

யானம் நத்து ஆன் - வாகனமாக விரும்பிய இடத்தையுடைய.

நஞ்சக் கண்டன் ஐ - நஞ்சணிந்த கண்டத்தையுடைய அழகனும்.

கம் கயிலாய ஐயான்னத் தான் - நீர்வளமுள்ள திருக்கயிலாயத்து விளங்கும் ஐந்து திருமுகங்களையுடையானும்.

அஞ்சக்கு அண்டன் நை ஏகம்- அன்ன வாகனத்துக்குரிய தேவனாகிய பிரமனை வருத்திய ஏகனும். கை இல் ஆய் -

வெறுத்தலில்லாத தாய் போல்வானும். அவையான் - தமிழ்ச்சங்கம் உடையானும் நல்நத்தான் - நல்ல சங்கம் ஏந்திய திருமாலினது. அம்சக்கு அண்டன் - அழகிய கண்ணாகிய (செந்தாமரை மலரைத் திருவடியிற்) பொருந்தியவனும் ஆகிய சிவபிரானுக்கு

ஐ - குருவே

ஏகு அங்கு - ( உடலைவிட்டு உயிர்) நீங்கும் அவ்விடத்து

(அயில் ஆய வை யான்) யான் அயில் ஆயவை - அடியேன் நினது வேலாயுதத்தைச் சிந்திக்குமாறு என்மேல் வைத்தருள்க. அன்னத்தான் அஞ்சக்கண் தன்னை - அன்ன வாகனத்தையுடைய பிரமதேவன் (என்னைப் பிறப்பிக்க) அஞ்சும் வண்ணம் கடைக்கண் நோக்கத்தை எ - று.

### வி-ரை

அயிலை யாயவும் அன்னத்தான் அஞ்சவும் கண்ணை என் மேல் வை எனக் கூட்டுக. அஞ்சத்துக்கு என்பதன் சாரியையும் அண்டன் என்பதன் உருபும் விகாரத்தாற் றொக்கன. கயிலாயம் கையிலாயம் என மயங்கிற்று. அன்னத்தான் இடைக்குறை. தன் சாரியை.

### இரண்டாவது சொ - கை.

முதலடியில் கம் கையில் ஆய ஐ யாநல் நத்து ஆன் நஞ்சக் கண்ட நை ஏகு எனவும், இரண்டாவது அடியில் அம் கயிலாயம் எனவும், அண்டன் ஐ ஏகம் எனவும், மூன்றாவதடியில் கை இல்லாய் அவையான் அம் நத்தான் சக்கு அண்டு அன்னை யே எனவும் ஈற்றடியில் கங்கையில் ஆய வை எனவும் ஏனைய முன்போலவும் கொள்க.

### பொ - ரை

பிரம கபாலத்தைக் கையில் ஏந்திய ஐயனே நல்ல விரும்பிய ஆனையுடைய நஞ்சக் கண்டனே துன்பம் நீங்கற்குக் காரணமாகிய அழகிய கயிலாயத்தையுடைய

ஐயாணனத்தானே அஞ்சத்துக்கு அண்டனாகிய, பிரமனுக்குத் தலைவனே ஏகனே வெறுப்பில்லாதவனே அவையானே சக்கு அண்டுதலுடைய அன்னை போல்வானே, யான் கங்கையைப் போலத் தூய்மையுடையேனாகி நின்னை ஆராயுமாறும் அன்னத்தான் அஞ்சுமாறும் கண்ணை என்மேல் வைத்தருள்க என உரைத்துச் சிவபிரான் பாட்டாகக் கொள்க.

5. *கனவால வாயனங் கைய மலையலங் காரத்தனே*
*கனவால வாயனங் கைய மலையலங் காரத்தனே*
*கனவால வாயனங் கைய மலையலங் காரத்தனே*
*கனவால வாயனங் கைய மலையலங் காரத்தனே*

இதுவும் அது,

*முழுப்பொருளுக்குச் சொ - ளை .*

*கனவால் ஆவாய நங்கை அமலை அலம் கார்*
*அத்தனே, கன வால ஆயனம் கையம் அலையல்*
*அங்கு ஆர் அத்நமன*
*கன வால நம் கைய மலை அலைக்கு ஆரத்தனே*
*கன ஆலவாயன் அம் கை அமலை அலங்காரத்தனே.*

*அ - ள்*

நங்கை - நங்கைக்கு. அமலை - சோறு. ஆர் - ஆர்க. கைய பெயரெச்சம். ஆலவாயனுக்கு எனவும் ஆலவாயனே எனவும் கொள்க.

*ப - ரை.*

கனவால் அவாய நங்கை - கனவிற் கண்ட தோற்றத்தால் உன்னையே விரும்பிய தலைவிக்கு

அமலை அலம் - யாம் ஊட்டும் உணவுந் துன்பஞ் செய்கின்றது. கார் அத்தனே - மேகம் போலும் ஈகையுடைய கரத்தானே

கன வால - மேன்மை பொருந்திய தூயனே.

(ஆயனங்கையம் அலையில்) அலையில் ஆயனம் கையம் - தூதாக அலைதலை வரும் காலஞ் செல்லினும் வெறுத்து

விடேம் ஆதலால் அங்கு ஆர் - (அவனை அளித்தற்கு) அவ்விடத்தே பொருந்துக அத்தனே - தலைவனே.

கனவாலவாய - கனவிய வைடூரியம் அணிந்தவனே, நம் கைய மலை அலங்கு ஆரத்தனே - நமது இடம் அகன்ற மலைகளில் விளங்கும் மாலை அணிந்தவனே, கன ஆலவாயன் - மழை வளம் பொருந்திய மதுரைப் பதியையுடைய சிவபிரானுக்கும்

அம் கை அமலை - ( அறம் வளர்ந்த) அழகிய கைகளையுடைய உமையம்மைக்கும்

அலங்காரத்தனே - அழகு செய்யும் புதல்வனே எ-று.

**வி - ரை.**

நங்கை ஆலவாயன் அமலை இச்சொற்களில் நான்காவதும் அமலையும் என்பதில் தென்றல் முதலியவே அன்றி உயிர் நிற்றறற்கு ஒரு தலையான் வேண்டப்படும் உணவும் இடர் செய்கின்றதென எச்சமும் உயர்வு சிறப்பும் கருதிய உம்மையும் விகாரத்தால் தொக்கன. கனம் - ஆகு பெயர்.

இது பாங்கி தலைவனுக்குத் தலைவியின் கனவு நலிவுரைத்தது.

## இரண்டாவது பொருள்:

மூன்றாவது அடிக்குக் கனவிய வைடூரியம் போன்ற வெண்ணிறமுடைய நமது இடமகன்ற கயிலை மலையில் வீற்றிருக்கின்ற ஆத்தி மாலையையுடையானே எனவும், ஈற்றடிக்குக் கன ஆலவாயனே எனவும் ஏனைய முன் போலவும் உரைத்துச் சிவபிரான் பாட்டாகக் கொள்க.

ஆரம் என்பதன்கண் அம் சாரியை.

6. *காமர சம்பர தந்தா வளவருக் கத்தனையே*
*காமர சம்பர தந்தா வளவருக் கத்தனையே*
*காமர சம்பர தந்தா வளவருக் கத்தனையே*
*காமர சம்பர தந்தா வளவருக் கத்தனையே*

இதுவும் அது

மு. சொ. கை.

*காமர சம் பரதம் தா வளம் வருக்கத்த நை ஏ காம்*
*அரசு அம்பர தந்து ஆ அளவருக்கு அத்தன் ஐ ஏக*
*அமர சம்பு அரதம் தாவளம் அருக்கத்தன் ஐ ஏ*
*காமர சம்பர தந்தா வளவருக்கு அத்தன் ஐயே.*

**அ - ள்**

நை ஏகாம் - நைதலில் ஏகாம். அரதம் - அரதனம்

*ப - ரை.*

காமர சம்பரதம் தா - ( நின் புகழ் பாடி ஆடற் பொருட்டுக்) கீதத்தோடு பொருந்திய இனிய பரத நூலை அளித்தருள்க.

வளவருகத்த - வளத்தின் வருக்கங்கள் எல்லாம் உடையானே.

நை ஏகாம் - (அங்ஙனம் அளிப்பின் இக்காலத்து இசைத் தமிழும் நாடகத் தமிழும் இல்லை என்னும்) வருத்தத்தின் கட் செல்லோம்.

அரசு - அரசனே

அம்பர - ஆகாய வடிவானவனே

தந்து ஆ அனவருக்கு அத்தன் - நூலாகிய அளவையை உடையாருக்கு அந்தந்த நூலது பொருளாயவனும்

ஐ - அழகனும்

ஏக அமர சம்பு - ஏகனும் தேவனும் சம்புவும்

அரதம் - இரத்தினம் போல்வானும்

தாவள அருக்கத்தன் - வெள்ளெருக்கு மாலையையுடையானும்

ஐ - கடவுளும்

காமர சம்பர தந்த வளவருக்கு அத்தன் - அழகிய சரபமாகிய வீரபத்திரருக்கும் யானை முகத்தையுடைய விநாயகருக்கும்

ஐயே - குருவே எ -று.

*வி-ரை.*

ம்ரசம்பு - வடமொழி முடிபு. சம்பு என்னும் வடமொழியில் முற்றுகரக்கேடு இலேசாற் கொள்க. "***இங்குளி வாங்கலம்***" *என்றார் பிறரும்.*

தவளம் தாவளம் என நீண்டது. அரதனம் அரதம் என இடைக் குறைந்தது. அம்பர என்பதை இருசொல்லாகப் பிரித்து அழகிய பரனே என உரைத்தலும் பொருந்தும்.

### இரண்டாவது சொ - கை.

இரண்டாவது அடியீற்றில் அத்தனை எனவும், மூன்றாவது அடியீற்றில் அருக்கத்து அன்னையே எனவும் ஏனைய முன்போலவும் கொள்க.

### பொ - ரை.

காமரசம் பரதத்தைத் தாவள வருக்கத்தனே நைதலின் கண் ஏகாம் அரசனே அம்பரனே நூலளவையுடையாருக்கு அவரது ஆராய்ச்சி அளவே ஆகின்ற ஏகனே அமரனே சம்புவே அரதனமே தவள அருக்கத்த அன்னையே காமரசம் பரதந்த வளவருக்கு அத்தனே ஐயே என உரைத்துச் சிவபிரான் பாட்டாகக் கொள்க.

ஈண்டு அத்தனை என்பது அவ்வளவு என்னும் பொருட்டு.

7. *கந்தா விலங்கற் றவராக வன்பாற் கவினத்தனே*
*கந்தா விலங்கற் றவராக வன்பாற் கவினத்தனே*
*கந்தா விலங்கற் றவராக வன்பாற் கவினத்தனே*
*கந்தா விலங்கற் றவராக வன்பாற் கவினத்தனே.*

இ து.

### முதற்பொருட் சொ - கை.

*கந்தா இலங்கல் தவர் ஆக அன்பால் கவி நத்து அனேகம்*
*தா இலம் கற்றவ ராகவன் பார்க்கவி நத்தன் ஏகு*
*அம் தா விலங்கு அற்ற வராக வன் பால் கவி நத்தன் ஏ*
*கந்து ஆ விலங்கல் த வர் ஆகவன்பால் கவின் அத்தனே.*

அ - ள்.

தவர் - தவமுடையார் கவி - கவி மாலை. தா - குற்றம்

பார்க்கவி நத்தன் - பார்க்கவியையுடைய நத்தன். வன்பாற் கவி நத்தன் - குறிஞ்சிக்கட் குரக்குச் சேனைக்கு ஆக்கஞ் செய்தோன். ஏ-அம்பு.

ப் - ரை.

கந்தா - கந்தனே

இலங்கல் தவர் ஆக - (யாம்) விளங்குதலுடைய தவமுடையேம் ஆகும் வண்ணம்

அன்பால் கவி நத்து - கருணையால் எமது கவி மாலையை விரும்பி ஏற்றருள்க

அனேகம் தா இலம் - (அதனால்) பலவாகிய குற்றங்களும் இல்லேமாவேம்

கற்றவ - முழுதுணர் புலவனே

ர்ாகவன் பார்க்கவி நத்தன் - ராகவனும் இலக்குமியையுடைய சங்கமேந்தியும்

ஏகு அம் தா விலங்கு அற்ற வராகம் - (திருவடி தேடிச்) சென்ற அழகிய வலியமைந்த விலங்கின் தன்மையற்ற வராக உருக்கொண்டவனும்

வன்பால் கவி நத்தன் ஏ - குறிஞ்சி நிலத்து வசித்த குரங்குகளுக்கு ஆக்கத்தைச் செய்தவனும் ஆகிய திருமால் என்ற பாணத்தையும்

கந்து ஆ - யாவருக்கும் பற்றுக் கோடாகிய, விலங்கல்' தவர்- மேருமலையாகிய வில்லையும் உடைய, ஆசுவன் பால் கவின் அத்தனே - போரையுடைய சிவபிரானிடத்து விளங்கும் அத்தனே எ -று

வி - ரை.

இலங்கற்றவ ரென்பது தன்மையில் வந்த படர்க்கை வழுவமைதி. பார்க்கவி என்னும் வடமொழி , தமிழ்ச் சிறப்பெழுத்தால் திரிந்து நின்றது. சாருவ தீர்த்தம் 'சாறுவ

தீர்த்தம்' எனவும், பவளம் 'பவழம்' எனவும் முறையே கம்பரந்தாதியிலும் , விநாயக புராணத்திலும் வந்தமை காண்க.

விலங்கு ஆகுபெயர். வன்பால் வலிமையால் எனவும் கந்து ஆ எனற்குப் பற்றுக் கோடாகிய இடபம் எனவும் உரைப்பினும் அமையும். சிந்தாமணியில் 'ராசமா புரி ' என வந்தாற் போல ஈண்டும் 'ராகவன்' எனத் தமிழ் விதி பெறாது வந்தது.

### இரண்டாவது சொ - கை

ஈற்றடியில் கம் தா எனவும் ஆகவன் எனவும் பால் எனவும் கொள்க.முதற்கணுள்ள கந்தா என்பதைக் கந்தாத என்னும் பெயரெச்சம் ஆக்குக .

### பொ - ரை.

கம் தா எனற்கு ஆகாயத்தைக் கடந்த எனவும், பால் கவின் என்பதற்குப் பகுதிப்பட்ட அழகு எனவும், ஏனைய முன் போலவும் உரைத்து அழியாத தவத்தினராக எமது கவியை நத்து தா இலம் கற்றவ நத்தனாகிய எவையும் ஆகாயத்தைக் கடந்த பேருருவாகிய வில்லையும் உடைய ஆகவனே, பல பகுதியாகச் சொல்லப்பட்ட அழகுடைய அத்தனே என முடித்துச் சிவபிரான் பாட்டாகக் கொள்க.

8. *வியவா மனித்தற் பரவா முருகா விதந்தனமே*
*வியவா மனித்தற் பரவா முருகா விதந்தனமே*
*வியவா மனித்தற் பரவா முருகா விதந்தனமே*
*வியவா மனித்தற் பரவா முருகா விதந்தனமே.*

இ - து.

### சொ - கை

*வியவா மனித்தன் பரவாம் உருகு ஆவி தந்தனம்*
*மேவிய வா மன்னித்து அற்பர் அவாம் உரு காவி*
*தந்து அன்னம்*
*மேவி அவாம் அல் நித்தல் பரவா முருகா இதம்*
*தனமே*
*வியவா மன்னி தற்பர வாமுருகா விதந்தனமே.*

*அ - ள்.*

மேவியவா - மேவிய வாறென். முருகா இதம் - முருகாத இதம். ஈற்றில் முருகு ஆவி தந்தனம் எனவும் கொள்க. ஆ - ஆக. மேவி - மேவிய பெண்கள்.

*ப - ரை.*

வியவா மனித்தற் பரவாம் - நின்னைத் துதியாத மனிதனைப் பரவேம்.

உருகு ஆவி தந்தனம் - மனமுருகு கின்ற எம்முயிரை நினக்குத் தந்தேம்

(மேவியவா மன்னித்து) மன்னித்து மேவியவா - எம்பிழையை மன்னித்து எம்மை நீ விரும்பியவாறு என்னையோ.

அற்பர் அவாம் - அற்பராயினார் விரும்புகின்ற

உரு காவி தந்து அன்னம் மேவி அவாம் - நிறமுடைய குவளைமலர் போன்ற கண்ணையும் நூல்போன்ற இடையையும் அன்னம்போன்ற நடையையும் மேவிய பெண்களை விரும்புகின்ற.

அல் நித்தம் பரவா - அஞ்ஞான இருள் எக்காலத்தும் பரவாத.

முருகா இதமே - அழியாத நன்மையே தனம் - எமக்குச் செல்வமாவது

(மன்னித்தற்பரவா) தற் பர மன்னி வா - தற்பரனே எம்மைப் பொருந்தி எம் முன் வருக.

முருகா விதந் தந்தனமே - முருகனே நின்னையே துதித்தேம் எ -று.

*வி - ரை.*

மேவி - பெயர். வியவா, பரவா முருகா என்பன ஈறுகெட்ட பெயரெச்சம் . முருங்கா என்பது இடைக் குறைந்து நின்றது. தனமே என்பதன் ஏகாரம் பிரித்துக் கூட்டப்பட்டது. முருகு ஆவிதந்தனம் எனற்கு எமக்கு அழகுளவாதற் பொருட்டு விதந்தனம் எனவும் ஏனைய முன்போலவும் உரைத்துத் தெய்வப் பொதுப்பாட்டாகக் கொள்க.

10. *நயனத் திலம்போ தரன்பின்னை யாவென்று நந்தனமே*
*நயனத் திலம்போ தரன்பின்னை யாவென்று நந்தனமே*
*நயனத் திலம்போ தரன்பின்னை யாவென்று நந்தனமே*
*நயனத் திலம்போ தரன்பின்னை யாவென்று நந்தனமே*

இஃது இருபொருளுடைத்து.

*மு - சொ - கை.*

நயனத்தில் அம்பு ஒது அரன் பின் நையா வென் துன் அம் தனம் மேனை, அன்னத்து இல் அம்போதரன் பின்னை ஆ என்று நந்தன் மேல்

நையல் நத்து இல் அம் போதர் அன்பின் ஐயா என்றும் நம் தனமே

நயன் அத்து லம்போதரன் பின் ஐயா என்று நந்து அன்னமே.

*அ - ள்*

பின் - பின்னல் வென் - வென்றி மேனை அன்னம் - மேனையின் புதல்வி பின்னை ஆ - பின்னைப் பிராட்டியையுடைய இடபம். என்று - ஞாயிறு . பின் - பின்னோன். அன்னமே நயனத்தில் அம்பு ஒது என்க.

*ப - ரை*

அரன் - அரனும்

பின் நையா வென் துன் - (இடப்பாகந்) தழுவிய அழியாத வென்றி பொருந்திய.

அம் தனம் மேனை அன்னத்து இல் - அழகிய தனங்களையுடைய மேனாதேவி பெற்ற அன்னம் போன்ற பார்வதியை இல்லக் கிழத்தியாகவுடைய

அம்போதரன் - மேகம் போலும் ஈகையுடையானும்.

பின்னை ஆ என்று - நப்பின்னைப் பிராட்டியையுடைய மாலாகிய ஆவினையுடைய ஞான சூரியனுமாகிய சிவபிரானுக்கு.

நந்தன் - புதல்வனே

மேல் நையல் நத்து இல் - மேன்மை பொருந்திய வருந்தலும் விரும்புதலும் இல்லாத .

அம்போதர் அன்பின் ஐயா - அழகிய அறிஞரால் அன்பு செய்யப் பெற்ற அழகனே

என்னும் நம் தனமே - எக்காலத்தும் எமது செல்வமாயுள்ளவனே.

நயன் அத்திலம் போதரன்பின் - நன்மை செய்யும் யானை முகத்தனாகிய இலம்போதரனுக்குத் தம்பியே

ஐயா என்று - ஐயனே என்று இவ்வாறு வாழ்த்தி,

நந்து அன்னமே- ஆக்கத்தையுடைய அன்னப்பறவையே. நயனத்தில் அம்பு ஓது - வரவு நோக்கிய முதலால் என் கண்ணில் இருந்து வடிகின்ற நீரைக் குறித்து அவனிடத்திற் சொல்லுக எ - று.

### *வி - ரை.*

இது தலைவி அன்னத்தைத் தூது செல்ல வேண்டுதல்.

### *இரண்டாவது சொ -கை.*

இரண்டாவது அடியீற்றில் நந்து அன்னமேல் எனவும் ஏனைய முன் போலவும் கொள்க.

### *பொ - ரை.*

அரனே, அன்னம் போன்ற இல்லாளையுடைய அம்போதரமாகிய மேகத்தைத் தலையிற் கொண்டோனே, பின்னைப் பிராட்டிக்கு நாயனாகிய ஆவினை வாகனமாகக் கொண்ட என்றே, சுட்டாலும் வெண்மைதரும் சங்கினை ஒத்த மேன்மை பொருந்திய நையலும் நத்தலும் இல்லாத அழகிய போதரது அன்பினையுடைய அழகனே என்றும், நமது தனமாயவனே, இலம் போதரனுக்கும் அவன்பின்னோன் ஆகிய முருகனுக்கும் பிதாவே என்றும் இவ்வாறு தெரிந்த அளவினால் துதித்து அன்னமே நயனத்தில் அம்பு ஓது என உரைத்தும்ச் சிவபிரான் பாட்டாகக் கொள்க.

11. *நங்காயா வன்ன விலங்கைக் கரியான னத்தனையே*
*நங்காயா வன்ன விலங்கைக் கரியான னத்தனையே*

*நங்காயா வன்ன விலங்கைக் கரியான னத்தனையே*
*நங்காயா வன்ன விலங்கைக் கரியான னத்தனையே*

இது நான்கு பொருளடைத்து

*முதற் பொருட் சொ - கை.*

*நங்காய் யாவன் நவில் அங்கைக்கு அரியான் அல்*
*நத்தம் நையேன்*
*ஆங்கு ஆய் ஆவன் இலங்கு ஐ கரியானம் நத்து*
*அன்னை*
*ஏனம் காயா வன்னம் இலங்கைக்கு அரியான் நத்தன்*
*ஐ ஏம்*
*நம் காயா அன்ன வில் அம் கை கரியான்*
*அன்னத்தான் ஐயே.*

*அ - ள்.*

அன்னை போலும் ஐயனோ என்க. காயா - காய்ந்து . வில் - ஒளி

கை - ஒழுக்கம்

*ப - ரை.*

நங்காய் - நங்கையே

(யாவன் நவில் அங்கைக்கு அரியான் ) அங்கைக்கு அரியான் யாவன் நவில் - எதிர் நின்றும் கைக்கு எட்டாது அரியனாய் அகல் வான் யாவன் சொல்லுக.

(அல் நத்தம் நையேன் அங்கு ஆய் ஆவன்) அங்கு ஆவன் ஆய் அல் நத்தம் நையேன் - அவ்விடத்தில் ஆவன ஆராய்க. ஆராயின் இருண்ட இவ்விரவில் யான் வருந்தேன்.

இலங்கு ஐ - விளங்குகின்ற அழகினையுடைய.

கரியானம் நத்து அன்னை - யானையாகிய வாகனத்தை விரும்பிய தாய் போல்வானும்.

ஏனம் - வராக மூர்த்தியும்.

காயா வன்ன இலங்கைக்கு அரியான நத்தன் - கோபித்து அழகிய இலங்கையில் உள்ளார்க்கும் பகையாகிய சங்கம் ஏந்தியும்

ஐ ஏம் நம் காயா அன்ன - அழகிய இனிய நமது காயாம் பூவை ஒத்த

வில் அம் கைக் கரியான் - ஒளி பொருந்திய அழகிய ஒழுக்கமுடைய கரிய நிறமுடையானுமாகிய விண்டுவுக்கும்.

அன்னத்தன் - பிரமனுக்கும்.

ஐயே - தலைவனுமாகிய முருகக் கடவுளோ ? எ -று.

***வி - ரை.***

யாவன்னவில், ஆவன்ன என்பவற்றில் னகரம் விரித்தல் அன்னையாகிய ஐயே எனக் கூட்டுக. ஐயே வினா. இது காமத்தால் உருவெளித் தோற்றம் கண்டு வருந்திய தலைமகள் தோழியொடு புலம்பல்.

***இரண்டாவது சொ - கை.***

இரண்டாவது அடியீற்றில் கரி ஆனைத்தன் ஐ எனவும், ஏனைய முன்போலவும் கொள்க.

***பொ - ரை.***

கரியானனத்தையுடைய கணபதிக்குத் தந்தையும் கரியானுக்கும் அன்னத்தனுக்கும் தலைவனுமாகிய கடவுளே என உரைத்துச் சிவபிரான் பாட்டாகக் கொள்க.

***மூன்றாவது சொ - கை.***

இரண்டாவது அடியில் கரி ஆனைத்து அன்னை எனப்பிரித்து ஏனைய முன்போலக் கொள்க.

***பொ - ரை.***

யானை முகத்தையுடைய அன்னை போல்வானும் கரியானுக்கும் அன்னத்தனுக்கும் தலைவனுமாகிய கணபதியோ, என உரைத்து விநாயக மூர்த்தி பாட்டாகக் கொள்க.

### நான்காவது சொ - கை.

இரண்டாவது அடியில் கரியான் அம் நத்து அன்னை எனக் கொள்க.

### பொ - ரை.

சாட்சியாயுள்ளவனும் அழகிய விரும்பிய அன்னையும் ஏனமும் நத்தனும் கரியானும் அன்னத்தனுக்குப் பிதாவுமாகிய கடவுளோ, என உரைத்துத் திருமால் பாட்டாகக் கொள்க.

12. *நம்பன க்காசன மாவஞ்சி காவல னம்பரமே*
*நம்பன காசன மாவஞ்சி காவல னம்பரமே*
*நம்பன காசன மாவஞ்சி காவல னம்பரமே*
*நம்பன காசன மாவஞ்சி காவல னம்பரமே.*

இஃது இருபொருளுடைத்து.

### முதற்பொருள் சொ - கை.

*நம்பு அனகாசனம் மா வஞ்சி கா வல்லன் அம்பரம்மே*
*நம்பன் நகு ஆசனம் மா வஞ்சி காவலன் அம் பரம் ஏனம்*
*பன்ன காசனம் மா அஞ்சி காவு அலன் அம்பரமே*
*நம்பன்னக அசனம் ஆ அம் சிகாவல நம் பரமே*

### அ - ள்.

சனம் - இனம். வஞ்சி - வஞ்சிப்போன். கா - கற்பகவனம்.

பரம் - கவசம். பன்ன - பெயரெச்சம். காசனமா - தாருகன்.

அஞ்சி - அஞ்சப்படுவோன். காவு அலன் - சுமக்கின்ற துன்பம்

### ப - ரை.

நம்பு அனகா - (அடியார்) விரும்பும் அனகனே

சனமா வஞ்சி கா வல்லன - இனமாகிய யாகக் குதிரைகளை வஞ்சிப்பவனும் , கற்பகவனத்தையுடைய வல்லவனும் ஆகிய இந்திரனுக்கும்

அம்பரம் மே நம்பன் - சிதம்பரத்தின்கண் மேவிய நம்பனும்,

நகு ஆசன மாவஞ்சி காவலன் - விளங்குகின்ற ஆசனத்தை மாமரத்து அடியாகக் கொண்ட வஞ்சிக் கொடி அனையாளுக்குக் காவலனுமாகிய சிவனுக்கும்,

அம்பரம் - அழகிய கவசம் போல்வானே

ஏனம் - திருமாலாகிய பன்றியும்

பன்ன காசனம் மா - ஆராய்தலையுடைய கொலைத் தொழிலைக் கொண்ட (தாருகனாகிய) யானையும்,

அஞ்சி - அஞ்சிய ஆண்மையுடையானே,

காவு அலன் அம்பரமே - (யாம்) சுமக்கின்ற துன்பம் (கடல்போல்வது) அதனைத் தீர்த்தருள்க.

நம் பன்னக அசனம் ஆ அம் சிகாவல - நமது பாம்பை உண்ணுவதாகிய அழகிய மயில் வாகனமுடையோனே.

நம் பரமே - நமது கடவுளே எ -று.

**வி - ரை.**

பன்ன என்பது முதனிலைத் தொழிற்பெயர் அடியாகப் பிறந்த குறிப்புப் பெயரெச்சம். வஞ்சி அஞ்சி - வினைப்பெயர்.

**இரண்டாவது சொ - கை.**

முதலடி அம்பு அர எனவும் , இரண்டாவது அடி, நம்ப காவல நம்பரம் எனவும் ஈற்றடி சிகாவலன் அம்பரமே எனவும் கொள்க.

**பொ - ரை.**

நம்பு அனகனே இந்திரனுக்குக் கூரிய அம்பு போன்று உதவுகின்ற அரனே நம்பனே வஞ்சி காவலனே நமது பரமே அருச்சுனனைக் கொல்ல வந்த ஏனமும் இருடிகள் ஏவிய யானையும் அஞ்சிய கடவுளே மயில் வாகனமுடைய முருகனுக்குக் கவசம் போல்வானே எனவுரைத்துச் சிவபிரான் பாட்டாகக் கொள்க.

3. *நம்பா வலகண்ட னந்தன னேயந்தா னாகமனே*
*நம்பா வலகண்ட னந்தன னேயந்தா னாகமனே*

நம்பா வலகண்ட னந்தன னேயந்தா னாகமனே
நம்பா வலகண்ட னந்தன னேயந்தா னாகமனே

இதுவும் அது.

முதலாவது சொ - கை.

நம்பு ஆவல் அகண்ட நம் தனனே அந்தா நாகம்
அன்னேன்
அம்பு ஆ அல்ல கண்டம் நந்த நல் நேயம் தான்
ஆக மன்னேன்
அம் பா அல்ல கண்டன் நந்தனனே அம் தான
ஆகமனே
நம் பாவல கண்டு அனந்தன் அன்னே அம் தா
நாகம் மன்னே

அ - ள்.

அம்பாகிய அல்ல கண்டம் என்க. பா - பரந்த. அனந்தன் - அனந்தனே.

ப - ரை.

நம்பு ஆவல் அகண்ட - விரும்புகின்ற அன்பிற்குரிய அகண்டனே. நம் தனனே - எமது செல்வமே.

அந்தா - அந்தத்தில் ஒருவனாய் நிலைபெற்றவனே

நாகம் அன்னேன் - பாம்பை ஒத்த தீயேன் ஆகிய யான்

அம்பு ஆ அல்ல கண்டம் நந்த - அம்பாக நின்று வருந்துந் துன்பங்கள் கெடவும்

நல் நேயம் ஆக - நல்ல அன்பு உண்டாகவும்

மன்னேன் - நின்னைப் பொருந்திலேன் (ஆயினும்)

அம் பா அல்ல கண்டன் நந்தனனே - அழகிய பரந்த இருளையுடைய கண்டனுக்குப் புதல்வனே

அம் தான ஆகமனே - மேகம் போலும் கொடையினையுடைய ஆகம முதல்வனே

நம்பாவல - எமது பாவலனே

கண்டு - என்னை அருளாற் பார்த்து

அனந்தன் அன்னே - அனந்தனே , அன்னை போல்வானே
அம் தா - எல்லா அழகும் அளித்தருள்க.

நாகமன்னே - விண்ணுலகத் தலைவனே எ - று.

**வி - ரை.**

. நாகமன்னையான் நின்னைப் பன்னேன் ஆயினும் என்னை அருளாற் கண்டு தாவெனக் கூட்டுக. தானகமன் - வடமொழி முடிபு. தான் - அசை. அம் - ஆகுபெயராகி மேகத்தை உணர்த்திற்று. நாகமன் - மலைத் தலைவன் எனக் கூறலுமாம். அன்னேன், அல்ல கண்டம் , மன்னேன், அல்ல, அன்னே, மன்னே இவை இடைக் குறைந்தன.

## இரண்டாவது சொல்வகை

மூன்றாவது அடியில் அல்ல கண்ட நந்து அன்னனே எனக் கொள்க.

*பொ- ரை*

அல்ல கண்டனே சங்கினை ஒத்த வெண்ணிற முடையானே எனவும், ஏனைய முன்போலவும் உரைத்துச் சிவபிரான் பாட்டாகக் கொள்க.

14. *நார மடங்கலை யானா யனையா ணவனகவே*
*நார மடங்கலை யானா யனையா ணவனகவே*
*நார மடங்கலை யானா யனையா ணவனகவே*
*நார மடங்கலை யானா யனையா ணவனகவே*

இது மூன்று பொருளுடைத்து.

*முசொ.கை.*

*நாரம் மடங்கு அலை ஆல்நாயனை ஆணம் வல்*
*நகம் ஏம்*
*நார மடங்கலை ஆன் ஆயனை ஆள் நவம் நக வேல்*
*நார் அம் அடங்கல் ஐ ஆனாய் அன்னை ஆணவன்*
*அகவேன்*
*ஆர் அ மடம் கலை யான் ஆய நை யாண அனக ஏ.*

### அ - ள்.

அலை - பாற்கடல். ஆணம் - அன்பு. நாரமடங்கல் - நாரசிங்கன் . நக - நகமுடையானே. நகம் - மலை. அடங்கல் - முழுமை. யாணர் - அழகு. யான் கலையாய மடம் நை என்க.

### ப -ரை.

நாரம் மடங்கு அலை ஆல் நாயனை - நீர்பொருந்திய மடங்குகின்ற அலையையுடைய திருப்பாற் கடலில் ஆலிலையில் யோக நித்திரை செய்யும் நாயகனும்

ஆண வல் நக ஏம் நாரமடங்கலை - (பிரகலாதனிடத்து) அன்பு பொருந்திய வலிய நகங்களின் வலிமையையுடைய நாரசிங்கனும்.

ஆன். ஆயனை ஆன் - பசுக்களை மேய்த்த ஆயனுமாகிய திருமாலை ஆண்டருளிய.

நவ நக - புதுமையுடைய மலைகளை யுடையானே.

வேல் நார் அம் அடங்கல் - வேலையும் கருணையையும் அழகென்று சொல்லப்படுவன எல்லாவற்றையும் உடைய.

ஐ ஆனாய் - தலைவனாய் இருப்பவனே. அன்னை - அன்னை போல்வானே.

ஆணவன் அகவேன் - ஆணவத்தை யுடையேனாய் (நின்னை) அபயமிட்டழையாத என்னுடைய.

ஆர் அ மடம் - நிறைந்த அவ்வறியாமையை. (கலையான் ஆய நை) யான் கலை ஆய நை - யான் எல்லா நூல்களையும் ஆராயும் வண்ணம் நீக்குக.

யாண அனக அழகிய அனகனே எ-று.

### வி - ரை.

ஏமம் யாணர் கடைக்குறைந்தன. வல்நகம் - தொகுத்தல் ஏ- அசை.

### இ. சொ -கை.

இரண்டாவதடியில் ஆள் நவ நகவே எனக் கொள்க.

பொ - ரை.

ஆயனை ஆளுகின்ற புதுமையனே விளங்குமாறு கருணையும் அழகும் அடங்கலுமானவனே எனவும், ஏனைய முன்போலவும் உரைத்து உடனிலைச் சிலேடையாற் சிவன் கணபதி க்ந்தன் இம்மூவர்க்கும் கொள்க.

### மூன்றாவது குறிப்பு.

நாயனை முதலாயவற்றை விளியாக்கித் திருமாலுக்குக் கொள்க.

பொ - ரை.

ஆலிலையில் நித்திரை கொள்ளும் நாயகனே, நாரமடங்கலே, ஆனாயனே, எம்மையாளும் புதுமையனே, நகவே நாரும் அம்மும் அடங்கலுமானாய் அன்னையே அனகனே எனவும் ஏனைய முன் போலவும் உரைத்துத் திருமால் பாட்டாகக் கொள்க.

இப்பொருளில் நாயனை மடங்கலை சூயனை என்பன முன்னிலைக்கண் வந்தன.

15. வேதவித் தேகங்கை யந்தன மாவினை வேதனமே
வேதவித் தேகங்கை யந்தன மாவினை வேதனமே
வேதவித் தேகங்கை யந்தன மாவினை வேதனமே
வேதவித் தேகங்கை யந்தன மாவினை வேதனமே

இதுவுமது

மு. சொ - கை.

வேதம் வித்து ஏகம் கை அந்தன் அம்மா இனைவு
ஏது அன்னம் மேவு
ஏதம் இ தேகம் கை அம் தனம் ஆவி நைவேதனம்
மேமேவே
தவித்து ஏகம் கை அந்த நம்மா வினை வேதனம் மேவு
ஏது அவி தே கங்கை அந்தன் அம் மாவின் ஐ
வேதன் அம்மே.

*அ - ள்.*

அந்தன் - இயமன். மேவு - மேவுக. ஏகம் - செல்லேம் வினைவேதனம் - வினைப் பயன். ஏது - ஏதுவாகிய அவா.கந்தன் சிவன் பல் கடவுளர் என முப்பொருள் கொள்க.

*ப -ரை.*

வேத வித்து ஏகம் - வேத காரணனே ஏகனே

கை அத்தன் இனைவு ஏது - நடுவு நிலையாகிய ஒழுக்கத்தையுடைய எமனால் வரும் மரணத் துன்பம் இனியெமக்கேது.

அன்னம் மேவு ஏதம் இ தேகம் - உணவு நிரம்பும் துன்பத்துக்கு இடமாகிய இத்தேகமும்.

கை அம் தனம் - கையகத்துள்ள அழகிய பொருளும்.

ஆவி - உயிரும் ஆகிய இம்மூன்றையும்.

நைவேதனம் - நினக்கு நைவேதனமாகத் தத்தஞ் செய்தேம். மேவு - விரும்பி ஏற்றருள்க.

தவித்து ஏகம் - ஏதேனும் நாடிப் பரிதவித்துப் பிறர் பாற் செல்லேம்.

கை அந்த - வெறுக்கத் தக்க அந்த.

நம்மா வினை வேதனம் - எமது மிக்க இருவினையின் பயனாகிய இன்ப துன்பங்கள்

மேவு ஏது அவி- எம்மை அடைதற்கு ஏதுவாகிய ஆசையைக் கெடுத்தருள்க.

தே கங்கை அந்தன் - தேவர்களுக்கும் கங்கையைத் தரித்த அழகனுக்கும்.

அம் மாவின் ஐ - அழகிய இலக்குமி நாயகனுக்கும்.

வேதன் - பிரமனுக்கும்.

அம்மே - தாய் போன்ற குமரக் கடவுளே எ -று

## வி - ரை.

உடல் பொருள் ஆவி மூன்றும் ஏற்று ஆசையை ஒழித்தால் மரணத் துன்பஞ்சேராது. அஃது இல்லையாகவே பிறப்பறும் என்பது கருத்து. இன்ப துன்பங்கள் வினையின் கூலியாதலின் வேதனம் எனப்பட்டன. அந்தன் - அந்தத்தைச் செய்வோன். அம்மா, ஏ - அசை. மாவின் ஐ எனற்கு - மாவாகிய வெள்ளையானையையுடைய இந்திரனுக்கு எனவும் உரைத்துக் கொள்க. இதனை உடனிலைச் சிலேடையால் தேவர்க்கும் சிவனுக்கும் விண்டுவுக்கும் இந்திரனுக்கும் பிரமனுக்கும் தாய் போன்ற கணபதியே எனவும் உரைத்து விநாயகர் பாட்டாகவும் கொள்க. வேதனம் - கூலி, அம்மா, அம்மே என்பன இடைக்குறைந்தன.

## இ. பொ - கை.

தெய்வத் தன்மை பொருந்திய கங்கையைத் தரித்த அந்தனே, விண்டுவுக்கும் பிரமனுக்கும் தாய் போல்வானே, என உரைத்துச் சிவபிரான் பாட்டாகக் கொள்க. இதுவும் உடனிலைச் சிலேடையால் விநாயகருக்கும் கொள்ளப்படும்.

## மூ. பொ - கை.

வேத வித்தும் ஏகனும் ஆகிய கங்கை அத்தனே, வேத வித்தும் ஏகனுமாகிய மாவின் ஐயே, வேதவித்தும் ஏகனுமாகிய வேதனே எனவும், அம்மே எனற்கு உமை எனவும் திருமகள் எனவும் இந்திராணி எனவும், கலைமகள் எனவும் பொருள் கொண்டு வேதவித்தும் ஏகமுகமாகிய உமையே, திருவே, இந்திராணியே கலைமகளே எனவும் உரைத்து மேவு அவி என்னும் வினைகளைத் தனித்தனி கூட்டி முடிவு செய்க. ஏனைய முன்போலக் கொண்டு பல் கடவுளர் பாட்டாகக் கொள்க.

16) *வேங்கட னாகத் தருக்குமன் னாதன மேவலமே*
*வேங்கட னாகத் தருக்குமன் னாதன மேவலமே*
*வேங்கட னாகத் தருக்குமன் னாதன மேவலமே*
*வேங்கட னாகத் தருக்குமன் னாதன மேவலமே*

இஃது இருபொருளுடைத்து.

## மு. சொ. கை.

***வம் கடம் நாகத்தருக்கும் மன் ஆதனம் ஏவல் அம் ஏ***
***ஏங்கு அடல் நாகு அ தருக்கும் மன்னாதன மேவு***
***அலம் ஏவேம்***
***கடன் ஆ கத்தருக்கும் அன்னா தனம் மேவல் அம் மே***
***வேங்கடம் நாகம் தருக்கு மன்னா தனமே வலமே***

## அ - ள்.

க்டம் - உடல். ஏ 'ஏங்கு - ஏவால், ஏங்குகின்ற. தனத்துமேவல் கடன் என்க மேவு - விருப்பம். அலத்து ஏவேம் என்க.

## ப- ரை

(வேம் கடம் நாகத்தருக்கும்) நாகத்தருக்கும் கடம்வேம்- விண்ணுலகத் தவருக்கும் தேகம் அழிந்து போம்

மன் ஆதனம் ஏவல் அம் - அவரது சிங்காசனமும் ஏவலும் அழகும், ஏ ஏங்கு அடல் - படைகளால்( பகைவர்) ஏங்குகின்ற வலியும்

*நாடு அ தருக்கும் -இளமையும் அவற்றால் எய்தும் அகங்காரமும்*

மன்னாதன - நிலைபெறாதனவேயாதலால்

மேவு அலம் ஏவேம் - எமது விருப்பத்தைத் துன்பத்திற்குக் காரணமாகிய ஏனோர் பக்கத்துச் செலுத்தேம்

கடன் - நினக்குக் கடனாவது

ஆ கத்தருக்கும் - இடப வாகனத்தையுடைய கர்த்த்ருக்குத் தாய் போல்வானே

தனம் மேவல் - எமது கொங்கைகளைப் பொருந்துதலேயாம்

அம்மே வேங்கட நாகம் -நீர்வளம் மேவிய திருவேங்கட மலையின் கணுள்ள

தருக்கு மன்னா-களிப்பையுடைய தலைவனே

தனமே வலமே - எமது செல்வமாகவும் வெற்றியாகவும் உள்ளவனே (எ-று.)

### விரை.

தனத்தை மேவல் கடனெனக் கூட்டுக.

ஆ கத்தருக்கும் என்னும் இயல்பு விகாரத்தாற் கொள்க. ஆகு அத்தருக்கும் எனப்பிரித்து ஆகுவாகனத்தையுடைய அத்தருக்கும் எனவும், கடம் நாகத்தருக்கும் எனப் பிரித்து மதம் பொழியும் யானை முகத்தருக்கும் எனவும், கடல் நாகத்தருக்கும் எனப்பிரித்துக் கடலின்கண் நாகசயனத்தை உடையார்க்கும் எனவும், கடல் நாடு அத்தருக்கும் எனப்பிரித்துக் கடலின் கண் வசிக்கும் சங்கேந்திய கையையுடையார்க்கும் எனவும், ஈற்றடியில் வேங்கடன் ஆக தருக்கும் மன்னா எனப் பிரித்து வேங்கட மலையையுடையனாகக் களிக்கின்ற மன்னனே எனவும் கூறினும் அமையும். மேவல் என்பதை வியங்கோளாக்கிக் கடனாக மேவுக எனக் கூறலும் பொருந்தும். இது கடவுண் மாட்டு மானிடப் பெண்டிர் நயந்துரைத்தது.

ஏனோர் எல்லாம் இறுதியுடையர் வானோர் பெருமான் இவனே இலன் எனத் தானொரு காரணத்தானே நயத்தலால் மானுட மாதரென்பது பெறப்பட்டது.

உடனிலைச் சிலேடையால் வேங்கட மலையில் இருக்கும் திருமாலே எனவும் ஏனைய முன் போலவும் உரைத்தலும் அமையும்.

### இ. சொ. கை.

மூன்றாம் அடியில் கடனாக தருக்கும் அன்னா எனவும், ஈற்றடியில் வேங்கடநாதத்தருக்கு எனவும் கொள்க.

### பொ-ரை.

*வேங்கட நாகத்தராகிய திருமாலுக்கும் முருகனுக்கும் தலைவனே*

*தருக்கின்ற அன்னை போல்வானே கடனாகத் தளத்தில் மேவுக*

*என உரைத்துச் சிவபிரான் பாட்டாகக் கொள்க.*

*உடனிலைச் சிலேடையால் விநாயயகர் பட்டாகவும் கொள்க.*

17. வலமா தரங்கத்த னந்தியா கத்தன மானத்தனே
வலமா தரங்கத்த னந்தியா கத்தன மானத்தனே
வலமா தரங்கத்த னந்தியா கத்தன மானத்தனே
வலமா தரங்கத்த னந்தியா கத்தன மானத்தனே

இது முப்பொருளுடைத்து

மு. சொ. கை.

*வல்ல மா தரங்கத்தன் நம் தியாகத்தன் அம் மால் நத்தன் ஏ*
*வலம் மாது அரங்கத்தன் நந்தி ஆகு அ தனம் மான் அத்தன் நே*
*வலம் மாதர் அங்கத்தன் அந்தி ஆகத்தன் அம்மான் அத்தன்*
*ஏவல் அம் ஆதரம் கத்த நந்து யாகத்த நம் மானத்தனே.*

குபு.

கந்தன் சிவன் மால் என முப்பொருள் கொள்க.

ப-ரை.

வல்ல மா தரங்கத்தன் -வலிய பெரிய திருப்பாற் கடலானும்

நம் தியாகத்தான் - நமது ஈகையுடையானும்

அம்மால் நத்தன் - அழகிய மா லும் சங்கமேந்தியும்.

ஏ வலம் மாது அரங்கத்தன் - படைகளின் வெற்றியையுடைய அழகிய திருவரங்கத்தானுமாகிய விண்டுவே

நந்தி ஆகு அ தனம் - இடபமாகத் தாங்கிய அத்தகைய செல்வத்தையுடைய

மான் அத்தன் - மான் பொருந்திய கையானும்

நே வலம் மாதர் அங்கத்தன் - அன்பின்கண் மிக்க உமா தேவியை இடமாகிய அங்கத்தில் உடையானும்.

அந்தி ஆகத்தன் - செவ்வானம் போலும் நிறமுள்ள உடலை உடையானும், அம்மான் அத்தன் - அம்மானும் அத்தனுமாகிய சிவபிரானது, ஏவல் அம் ஆதரம் -

ஏவலாகிய அழகிய செயலைச் செய்தலே எமக்கு விருப்பம்.

கத்த - கர்த்தனாகிய குமரக் கடவுளே

நந்து யாகத்த -மிக்க யாகத்தானே

நம் மானத்தனே -எமது பெருமையுடையானே எ-று.

### வி-ரை.

வல்ல -இடைக்குறை. தரங்கம், அம் - ஆகுபெயர்.

நேவலம் என்பதில் வலம் ஏழனுருபு. சிவனது ஏவலாவது இது செய்க இது செய்யற்க என வேதாகமங்களிற் சொல்லிய கட்டளை. அந்தியாகத்தன் - பண்புவமை.

உடனிலைச் சிலேடை வகையால் இதனை விநாயகர் பரமாகவும்பொருளுரைத்துக் கொள்க.

### இ. பொ. ரை.

தரங்கத்தனும் தியாகத்தனும் மா லும் நத்தனும் அரங்கத்தனும் ஆகிய விண்டுவே நந்தியாகப் பெற்ற செல்வத்தினையுடைய மான் அத்தனே மாதர் அங்கத்தனே அந்தி ஆகத்தனே அம்மானே அத்தனே கத்தயாகத்த மானத்தனே நின்னேவல் ஆதரம் எனவுரைத்துச் சிவபிரான் பாட்டாகக் கொள்க.

### மூ. பொ. ரை.

தரங்கத்தனே தியாகத்தனே மாலே நத்தனே அரங்கத்தனே நந்தியாகிய அச் செல்வத்தை யுடைய மான் அத்தனும் மாதர் அங்கத்தனும் அந்தி ஆகத்தனும் அம்மானும் ஆகிய உருத்திரனுக்குத் தலைவனே கர்த்தனே யாகத்தானே மானத்தானே ஏவல் ஆதரம் எனவுரைத்துத் திருமால் பாட்டாகக் கொள்க.

18. *மாணத் தமிழவே தம்படி யாயுள மாதரத்தே*
*மாணத் தமிழவே தம்படி யாயுள மாதரத்தே*
*மாணத் தமிழவே தம்படி யாயுள மாதரத்தே*
*மாணத் தமிழவே தம்படி யாயுள மாதரத்தே*

இஃது ஒரு பொருளுடைத்து.

சொ.கை.

*மாண தமிழ வேதம் படியாய் உளம் மா தரத்தேம்*
***ஆணத்து அமிழ ஏது அம் படி ஆயுள் அ மாதர்***
*அ தேம்*
*மாள் நத்தம் இழவு ஏதம் படியாய் உளம் மா*
*தரத்தேம்*
***ஆண் அத்தம் இழவு ஏது அம்பு அடியாய் உள் அம்***
***ஆதரத்தே.***

**அ-ள்.**

உளம் -விளி. நத்தம் - ஆசை. இழவு - இழுத்தல். உளம் - உள்ளேம்.

*ப-ரை.*

உளம் மா தரத்தேம் - மனமே யாம் மகா பக்குவ முடையேம் ஆதலால்

மாண தமிழ வேதம் படியாய் - யாம் மாட்சிமையுறத் தமிழ் மொழியினுள்ள வேதங்களை நீ ஓதுக. ஆனத்து அமிழ ஏது - இச் செயல் அன்பாகிய கடலின்கண் அமிழ்தற்கு ஏதுவாகும்

அம் படி ஆயுள் - அழகும் பூமியும் ஆயிளும்

அ மாதர் - அந்த மாதருமாகிய

அ தேம் மாள் - அவ்விடங்களிற் சென்று மாளுகின்ற

நத்தம் - ஆசையின் கண்ணும்

இழவு ஏதம் - நம்மை இழுத்து வருந்துதலையுடைய துன்பத்தின் கண்ணும், படியாய்-முழுகாது வாழ்வாய்

உளம் - யாம் என்றும் உள்ளேம் ஆவேம்.

மா தரத்தேம் - அழகும் பெருமையும் உடையேம் ஆவேம்

ஆண் அத்தம் இழவு ஏது - யாம் புருடார்த்தங்களை இழத்தல் ஏது (இழவேம்)

அம்பு அடியாய் - (பிறவிப் பகையை அழிக்கும்) பாணம் (முருகக் கடவுளுடைய) திருவடிகளாக (உள் அம்

ஆதரத்தே) அம் ஆதரத்தே உள்-அழகிய அன்போடு கருதுக எ-று.

**வி-ரை.**

உளம் - முன்னது முன்னிலைப் பெயர்; பின்னது குறிப்பு முற்று.

தலைமைபற்றி மாதர் எனினும் மக்கள் முதலிய புறப்பற்றுப் பிறவும் கொள்க. ஆயுள் என்பது உடம்பைக் குறித்தலின் அகப்பற்றாயிற்று. ஆகவே இரு வகைப்பற்றும் அற அவற்றால் எய்தும் துன்பங்களிற் படியாய் என்பது கருத்தாகக் கொள்க.

நத்தம் என்பது நத்து என்னும் முதனிலையிற் பிறந்த அம் விகுதி பெற்ற தொழிற் பெயர். முன்னுள்ள இழவு இழுத்தற் றொழிற் பெயர். பின்னுள்ள இழவு இழத்தற் றொழிற் பெயர். உழு என்னும் முதனிலை சாரியையும் விகுதியும் பெற்று உழவு என நின்றாற் போல இழு என்பதும் இழவு என நின்றது. இழ வென்பதும் சாரியை இன்றி அவ்வாறாயிற்று. ஆக என்னும் எச்சம் ஆய் எனத் திரிந்தது.

இஃது உடனிலைச் சிலேடையால் ஏனைத் தேவரையும் உணர்த்தலால் தெய்வப் பொதுப் பாட்டாகவும் கொள்க.

தமிழ் வேதம் தேவர் குறள் முதலாயின.

19. *மாத ருமதுரை மாற்றனந் தம்பக வானத்தனே*
*மாத ருமதுரை மாற்றனந் தம்பக வானத்தனே*
*மாத ருமதுரை மாற்றனந் தம்பக வானத்தனே*
*மாத ருமதுரை மாற்றனந் தம்பக வானத்தனே.*

இஃது இரு பொருளுடைத்து.

மு. சொ. ௧௯.

*மா தரு மதுரை மால் தன் நந்து அம்பு அகவு ஆன் அத்தன் ஏம்*
*ஆ தரும துரை மாற்றம் நந்து அம்பக வானத்தனே*
*மாது அரு மது உரை மாற்றம் நந்து அம்பு அகம் வான் நத்தன் நே*

*மா தரும் அது உரை மாற்று அனந்தம் பகவா நத்து அன்னே.*

*அ-ள்.*

தரு-மதுரை. மாற்றம்-பகை. அம்பகம் -கண்.

மாதுரைக்கின்ற மாற்றம் அரு மது என்க. நத்தம் வானென்க.

மா-சுணங்கு. அனந்தம் -பொன். இரு பொருள், கந்தனும் சிவனும்.

*ப-ரை.*

மா தரு மதுரை -மகத்துவ முடைய மரங்கள் அடர்ந்த மதுரைப் பதியின்கணுள்ள

மால் தன் நந்து அம்பு - திருமாலே தனது ஆக்கத்தையுடைய அம்பாகவும், அகவு ஆன்-அகவுகின்ற இடபமாகவும் பெற்ற

அத்தன் - பிதாவும்

ஏம் ஆ தரும துரை - உயிர்களுக்கு ஏமமாகிய தரும துரையுமாகிய சிவபிரானுடைய

மாற்றம் நந்து அம்பக வானத்தனே - பகையாகிய மன்மதன் அழிதற்குக் காரணமான நெற்றிக் கண்ணிற் பிறந்த மேன்மையுடையானே

(மாத் அருமது உரை மாற்றம்) மாது உரை மாற்றம் அருமது-எங்கள் தலைவி உரைக்கின்ற இன்சொல் அரிய தேனோடு ஒக்கும்

நத்து அம்பு அகம் -சங்கங்களையுடைய நீர்வளத்தைத் தன்னகத்துப் பெற்ற

(வான் நத்தம்)நத்தம் வான் - அவர் இருக்கும் ஊர் வானுலகு ஒக்கும் நே மா தரும் - அவள் நின் மேல் வைத்த காதல் அவளுக்குத் தேமலைக் கொடுத்தது.

அது உரைமாற்று அனந்தம் - அத்தேமல் உரைக்கின்ற மாற்று மிக்க பொன் போன்றது.

பகவா நத்து -பகவனே எமது தலைவியை விரும்பி வருக

அன்னே - தாய் போல்வானே எ-று.

*வி-ரை.*

மதுரை அத்தன் எனவும் தருமதுரை அம்பகம் எனவும் இயையும்

அகவல் ஈண்டு முக்காரமிடல். ஏமம் - கடைக்குறை. உரை மாற்றம் - வினைத்தொகை. மது, அது என்பவற்றின் முற்றுகரக் கேடு இலேசாற் கொள்க.

நே-காதல், மா, பசிப்புமாம். தரும் என்பது காலவழுவமைதியால் இறந்த காலம் உணர்த்திற்று.

இது மானிடப் பெண்டிர் கடவுளை நயந்த பக்கத்தில் முருகக் கடவுளை உலாவிற்கண்டு காமுற்ற தலைவியின் இயல் இடம் முயலியவற்றை அவள் பாங்கி அக்கடவுள் மாட்டுச் சொல்லியது.

*இ.பொ.ரை.*

ஆன் அத்தனே தரும துரையே மாற்றம் நந்து அம்பகத்தையுடைய வானகத்தனே எனவும் ஏனைய முன்போலவும் உரைத்துச் சிவபிரான் பாட்டாகக் கொள்க. இப்பொருளில் முதலடி ஈற்றில் அத்தனே எனப் பிரித்துக் கொள்க.

20. *வானம் பிலவங்கத் தானைய னல்லார் வரனந்தமே*
*வானம் பிலவங்கத் தானைய னல்லார் வரனந்தமே*
*வானம் பிலவங்கத் தானைய னல்லார் வரனந்தமே*
*வானம் பிலவங்கத் தானைய னல்லார் வரனந்தமே.*

இதுவு அது

*சொ.கை.*

*வான் நம்பு இல்ல அங்கத்தான் ஐயன் நல் ஆர்வு அதன் அந்தம்*
*ஏவான் அம்பில் அவங்கத்தான் ஐயன் அல் ஆர் வரன் நந்த*
*மேவான் அம்பில் அவம் கத்தா நை அனல் ஆர்வர் அனந்தமே*

*வா நம் பிலவங்கத் தானையன் நல்லார் வர நந்து அம்மே.*

**அ-ள்.**

வரன் அந்த எனவும் கொள்க. இல்ல-இல்லாளையுடைய வங்கம் - தோணி. ஆர்தல் -உண்ணல். மே -மேவுக. இருபொருள், கந்தனும் சிவனும்.

*பு-ரை*

வான் நம்பு -வானுலகத்தார் நம்பி வழிபடுகின்ற

இல்ல அங்கத்தான் - இல்லக்கிழத்தியையுடைய இடப்பாகமாகிய அங்கத்தையுடையானும்

ஐயனும் - ஐயனும்

நல் ஆர்வு அரன் - நல்ல கருணையையுடைய அரனும்

அந்தம் ஏவான் - மரணத் துன்பத்தில் (எம்மை) ஏவாதவனும்

அம்பில் அவங்கத்தான் - பிரளய சலத்தில் ( சீகாழியின் கண்) அத்தோணியை யுடையானும்.

ஐயன் - அழகனும்

அல் ஆர் வரன் - (எமது அஞ்ஞான) இருளையுண்ணும் மேலோனுமாகிய சிவபிரானுக்கு

நத்த-குமாரனே

மேவான் அம்பில் - பகைவனாகிய மன்மதன் அம்பினால்

அவம் கத்தா-வாளா கதறி

நை அனல் ஆர்வர் -வருத்துகின்ற காமாக்கினியில் மூழ்கினார் தலைவியார்.

அனந்த மே வா -அனந்தனே விரும்புக; வருக.

நம் பிலவங்கத் தானையன் -நமது குரங்குச் சேனையையுடைய ராமனாகிய திருமாலின்

நல்லார் வர - மக்களாகிய இருவருக்கும் நாயகனே

நந்து அம்மே-ஆக்கத்தையுடைய தாய் போல்வானே எ-று.

**வி-ரை.**

இல்ல - இடைக்குறை. ஆர்வம் ஆர்வெனக் கடைக்குறைந்தது.

அனல்லார்வர் -விரித்தல். நந்த - கடைக்குறை. கருங்கண்ணன் என்புழிக் கண்ணன் பெயர் மாத்திரையாய் நின்றாற் போல ஈண்டும் நல்லார் பெயர் மாத்திரையாய் நின்றது. தலைவியின் உயர்வு தோன்றவும் மேலும் மேலும் துன்பம் வளருதல் தோன்றும் ஆர்வர் எனப் பன்மையாலும், எதிர் காலத்தாலும் கூறினாள்.

இது தூது சென்றாள் தலைவியின் துயர் கூறியது.

**இ. பொ. ரை.**

இல்ல அங்கத்தானே ஐயனே அரனே ஏவானே வங்கத்தானே ஐயனே வரனே பிலவங்கத்தானை யனுக்கும் நல்லோராகிய தேவர் முனிவர்க்கும் வரத்தை அளிக்கின்ற நந்து அம்மே எனவும் இரண்டாவது அடியீற்றில் வரன் அந்த எனப் பிரித்து அந்த என்பதைச் சுட்டுத்திரிபாகக் கொண்டு அந்தப் பகைவன் எனவும் ஏனைய முன்போலவும் உரைத்துச் சிவபிரான் பாட்டாகக் கொள்க.

21. *வனப்போ தகத்துக் கிளையாவா டம்பர மன்னவையே*
*வனப்போ தகத்துக் கிளையாவா டம்பர மன்னவையே*
*வனப்போ தகத்துக் கிளையாவா டம்பர மன்னவையே*
*வனப்போ தகத்துக் கிளையாவா டம்பர மன்னவையே*

இதுவுஅது

**முசொ.கை.**

*வனம் போது அகத்து கிள்ளையா ஆடம்பரம் மல் நவையே*
*வனம் போதகத்துக்கு இளையா ஆடு அம் பரமன் அவை ஏ*
*வனப்பு ஓது அகத்து கிளையா ஆள் தம்பர மன்னவையே*
*வனம் போது அகத்துக்கு இளையா ஆடு அம்பர மன்னவையே.*

*அ-ள்.*

கிள்ளை -திரு. அகத்து - *அகப்பொருளுக்கு கிளையாக ஆள் என்க. மன்னுமாறு வைக்க என்க. போது-ஞாயிறு.*

வனம் -நீர், காடு, அழகு.

*ப-ரை.*

வனப்போது அகத்துக் கிள்ளையா - நீரிலுள்ள தாமரைப் பூவில் வீற்றிருக்கும் கிளிபோல்வாளாகிய இலக்குமியோ

ஆடம்பரம் மல் நவையே-ஆடம்பரத்தையும் வலிய குற்றங்களையும்கொடுப்பாளாகலின் அவளை விரும்பேன்.

வனப்போதகத்துக்கு இளையா - வனத்தில் திரியும் யானையின் முகத்தைப் பெற்ற விநாயகர்க்குத் தம்பியே, ஆடு அம் பரமன்-நடனஞ் செய்யும் அழகிய பரமன்

அவை -சங்கத்தாருக்காக

வனப்பு ஓது அகத்துக்கு -அழகாகச் சொல்லிய அகப்பொருளாகிய ஞானத்துக்கு

கிளையா ஆள் -யான் உறவாகும் படி ஆளுக.

தம்பர -தமிழறிந்தார் தமது பரனே

மன்னவை - என்னை நிலைபெற வைத்தருள்க.

வனப்போது அகத்துக்கு இளையா ஆடு -அழகிய சூரியனுக்கும் மனத்துக்கும் இமையாத வேகம் பொருந்திய ஆட்டு வாகனமுடைய

அம்பர மன்ன -விண்ணுலகத் தலைவனே

ஐயே -ஐயனே எ-று.

*வி-ரை.*

'ஏ' இரண்டும் அசை. "அகத்துக் கிளை" நான்காவது தொக்கது. கிள்ளை-இடைக்குறைந்து கிளையெனநின்றது. ஆடம்பரமும் நவையும் செய்வள் என்பதிற் பயனிலை தொக்கது சொல்லெச்சம்.

*இ.சொ.கை.*

ஈற்றடி அடு அகத்துக் கிளையா என்க. ஆடு -அடுதல்

*பொ.ரை.*

இரண்டாவது அடியில் அழகிய ஞானோபதேசத்தை உயிர்களுக்குச் செய்யும் பொருட்டு இளையாமல் நடனஞ்செய்யும் அழகிய பரமனே எனவும், ஈற்றடியில் வனம்போது அகத்து கிளையா ஆடு எனப்பிரித்து வனப்போது எனற்கு நிறத்தாற் சூரியனை ஒப்பவனே எனவும் , அகத்துக் கிளையா ஆடு அகத்துக் கிளையா வென மாற்றிக் கொலைத் தொழில் இனி எம்மகத்திற்கு கிளையாது எனவும் எனைய முன்போலவும் உரைத்துச் சிவபிரான் பாட்டாகக் கொள்க.

இப்பொருளில் போதகம் -உபதேசம்.

இளையாமல் என்பது ஈறு கெட்டு இளையா வென நின்றது. சிவபிரானது திருநடனம் உயிர்கட்கு ஞானமுறுதலைக் குறித்த தாகலிற் போதகத்துக்கு இளையாமல் ஆடும் பரமன் என்றார்.

22. *மன்றிலைக் கற்பக நந்தன வாவயிற் றாமனையே*
*மன்றிலைக் கற்பக நந்தன வாவயிற் றாமனையே*
*மன்றிலைக் கற்பக நந்தன வாவயிற் றாமனையே*
*மன்றிலைக் கற்பக நந்தன வாவயிற் றாமனையே*

*இஃது ஒருபொருளுடைத்து.*

*சொ.கை.*

*மன் தில்லை கற்பகன் அந்தன் அவாவை இல்*
*தாமன் ஐ ஏம்*
*மன்றில் ஐக்கு அற்பு அகல் நந்தன வா வயிற்று*
*ஆமம் நை ஏம்*
*அன்றில் ஐ கல் பகு அநந்த நவா அயில் தா மன்*
*ஐ ஏம*
*அன்று இல்லை கற்பு அகம் நந்து அன்ன அயிற்று*
*ஆம் அன்னையே.*

*அ-ள்.*

ஆமம்-ஆமயம். அன்றிற்கல் -கிரௌஞ்ச கிரி. தா-வலி.

அன்று -எச்சம். அன்னவா-ஒத்தனவா.

ஏமம் -பொன், மயக்கம், ஆனந்தம்.

*பதவுரை.*

மன் தில்லைக் கற்பகன் -மன்னுந் தில்லையின் கணுள்ள கற்பகம் போல்வானும்

அந்தன் -அந்தத்தைச் செய்வானும்

அவாவை இல் தாமன் -(இயல் பாகவே) ஆசையில்லாத ஒளியுடையானும்

ஐ ஏம் மன்றில் ஐக்கு -அழகிய கனக சபையின் கண் (நடனஞ்செய்யும்) தலைவனுமாகிய சிவபிரானுக்கு

அற்பு அகல் நந்தனவா-அன்பு விரிந்த புதல்வனே வருக

வயிற்று ஆமம் நை - என் வயிற்று நோயை நீக்குக. (அது கருதிலையாயின்)

ஏம் அன்றில் ஐ கல் பகு -மயக்கத்தைச் செய்யும் அன்றிற் பறவையின் பெயரைக் கொண்ட பெரிய மலையைப் பிளந்த

அநந்த நவா - அளவிறந்த புதுமையுடையானே

அயில் தா ம்ன் ஐ ஏம் அன்று - நின்வேலாயுதத்தின் வலியும் அதன்கண் நிலைபெற்ற அழகும் அதனால் உளதாகும் ஆனந்தமுமே யல்லாமல்

(இல்லை கற்பு) கற்பு இல்லை-யான் கற்பது வேறில்லையாதலின் அதனை நினைத்தற் பொருட்டு அகம் நந்து அன்னவா அயிற்று-எனது அந்தக் கரணங்களைச் சுட்டாலும் வெண்மைதரும் சங்கம் போல் தூயனவாகப் பிராரத்தைப் பொசிக்கச் செய்.

(ஆம் அன்னையே) அன்னையே ஆம் - அன்னை போல்வானே இது செய்யத்தக்கதாம் எ-று.

*வி-ரை.*

தில்லை-இடைக்குறை. அவாவையில் "*அவாவயில்*" என *மயங்கிற்று. ஏமம்-கடைக்குறைந்தது. அன்பு - அற்பென*

*வலித்தது. ஆமயம் - இடைக்குறை. ஆமம் -நோய்விசேடம் எனினும் அமையும். கற்றல் - இடைவிடாது புகழ்தல். ஆக-கடைக்குறை.*

இந்நூற்றந்தாதி பாடுங் காலத்தில் வயிற்று நோய் எம் மருந்தானும் தீராது அறிவுங் கலங்க உடலை வருத்திக் கொண்டிருந்தமையின் அது தீர்த்தல் வேண்டுமென்றும் அது கருத்தில்லையாயினும் அந்தக் கரணம் கலங்காதிருக்கு. மாறாயினும் செய்தல் வேண்டுமென்றும் இச் செய்யுளால் வரம் வேண்டினார். என்க.

23. *தாவான வரதப் பாவந் தனைக்கா தலையினையே*
*தாவான வரதப் பாவந் தனைக்கா தலையினையே*
*தாவான வரதப் பாவந் தனைக்கா தலையினையே*
*தாவான வரதப் பாவந் தனைக்கா தலையினையே*

இஃது இருபொருளுடைத்து

*மு.சொ.கை.*

*தாவா நவரதம் பா வந்தனை காதல் ஐயினையே*
*தா ஆனவரது அ பாவந்தனை காது அலைமின் ஐயே*
*தாவானவரது அப்பா அந்தன் நைக்காது அலை இன்னையே.*
*தா வான வர தப்பா வந்து அன்னை கா தலையினையே.*

*அ-ள்.*

வர-வியங்கோள். இருபொருள், கந்தனும் திருமாலும்

*ப-ரை.*

தாவா நவரதம் பா வந்தனை-அழியாத நவரசங்கள் அமைந்த பாடல்களால் வந்தனை செய்கின்ற

காதல் ஐயினையே தா - அன்போடு கூடிய அழகினையேத் தருக.

ஆனவரது அபாவந்தனை காது -உரியவரான அடியாருடைய அப் பாவங்களை அழிக்கின்ற

அலையின் ஐயே -கடல் போலும் அழகுடைய குமாரக் கடவுளே

தா வானவரது அப்பா-வலிபொருந்திய தேவர்களுக்குத் தந்தை போல்வானே

அந்தன் நைக்காது -இயமன் வருத்தா வண்ணம்

(அலை இன்னையே தா) இன்னையே தா அலை-இப்போதே என் குற்றங்களை எல்லாம் அலைத்துக் கெடுத்தருள்க.

வான வர - மேலோனே வருக.

தப்பா வந்து அன்னைக் கா - தவறாமல் வந்து தாய் போற் காத்தருள்க .

தலையினையே - முதன்மையுடையோனே.

**வி-ரை.**

தாவா, தப்பா இவை ஈறுகெட்ட எச்சங்கள். பாவம் -சாதியொருமை. இன்னையே-இடைக்குறை, இதனையே உடனிலைச் சிலேடையாகல் ஏனைக் கடவுளருக்கும் கொண்டு தெய்வப்பொதுப்பாட்டாக்குக.

*இ.பொ.ரை.*

அலையின் ஐயே எனற்குக் கடலின் கண் வசிக்கும் ஐயனே என உரைத்துத் திருமால் பாட்டாகக் கொள்க.

24. *தனமாதங் கத்தலை யான்றுணை யாமனந் தாவரசே*
*தனமாதங் கத்தலை யான்றுணை யாமனந் தாவரசே*
*தனமாதங் கத்தலை யான்றுணை யாமனந் தாவரசே*
*தனமாதங் கத்தலை யான்றுணை யாமனந் தாவரசே*

இஃது ஒருபொருளுடைத்து.

*சொ.கை.*

*தன்மை ஆதங்கத்து அலை ஆன்று உள் நையா மனம் தா அர சே*
*தனம் மாது அங்கத்து அலையான் துணையா மன் அந்தா வர சேது*
*அன்னம் மா தங்கு அ தலையான் துணையாமல் நம்*

தாவர சேதன
*மாதங்கம் தலையான் துணை ஆம் அனந்தா அரசே.*

**அ-ள்.**

துணை -ஒப்பு, உதவி. சகோதரன்.

**பரை.**

தன்மை ஆதங்கத்து அலை ஆன்று உள் நையா -சிறிதும் துன்பக் கடலுள் ஆழ்ந்து உள்ளே வருந்தாத

மனம் தா-மனத்தைத் தருக.

அர -அரனும்

சே.தனம் மாது . அங்கத்து -இடப வாகனமாகிய செல்வத்தையும் உமாதேவி பொருந்திய கூறாகிய அங்கத்தையுமுடைய

அலையான் துணையா -அலையாதவனுமாகிய சிவபிரானுக்கு ஒப்பானவனே

மன் அந்தா வர - நிலைபெற்ற அழகுடையானே வருக

சேது அன்ன மா தங்கு -செந்நிறமுடைய அன்னம் போன்ற இலக்குமி வசிக்கின்ற

அத்தலையான் துணையா -அந்த மார்பாகிய இடத்தையுடைய மாலுக்கு உதவி செய்பவனே

மல் நம் தாவர சேதன - வளமிக்க நமது தாவரமும் சேதனமும் ஆகி விளங்குகின்ற கடவுளே

மாதங்கத் தலையான் துணையாம் அனந்தா - யானைத் தலையுடையானுக்குச் சகோதரனாகிய அனந்தனே

அரசே-அரசனே

**வி-ரை.**

தன்மை -இடைக்குறை. செம்மை ஆம்பல் - சேதாம்பல் என்றாற் போலச் செம்மை அன்னம் - சேதன்னம் எனப் புணர்ந்தது.



SENTHAMIZH ... SAI...

25\. சேயா விருப்பு வனத்தே ரகமலைத் தேவரனே
சேயா விருப்பு வனத்தே ரகமலைத் தேவரனே
சேயா விருப்பு வனத்தே ரகமலைத் தேவரனே
சேயா விருப்பு வனத்தே ரகமலைத் தேவரனே

இதுவும் அது.

### சொகை.

சேய் ஆ இருப்பு வனத்து ஏர கமலை தே வரன் ஏ
சேய் ஆ இரு புவனம் தேர் அகம் மலைத்து ஏவு அரன் நே
சேயா இரும்பு வல் நத்து ஏர் அகம் அலைத்து ஏ வரன் ஏசு
ஏயா விருப்பு வனத்து ஏரகம் மலை தேவர் அன்னே

### அ-ள்.

இருப்பு -இருத்தல். வனம் -துளவம், நீர். ஏர -எச்சம்

ஏர்தல் -எழுதல். அலைத்து - அலையை ஒத்தது.

### பரை.

சேய் ஆ இருப்பு -செவ்விய இடபமாக இருத்தலைப் பெற்ற

வனத்து ஏர -துளவமாலை புனைந்த அழகினையுடைய

கமலைத்தேவரன் ஏ -இலக்குமிக்குக் கருணை பொருந்திய நாயகனாகிய பாணத்தை

சேய் ஆ -தூரத்தேயுள்ள முப்புரத்தின் கண்ணதாக

இரும் புவனத் தேரகம் - பெரிய பூமியாகிய தேரின்கண் இருந்து

மலைத்து ஏவு -போர் செய்து ஏவிய

அரன் நே சேயா - அரனுக்கு அன்புள்ள புதல்வனே

இரும்பு வல்நத்து ஏர் அகம் அலைத்தே - இரும்பு போன்ற வலிய(விடய) ஆசைக்கண் எழுகின்ற மனமோ சலனத்தால் அலையினது தன்மையையுடைத்து

வரன் - (அதனால் அஃதொழிதற்கு ) யான் வேண்டும் வரமாவது

ஏசு ஏயா விருப்பு - நிந்தை எய்தாத ( நினது திருவடி ) விருப்பமே யாம்.

வனத்து ஏரகமலை -அழகினையுடைய திருவேரக மலையின் கண் எழுந்தருளிய

தேவர் அன்னே - தேவர்க்குத் தாய் போல்வானே. எ-று.

*வி-ரை.*

மலைத்து ஏவு அரன் .என்பதை -ஏவி மலைத்த அரனென மாறுக. இரும்பு வனம் இருப்பு வனம் என வலித்து நின்றது. ஏர என்னும் எச்சம் வரன் என்னும் பெயர் கொண்டு முடிந்தது.

வனத்து ஏர கமலை எனக் கமலத்திற்கு அடையாக்கி நீரின் கணுள்ள தாமரைப் பூவில் வாழும் இலக்குமி எனக் கூறலும் பொருந்தும். இரும்பு போன்ற அகம் என்க. இரும்பு வன்றொடர் ஆயிற்று. 'ஆக' கடைக் குறைந்து ஆ என நின்றது.

26. *அனாமற வோங்கல் வினாயக னற்பா லனையவென்றே*
*அனாமற வோங்கல் வினாயக னற்பா லனையவென்றே*
*அனாமற வோங்கல் வினாயக னற்பா லனையவென்றே*
*அனாமற வோங்கல் வினாயக னற்பா லனையவென்றே*

இது முப்பொருளுடைத்து.

*சொ.கை.*

*அல் நாம் அற ஓங்கல் வினாய கன்னல் பாலன் நைய என்று ஏயல்*
*நாம் மறவோம் கல் வில் நாய கனல் பாலன் நைய என் தேயம்*
*நாம் அறம் ஓங்கல் விநாயகன் அற்பால் அன்னை அ வென் தே*
*அன்னா மற ஓம் கல்வி நாயக நற்பால் அனைய என்றே.*

### அ-ள்.

நாம் -அச்சம், கீர்த்தி. ஓங்கல் -உயர்ச்சி, மலை.

என்று ஏயல் -எப்போது ஏய்வது கனற்பாலன் -தீயுடைய நெற்றி.

தே அன்னா - தேவனை அன்னாய், தேவே, அன்னையே. என்று - ஞாயிறு. முப்பொருள், கந்தன் சிவன் கணபதி.

### ப.ரை.

அல் நாம் அற - இவ்விரவில் அச்சம் இல்லாமல்

ஓங்கல் வினாய கன்னல் பாலென் நைய -உயர்ச்சியையுடைய சொல்லப் படுகின்ற கரும்பு வில்லைப் பாலிக்கும் மன்மதன் வருந்த

(என்று ஏயல்) ஏயல் என்று - எம் ஊர்க்கு வருவது எப்பொழுது

நாம் மறவோம் - யாம் மறவேம்

கல் வில் நாய - மேரு மலையாகிய வில்லையுடைய நாயகனாகிய

கனல் பாலன் - அக்கினி பொருந்திய நெற்றியை யுடைய சிவ பிரானுக்கு

ஐய - குருவே

(என் தேயம்) தேயம் என் - நினது நாடு அணிதல் முதலியவற்றால் எத்தன்மைத்தோ

நாம் அற ஓங்கல் - கீர்த்தி பொருந்திய தரும வடிவமாகிய மலைபோல் வானும்

விநாயகன் -விநாயகனும்

அற்பால் அன்னை -அன்பால் அன்னை போல்வானும்

அ வென் தே அன்னா - அத்தகைய வெற்றியையுடைய தேவனுமாகிய கணபதியை ஒப்போனே

மற ஓம் கல்வி நாயக - வலிபொருந்திய பிரணவ மாகிய கல்விக்கு நாயகனே

நற்பால் அனைய என்றே-நன்மைப் பகுதிகள் எல்லாவற்றையும் ஒத்த ஞான சூரியனே எ-று.

*வி-ரை.*

கன்னல் - இடைக்குறை. வினாவல் - ஈண்டுச் சொல்லல் என்னும் பொருட்டு இஃது இரவுக் குறி நேர்ந்த தோழி தங்கள் நிலத்து மக்கள் கோலத்தனாய் வருவதற்குத் தலைமகனை உட்கோள் வினாதல்.

*இ.பொ ரை*

கல் வில் நாயனே கனற் பாலனே ஐயனே ஓங்கலே விநாயகனும் அற்பால் அன்னையும் தேவுமாகிய கணபதியை அன்னோனே கல்வி நாயகனே என்றே என உரைத்துச் சிவபிரான் பாட்டாகக் கொள்க.

*மூ.பொ.ரை*

கனற் பாலனுக்கு ஐயனே ஓங்கலே விநாயகனே அற்பால் அன்னையே வெற்றியும் தெய்வத் தன்மையுமுடைய தாய் போல்வானே என உரைத்து விநாயகர் பாட்டாகக் கொள்க.

27. *என்னாவி யந்தர னட்டவ னத்தனை யாதனையே*
*என்னாவி யந்தர னட்டவ னத்தனை யாதனையே*
*என்னாவி யந்தர னட்டவ னத்தனை யாதனையே*
*என்னாவி யந்தர னட்டவ னத்தனை யாதனையே*

இஃது ஒருபொருளுடைத்து.

*சொ.கை.*

*என் ஆவி அந்தரம் நட்ட வனத்தன் ஐ ஆதன் ஐயே*
*என்னா வியந்தரம் நட்டம் வனத்தன் ஐ யாது அல் நை ஏ*
*எல் நா வியந்து அரன் நட்டவ நத்தன் ஐயா தன்னையே*
*என் ஆவி அம் தரன் அட்டவன் அத்தனை யாதனையே*

*அ-ள்.*

வனம்-கற்பக வனம். ஆதன்-உயிர். என்னா-என்னோ.

நட்டவனத்தன் - நடஞ் செய்யும் அழகன். யாது - அசுரர். அரன் - அரனை. என் -என்க. ஆவி -பொய்கை. அம் -நீர்.

*ப-ரை.*

என் ஆவி - என்னுயிரே

அந்தர நட்ட வனத்தன் - ஆகாயத்தில் தாபித்த கற்பக வனத்தையுடைய இந்திரனுக்கும்

ஐ ஆதன் ஐயே -அழகிய உயிர்க்குந் தலைவனே

என்னா - நின் திருவுளம் யாதோ அறியேன்

வியந்தரம் · நட்ட வனத்தன் ஐ -பேயோடு ஆடும் கூத்தையுடைய அழகுடையானுக்குக் குருவே

யாது அல் நை எல் - அசுர ராகிய இருளைக் கெடுக்கும் ஞான சூரியனே

நா வியந்து அரன் நட்டவ - நாவினால் தமிழ் வேதம் பாடித் துதித்து அரனை நேசித்தவனே

தன்னையே என் - தந்தையே என்று மனமே கருதுக; கருதின்

ஆவி ஆம் தரன் - சரவணப் பொய்கையில் நீர்தாங்கப் பெற்ற முருகக் கடவுள்.

(அட்டவன் அத்தனை யாதனையே) யாதனை அத்தனையும் அட்டனை - நமது துன்பம் அவ்வளவும் தீர்த்தவனேயாவன் எ-று.

*வி-ரை.*

ஒரு காலத்து உபதேசமும் மற்றோரு காலத்துத் துதித்தலும் செய்தமையால் சிவனுக்குக் குருவென்றும், அன்பனென்றும் கூறுதல் குற்றமின்று என்க.

அத்தனையும் என்பதன் கண்ணுள்ள முற்றும்மை விகாரத்தால் தொக்கது.

அரனை என்பதன்கண் இரண்டாவது தொக்கது விகாரம்.

28. *யானா வளிய னகத்தியக் கத்தனை யாதிருத்தே*
*யானா வளிய னகத்தியக் கத்தனை யாதிருத்தே*

*யானா வளிய னகத்தியக் கத்தனை யாதிருத்தே*
*யானா வளிய னகத்தியக் கத்தனை யாதிருத்தே*

இது முப்பொருளுடைத்து.

*சொ.கை.*

*யானா அளியன் அகம் தியக்கத்தன் ஐயா திருத்தே*
*ஆனா அளியன் அகத்தியன் கத்தன் ஐயா திரு தேயா*
*நா அளி அனகத்தி அக்கம் தனயா திரு தேயான்*
*ஆ வள்ளிய நகத்து இயக்கத்த நையாது இருத்தே.*

*அ-ள்.*

திருத்தேயம் - முத்தியுலகு. அக்கத்து அனையா எனவும் கொள்க.

வள்ளிய - வள்ளலே; வள்ளியையுடையானே. நகம் -மலை.

அகத்து இயக்கத்த எனவும் கொள்க.

முப்பொருள் கந்தனும் கணபதியும் சிவனுமாம்.

*ப-ரை.*

யானா அளியன் -யானோ எளியன்

அகத் தியக்கத்தன் - மனக் கலக்கத்தை யுடையேன்.

ஐயா திருத்தே - ஐயனே என்னைத் திருத்துக

ஆனா அளியன் - நீங்காத கிருபையுடையர் ஆகிய

அகத்தியன் கத்தன் ஐயா- அகத்திய முனிவருக்குக் குருவே

திரு தேவா - அழகிய முத்தியுலகை உடையானே

நா அளி - (தோலாத) நாவை அளித்தருள்க

அனகத்தி அக்கத் தனயா - பரிசுத்தமுடைய உமாதேவிக்குக் கண் போன்ற புத்திரனே

திருத் தேயான் ஆ வள்ளிய - செல்வம் அழியாதானாகிய வரையாது கொடுக்கும் வள்ளலே

நகத்து இயக்கத்த - மலைகளில் இயங்குதலுடையானே

நையாது இருத்தே - யான் வருந்தாது நிலைபெறச்செய்க. எ-று.

*வி-ரை.*

கம்பர் அந்தாதியில் "பத்திக் கணம்" என்னும் பாட்டில் கருப்பத்தி என்பது கருப்பத்தை யுடையாள் எனப் பொருள் பயந்து நின்றாற் போல் அனகத்தி என்பதும் அனகத்தை யுடையாள் என்னும் பொருளில் தமிழ் மொழிக்குரிய அத்துச் சாரியையும் விகுதியும் பெற்று நின்றது.

அனகத்தி அக்கத்து அனையா எனப்பிரிந்து. அனகத்தியின் அக்கத்துக்கு ஒப்பாய முதல்வனே என லும் பொருந்தும்.

அனகம் - தீ. அக்கம் தனயா எனப் பிரித்து அனகமாகிய சிவனது நெற்றியிலுள்ள நெருப்புக் கண்ணிற் பிறந்த புத்திரனே என லும் பொருந்தும். இப் பொருளில் தீ குறுக்கல் விகாரம்.

திரு தேயானா வள்ளிய எனப்பிரித்துச் செல்வமிக்க தேவயானையும் வள்ளியம்மையும் உடையானே என உரைத்தலும் பொருந்தும். தேயானா- வடமொழித்தற்சமம். இது தேவயானை எனத் தற்பவமாகி வழங்கும்.

*இ. பொ. ரை.*

முதலடியில் அகத்தியக் கத்தன் எனற்குப் பாவத்தால் கலங்குதலுடையேன் எனவும், ஈற்றடியில் வள்ளியன் அகத்து இயக்கத்த எனப்பிரித்து வள்ளியனாகிய அகத்திலே இயுங்குதலுடையானே எனவும் அகத்தியனுக்கு அழகு செய்பவனே எனவும் ஏனைய முன் போலவும் உரைத்துச் சிவகுமாரர் இருவர்க்கும் உடைனிலைச் சிலேடையாற் கொள்க.

கமண்டலத்தில் இருந்த காவிரியைக் கவிழ்த்தி மீண்டும் நிரப்பி வரமளித்தமையால் விநாயகர் அகத்தியர்க்கு அருள் செய்தமை உணர்க.

*மூ. பொ. ரை.*

அனகத்தி அக்கத்து அனையா எனப் பிரித்து உமைக்கு அக்கம் போன்ற கணவனே எனவும், ஈற்றடி, அகத்து

இயக்கத்த எனவும் ஏனைய முன் போலவும் பிரித்து உரைத்துச் சிவபிரான் பாட்டாகக் கொள்க.

29) *யாமாற் றணிகா சலத்தகத் தாட்டத்தை யாயமனே*
*யாமாற் றணிகா சலத்தகத் தாட்டத்தை யாயமனே*
*யாமாற் றணிகா சலத்தகத் தாட்டத்தை யாயமனே*
*யாமாற் றணிகா சலத்தகத் தாட்டத்தை யாயமனே*

இது ஒரு பொருளுடைத்து.

*சொகை*

*யா மால் தணி கா சலத்து அகம் தான் தத்தை ஆய மன்னோனே*

*யாம் ஆற்று அணி காசி அலத்தகம் தாள் தத்தை ஆ யமனே*

*ஆம் மாற்று அணிகா சலத்து அகத்து ஆட்டு அத்தை யாய் அம் மல் நேயா*

மால் தணிகாசலத்து அகத்து ஆட்டத்து ஐயாய மன்னே.

*அ-ள்*

சலம் -வஞ்சம். அகம் -பாவம். தாள் - முயற்சி. தத்து -விபத்து. காசணிந்த என்க. மாற்று -மாற்றுக. அணிகம் - சிவிகை. அகத்துச் சலம் - மானத தீர்த்தம். ஆட்டம் -வெற்றி.

*பரை.*

மால் தணி கா -மயக்கத்தைத் தணித்தருள்க, காத்தருள்க

சலத்து அகத்தாள் தத்தை-வஞ்சனையுடைய பாவ முயற்சியாலாகிய விபத்தை

(ஆய மன்னே) மன்னே ஆய - யாதென்று மிகுதியும் ஆராயின்

யாம் ஆற்று -யாங்களே படைத்துக் கொள்கின்ற

(அணி காசு) காசு அணி - பொற்காசு அணிந்த

அலத்தகத்தாள் - செம்பஞ் சூட்டிய பாதத்தை யுடைய

தத்தை ஆ யமனே யாம் - கிளி போலும் பெண்களாகிய இயமனேயாம்

மாற்று - அதனை மாற்றுக.

அணிகா - சிவபிரான் அளித்த முத்துச் சிவிகையுடையானே

(சலத்து அகத்து ஆட்டு) அகத்து சலத்து ஆட்டு - அகத்தேயுள்ள சத்தியம் முதலிய மானதத்தீர்த்தது எம்மை முழுகச் செய்க

அத்தையாய் அம் மல் நேயா - தலைவியாகிய தெய்வயானையும் தாயாகிய வள்ளியம்மையும் என்னும் இருவரின் அழகும் வலியும் வாய்ந்த நேயனே

மால் தணிகாசலத்து அகத்து - பெருமை பொருந்திய திருத்தணிகை மலையின்கண் விளங்குகின்ற ஆட்டத்து ஐயாய வெற்றியையுடைய கடவுளாகிய

மன்னே - தலைவனே எ-று.

*வி. ரை.*

யா - அசை

30 *யாரா மனகா விலேகா வணங்கலைத் தார் வரனே*
*யாரா மனகா விலேகா வணங்கலைத் தார் வரனே*
*யாரா மனகா விலேகா வணங்கலைத் தார் வரனே*
*யாரா மனகா விலேகா வணங்கலைத் தார் வரனே*

இஃது இரு பொருளுடைத்து.

*முசொகை.*

*யார் ஆம் அனகா வில் ஏகா அணங்கு அலைத்து ஆர்வர் அன்னே*
*ஆராமல் நகா இல் ஏகா வண்ணம் கலைத்தார் வரல் நே*
*ஆரா மன்ன காவிலே கா வணங்கல் ஐ தார் வரனே*
*ஆராம நகா இலேகா வணங்கு அலை தார் வரனே*

*அ-ள்.*

வில் - ஒளி. தார் - படை.

*பஎரை.*

அனகா வில் ஏகா-அனகனே ஒளி பொருந்திய ஏகனே

அணங்கு அலைத்து ஆர்வர் யார் - அணங்கு போல்வாரை(வரையாது) வருத்திக் களவொழுக்கத்தாற் பொருந்துவார் யாவர்(அருளிலாதாரென்றே)

அன்னே-தாய் போல்வானே

ஆராமல் நகா இல் ஏகா வண்ணம் கலைத்தார் - எமது தலைவி பொருந்தாவிடின் விளங்குதலில்லாத இல்லின்றும் வெளிச் செல்லா வண்ணம் எம்மனையார் தடுத்தார்.

வரல் - ஆதலால் இனி நீ வரைவு வேண்டி இவண் வருக.

நே ஆரா மன்ன - அன்பாகிய ஆரத்தையுடையானே மன்னனே

காவிலே கா - காம வல்லி போன்ற எமது தலைவி தழுவுமாறு நீ கற்பகத் தருப் போன்று காத்தருள்க.

வணங்கல் ஐ தார் வரனே - நின்னை வணங்குதல் அழகிய மாலையை நின்பாற் பெறும் வரத்திற்கென்றே அறிக.

ஆராம நகா - பழமுதிர் சோலை மலைக்கண் உள்ளானே

இலேகா - தேவனே

வணங்கு அலை தார் வரனே-வளைந்த கடல் போன்ற தேவசேனை யையுடைய மேலோனே (எ.று.)

***வி-ரை.***

யாவர் என்பதன் மரூஉ வாகிய யார் என்பது ஆர்வர் என்பதன் பின் கூட்டப் பட்டது. ஆம் - அசை.

*அலைதார்வர் யார் என்றமையான் அருள்உடைய நினக்கு இது ஏலாது என்பது பெறப்பட்டது. வண்ணம், மன்ன இவை இடைக்குறை.*

குறித்து நோக்கி அன்னை தலைவியை மலைக்கட் புறம்போய் விளை யாட வேண்டா என்று கூறினாள்; இனி இற்செறிப்பாள் போலும், அதனால் வரைவு வேண்டி வருதலே அவளை எய்தற்கு உபாயம் என்றான்.

கலைத்தல் ஈண்டுத் தடுத்தல் என்னும் பொருட்டு. வணங்கு அலை என்பது அலையை விசேடியாமல் 'வகரக்கிளவி'

என்பது போல் ஆகுபெயர்ப் பொருளை விசேடித்து நின்ற பின்மொழியாகுபெயர். இது இற்செறிவறிவித்து வரைவு கடாதல்.

### இ.சொ.கை.

இரண்டாவது அடியில் ஆ ராம நகா எனவும் ஏனைய முன் போலவும் கொள்க.

### பொ.ரை.

வில் ஏகா என்றற்குக் கோதண்டம் என்னும் வில்லையுடைய ஏகனே எனவும், ஆ என்பதை வியப்பிடைச் சொல்லாகக் கொண்டு ராம எனற்கு ராமபிரானே எனவும், நகா எனற்கு அலர்தூற்றிநக்கு எனவும் ஆராமநகா எனற்குத் திருமாலிருஞ் சோலைமலையுடையானே எனவும் தார்வரனே எனற்குக் குரங்குச் சேனையையுடைய மேலோனே எனவும் பொருளுரைத்துத்திருமால் பரமாகக் கொள்ளுக.

31. *தாவா னலத்தான் வாரிய னம்பினன் றாவரனே.*
*தாவா னலத்தான் வாரிய னம்பினன் றாவரனே.*
*தாவா னலத்தான் வாரிய னம்பினன் றாவரனே*
*தாவா னலத்தான் வாரிய னம்பினன் றாவரனே*

இஃது ஒருபொருளுடைத்து.

### சொ-கை.

தாவ அனலம் தானவ அரி அம் நம்பி நன்று ஆவர் அன்னே; தாவா நலம் தானம் ஆரிய நம்பினன் தா அரன் ஏது ஆவான் அலத்தான் அ வாரியன் அம்பினன் தா வரனே; தா வான் நல்லம் தானம் வாரியன் அம் பின்னன் தா வரன் ஏ.

### அ-ள்.

தாவானலம்-காட்டுத்தீ. தீ-கடத்தல். வாரியம்-வேய்ங் குழல். நல்லம்-கருமை. வாரி-நீர்.

### ப.ரை.

தாவ அனலத் தானவ அரி-காட்டுத்தீயை ஒத்த அசுரர்க்குப் பகைவனே

அம்நம்பி-அழகிய நம்பியே

நன்று ஆவார் அன்னே- நன்மையே வடிவம் ஆவார்க்குத் தாய் போல்வானே

தாவா நலத்தான ஆரிய- அழியாத தன்மை பொருந்திய ஈகையுடைய ஆரியனே

நம்பினன் -யான் நின்னையே நம்பினேன்

தா அரன் -எல்லாங் கடந்த அரனும்

ஏது ஆவான் -எல்லாவற்றுக்குங் காரணம் ஆவானும்

அலத்தான் அ வாரியன் அம்பினன் -கலப்பையையுடைய

பலராமனும் அவ்வேயங் குழலுடைய கண்ணனும்

ஆகிய திருமாலை அம்பாகவுடையவனுமாகிய சிவபிரானுடைய

தா வரனே-வலிமையைப் பெற்ற புதல்வனாகிய மேலோனே

தா வான் நல்லம் தானவாரியன் -வலிபொருந்திய மேலாகிய கரிய மதசலத்தையுடைய விநாயகனுக்கு

அம் பின்னன்-அழகிய தம்பியே

தா வரன் - வரங்களைத் தருக எ-று

***விரை***

வரன் தா எனக்கூட்டுக. தாவானலம், தானவாரி-இவை வடமொழி முடிபு. நல்லம் பின்னன்-இடைக்குறை.

*"காரும் அஞ்சனமும் நல்லமும் கருளும் ஆகும் கருநிறத் தபிதானமம்மே" என்பது பிங்கலந்தை ஆகலின் நல்லம் கருநிறமாதல் அறிக.*

32) *தாவாத வானம் பொருதந்த வாரணத் தானத்தனே*
*தாவாத வானம் பொருதந்த வாரணத் தானத்தனே*
*தாவாத வானம் பொருதந்த வாரணத் தானத்தனே*
*தாவாத வானம் பொருதந்த வாரணத் தானத்தனே*

இஃது முப்பொருளுடைத்து

*சொகை.*

*தா வா தவா நம்பு ஒரு தந்தம் வாரணம் தானத்தன் நே.*
*தா ஆதவா நம் பொருது அம் தவா ரணம் தானத்து அன்னே*
*தா ஆத வானம் பொரு தந்த ஆரணம் தானத்தனே*
*தாவாத ஆன் அம் பொருது அந்த வார் அள்நத்தான் அத்தனே.*

*அ-ள்*

நம்பு-விசுவாசம். தா-பகை, வலி. அள்-காது

முதலடியில் தானத்தனே எனவும் கொள்க.

முப்பொருள், கந்தனும் கணபதியும் சிவனும்.

*பரை.*

(தா வா தவா நம்பு) தவா நம்ப தா வா -நீங்காத விசுவாசத்தைக் கொடுத்தருள்க;வந்தருள்க.

ஒரு தந்த வாரணத் தானத்தன் நே-ஒற்றைக் கொம்புள்ள யானைமுகத்தையும், மதத்தையுமுடைய விநாயகனிடத்து அன்பினையுடைய

தா ஆதவா-பகைவராகிய இருளுக்குச் சூரியனே

நம் பொருது அம் தவா ரணத்தானத்து அன்னே-நமது போர் செய்து அழகு நீங்காத யுத்த களத்திலும் (பகைவர் மாட்டுத்) தாய் போற் கருணையுடையானே

தா ஆத-வலி பொருந்திய உயிர் போல்வானே

வானம் பொரு-கைமாறு கருதாத மேகத்தை ஒத்த

(தந்த ஆபரணம் தானத்தனே)ஆரணந் தந்த தானத்தனே-திரு நெறித் தமிழாகிய வேதத்தை அருளிச் செய்த ஈகையுடையானே

தாவாத ஆன் அம் பொழுது-அழியாத இடப வாகனத்தில் அழகோடு பொருந்திய அந்தவார் அல் நத்தான்

அத்தனே அழகிய நீண்ட காதினிடத்துச் சங்கினையணிந்த சிவபிரானுக்குக் குருவே எ_று.

*வி-ரை.*

அன்பினையுடைய ஆதவா என்றும், நமது அன்னே என்றும் வானம் பொருவு தானத்தனே என்றும், இயையும். ஆன் அம் என்பதில் அம்சாரியையுமாம். ரணத்தானத்தும் என்னும் சிறப்பும்மை விகாரத்தால் தொக்கது.

*இ.பொ,ரை*

மும்மதமுடையானே எனவும், வேதத்தை முனிவர்க்கு அருளிய ஈகையுடையானே எனவும், நத்தானுக்குச் செல்வமாயுள்ளோனே எனவும் உரைத்து விநாயகர் பாட்டாகக் கொள்க. இதற்கு முதலடியில் 'தானத்தனே' எனக் கொள்க.

*மு.பொ,ரை.*

ஒரு தந்த வாரணத்தனுடைய அன்பு பொருந்திய ஆதவா அன்னே ஆத ஆரணத் தானத்தனே நத்தானே அத்தனே எனவும் ஏனைய முன்போலவும் உரைத்துச் சிவபிரான் பாட்டாக் கொள்க.

33. *தாவியற் றால விருந்தவந் தங்கந் தனக்கலமே.*
*தாவியற் றால விருந்தவந் தங்கந் தனக்கலமே*
*தாவியற் றால விருந்தவந் தங்கந் தனக்கலமே.*
*தாவியற் றால விருந்தவந் தங்கந் தனக்கலமே.*

இஃது இரு பொருளுடைத்து.

*சொ.கை.*

*தா இயல் தால இரு தவம் தங்கு அம் தனம் கல்ல மேதாவி*
*அற்றால் அவிருந்து அவம் தங்கம் தனம் கலமே*
*தா இயற்று ஆலம் விருந்தம் அந்தம் கந்தம் நக்கல் அம் மே*
*தாவு இயல் தாலவிருந்தம் வந்து அங்கம் தனக்கு அலமே.*

*அ-ள்.*

இயல்-இயற்றமிழ். தாலம் -நா. கல்-மலை. அவிருந்து-அவிரும்.

தங்கம்-பொன்போன்ற சுணங்கு. தா-வருத்தம். விருந்தம்-சுற்றம். நக்கல்-நகுதல். தாலவிருந்தம்-பேராலவட்டம். வந்து-காற்று இருபொருள், கந்தனும் சிவனும்.

*பதவுரை.*

தா இயல் தால்-வலிய இயற்றமிழ் வேதம் அருளிய நாவையுடையானே

இருந்தவம் தங்கு-பெரிய தவமுடையார் தங்கும்

அம் தனக்கல்ல-அழகிய செல்வமிக்க மலைகளையுடையானே

மேதாவி-புலவனே

அற்றால்-நீ பிரிந்தால்

அவிருந்து அவம் தங்கமே-விளங்குகின்ற பயனற்ற பொன்போன்ற சுணங்கே

தனக்கலம்-தனக்கு ஆபரணம் ஆகின்றன

தா இயற்று-வருத்தம் செய்கின்ற

ஆல விருந்த அந்தம்-விடத்தை ஒத்த சுற்றத்தால் உளதாகும் மரணத்தைத் தரத் தக்க இடையூறும்

கந்தம் நக்கல்-வாசனைப் பொருளும் அவமதிச்சிரிப்பும்

அம்மேதாவு இயல்-அழகால் விருப்பந்தாவும் இயல்பினையுடைய

தால விருந்தவந்து-பேராலவட்டத்தின் உளதாகும் காற்றும்

அங்கம் தனக்கு அலமே -உடலுக்குத் துன்பமே செய்கின்றன. எ-று

*வி-ரை.*

தவம், தங்கம்-ஆகுபெயர். அவிரும் என்பது செய்யுள் முடிவால் அவிருந்தெனத் திரிந்தது. கல்ல-இடைக்குறை.

இது கடவுளைக் கனவிற்கண்ட தலைவி விழித்துக் காணாது புலம்பியது. பிரிவச்சம் கூறலுமாம்.

*இ.பொ.ரை.*

தா இயல் தால எனற்கு வலிய இயற்றமிழாகிய அகப்பொருள் பாடிய நாவையுடையானே எனவும், அம் தனக்கல்ல எனற்கு அழகிய பொன்மலையும் வெள்ளி மலையும் உடையானே எனவும் ஏனைய முன்போலவும் உரைத்துச் சிவபிரான் பாட்டாகக் கொள்க.

34. *அந்தரக் கற்பக நந்தா வனமாலை யானையனே*
*அந்தரக் கற்பக நந்தா வனமாலை யானையனே*
*அந்தரக் கற்பக நந்தா வனமாலை யானையனே*
*அந்தரக் கற்பக நந்தா வனமாலை யானையனே*

இஃது ஒருபொருளுடைத்து.

*சொ.கை.*

*அந்தரம் கற்பகம் நந்தாவனம் மால் ஐ யாம் நையம் நேயம்*
*தரம் கற்பு அகம் நந்தா அன்னம் மாலையான் ஐயனே*
*அம் தர கற்பக நம் தாவனம் மாலை யானையனே*
*அந்தரம் கல் பகு அநந்தா அன்ன மால் அயா நயனே.*

*அ.ள்.*

தரம்-மேன்மை. மாலையான்-மாலைக் காலத்தின் கண். அந்தரம்-கேடு. மால் அயம்-பெருமையுடைய ஆடு.

*ப.ரை.*

அந்தரக் கற்பக நந்தா வன மால்ஐ -ஆகாயத்தின்கண் கற்பகம் பொருந்திய நந்தவனத்தையுடைய இந்திரனுக்குத் தலைவனே

யாம் நையம்-யாம் இனி வருந்தேம்.

நேயம் தரக் கற்பு அகம் நந்தா அன்னம்-அன்பும் மேன்மையாகிய கற்பும் அகத்தே குறைவு படாத அன்னம் போல்வாள்

(மாலையான் ஐயனே) ஐயனே மாலையான்-ஐயனே இம் மாலைக்காலத்து

அம் தரகற்ப கநம்-அழகு தரக்கற்பன நின்மேன்மைக் குணங்களே (தாவனமாலை) வனமாலை தா-அழகிய மாலையைத் தந்தருள்க.

யானைய்னே- யானைவாகனமுடையானே

அந்தரக் கல் பகு அநந்தா -கேட்டை விளைத்த கிரௌஞ்ச கிரியைப்பிளந்த அநந்தனே

அன்னமால் அயா-அத்தகைய பெரிய ஆட்டுவாகனமுடையானே

நயனே-நயத்தையுடையானே எ.று.

**வி.ரை.**

நந்தவனம்-நீட்டல் விகாரம் பெற்று நந்தாவனம் என நின்றது

மாலையான்-வேற்றுமை மயக்கம். அயா, நயனே என்பன ஐயா, நையனே என மயங்கின.

இது மாலை விருப்புரைத்தல்.

ஈற்றடியில் வன்னமால் அயா எனப்பிரித்து நிறமுள்ள பெரிய அய வாகனனே எனவும், வனம் ஆலய எனப் பிரித்துச் சோலைகளை ஆலயமாகக் கொண்டு உறைபவனே எனவும், வனமால் ஐ ஆன் ஐ அன்னே எனப் பிரித்துத் துளவமாலை தரித்த திருமாலுக்கும் அழகிய ஆனுக்குத் தலைவனாகிய சிவபிரானுக்கும் தாய் போல்வானே எனவும், திருமாலாகிய அழகிய ஆனுக்குந் தலைவனாகிய சிவனுக்கு அன்னே எனவும் உரைப்பினும் அமையும்.

வனம் முருகனுக்கு ஆலயமாதலைக் காடுங் காவும் கவின் பெறு துருத்தியும் முதலியவாக நக்கீரனார் கூறுமாற்றான் உணர்க.

35. *யாகா சரண விலங்கையற் காயமை யானந்தனே*
*யாகா சரண விலங்கையற் காயமை யானந்தனே*
*யாகா சரண விலங்கையற் காயமை யானந்தனே*
*யாகா சரண விலங்கையற் காயமை யானந்தனே*

இதுவும் அது.

சொஃகை.

*யாகா சரணம் விலங்கு அயற்கு ஆய் அமை*
*ஆ னந்தனே*
*ஆகாசர் அண்ண இலங்கு ஐ. அல் காயம் மையான்*
*அந்தன் ஏயா*
*காசு அரண இலங்கையன் காய் அமையான் நந்தன்*
*நேயா*
*கா சரண் நவில் அம்கையற்கு ஆய மையா நந்து*
*அன்னே.*

**அ-ள்**

ஆய்-ஆய்ந்து. காயம்-உடல். மை-குற்றம். அந்தன்-அந்தகன். ஏயா-ஏயாத. அரண-எச்சம். அமை-அழகு. மை-ஆடு அம் நவிலுக என்க.

*பஃரை.*

யாகா-யாகபதியே

சரண விலங்கு-கால்விலங்கை

அயற்கு ஆய் அமை ஆனந்தனே -அயனுக்குத் தகுமென ஆய்ந்துஅமைத்த ஆனந்த முடையானே

ஆகாசர் அண்ண-விண்ணுலகத்தார் நெருங்கும் வண்ணம்

இலங்கு ஐ-விளங்குகின்ற கடவுளே

அல்காய மையான் -இருள் போலும் நிறம் பொருந்திய தேகத்தையுடைய குற்றமுள்ளானும்

அந்தன் ஏயா-எமனும் எய்துதற்கு அரிய

காசு அரண இலங்கையான்-மணிகள் மிக்க அரணையுடைய இலங்கைக்கு அரசனுமாகிய இராவணனை

காய் அமையான்-கொன்ற அளகனாகிய

நந்தன் நேயா-சங்கமேந்திக்கு நேயனே

காசரண்-காத்தருள்க. நீயே எனக்குப் புகலாம்

(நவில் அம் கையற்கு) கையற்கு அம் நவில் -கையனாகிய எனக்கு அழகு தரும் நெறியை உபதேசித்து அருளுக.

ஆய மையா-உரியனாகிய ஆட்டு வாகனம் உடையானே

நந்து அன்னே-ஆக்கமுடைய அன்னை போல்வானே எ.று

### *விரை.*

ஆய்ந்து என்னும் எச்சம் ஆய் என நின்றது. ஏ, யா, காசு என்ற இயல்பு விகாரவகையாற் கொள்க. அமை-அழகு. "அழகு மூங்கிலும் அமைவும் அமையே" என்பது பிங்கலம். அம்-ஆகுபெயர். அயற்கு,"ஐயற்கு" என நின்றது. அந்தனும் என்னும் உம்மை தொக்கது. அண்ண-இடைக்குறை.

36. *யாமோ தவளக் கரும்பரா வார மனவரனே*
*யாமோ தவளக் கரும்பரா வார மனவரனே*
*யாமோ தவளக் கரும்பரா வார மனவரனே*
*யாமோ தவளக் கரும்பரா வார மனவரனே.*

இஃது முப்பொருளுடைத்து.

### *சொ.கை.*

*யாம் ஓத அளக்க அரு பரா வாரம் மன்ன வரன் ஏயாமோ*
*தவளம் கரும்பு அரா ஆரம் மனவு அரன் ஏய்*
*ஆமோத வளம் கரு பாராவாரம் அன்ன வரல் நேயா*
*மோது அ அளக்கர் உம்பர் ஆவார் அம் மன்ன வரனே*

### *அ-ள்*

வாரம்-அன்பு. கரும்பு-கரும்பு போலும் இனியன் அலக்கரை மோதிய என்க. அளக்கர்-கடல்

முப்பொருள் கந்தனும் சிவனும் கனபதிமுதலாயினாரும்.

### *பரை.*

யாம் ஓத அளக்க அரும்பரா -யாம் துதித்தற்கும், அளவையான் அளத்தற்கும் அரிய கடவுளே

வாரம் மன்ன வரன் ஏயாமோ-அன்பு நிலைபெறுமாறு வரம் அடை யேமோ(அடைவேம்)

தவளக் கரும்பு-வெண்ணிறமுடைய கரும்பு போல்வானும்

அரா ஆரம் மனவு அரன் ஏய் -சர்ப்பாபரணமும் அக்குமணியும் அணிந்த அரனுமாகிய சிவபிரானை ஒத்த

ஆமோத-உவகையுடையானே

வளக்கரும் பாரா வாரம் அன்ன வரல்-வளங்களிற் பெரிய கடலை ஒத்தவனே வருக.

நேயா-நேயனே

(மோது அ அளக்கர்) அ அளக்கர் மோது-அந்தக் கடலை வேலான் மோதிய

உம்பர் ஆவார் அம் மன்ன -தேவர்களுக்கு அழகிய தலைவனே

வரனே-மேலோனே எ.று

### வி-ரை

அளக்க-தொகுத்தல் விகாரம். பாராவாரம் என்பது குறுகி நின்றது. மோதிய மன்ன என இயையும். மன்ன -இடைக்குறை.

### இ.பொ.ரை.

அரனே எனவும் ஏனைய முன் போலவும் பிரித்து யாம் ஓத அளக்க அரிய பரனே தவளக் கரும்பே அரனே ஆமோத முடையானே பாராவாரம் அன்னோனே அப்பிறவிக் கடலை மோதுக. உம்பராவார் மன்னனே வரனே என உரைத்துச் சிவபிரான் பாட்டாகக் கொள்க.

### மூ.பொ.ரை.

வளமுடைய கரிய பாராவாரம் போன்ற கருநிறத்தனே என்றும் பிறவிக் கடலை மோதுக என்றும் ஏனைய முதலுரைத்தாங்கும் உரைத்து விநாயகர் பாட்டாகக் கொள்க.

இதனையே உடனிலைச் சிலேடையால் திருமாலுக்கும் ஐயனுக்கும் இந்திரனுக்கும் கொள்க.

37. *மதியான மாவல மானங்கை யானைய வாவினையே*
*மதியான மாவல மானங்கை யானைய வாவினையே*
*மதியான மாவல மானங்கை யானைய வாவினையே*
*மதியான மாவல மானங்கை யானைய வாவினையே*

இஃது இருபொருளுடைத்து.

*சொ.கை.*

*மதியான் நம் ஆவல் அம்மான் அம் கையான் ஐய ஆவின் ஐ ஏம*
*தியான மா வல்ல மான் அங்கையான் ஐய வா இனையேம்*
*மதி யானம் மா வலம் மால் நங்கை யானை அவாவினை ஏ*

மதியான் அம்மா அலம் மானம் கையா நையவா வினையே.

*அ_ள்*

கை-ஒழுக்சம். ஐய-எச்சம். கையா-கைத்து

இருபொருள் கந்தனும் சிவனும். சிவனுக்கு மூன்றாவது அடியில் மதி ஆல் நம் மா அல்ல எனக் கொள்க. அல்-கரு நிறம்.

*பஉரை.*

மதியான் -முற்றறிவுடையானும்

நம் ஆவல் அம்மான் -நமது அன்பிற்குரிய அம்மானும்

அம் கையான் -அழகிய ஒழுக்கமுடையானும்

ஐய ஆவின் ஐ-அழகிய இடபத்தையுடைய தலைவனும்

ஏம தியான மா வல்ல -(உயிர்கட்கு ) இன்பமாகும் தியானத்தையுடைய மிக்க வன்மை பொருந்திய

மான் அங்கையான் ஐய-மானேந்திய அழகிய கையுடையானுமாகிய சிவபிரானுக்குக் குருவே

வா இனையேம்- வருக; வரின் யாம் வருந்தேம்.

மதி யானம் மா வலம் -மதிக்கப்படும் வாகனமாகிய வெள்ளையானையும் வெற்றியுமுடைய

மால் நங்கையானை அவாவினை- இந்திரன் மகளாகிய தெய்வயானையை விரும்பி மணம் புணர்ந்தோனே மதியான் அம்ம அலம் - சந்திரனால் துன்பம் உண்டாகின்றது.

மானம் கையா நையவா- அதனால் மானத்தை வெறுத்து வருந்தவோ

வினையே- இதுவும் எமது தீவினைப் பயனே போலும் எ-று.

*வி-ரை.*

ஏமதியானம், வடநூன் முடிபு. அம்ம என்னும் இடைச்சொல் அம்மா என நீண்டு இடைக்குறைந்தது. அம்மான், வல்ல-இடைக்குறை. முன் தேவயானையை விரும்பிய நீ இன்று நிலவால் யாம் வருந்தவும் எம்மை விரும்பாமை எமது தீவினை போலும், நீவரின் யாம் வருந்தேம் எனக் கூட்டுக.

இது நிலவு கண்டு வருந்துதல்.

*இபொ.ரை.*

மதியானே நம் ஆவல் அம்மானே அம்கையானே ஐய ஆவின் ஐயே ஏம தியானத்தனே மா வல்லவனே மான் அங்கையானே எனவும், மூன்றாவதடியை மதி ஆல் நம் மா அல்ல எனப்பிரித்து மதிக்கின்ற ஆலிலை மேற் றூங்கும், நமது மாவாகிய இலக்குமியையுடைய கரிய நிறமுள்ள மாலாகிய நங்கையையும், சித்திரத்திலுள்ள ஒரு பெண் யானையையும் முன் விரும்பியவனே எனவும் ஏனைய முன்போலவும் உரைத்துச் சிவபிரான் பாட்டாகக் கொள்க.

மாலாகிய நங்கையையும், யானையையும் அவாவினை என விரிக்க. அத்தகைய நீ இன்று எம்மை விரும்பாமை எமது வினையே என்க.

சித்திரத்திலுள்ள பெண்யானையைக் கண்டு விரும்பி ஆண் யானை உருக் கொண்டு விநாயகரைப் பெற்றார் என்பதும், திருமாலை மோகினி அவதாரத்திற் சேர்ந்தார் என்பதும் புராணகதை. அல்-கரு நிறம். அல்ல-குறிப்புப் பெயரெச்சம். இது இடைக்குறைந்தது.

38. *வாகா சமர சரவண வங்கண வாயினனே*
*வாகா சமர சரவண வங்கண வாயினனே*
*வாகா சமர சரவண வங்கண வாயினனே*
*வாகா சமர சரவண வங்கண வாயினனே.*

இஃது ஒரு பொருளுடைத்து.

*சொ.கை.*

*வா காசு அமர சர வண்ண அம் கண் அவாயினன் ஏ*
*வாகா சமரசர் அவண் அவம் கண்ண ஆயினன் நே*
*ஆகாசம் அரசு அரவு ஆண் அ அங்கண வாயினன்*
*ஏவா*
*கா சமர சரவண வங்சண ஆய் இன்னே*

*அ_ள்*

காசு -குற்றம், அமர -எச்சம். அங்கண்-அன்மொழி. வாகா-வினா.

*பஉரை.*

வா-வருக

காசு அமர -குற்றம் பொருந்திய அமர்த்தலையுடைய

சரவண்ண-அம்பு போன்ற செயலையுடைய

அம் கண் அவாயினன் -அழகிய கண்ணினராகிய பெண்களையே விரும்பினேன்

வாகா-இது அழகாகுமோ

சமரசர் அவண் அவம் கண்ண ஆயினன்-இதனால் நடுவுநிலைமையுடைய மேலோர் அவ்விடத்து எனது பயனற்ற செயலைக் கருதி இரங்குமாறு தீயன் ஆயினேன்.

நே ஆகாச அரசு- அன்பினையுடைய விண்ணுலகத்தாருக்கு அரசனே

அரவுஅண் அ . அங்கண வாயினன் -(யான் தீவினையாகிய) · அரவின்கட்பொருந்திய அந்தச் சலதாரைபோன்ற திறந்த வாயின் கண் அகப்பட்டுக் கிடக்கின்றேன்

ஏவா கா- அம்பையுடையானே அதனின்றும் விலக்கிக் காத்தருள்க.

சமர வரவண வங்கண ஆய் இனனே-போர்த்தொழில் உடையானே, சரவண பவனே, நேசமுடையானே ஆராயத்தக்க ஞான சூரியனே எ-று.

*வி-ரை.*

வண்ண, கண்ண -இடைக்குறை.

ஆகாசம் என்பதில் மகரம் கெடாமை விகாரம்

ஆய் இனனே என்பதற்குத் தாய் போல்வானே, சுற்றம் போல்வானே எனவும், வாய் இனனே எனக் கொண்டு வாய்த்த இனனே எனவும் உண்மையாகிய இனனே எனவும் உரைத்தலும் ஒன்றும், நே பெயராதலின் உயிர் வர வகர உடம்படுமெய் பெற்றது. தீவினையை அரவின் வாய் என்றமையால் அதனை அழிக்க வேண்டும் என்னும் கருத்தால் அதனை அடுத்து ஏவா என்னும் சமர என்றும் கூறினார்.

39. *வாமா வருந்துதிக் கற்பனந் தாதகி மாலையன்றே*
*வாமா வருந்துதிக் கற்பனந் தாதகி மாலையன்றே*
*வாமா வருந்துதிக் கற்பனந் தாதகி மாலையன்றே*
*வாமா வருந்துதிக் கற்பனந் தாதகி மாலையன்றே.*

இஃது இருபொருளுடைத்து.

*மு.சொ.கை.*

*வா மா அருந்துதி கற்பு அனந்தா தகு இமாலையன் தே*

*வாம் மா வருந்து திக்கு அற்பம் நந்தாது அகிமால் ஐ அன்று ஏவு*

*ஆமா வரும் துதிக்கு அற்பன் நம் தாதகி மாலையன் தேவா*

*மா அருந்துதி கற்பு அன்னம் தா தகி மாலை அன்று ஏ*

*அ-ள்*

வாம்மா-வாவும் யானை;ஆதிசேடன். ஆமா -ஆகுமாறு. அற்பன்-அன்பன். மா- பெருமை. இருபொருள் கந்தனும் சிவனும் .

வா மா அருந்துதி -எம் ஊர்க்கு வருக தினைமாவை அருந்திச்செல்லுக.

கற்பு அனந்தா-கலையுணர்ந்த அனந்தனே

தகு இமாலையன் -தக்க மேருமலையாகிய வில்லையுடையனாய்

தே வாம் . மா-கருணையடைய வாவுகின்ற யானைகளாற் சுமக்கப் படுகின்ற

வருந்துதிக்கு அற்பம் நந்தாது-வருந்துகின்ற எட்டுத்திக்கிலும் உள்ளார் சிறிதும் அழியாமல்

அகிமால் ஐ- ஆதிசேடன்மேல் நித்திரை செய்யும் திருமாலாகிய தலைவன்.

அன்று ஏவு ஆமா வரும்-முப்புரத்தோடு போர்செய்யும் அக்காலை அம்பாகுமாறு பூமித்தேரிற்சென்ற

துதிக்கு அன்பன்-அடியார் செய்யும் துதியின்கண் அன்புடையானும்

நம் தாதகி மாலையன்-நம் ஆத்திமாலையுடையானுமாகிய சிவபிரானுக்கு

தேவா-குருவே

மா அருந்துதிக் கற்பு அன்னம் தா-பெருமையையுடைய அருந்ததிபோலும் கற்பொழுக்கத்திற்குரிய அன்னம் போல்வாளுக்குத் தருக.

(தகி ம்ாலை) மாலைத்தகி-அவளது மயக்கத்தை நீக்குக எ-று.

**வி-ரை.**

அருந்ததி அருந்துதி என்பன ஒருபொருட் சொற்கள்.

கம்பரந்தாதியில் அருந்துதி என வந்தமை காண்க.

இமாலயம், 'இமாலையம்' என மயங்கிற்று. பூமித்தேரின் கண் வில்லையுடையனாய் ஏவையுடையனாய் வருவோன் எனக் கூட்டுக.

அற்பமும் என்பதில் உம்மை தொக்கது விகாரம். தகு என்பதில் முற்றுகரக்கேடு இலேசாற் கொள்க. ஆமாறு கடைக்குறைந்தது. அன்பன் வலிக்கும் வழி வலித்து அற்பன் என்றாயிற்று. அன்னத்துக்கு என்பதில் நான்காவது, செய்யுள் விகாரத்தால் தொக்கது.அன்று ஏ-அசை.

இது விருந்து கூறி வரைவு கடாதல்

இனி மா கருமை என்று கொண்டு மா அருந்துதி எனற்குக்கரிய ஆணவ இருளை உண்ணுக எனவும், மா அருந்துதிக் கற்பு, அன்னந்தா எனற்குப் பெருமை பொருந்திய அருந்ததி அன்ன கற்பினையுடைய ஞானம் என்ற பெண்ணைத்தருக எனவும் காம மயக்கத்தை ஒழிக்க எனவும் கூறினும் அமையும்.

### *இ.பொ,ரை*

துதிக்கு அன்புடையானே தாதகி மாலையனே தேவனே எனவும், ஏனைய முன்போலவும் உரைத்துச் சிவபிரான் பாட்டாக்க கொள்க.

40. *மாதவ னாயனந் தாமனை யாய மலைக்கத்தனே*
*மாதவ னாயனந் தாமனை யாய மலைக்கத்தனே*
*மாதவ னாயனந் தாமனை யாய மலைக்கத்தனே*
*மாதவ னாயனந் தாமனைய யாய மலைக்கத்தனே*

**இது முப்பொருளுடைத்து.**

### *மு.சொ.கை.*

(அ-ள்) மாது அவம் நாய் அன்னம் தா மல் நையாய் அம் மல் ஐக்கத்தன் ஏம்; ஆதவன் நாயன் அந் தாமன் ஐ ஆய மலைக்க தன் ஏ; மாதவன் ஆய நந்தாமன் ஐ ஆய் அமலைக்கு அத்தனே; மாதவன் ஆய் அனந்தா மனை ஆய மலைக்கத்தனே.

### *அ-ள்*

மாது-ஆசை-மல்-வலி

முப்பொருள் கந்தனும் சிவனும் பொதுவும்

*பதவுரை.*

மாது அவ நாய் அன்னம்- ஆசையுடைய பயனற்ற நாய்போலும் அடியேங்களது

தா மல் நையாய்- குற்றத்தின் வலிமையைக் கெடுத்தருள்க.

அம் மல் ஐக்கத்தன்-அழகும் வலியும் பொருந்திய ஏகத்தன்மையுடையானும்

ஏம் ஆதவன் - இன்பத்தைக் கொடுக்கும் ஞான சூரியனும்

நாயன் அம் தாமன் ஐ-நாயனும் அழகிய ஒளியுடையானும் கடவுளும்

ஆயமலைக்க-யாவரும் ஆயுமாறு முப்புரத்தொடு போர்செய்தற்கு

தன் ஏ மாதவன் ஆய-தனக்குப் பாணம் திருமாலாகப் பெற்ற

நந்தாமன்-அழியாத மன்னனுமாகிய சிவபிரானுக்கும்

ஐ ஆய் அமலைக்கு- அழகிய தாயாகிய அமலைக்கும்

அத்தனே- செல்வமாகிய புதல்வனே

மாதவன் ஆய் அனந்தா- அகத்தியமுனிவரால் தியானிக்கப் படுகின்ற அனந்தனே

மனை ஆய மலைக்கத்தனே- இருப்பிடமாகிய மலையின் கணுள்ள கருத்தனே எ_று

*இசொகை.*

முதலடியில் ஐக்கத்த நேம் எனவும், இரண்டாவது அடியில் ஆதவன் நாயன் நம் தாமனை எனவும் ஈற்றடியில் மன் நையாய மலை எனவும் கொள்க.

*பொழிப்புரை.*

அமலைக்கு அத்தன் எனற்கு அமலைக்கு அர்த்த பாகம் தந்தோன் எனப் பொருள் கொண்டு ஐக்கத்தனே நியமமுடைய ஆதவனே நாயனே நமது தாமனே மன்னே அமலைக்கு அத்தனே அநநதா நிலைபெற்ற நியாயம் என்னும் மலைமேல் ஏறிநின்ற கர்த்தனே என வுரைத்துச் சிவபிரான் பாட்டாகக் கொள்க. தாமனை -முன்னிலைக்கண் வந்தது.

நியாயம் நையாயம் என்றாயது வடநூன் முடிவு. நியமம் நேமம் என மருவிக் கடைக்குறைந்து நேம் என்றாயிற்று.

*மூபொரை.*

*முன் மூன்றடிக்கு முதலுரை போலவும், ஈற்றடிக்கு இரண்டாவது உரை போலவும் உரைத்துச் சிவகுமாரர் நால்வர்க்கும் உடனிலைச்சிலேடையாற் கொள்க.*

41. *மலையா வருந்தினார்க் கொன்றைத்தா ராதார மாகரமே*
*மலையா வருந்தினார்க் கொன்றைத்தா ராதார மாகரமே*
*மலையா வருந்தினார்க் கொன்றைத்தா ராதார மாகரமே*
*மலையா வருந்தினார்க் கொன்றைத்தா ராதார மாகரமே.*

இஃது இருபொருளுடைத்து.

*மலையா வருந்து இன்னார் கொன்றை ஐ தாரா தார மா கரம் ஏம்*
*மலை ஆவர் உந்தி நார் கொன்றைத்தார் ஆதாரம் ஆ கரம் ஏ*
*மலையா அருந்தினார்க்கு ஒன்று ஐ தாராதாரம் ஆ கரமே*
*மலையா வரும் தின்னார்க்கு ஒன்றை தாராதார் அம்ம கரமே.*

*(அ-ள்)*

மலையா-மலைத்து. தார்-சேனை, மாலை . உந்தி-யாறு, கரம், நஞ்சு. மலைதல்-அணிதல். கரம்-கழுதை.

பொருள் கந்தனும் கணபதியும்.

*பரை.*

மலையா வருந்து இன்னார்க் கொன்றை -போர் செய்து வருந்துகின்ற பகைவரைக் கொன்ற

ஐ தாரா-பெரிய தேவசேனையுடையானே

தார-வெற்றி மாலையுடையானே

மாகரம் ஏம் மலையாவர்-பெருமை தங்கிய கரத்தில் பொன்மாலையாகிய வில்லை உடையவராவாரும்.

உந்திநார்க் கொன்றைத்தார்- கங்கையாற்றையும், அடியார் அன்பாற் புனையும் கொன்றைமாலையையும் உடைய

ஆதாரம் ஆ- எப்பொருளுக்கும் ஆதாரமாகிய

(கரம் மலையா அருந்தினார்க்கு) கரம் அருந்தா மலைந்தார்க்கு-விடத்தையுண்டு (கண்டத்தின் கண்) அணிந்தவராகிய சிவனார்க்கு

ஒன்று ஐ தாரா தாரம் -பொருந்திய குருவாகிய மேகமே

ஆகரமே-புருடார்ந்தங்களுக்கு உறைவிடமே

மலையாவரும் தின்னார்க்கு -பசியால் மயங்கித் தம்பால் வருகின்ற உண்ணுதலில்லாராய வறியார்க்கு

ஒன்றைத்தாராதார்- ஒரு பொருளுங் கொடாதார்

அம்ம கரமே-மக்கட் பிறப்பினராயினும் விலங்கினுள்ளும் இழிந்த கழுதையே ஆவர்.

***விரை.***

இன்னார், தின்னார்க்கு, அம்மா-இவை இடைக்குறை. மலையா -வினையெச்சம். ஏமம்-கடைக்குறை. கொன்றை யென்பதன் ஈறு தொக்கது. மலையா அருந்தினார்க் கென்பது விளங்கற் பொருட்டு அருந்ததி மலைந்தாரென மாற்றி யுரைக்கப்பட்டது. ஈயாதார், ஈட்டல் காத்தல் முதலிய வற்றால் வரும் துன்பத்தை எய்தலன்றிப் பொருளாற்பயனெய் தாமையின் ஆடை சுமந்து செல்லும் துன்பத்தையே அன்றி அதனாற் பயன் எய்தாத கழுதையோடு உவமிக்கப்பட்டார். அம்ம என்னும் உரையசை நீண்டு அம்மா என நின்றது. ஈண்டு ஈகை அறத்தினுட் சிறந்ததெனக் கூறினமையின் இது பொருண்மொழிக் காஞ்சியின் பாற்படும்.

*இ.பொ.உரை*

ஐதாரா என்றற்குப் பெரிய பூத கணத்தையுடையானே என்க. கரம் ஏமமலை என்றற்குக் கையினையுடைய பொன்மலை போல்வானே என்க. ஆவர்-ஆவினையுடைய சிவனார் என்க.

ஒன்று ஐதாரா தாரம் என்றற்குப் பொருந்திய அழகிய மேகம் போல்வானே என்க. ஏனைய முன்போல உரைத்து விநாயகர் பாட்டாகக் கொள்க.

*42. மானாக மஞ்சு வணக்கே தனத்த மதனத்தனே*
*மானாக மஞ்சு வணக்கே தனத்த மதனத்தனே*
*மானாக மஞ்சு வணக்கே தனத்த மதனத்தனே*
*மானாக மஞ்சு வணக்கே தனத்த மதனத்தனே.*

இது நாற் பொருளுடைத்து.

*மு.சொ.கை.*

*மால் நாகம் அஞ்சு வணக்கு ஏது அனத்த மது அன்னத்தன் நே*
*மால் நாகம் மஞ்சு வண்ணம் கேதம் நத்து அம் மதன் நத்தன் ஏம்*
*மால் நாகம் அஞ்சு உவணகேதனத்து அம் மதனத்தன் ஏம்*
*மால் நாகம் அம் சுவணம் கேதன் அத்த மதன் அத்தனே.*

*ப.உரை.*

மால் நாகம் அஞ்சு வணக்கு- அவா என்னும் யானைகள் ஐந்தனையும் (என்னை வருத்தாது) வணக்குக

(ஏது அனத்தமது ) அனத்தமது ஏது-பின் கேடெனப் படுவது யாது? இல்லையாம்.அன்னத்தன் நேமால் நாகம் - பிரமனுக்கும் அன்பினையுடைய இந்திரனுக்கும் விண்ணுலகத்தார்க்கும்

மஞ்சு வண்ணம்-மேகம் போலும் கரிய நிறத்தையுடைய

கேதம் நத்து அம்மதன்-துன்பத்தை விளைக்கும் விரும்பும் அழகினையுடைய மன்மதனுக்கும்.

நத்தன்-சங்க மேந்தியும்.

ஏம் மால் நாகம் அஞ்சு உவண கேதனத்து - ஏமமாகிய பெரிய நாகங்கள் அஞ்சும் கருடக் கொடியையுடைய அம் மதனத்தன் - கடல்நீரைக் கடைதல் உடையானும்

ஏம் மால் -இனிய மாலும்.

நாகம் அம் சுவண கேதன் - ஆடை அழகிய பொன்னொளி உடைத்தாகப் பெற்றவனும் ஆகிய விண்டுவுக்கும்

அத்த-தலைவனே

மதன் அத்தனே - வலியுடைய தந்தையே எ-று.

***வி-ரை.***

அனத்தமது என்பதில் அது பகுதிப் பொருள் விகுதி. இரண்டாவது அடியீற்றில் மதன அத்தன் எனப்பிரித்து மதனுக்கு அத்தன் மஞ்சு வண்ணத்தையுடைய அத்தன் என உரைத்து ஈற்றடியில் அத்தன் என்பதற்குச் செல்வம் போன்றவன் எனக் கூறினும் அமையும்.

உவணக் கேதனம், சுவணக்கேது என்பன, "*சீதக் களபச் செந்தாமரைப் பூம்பாதச் சிலம்பு*", "கந்தப்புராணம் பதினாயிரம் சொன்ன கச்சியப்பர்" என்பவற்றிற் போல எதுகை நோக்கி வலிமிக்கன. மூன்றாம் அடியில் அம் மனத்தன் என்பதை அம்மதனத்தன் எனப்பிரித்து அழகு மிகுதியையுடையான் எனவுரைத்து மேலுள்ள அம் மதன் என்பதற்கு அந்த மதன் எனச் சுட்டாக்கினாலும் அமையும். இன்னும் அம் மதம் நத்தன் எனப் பிரித்து நீரில் உண்டாகிய வலிய சங்குமுடையான் எனவுரைத்து இரண்டாவது அடியில் மதன் அத்தன் எனப்பிரித்து மதனனுக்கு அத்தன் எனக் கூறலும் ஒன்று.

புலன்கள் ஐந்தாகலான் அவற்றின்கட் செல்லும் அவாவும் ஐந்தாயிற்று. இரண்டாவது நாகம் ஆகு பெயர்.

அன்னத்தன் இடைக்குறை.

உடனிலைச் சிலேடையால் இதனையே விநாயக்கருக்கும் சிவபெருமானுக்கும் கொள்க

*இ.பொ.ரை.*

இரண்டாவது அடி மதன் அத்தனே எனவும், மூன்றாவடி கேதனத்த மதநத்தனே எனவும் ஏனைய முன்போலவும் பிரித்து அன்னத்தனுக்கும் நேயமுடைய மாலுக்கும் நாகர்க்கும் மஞ்சு வண்ணத்தையுடைய தேகத்தை நத்துகின்ற அழகிய மதனுக்கும் செல்வம் போன்றவனே, மால் நாகம் அஞ்சும் உவண கேதனத்தனே வலிய சங்கமேந்திய சுவண கேதனே எங்கள் பிதாவே வலிய தலைவனே எனவும் ஏனைய முன்போலவும் உரைத்துத் திருமால் பாட்டாகக் கொள்க.

*மூ.பொ.ரை.*

இரண்டாவது அடி, மதன் அத்தன் எனவும் ஈற்றடி கேதன் அத்தம் எனவும் ஏனைய முன் போலவும் பிரித்து அன்ன வாகன முடைய பிரமனும் அன்புடைய இந்திரனாகிய மாலுக்கும் நாகர்க்கும் மதனுக்கும் அத்தனும் உவண கேதனத்து அம் மதனத்தனும் ஏம்மாலும் சுவண கேதனுமாகிய விண்டுவை ஒரு பாதி வடிவிற்

கொண்ட வலிய தந்தையே எனவும் ஏனைய முன்போலவும் உரைத்து சிவபிரான் பாட்டாகக் கொள்க.
நா.பொ.ரை.

அன்னத்தனை எனவும் மதன் அத்தனே எனவும் கேதன் அத்தம் எனவும் ஏனைய முன்போலவும் பிரித்து அன்னத்தனே, இந்திரனாகிய மாலே, நாகரே, மதனுக்கு அத்தனாகிய திருமாலே, உவணகேதனத்து அம் மதனத்தனும் மாலும் சுவண கேதனுமாகிய விண்டுவை ஒரு பாதியிற் கொண்ட வலிய தந்தையாகிய சிவபிரானே எனவும் ஏனைய முன் போலவும் உரைத்து வணக்கு என்னும் பயனிலையைத் தனித்தனி கூட்டி வினைமுடிவு செய்து மூவர்க்கும் தேவர்க்கும் பொதுப்பாட்டாகக் கொள்க.

43. *மதியம ராச னமருந் திலையோக மன்னிலையே*
*மதியம ராச னமருந் திலையோக மன்னிலையே*
*மதியம ராச னமருந் திலையோக மன்னிலையே*
*மதியம ராச னமருந் திலையோக மன்னிலையே*

இஃது ஒருபொருளைடைத்து.

*சொ.கை.*

மதி அமர் ஆசனம் மருந்து இல்லை யோகம் மன் இல் ஐயே மதி அம்ம ராசன் அமரும் தில்லையோ கமம் நிலை ஏம் அது இயமர் ஆச நமர் உந்தில் ஐயோ கம் மன் இல்லையே

மதி அமர அசனம் அருந்திலை யோகம் மன்னிலையே.

*பஎரை.*

(மதி அமர் ஆசனம்) மதி ஆசனம் அமர் - அறிவே (சுவத்திக முதலிய) ஆசனங்களில் பொருந்தி (நிட்டை கூடுக)

மருந்து இல்லை - (பிறவிப் பிணிக்கு) இஃதொப்பதோர் மருந்து பிறிதில்லை

யோகம் மன் இல் - யோகத்தாற் காணும் பெருமையையுடைய ஆறாதாரம் ஆகிய வீட்டின்கண் விளங்குகின்ற ஐயே மதி அம்ம கடவுளையே நீ தியானம் செய்க

ராசன் அமரும் தில்லையோ கமம்-நடராசன் விரும்பும் சிதம்பரமோ பூரணமாகிய தன்மையுடையது. நிலை-நீ அவ்விடத்து நிலைபெறுக.

(ஏம் அது) அது ஏம் - அதுவே பேரின்பமாவது

(இயமர் ஆச நமர்)ஆச நமர்இயமர் -குற்றமுடைய சுற்றத்தாரோ கூற்றுவராவர்

உந்தில் -அவர்பால் நீ மனத்தைச் செலுத்தின்

ஐயோ கம் மன் இல்லையே - அந்தேர விண்ணுலகினில் ஏறுதல் இல்லாமல் போமே

மதி அமர ஆசனம் அருந்திலை-சந்திரனிடத் துளதாகும் தேவரு ணவாகிய அமிர்தமும் அருந்தாய்

யோகம் மன்னிலையே -இவ்வுலகத்தும் உயர்வை அடையாயே. அதனால் அவர் உறவை ஒழித்து யோகுபுரிக எ-று.

*வி-ரை.*

அஃது என்பது அது என விகாரத்தால் தொக்கது. அமராசனம் வட நூன் முடிவு.

*"யோகமே தியானம் கூட்டம், உபாயமாம் உயர்ச்சிக்கும் பேர்"*

*என்பது சூ டாமணி.*

இல்லை, அம்ம, தில்லை -இவை இடைக்குறை.

கமந்நிலை-விரித்தல் விகாரம். ஏமம்-கடைக்குறை. இதனை உடனிலைச் சிலேடையால் ஏனைத் தேவர்க்கும் கொள்க.

44. *மதவாத வாரவா ரத்தா ரகனட்ட வாகத்தனே*
*மதவாத வாரவா ரத்தா ரகனட்ட வாகத்தனே*
*மதவாத வாரவா ரத்தா ரகனட்ட வாகத்தனே*
*மதவாத வாரவா ரத்தா ரகனட்ட வாகத்தனே*

இது முப்பொருளுடைத்து.

*மு.சொ.கை.*

*மத ஆத வார வாரம் தாரகன் அட்டவாகு அத்த நேம் ஏம்*
*தவாத வார ஆர் அ தாரகன் நட்டம் ஆ கத்தன் ஏம்*
*மத ஆத வார வாரத்து ஆர் அகன் அட்ட ஆகத்தனே*
*மத வாத ஆரவாரத்தார் அகம் நட்ட ஆகு அத்தனே.*

*பஉரை.*

மத ஆத-மதம் பொருந்திய அறிவிலாதான் ஆகிய, வார வாரத் தாரகன் அட்ட - கவசம் பூண்ட தாருகன் என்னும்

யானை முகாசூரனைக் கொன்ற, தவாத வார - நீங்காத கருணையுடையானே

வாகு அத்த நேம் - புயவலியுடைய அத்தனே நியமம் உடையவனே

ஆர் அ தாரகன் - ஆத்தி மாலை அணிந்த அந்தப்பிரணவப் பொரு ளாய் உள்ளானும்

நட்ட ஆகத்தன் - நடஞ் செய்கின்ற இடபவாகனத்தையுடைய

கர்த்தனுமாகிய சிவ பிரானுக்கு

ஏம்மத ஆத -இனிய வலிய குருவே

வார -வருக

(வாரத்து ஆர் அகன்) அகன் வாரத்து ஆர் -என் மனத்தின் அன்பின் கட் பொருந்துக.

அட்ட ஆகத்தனே -ஐம்பூதம் இரவி மதி ஆன்மா என்னும் எட்டாகிய வடிவங்களையுடையானே

மதவாத ஆரவாரத்தார் அகம்-மதவாதமாகிய ஆரவாரத்தை யுடையார் அகத்து

நட்ட ஆகு அத்தனே -அவர் விரும்பிய வடிவங்களாகின்ற பொருட்டன்மையுடையானே எ-று

***விரை.***

வாரவாரம் -கவசம். இது வாரவாணம் என்னும் வடமொழிச் சிதைவு வர என்னும் வியங்கோள் வார என நீண்டது. அகம் ஏழனுருபு அது அகன் என மயங்கிற்று ஏமம் -கடைக்குறை.

***இ.பொ.ரை.***

முதலடியில் தார் அகன் எனவும் இரண்டாவதடி தாரகம் நட்ட ஆகு அத்தனே எனவும் பிரித்து மதம் பொருந்திய கவசம் பூண்ட சேனையின் நடுவே நின்ற கயமுகா சூரனை அட்ட அழகிய கைகளையுடையவனே, அத்தாரகமாகிய பிரணவத்தே காட்டிய ஆகு வாகனத்தையுடைய மெய்பொருளே எனவும் ஏனைய முன்போலவும் உரைத்து விநாயகர் பாட்டாகக் கொள்க. தார்-சேனை.

*மூபொ. ரை.*

தார் அகன் எனவும் தாரகம் கெட்ட ஆகத்தனே எனவும் தாரை அகத்தே அணிந்த யானை முகாசூரனை அட்ட அத்தனே நேமனே வார தாரக மாயவனே ஆவினையுடைய கத்தனே ஆதனை அட்ட ஆகத்தனே அகம் நட்ட வாகு அத்தனே எனவும் ஏனைய முன்போலவும் உரைத்துச் சிவபிரான் பாட்டாகக் கொள்க

45. *வானக மண்டல மாசுக மார னகமனையே*
*வானக மண்டல மாசுக மார னகமனையே*
*வானக மண்டல மாசுக மார னகமனையே*
*வானக மண்டல மாசுக மார னகமனையே*

இஃது ஒருபொருள் உடைத்து.

*சொ.கை*

*வால் நகம் மண் தலம் ஆசுகம் ஆரல் நகு அம் அன்னையே*
*வானக மண்டல மாசு உகு அம் ஆர் அனக மண் ஐயே*
*வான கமண்டல மா சுகம் ஆரம் நகம் மன் ஐயே*
*வா நக மண்டு அலம் ஆசுகம் மாரன் அகம் அல் நையே*

*ப.ரை.*

வால் நக மண் தலம் -தூயமலைகளையுடைய மண்ணாகிய தளமும், ஆசுகம் -காற்றும்

ஆரல் நகு அம் அன்னையே - அக்கினியாகிய விளங்குகின்ற நீரின் அன்னையும்

வானக மண்டல -ஆகாய மண்டலமும்

மாசு உகு அம் - மாசு போக்குதற்குரிய நீரும் என்ற ஐம்பூதத்தினும், ஆர் அனக - நிறைந்த அனகனே

மன் ஐயே - நிலை பெற்ற அழகனே

வானக மண்டல மாசுகம் -மேலாகிய கமண்டலத்தையும் மிக்க சுகத்தையும் உடைய.

ஆர நக மன் ஐயே - சந்தன மரங்களையுடைய பொதிய மலையின்கண் உள்ள அகத்தியருக்குக் குருவே

(வாநக ) நகவா - யாம் விளங்க வருக

மண்டு அலம் ஆசுகம்-நெருங்கிய துன்பத்தைச் செய்யும் பஞ்ச பாணத்தையுடைய

மாரன் அகம் அல்நையே - மாரனால் விளையும் பாவத்தையும் ஆணவ இருளையும் அழித்தருள்க. எ-று.

**வி-ரை**

தீயினின்றும் நீர் பிறத்தலின் அத்தீ அம்மனை எனப்பட்டது

'அம்மனைக் கம்மனை என்பது ஆழ்வார் பாரதம் அகத்தியருக்குச் சிலகாலம் குருவாதலின் உடனிலினைச் சிலேடைப் பொருளைச் சிவப்பிரானுக்கும் கொள்க. அகத்திய முனிவர் பூசித்த கடவுளே என வுரைத்து விநாயகர்க்கு ஆக்குக.

நகு என்பதன் உகரக் கேடு இலேசாற் கொள்க. அம்அனை அம்மனை எனத் தொகுத்தல் பெற்றது. அன்னை இடைக்குறை. சுகம் அகம் என்பவற்றின் மகரம், கெடாமை விகாரம். மன்ஐயே என்பன மனையே எனத்தொக்கு நின்றன. அல் என்பதன் ஈற்று லகரம் விகார வகையாற் கெட்டது.

46\. *மகவான வாவிய நாட்டந்த வங்கண வாரலையே*
*மகவான வாவிய நாட்டந்த வங்கண வாரலையே*
*மகவான வாவிய நாட்டந்த வங்கண வாரலையே*
*மகவான வாவிய நாட்டந்த வங்கண வாரலையே*

இஃது இருபொருளுடைத்து.

*முடிசொகை*

*மகவான் அவாவிய நாட்டு அந்த அம் கண்ண*
*ஆரலையே*
*மகவானவாவி அந்நாள் தந்த அங்கு அணவு ஆரல்*
*ஐ ஏம்*

*மகவு ஆனவா வியம் நாட்கம் தவம் கண்ண ஆர்*
*அலையேம்*

அக வான ஆவி அம் நாட்டு அந்த வங்கண வாரலையே

*பதவுரை.*

மகவான் அவாவிய நாட்டு அந்த - இந்திரன் விரும்பிய நாட்டிற்கு அழகு செய்தோனே

அம் கண்ண ஆரலையே (சிவனது) அழகிய நெற்றிக் கண்ணிடத் துண்டாகிய தீப்பொறிகளையே

மகவான வாவி-மகத்தாகிய மேன்மை பொருந்திய சரவணப் பொய்கையின்கண்

அந்நாள் தந்த அங்கு-(தீக்கடவுளும் காற்றின் கடவுளும்) அந்நாளிலே உய்த்த அவ்விடத்தில்

அணவு ஆரல் ஐ ஏம் மகவு ஆனவா-(நெருங்கிய கார்த்திகைப் பெண்களுக்கு) அழகிய இனிய புதல்வன் ஆனவனே

விய நாட்டத்தவம் கண்ண ஆர்-மேன்மை நாடுதலுடைய தவ ஒழுக்கத்தைக் கருதுமாறு எம்மிடத்துப் பொருந்துக.

அலையேம் - யாம் வருந்தேம்

அக வான-எம் மனத்தின்கணுள்ள தேவனே.

ஆவி -உயிர் போல்வானே

அம் நாட்டு -அழகை நிலை நாட்டுக

அந்த வங்கண-முடிந்த நேசமுடையானே

வாரலையே-நீ எம்மிடத்து வாராயோ எ-று

*வி-ரை*

கண்ண, அந்நாள் -இவை இடைக்குறை. ஏமம்-கடைக்குறை நாட்டத்தவம் - நாட்டந்தவமெனத் தொடைநோக்கி மெலிந்தது

*இ.பொ.ரை*

மகவான் நாட்டுக்கு அழகு செய்தோனே, அங்கணனே,

நின் கண்ணிற் றோன்றிய தீப்பொறிகளை வாவியிற்றந்த

அந்த நாளில் அப்பொறிகள் கார்த்திகைப் பெண்களுக்கு மகவாகியவாறென் என்று வியப்பாகக் கொண்டுரைத்துச் சிவபிரான் பாட்டாகக் கொள்க.

47. *வானம் பரனகத் தானந் தவத்திர மாறனன்றே*
*வானம் பரனகத் தானந் தவத்திர மாறனன்றே*
*வானம் பரனகத் தானந் தவத்திர மாறனன்றே*
*வானம் பரனகத் தானந் தவத்திர மாறனன்றே*

இஃது ஒருபொருளுடைத்து.

*சொ.கை.*

*வான் அம்பரம் நகு அத்த அனந்த வத்திரம் மால் தனன் தே*
*வால் நம்பர அனகதானம் தவந்திறம் ஆறு அன்னன் தேவு*
*ஆம் நம் பரன் அகத்து ஆனந்தம் அத்திரம் மாறன் நன்று ஏ*
*வான் அம் பரநகத்தான் அந்தம் வத்திரம் ஆறன் அன்று*

*பஉரை.*

வான் அம்பரம் - மேலாகிய திருப்பாற் கடலையும்

நகு அத்த அனந்த வத்திரம்-விளங்குகின்ற பொன்னிற மாகிய அழிவில்லாத ஆடையையுமுடைய. மால்தனன் திருமாலுக்குச் செல்வம் போன்ற மருகனும்

தே வால் நம்பர - கருணையும் தூய்மையும் உடைய சிவபிரனுக்கு அனக தானம் தவத்திரம் ஆறு அன்னன் பாவமில்லாத கொடையும் தவத்திலையும் ஒழுக்கமும் ஆகியவற்றின் பயனை ஒத்த புதல்வனும்

தேவு அம் நம் பரன் - தேவனாகிய நமது பரனும்

அகத்து ஆனந்த அத்திர மாறன் - அகத்தின்கண் ஆனந்த முடையு அம்பையுடைய உக்கிர பாண்டியனுக்கும்

நன்று வான் அம்பர நகத்தான் - நன்மை பொருந்திய ஆகாசமளாவிய அழகிய திருப்பரங்குன்றத்தில் உள்ளானும் அந்த வத்திரம் ஆறன் -அழகிய ஆறுமுகங்களை யுடையானே யாம் எ-று.

**வி-ரை.**

அத்தானந்தம் வடநூன்முடிவு.

அனகத்தானம் - உவணக் கேதனம் என்புழிக் கூறியாங்குக் கொள்க

அன்னன்-இடைக்குறை. அன்று, ஏ-இவை அசைநிலை.

48. *மாறா மனேகந் தரம ணியன மனத்தினனே*
*மாறா மனேகந் தரம ணியன மனத்தினனே*
*மாறா மனேகந் தரம ணியன மனத்தினனே*
*மாறா மனேகந் தரம ணியன மனத்தினனே*

இஃது இரு பொருளுடைத்து.

*மு.சொ.கை.*

*மாறா மன்னே கந்து அர மண் இயல் நம் மனத்தினனே*
*மால் தாமனே கந்தரம் அண்ணியன் அம் அன்னத்தினன்*
*ஏமாறா மன்னே கந்தரம் மணி அன்ன மன் நத்தினன் ஏம்*
*மாறு ஆம் அனேகம் தரம் அணியன் நமன் நத்தினனே.*

*ப.உரை.*

மாறா மன்னே - மாறனே எம்மிடத்து மன்னுக

கந்து அர - பற்றுக் கோடாவைனே, எப்பொருட்கும் இறையே

மண் இயல் - மண்ணுலகத்தில் வசிக்கின்ற

நம் மனத்தினனே - எம் மனத்தினும் உள்ளானே

மால் தாமனே - பெருமை பொருந்திய ஒளியுடையானே

கந்தரம் அண்ணியன் -மேகவாகனத்திற் பொருந்திய இந்திரனும்

அம் அன்னத்தினன் - அழகிய அன்ன வாகனத்தையுடைய பிரமனும்

ஏமாறா மன்னே -துன்பம் அடையாதிருத்தற்குக் காரணமாகிய மன்னனே

கந்தரம் மணி அன்ன மன் - கண்டத்தின் நிறம் நீலமணியை ஒத்த கடவுளுக்கும்

நத்தினன் - சங்கமேந்திய திருமாலுக்கும்

ஏம் - இன்பமாகியவனே (மாறு ஆம் அனேகந்தரம் அணியன் நமன் ) அனேகந்தரம்

மாறு ஆம் நமன் அணியன் -முற்பிறப்புக்களில் பன்முறை பகையாகி உயிர்வெளவிய இயமனோ சேய்மையில் இலன்; அண்மையில் இருக்கின்றான் ஆதலான் நத்தினன் - அவன் பகை ஒழியுமாறு நின்னை விரும்பினேன் எ-று

***வி-ரை***

மன்னே, அண்ணியன், அனனத்தினன், அன்ன -இடைக் குறை, மண்ணியல், நம்மனம், மாற்றாமனே - இவை தொகுத்தல்.

*இ.பொ.ரை.*

முதலடி மால் தரம் அன்னே எனப்பிரித்து மயக்கத்தைக் கடந்த அன்னையே கந்தாயவனே அரனே கந்தர மணியன்ன மன்னே நத்தினனுக்கு ஏமமே எனவுரைத்துச் சிவபிரான் பாட்டாகக் கொள்க.

*49. மன்னா வலாரிய னந்தனை யந்தன மானவனே*
*மன்னா வலாரிய னந்தனை யந்தன் மானவனே*
*மன்னா வலாரிய னந்தனை யந்தன மானவனே*
*மன்னா வலாரிய னந்தனை யந்தன மானவனே.*

### சொகை

*மன்னா வலாரியன் நந்தனை அம் தனம் ஆனவனே*
*மல் நாவலர் இயல் நந்த நயந்தனம் ஆனவன் ஏம்*
*மண் ஆவல் ஆரியன் நந்தன் ஐ அந்தண் அ*
*மானவன் ஏம்*
*அன்னா அல் ஆர் இயல் நந்த நை அந்தம் நம்*
*மானவனே.*

### பஞை

மன்னா -மன்னனே

வலாரியன் நந்தனை -இந்திரனுடைய குமாரத்திக்கு

அம் தனம் ஆனவனே -அழகும் செல்வமும் ஆயவனே

மல் நாவலர் இயல் நந்த நயந்தனம் -வளமிக்க புலவரது தன்மை எமக்கும் வளருமாறு விரும்பினேம்

ஆனவன் -இடப வாகனம் உடையானும்

ஏம் மன் ஆவல் ஆரியன் - இனிமை பொருந்திய கருணையுடைய மேலோனும்

நந்தன் ஐ -சங்கத்துக்குத் தலைவனும்

அந்தன் -அழகனும்

அ மானவன் -அந்த மானேந்தியும் ஆகிய சிவபிரானுக்கு

ஏம் அன்னா - பொன்னையொத்த புதல்வனே

அல் ஆர் இயல் நந்த நை-ஆணவ இருளிற் பொருந்திய எம் இயல்பைக் கெடுக்கும்படி அழித்தருளுக

அந்தம் -கடைநாளில்

நம் மானவனே- நமது பெருமையுடையானே எ-று

### வி-ரை

அந்தத்தில் நை என இயையும்.

நயந்தனம், நையந்தனம் என்றாயிற்று. ஏமம் -கடைக்குறை. அம்மானவன், நம்மானவன், ஆவலாற் -தொகுத்தல், அன்னா-இடைக்குறை.

50. *மாசுவர்க் கம்பர வையா கரணனா மாயவையே*
*மாசுவர்க் கம்பர வையா கரணனா மாயவையே*
*மாசுவர்க் கம்பர வையா கரணனா மாயவையே*
*மாசுவர்க் கம்பர வையா கரணனா மாயவையே*

இது நாற்பொருளுடைத்து

**முசொ.கை**

*மாசு உவர் கம் பரவை ஆகு அரணன் ஆம் மாய*
*ஐ ஏ*
*மாசு வர்க்கு அம்பு அரவு ஐ ஆகா அண்ணல் நாம்*
*ஆய ஐயே*
*மாசு உவர்க்கம் பர வையாகரணம் நாம் ஆய ஐ ஏம்*
*ஆ சுவர்க்கம் பரவு ஐயா கரணம் நாம் மாய வை ஏ*

**பரை**

மாசு உவர் கம்-அழுக்குப் படர்ந்த உவர்ப்பாகிய நீரையுடைய

பரவை ஆகு அரணன் ஆம் - சமுத்திரம் என்னும் அரணையுடையனாகிய மாய ஐ -மாயனாகிய தேவனுக்கும்

மாசு வர்க்கு அம்பு அரவு ஐ ஆகா-மேகவர்க்கத்தையும் கங்கை நீரையும் அரவையும் அணிந்த அழகிய தேகத்தையுடைய யார்க்கும்

அண்ணல் நாம் ஆய ஐயே- பெருமையும் கீர்த்தியுமாகிய ஐயனே

மாசு உவர்க்கம் -யாம் குற்றங்களை வெறுக்கோமாயினும்

பர வையாகரணம் நாம் ஆய -மேலாகிய வியாகரணத்தை யாங்கள் ஆயுமாறும்

ஐ ஏம் ஆ -எமக்குப் பரமானந்த முளதாமாறும்

சுவர்க்கம் பரவு ஐயா -சுவர்க்கத் திருப்போர் பரவுகின்ற அழகனே

கரணம் நாம் மாய வை-அந்தக் கரணங்களும் அச்சமும் மடியுமாறும் கருணைவைத்தருள்க எ-று.

**வி-ரை**

வியாகரணம் ஆயுமாறும் ஐ ஏமம் உளதாமாறும் கரணமும் நாமும் மடியுமாறும் கருணைவையெனக் கூட்டுக. வர்க்கம் -கடைக் குறைந்து வர்க்கு என நின்றது. அண்ணல் -இடைக்குறை

வையா கரணம் என்றாயது வடநூல் முடிபு. ஏ-அசை

இதனை உடனிலைச் சிலேடையாக விநாயகர்க்குங் கொள்க.

**இ.பொ.ரை**

*மாய ஐ யே-யாகா - அண்ணல் எனப் பிரித்து*
*மாயனுக்கு ஐயனே*
*மாசுவர்க்கத்தையும் அம்மையையும் அரவையும்அணிந்த*
*ஐயனே*

யாகஞ்செய்யும் முனிவருக்கு அண்ணலே, கீர்த்தியுடையனாகிய அழகனே எனவுரைத்துச்சிவபிரான் பாட்டாகக் கொள்க. இதனையும் சிலோடையால் விநாயகர்க்குங் கொள்க.

**மூ.பொ.ரை**

மாயனாகிய ஐயனே எனவும் ஏனைய முதலுரை போலவுங்கொண்டு திருமால் பாட்டாகக் கொள்க.

**நா.பொ.ரை**

*மாயனாகிய ஐயே, அரவு முதலாயின அணிந்த*
*ஐயனே யாகர்க்கு அண்ணலும்*
*நாமேயாகிய பிரமனே, சுவர்க்கம் பரவும் ஐயனாகிய*
*உருத்திரனே என*
***உரைத்து வை என்பதைத் தனித்தனி கூட்டி***
***வினைமுடிவு செய்து மூவர்க்கும் தேவராசனுக்கும்***
***கொள்க.***

51. *மாலோக வித்த கவலைக்கண் டீரவ மாதவனே*
*மாலோக வித்த கவலைக்கண் டீரவ மாதவனே*
*மாலோக வித்த கவலைக்கண் டீரவ மாதவனே*
*மாலோக வித்த கவலைக்கண் டீரவ மாதவனே*

இஃது இருபொருளுடைத்து.

*சொகை*

*மாலோ கவித்த கவலை கண் தீர் அவமா தவ நே*
*மா லோகவித்து அகவு அலைக்கண் தீர அம்*
*ஆதவன் ஏ*
*மால் ஓ கவி தகவல் ஐ கண்டீரவம் மாதவன் ஏம்*
*ஆலோக வித்தக அல்லை கண்டு ஈரவம் மாதவனே*

*பரை*

மாலோ கவித்த -மேகமோ மூடிக் கொண்டது

கவலைக் கண்தீர் -ஆதலால் தலைவியின் கவலையைக் கருதுக; தீர்த்தருள்க.

அவமா -இது அவமாகுமோ? ஆகாது.

தவ நே மா லோகவித்து -மிக்க அன்பினையுடைய பெரிய

உலக காரணனே

அகவு அலைக்கண் தீர -ஒலிக்கின்ற கடலின் கணுள்ள தீரனும் அம் ஆதவன் அழகிய (ஒளியால்) ஆதவனை ஒப்பானவனும்

மால்-மாலும்

கவி தகவல் ஐ கண்டீரவம் - குரங்குச் சேனையையுடைய தகுதி பொருந்திய பெரிய நாரசிங்கனும்

மாதவன் -மாதவனுமாகிய விண்டுவுக்கு

ஏம் ஆலோக -இனிமை செய்யும் பிரகாசப் பொருளே

வித்தக -வித்தகனே

(அல்லை கண்டு ஈர) ஈர அல்லைகண்டு - ஈரமுடையானே இவ்விரவினை நோக்கி

வம் மாதவனே -வருக மிக்க தவ முதல்வனே எ-று

***வி-ரை***

கவித்தது -கடைக்குறைந்தது. கண் -ஏவன்முற்று

ஓ-அசை அல்லை -இடைக்குறை. அலை ஆகுபெயர்.

தகவல் என்பதில் அல் சாரியை. தொடையல், வளையல் என்பனபோல இதனை விகுதிமேல் விகுதி எனக் கொள்வாரும் உளர். அவரும் சாரியை எனக் கொள்ளாமைக்கக் காரணம் உரையமையானும் ஈற்றில் வரா என்பது கருத்தாயின் ஆமா கோஉள முதலியன னகரமும் அம்மும் ஈற்றிற்பெற்று வருதலானும் பேராசிரியர் முதலானோர் சாரியை எனவே கொண்ட மையினும், அற்றுச் சாரியையினும் மிகப்பயன் படல் நோக்கித் தொல்காப்பியனார் இன்னேவற்றே என்னும் சூத்திரத்துள் இன் சாரியையை முதலில் வைத்திருப்ப அதற்கு மாறாக நன்னூலார் நல்லற்றென அற்றுச் சாரியைக்கு அடை கொடார் ஆதலானும் அவர்க்கும் அல் அற்று எனக் கொள்ளுதலே கருத்து ஆதலானும் சாரியை எனக் கோடல் பொருத்தமுடைத்து என்க.

வா:மா தவனை என்பது வம் மாதவ னே எனப் புணர்ந்து நின்றது. இதனை உடனிலைச் சிலேடையால் விநாயகர்க்கும் சிவபிரானுக்கும் கொள்க.

***இ.பொ.ரை.***

***லோக வித்தே அகவு அலைக்கணுள்ள தீரனே அம் ஆதவனே***
***மாலே கவித் தகவல் ஐயே கண்டீரவ மாயவனே***
***மாதவனே இனிய ஆலோகனே வித்தகனே மிக்க தலவமுதல்வனே***

எனத் திருமால்பரமாக உரைக்க.

52. *மாவல வாகு மராவலங் காரத்த வாழியனே*
*மாவல வாகு மராவலங் காரத்த வாழியனே*
*மாவல வாகு மராவலங் காரத்த வாழியனே*
*மாவல வாகு மராவலங் காரத்த வாழியனே.*

இஃது ஒரு பொருளுடைத்து

*சொ.கை.*

மா வல்ல வாகு மரா அலங்கு ஆரத்த ஆழ் இயல் நேமா; அல்ல ஆகும் அராவு அலம் கார் அத்த ஆழியன் ஏமா; வலவாகும் அரா அலங்கு ஆர் அத்த ஆழியன் ஏம்;ஆவல வா குமரா அலங்காரத்த வாழி அன்னே.

*ப.ரை.*

மா வல்ல - மகா வல்லமை யுடையானே

வாகு மரா அலங்கு ஆரத்த - அழகிய கடப்பமலரால் தொடுக்கப்பட்ட அசைகின்ற மாலையையுடையானே

ஆழ் இயல் நேமா- (யாவரானும் அறியப்படாத) ஆழ்ந்த இயற்கையையுடைய நியமமுடையானே

(அல்ல ஆகும் அராவு அலம்) அராவு அலம் அல்ல ஆகும்-எம்மைத் தேய்க்கின்ற துன்பங்கள் (நீவரின்) இல்லன வாகும்.

கார் அத்த ஆழியன் ஏமா-மேகத்தை ஒத்த கையின் கட்சக்கரத்தையுடைய திருமாலுக்கு ஏமமானவனே

வல வாகும் அரா அலங்கு -ஏனைய அங்கங்களே அன்றி வெற்றி

பொருந்திய புயத்திலும் சர்ப்பாபரணம் விளங்குகின்ற ஆர் அத்தஆழியன் -அரிய புருடார்த்தங்களுக்கு உறைவிடமாகிய கடல் போன்ற சிவபெருமானுக்கு

ஏம் ஆவல வா- இன்பம் செய்யும் ஆவலையுடையானே வருக.

குமரா அலங்காரத்த வாழி -குமரனே அலங்காரமுடையானே வாழுக

அன்னே - தாய்போல்வானே எ-று.

*வி-ரை*

வல்ல, அல்ல, அன்னே -இடைக்குறை.

53\. வான திகம்பர வம்பரு வத்த வனத்தினனே
வான திகம்பர வம்பரு வத்த வனத்தினனே
வான திகம்பர வம்பரு வத்த வனத்தினனே
வான திகம்பர வம்பரு வத்த வனத்தினனே

இதுவும் அது.

சொ.கை.

வான திகம்பர அ பருவந்த அன்னத் தினன் நே
வான் அதிகம் பரவு அ பருவம் தவம் நத்தினன் ஏ
வால் நதி கம் பரவு அப்பர் உவந்த வனத்தினன் ஏவு
ஆனது இகம் பர அப்பு அரு வந்தவ நத்தினனே.

ப.உரை

வான திகம்பர -மேலான திசைகளை ஆடையாக உடையவராகிய

அப்பருவந்த அன்னத்தினன் -அந்தத் துன்பத்தை யடைந்த

அன்ன வாகனத்தையுடைய பிரமனும்

நே வான் - அன்புடைய வானுலகத்தாரும்

அதிகம் பரவு அப் பருவம் -மிகத் துதித்த அச்சமயம்

தவ நத்தினன் ஏ -தவத்தையுடைய சங்கமேந்திய திருமாலைப் பாணமாகக் கைக்கொண்ட

வால் நதி கம் பரவு அப்பர் -தூயகங்காநதி சென்னியிற்பரவப்பெற்ற அப்பர்

உவந்த வனத்தினன் -மனமகிழ்ந்த அழகிய புதல்வனே

(ஏவு ஆனது இகம்) இகம் ஏவு ஆனது -இவ்வுலகவாழ்க்கை வருத்தமா கவுள்ளது.

பர அப்பு அரு வந்தவ -(சரவணப் பொய்கையின்) மேலான அரிய தீர்த்தத்தில் அவதரித்தவனே

நத்தினனே -நான் நின்னையே விரும்பினேன் எ-று

### *விரை*

திகம்பர அப்பர் எனக்கூட்டுக. பருவந்த வான் எனப் பின்னுஞ் சென்று இயையும். பரவு அப்பருவம் முப்புரத்தார்

காலம். அருமை, அப்புமுன் கூட்டப் பட்டது. அகரம் பண்டறிசுட்டு. அன்னத்தினன் இடைக்குறை.

54) *வலவா ரணங்கொடிக் கையனை யின்னாத மங்கலமே*
*வலவா ரணங்கொடிக் கையனை யின்னாத மங்கலமே*
*வலவா ரணங்கொடிக் கையனை யின்னாத மங்கலமே*
*வலவா ரணங்கொடிக் கையனை யின்னாத மங்கலமே.*

இஃது ஆறு பொருளுடைத்து.

### *முசொகை*

*வலம் வாரணம் கொடி கையனை இன் ஆத மங்கல மேவல்*

*அ வாரணம் கொள் திக்கு ஐயனை இல் நாதம் அங்கு அலமே*

*வல்ல ஆர் அணங்கொடு இக்கு ஐயன் நை இன்னா தமம் கலமே*

*வல ஆரணம் கொடி கை அன்னையின் நாத மங்கலம் ஏ.*

### *பரை*

வல வாரணக் கொடிக் கையனை -வலப்பக்கத்துக் கோழிக்கொடியை உயர்த்த கையை யுடையானே

இன் ஆத - இனிய உயிர்போல்வானே

மங்கல -மங்கலப் பொருளே

மேவல் -மேவுக

அ வாரணங் கொள் திக்கு ஐயனை - அந்த யானைகளைக் கொண்ட எட்டுத்திக்கிலும் உள்ளார்க்கு ஐயனே

(இல்நாதம்) நாதம் இல் -(நடு ராத்திரியானதால்) எல்லா ஒலியு ம் இலவாயின.

அங்கு அலமே - அங்குத் துன்பம் உளவாயின

வல்ல - வல்லவனே

(ஆர் அணங்கொடு) அணங்கொடு ஆர் -எம் அணங்கு போல்வாளொடு கூடுக.

இக்கு ஐயன் நை-கருப்பு வில்லையுடைய அழகனாகிய மன்மதனை வருத்துக

இன்னா தமம் கலமே -அங்ஙனஞ் செய்யின் இப்போது துன்பஞ்செய்கின்ற இவ்விருளே அத்துன்பக்கடலைக் கடத்தற்கு மரக்கலமாகி உதவிசெய்யும்.

வல ஆரணக் கொடி கை அன்னையின் நாத -வெற்றியுடைய வேத முதல்வியாகிய கொடி போன்ற தெய்வயானைக்கும்

ஒழுக்கமுடைய அன்னையாகிய வள்ளியம்மைக்கும் நாயகனே

மங்கலம் -யாம் எக்காலத்தும் அழியேம் எ-று .

### வி.ரை

வாரணக் கொடி ஆரணக்கொடி என்பன தொடை நோக்கி மெலிந்தன. வல்ல, இன்னா, அன்னை இடைக்குறை. அன்னையின்னாத -விரித்தல். கையனை, ஐயனை என்பவற்றில் ஐகாரம் முன்னிலைக்கண்வந்து. இக்கு ஐயனை என்பதில் இரண்டன் உருபு விகாரத்தால் தொக்கது.

### இ.பொ.ரை.

ஆரணக் கொடி அன்னை எனற்குப் பூரணை புட்கலை என்னும்இருவர் எனவும், வாரணங்கொள் எனற்கு வெள்ளையானையை வாகனமாகக் கொண்ட எனவும், வாரணக் கொடிக்கையனாகிய அரிகர புத்திரனே எனவும் ஏனைய முன்போலும் உரைத்து ஐயனார்பாட்டாகக் கொள்க.

### மூ.பொ.ரை.

முதலடி ஆரணக் கொடி எனவும் ஈற்றடி வாரணக் கொடி எனவும் பிரித்து ஆரணமாகிய வேதத்தைக் கொடியாகக் கொண்ட கையனே எனவும் வாரணமாகிய சங்கைப் போன்ற வெண்ணிறமுடைய கொடிபோன்ற அன்னையாகிய

நாமகளுக்கு நாதனே எனவும் ஏனைய முன்போலவும் உரைத்துப் பிரமன் பாட்டாக்குக.

*நா.சொ.கை*

***வலம் ஆரணம் கொடி கை அன்னையின் ஆத மங்கலம் மேவு***
***அல்ல வாரணம் கொள் திக்கு ஐயன் ஐயின் நாதம் அம் கலமே***
***வலம் வாரணம் கொடி கையனை இன்னா தமம் கலமே***
***வல்ல ஆர் அணங்குகொடு இக்கு ஐயன் நை இன் நாத மங்கலமே***

*பரை*

வல ஆரணக் கொடி -வெற்றிபொருந்திய வேத முதல்வியாகிய கொடிபோன்ற தெய்வயானையே, வள்ளியம்மையே

கை அன்னையின் ஆத-ஒழுக்கமுடைய அன்னை போன்ற கருணையுடைய குருவும்

மங்கலம் மேவு -மங்கலமாக மேவிய

அல்ல வாரணம் கொள் -கருநிறமுடைய வாரணங்களைக் கொண்ட

திக்கு ஐயன் - திக்குகளுக்கு ஐயனும்

ஐயின் நாதம் அழகினையுடைய நாதத்துவ மாயவனும் அம் கலமே அழகிய ஆபரணம் போல்வானும்

வல வாரணக் கொடிக் கைய -வலப்பக்கத்தில் வாரணக் கொடியுடைய கையனும்

இன்னா தமம் கலமே - இன்னா செய்யும் அஞ்ஞான இருட்கடலுக்கு மரக்கலம் போல்வானும்

வல்ல-வல்லவனும்

ஆர் அணங்கொடு -அரிய தெய்வப் பெண்களோடு.

இக்கு ஐயன் நை- கருப்புவில்லையுடைய அழகனும் (அழகால்) வருந்துகின்ற

இன் நாத- இனிமையுடைய நாதனுமாகிய முருகக்கடவுளே

மங்கலம்- யாம் நுமது கருணையால் இனி மங்குதலடையோம் எ-று.

### விரை.

ஆத ஐயன் நாதம் கலமே கையனை கலமே வல்ல நாத இவை ஒருபொருள் குறித்த விளிகள்.

உடனிலைச் சிலேடையால் ஆரணக்கொடி எனற்கு இருவரையும் கொள்க.

### ஐ.பொ.ரை.

மங்கல மேவல எனவும் ஏனைய நான்காவது போலவும் பிரித்து ஆரணக்கொடி எனற்கு உடனிலைச் சிலேடையால் பூரணையே புட்கலையே எனவும், மங்கலமே வல எனற்கு மங்கலப் பொருளே, விரும்புதலுடையானே எனவும் வாரணங்கொள் எனற்கு வெள்ளையானையை வாகனமாகக் கொண்ட எனவும், வாரணக் கொடிக்கையன் எனற்கு வாரணக் கொடிக்கையனாகிய அரிகரபுத்திரனே எனவும் உரைத்துக் கொள்க. ஆத முதலாக எல்லா விளியும் ஒரு பொருள் குறித்து வந்ததாகக் கொள்க.

### ஆ.பொ.ரை.

முதலடி வாரணக் கொடி எனவும், மூன்றாவதடி ஆரணக்கொடி எனவும் ஏனைய நான்காவது போலவும் பிரித்து வாரணம் போன்ற வெண்ணிறமுடைய கொடி போன்ற கலைமகளே எனவும், வேதக்கொடி எனவும் ஏனைய நான்காவது போலவும் உரைத்து ஆத முதலிய விளிகளை ஒரு பொருட்கு ஆக்கிக் கலைமகளே பிரமனே நுமது கருணையால் யாம் மங்கலம் என முடித்துக் கொள்க.

55. *மனமுரு காற்றுப் படையாவென் றூக்கு மதிக்கத்தனே*
*மனமுரு காற்றுப் படையாவென் றூக்கு மதிக்கத்தனே*
*மனமுரு காற்றுப் படையாவென் றூக்கு மதிக்கத்தனே*
*மனமுரு காற்றுப் படையாவென் றூக்கு மதிக்கத்தனே*

இது ஒரு பொருளுடைத்து.

### சொகை

*மன்ன முருகாற்றுப் படையா என் தூக்கும் மதிக்க*
*தம் நே*
*மனம் உருகு ஆறு படையா என்று ஊக்கும் மதி*
*கத்தனே*
*மன் அம் முருகு ஆற்று படையா வென் தூக்கும்*
*அது இக்கு அத்தன ஏமன்*
*நம் உரு கால் துப்பு அடையா என்றூக்கு மதிக்கு*
*அத்தனே.*

### பதை.

மன்ன-மன்னனே

முருகாற்றுப் படையா -உயர்ந்த நக்கீரர் பாடிய முருகாற்றுப் படையாகவே

என் தூக்கும் மதிக்க-இழிந்த எனது பாட்டையும் மதித்து ஏற்றருள்க.

தம் நே மனம் உருகு ஆறு படையா என்று- கற்றோர் தமது அன்பால் மனமுருகும் ஒழுக்கத்தை என் செய்யுள் படையா என்று

ஊக்கும் மதி- நினைந்து வருந்தும் என் அறிவின்கண்

கத்தனே மன்- கர்த்தனே பொருந்துக.

அம்முருகு ஆற்றுப் படையா -கடல் நீர் சுவறும் வலியமைந்த வேற்படையுடையானே

(என் தூக்கும் அது) அது என் தூக்கும்- என்னறிவின் மன்னுதலாகிய அதுவே எனக்கு வெற்றியும் உயர்வுமாவது

இக்கு அத்தன்- கரும்பு வில்லைத் தாங்கிய கையையுடையானாகிய மன்மதனும்

ஏமன் நம் உருகால்- இயமனாகிய எம்மை அச்சம் செய்யும் காலனும் என்னும் இவரது

துப்பு அடையா- பகை எம்மைச் சாரா

என்றுக்கு மதிக்கு அத்தனே-சூரிய சந்திரர்க்குத் தலைவனே எ-று.

*வி-ரை.*

என்தூக்கும் என்பதிலுள்ள உம்மை இழிவுசிறப்பு.

முருங்கு என்னும் முதனிலை முருகென இடைக்குறைந்தது.

ஆற்று-வலி. இது இப்பொருளதாதலை "ஆற்றுவார் ஆற்றல் " என்னுங் குறளிற் காண்க. என்றுக்கு என்பது என்றூக்கு என நீண்டது. ஆறு படையா என்பது ஆற்றுப்படையா என இடையொற்றுப் பெற்றது மன்ன-இடைக்குறை. ஆக என்பது கடைக் குறைந்து ஆ என்றாயிற்று.

56. *அஞ்சங்கரவர னந்தரி தந்தவை யாதரமே*
*அஞ்சங் கரவர னந்தரி தந்தவை யாதரமே*
*அஞ்தங் கரவர னந்தரி தந்தவை யாதரமே*
*அஞ்சங் கரவர னந்தரி தந்தவை யாதரமே*

இதைந்து பொருளுடைத்து.

*மு.சொ.கை.*

***அஞ்சு அம் கரவர் அனந்தர் இதம் தவு ஐயா தரம் ஏய்***
***அஞ்சு அம் கர வரன் நந்து அரி தந்த ஐ ஆதரம் ஏய்***
***அம் சங்கர அரன் அந்தரி தந்த ஐயா தர மேவு***
***அம் சங்கர் அவர் அ நந்து அரி தந்த ஐயா தரமே.***

*ப.ரை.*

அஞ்சு அம் கரவர் அனந்தர் -யாவரும் அஞ்சத்தக்க சலத்தில் ஒளித்திருந்தவராகிய அநேக அசுரர்களது

இதம் தவு ஐயா- நன்மையை அழித்த ஐயனே

தரம் ஏய் அஞ்சு அம் கர வரன்-மலையை ஒத்த ஐந்தாகிய அழகிய கரங்களையுடைய மேலோனும்

நந்து அரி-சங்கமேந்திய அரியும்

தந்த ஐ- வேத நூலையுடைய தலைவனாகிய பிரமனும்

ஆதரம் ஏய்- அன்பு பொருந்தி வழிபடுகின்ற

அம் சங்கர அரன் அந்தரி -கங்கை நீரைத்தரித்த சங்கரனாகிய அ ரனும் உமாதேவியும்

தந்த ஐயா-ஈன்றருளிய அழகனே

தரமேவு- எமக்குத் தரும்பொருட்டு எம்மை மேவுக

அம் சங்கர் அவர்- அழகிய சங்கபுதாராகிய அப்புலவரது

அநந்து அரி தந்த ஐயா - அச்சந்தேகமாகிய கேட்டை நீக்கிய குருவே

தரமே- மேன்மையே எ-று

*வி-ரை.*

மேன்மையைத் தர மேவுக எனக் கூட்டுக. சங்கத்தாருக்கு நேரிட்ட கேடாவது களவியலுக்கு மெய்யுரை யாதோ என்னும் ஐயம். தவு என்பது தபு என்பதன் திரிபு. அதன் உகரம் விகாரத்தால் கெட்டது. நந்து முதனிலைத் தொழிற் பெயர்.

ஆமேலானமை அத்தமிழுந்தருக எனவும் உரைத்து உமையம்மையின் பாட்டாகக் கொள்க.இப்பொருளில் தர என்னும் வியங்கோளைப் பின்னுங் கூட்டிக் கொள்க.

அவை இயல்பு எட்டு. அவையாவன:

*குடிப்பிறப்புக் கல்வி குணம்வாய்மை தூய்மை*
*நடுச்சொல்லு நல்லணி யாக்கம் -கெடுக்கும்*
*அழுக்கா றவாவின்மை அவ்விரண்டோ டின்ன*
*இழுக்கா அவையிகண் எட்டு.*

இவ்வெண்பாவால் அறிக.

*ஐ.பொ.ரை.*

முதலடி ஐ ஆ எனவும், இரண்டாவதடி கரவர எனவும் தந்த ஐயா எனவும் தரம் ஏய் எனவும் , மூன்றாவதடி தந்து அவ்வை ஆதர் அம்மேவு எனவும் ஏனைய முன் போலவும்

பிரித்து இதந்தவு ஐயாகிய மலையொத்த அஞ்சுகரமுடைய வரதனே நந்திவ்னயுடைய அரியே அவ்வரிபெற்ற ஐயனாகிய பிரமனே வேளே ஐயனாரே மேன்மைபொருந்திய சங்கரனாகிய அரனே அந்தரியே நூல்வடிவாகிய தாயாகிய மலைமகளே ஆத்தராகிய பொற்றாமரைத் தடாகத்து நீர் மேவிய அழகிய சங்கப் பலகையில் வீற்றிருந்த அம்மேலோர் ஆராய்ந்த அந்தக் குற்ற மற்றவையாகிய முத்தமிழிடத்தில் எமக்கு விருப்பம் என உரைத்துப் பல்கடவுளர் பாட்டாக்குக.

ஆத்தர் ஆதரென விகாரமாயிற்று. தந்து-கலைகள். அவ்வை-இடைக்குறை.

உடனிலைச் சிலேடையால் நந்து அரிதந்த ஐயா எனற்கு அரியின் புதல்வர் மூவரையும் கொள்ளலாயிற்று. தந்து அவ்வை எனற்குப் பல நூல்களை அருளிய அவ்வையாரே எனக் கூறினும் அமையும்.

*57) யாமோதி யானம் பரசேந்த னாமைய னீதங்கமே*
*யாமோதி யானம் பரசேந்த னாமைய னீதங்கமே*
*யாமோதி யானம் பரசேந்த னாமைய னீதங்கமே*
*யாமோதி யானம் பரசேந்த னாமைய னீதங்கமே*

*சொ. கை.*

*யாம் ஓதி ஆனம் பரசேம் தம் நா மையம் நீ தங்கு அம்*
*ஏயாமோ தியானம் பரசு ஏந்து அனாமயன் ஈதங்கமே*
*ஆமோதியாம் நம்பு அரசு ஏந்தல் நாம் மைய நீதம் கம்மே*
*ஆம் ஓதியான் நம்பர சேந்தன் ஆம் ஐயன் ஈது அங்கமே.*

*ப. ரை.*

யாம் ஓதி ஆனம் - யாம் (கபடத்தால்) பூனையை ஒப்பேமாயினேம்

பரசேம்-நின்னைத் துதித்தலும் செய்யேம். ஆயினும்

தம் நா மையம் நீ தங்கு - எமது நாவினது மையத்து நீ தங்குக.

(தங்கினால்) (அம் ஏயாமோதியானம்) அம் தியானம் ஏயாமோ - அழகிய

தியானத்தை யாம் பொருந்தேமோ (பொருந்துவேம்)

பரசு ஏந்து - மழுவைக் கையில் ஏந்திய

அனாமயன் ஈதங்கமே - அனாமயனாகிய சிவன் பெற்ற பொன் போல்வானே

ஆமோதியாம் - யாமிது போது களிப்பின்றி யிருக்கின்றேம்

நம்பு அரசு ஏந்தல் - நம்புதலுடைய அரசனே ஏந்தலே

நாம் மைய - அஞ்சத்தக்க ஆட்டுவாகன முடையானே

நீதம் கம்மே ஆம்-நீதியும் விண்ணுலகும் எமக்குளவாம்

ஓதியான் நம்பர - ஞானியே நமதுபரனே

சேந்தன் ஆம் ஐயன் - சேந்தனாகிய ஐயனே

ஈது அங்கமே - (எம்மையாளும்) இச்செயல் நினக்குப் பெருமையே எ-று.

*வி-ரை.*

தம் - சாரியை ஓதியான் முதலியன முன்னிலைக்கண் வந்தன. நாவின் கட்டங்கினால் தியானமும் நீதியும் முத்தியும் எய்துவம் என்பது கருத்து.

58) *அம்பரத் தேக துவக்கா ரணாமலை யத்தவென்றே*
*அம்பரத் தேக துவக்கா ரணாமலை யத்தவென்றே*
*அம்பரத் தேக துவக்கா ரணாமலை யத்தவென்றே*
*அம்பரத் தேக துவக்கா ரணாமலை யத்தவென்றே*

இது இருபொருளுடைத்து.

*மு.சொ.கை.*

*அம்பரத்து ஏக துவக்கு ஆரணா மலையத்த என் தேயம்*
*பரத்து ஏக துவம் காரணா மல் அயத்த என்றே*
*அம்பரத்தே கதுவு அக்கு ஆர் அண்ணா மல் ஐ அத்த வென்று ஏய்*

*அம்பரம் தேகம் துவக்கார் அண்ணாமலை அத்த என்று ஏ.*

*ப. ரை.*

அம்பரத்து ஏக துவக்கு-ஞான அழகைப் பரத்துக; அவன்பாற் செல்லுக; (அவனை அன்பாற்) கட்டுக

ஆரணா-வேத முதல்வனே

மலையத்த-பொதியின் மலையின் கணுள்ளானே

என் தேயம் - என் பிரகாசப் பொருளே

பரத்து ஏக- எப்பொருட்கு முன்னுள்ள ஏகனே

துவக் காரணா-நிலைபெற்ற சருவ காரணனே

மல் அயத்த - வலிமிக்க ஆட்டுவாகன முடையானே

என்றே-ஞான சூரியனே

அம்பரத்தே கதுவு-சிதம்பரத்தின்கண் விடாது பற்றி இருக்கின்ற வராகிய

அக்கு ஆர்-எலும்பையும் ஆத்திமாலையையும் உடைய

அண்ணாமல் ஐ அத்த - அயன் அரிக்கும் எட்டாத வளமிக்க செல்வத்தை யுடைய

வென்று ஏய் அம்பரத்தேக துவக்கார்-யானையை வென்றதனாற் பொருந்திய ஆடையாகிய தேகத்தின்கட் கட்டிய தோலையுடையாரது

அண்ணாமலை அத்த என்று-திருவண்ணாமலையின் கண்ணுமுள்ள அத்தனே என்று துதித்து எ.று.

*வி-ரை.*

ஆரணா மலையத்த தேயம் ஏகனே காரணா அயத்தனே என்றே கதுவிய அக் கார்ந்த அத்தமுடைய துவக்கினையுடையாரது அண்ணாமலையில் வ ாழும் அத்தனே என்று துதித்து அம்பரத்து ஏகு துவக்கு என முடிக்க.

*இ.பொரை*

இரண்டாவது அடி மல் ஐயத்த என்றும், ஈற்றடி துவக்கு ஆர் என்றும் பிரித்து வலிய இரத்தற் றொழிலுடையானே துவக்கினைப் பொருந்திய அண்ணாமலையில் வாழும் அத்தனே என்று துதித்து எனவுரைத்துச் சிவ பிரான் பாட்டாகக் கொள்க.

59) *எனாயவா சித்தேசத் தான வனந்த விலங்கலையே*
*எனாயவா சித்தேசத் தான வனந்த விலங்கலையே*
*எனாயவா சித்தேசத் தான வனந்த விலங்கலையே*
*எனாயவா சித்தேசத் தான வனந்த விலங்கலையே*

இதுவும் இருபொருட்டு.

*மு. சொ.கை.*

*என் ஆய் அவா சித்தே சத்து ஆனவன் அந்த விலங்கலை ஏய்*
*எல் நாய ஆசி தேசம் தானம் அனந்த இலங்கல் ஐயே*
*என்னாய் ஆவாசித்தேசத்தான் அவன் நந்த விலங்கலை ஏ*
*என் ஆய வாசித்து ஏச தான் அவம் நந்த இல் அம் கலையே.*

*ப.உரை.*

என் ஆய் அவா-எனக்குத் தாயும் விருப்பமும் ஆனவனே

சித்தே-அறிவுடைய பொருளே

சத்து-உண்மைப் பொருளே

ஆனவ்ன் அந்த - இடபவாகனத்தையுடையவனுக்கு அழகு செய்பவனே

விலங்கலை ஏய் எல் நாய - மலைகளிடத்துப் பொருந்திய ஞானசூரியன் ஆகிய நாயகனே

ஆசித்தேசத்தான் அனந்த - வாழ்த்துதற்குரிய பிரகாசம் பொருந்திய ஈகையுடைய அனந்தனே

இலங்கல் ஐயே- விளங்குதலுடைய ஐயனே

என்னாய் - என்று மனமே நினைத்திலை

அவாசித்தேசதான் அவன் நந்த விலங்கலை- அதனால் தென்றிசைக்கண் உள்ளயமனாகிய அவன் வலி குன்றுமாறு அவனை விலகினாயில்லை ஆதலால் (என் ஆய வாசித்து ஏச அவம் நந்த இல் அம் கலை) ஏச அவம் நந்த அம் இல் கலை வாசித்து என் ஆய் - அவன் நற்றாள் தொழாமையின் யாவரும் இகழவும் கேடு பெருகவும் அழகில்லாத நூல்களை வாசித்தும் அதனால் என்ன பயனாயின எ-று

***வி-ரை.***

தான் அசைநிலை. கடவுள் வழிபாடு செய்யாவிடிற் கல்லாரினும் கற்றார் நிந்தையும் கேடும் மிகப் பெறுவர் என்பது பெறப்பட்டது.

***இ.பொ.ரை.***

ஆனவன் எனற்கு ஆவினை யுடையானே என்றும், விலங்கலை ஏய் எனற்கு நிலையிற் றிரியாமையில் மலையை ஒத்த ஞாயிறே என்றுரைத்துச் சிவபிரான் பாட்டாகக் கொள்க.

60) ***கலையாத வன்பா னலங்கண்ணி வந்தனங் கையகமே***
***கலையாத வன்பா னலங்கண்ணி வந்தனங் கையகமே***
***கலையாத வன்பா னலங்கண்ணி வந்தனங் கையகமே***
***கலையாத வன்பா னலங்கண்ணி வந்தனங் கையகமே***

இது முப்பொருட்டு

***மு.சொ.கை.***

***கலை ஆதவன் பால் நலம் கண்ணி வந்து அன்னம் கை அகமே***
***கலையாத அன்பான் அலங்கு அண் இ வவந்தனம் கை அகம் ஏகு***
***அலை ஆதவன் பா நல்லம் கண் நிவந்த நங்கை அகம் ஏகு***

*அலையாதவன் பானலங்கண்ணி வந்த நம் கையகமே.*

*பதவுரை.*

கலை ஆதவன் பால் - கல்வி நிறைந்த ஞான சூரியனாகிய குமாரக் கடவுளிடத்து

நலம் கண்ணி-இன்பமடைய நினைந்து

வந்து அன்னம் கை அகமே-தென்றற் காற்றையும் சோற்றையும்

வெறுக்கின்ற மனமே கேள்கலையாத அன்பான் அலங்கு-நீ · அவனிடத்து நீங்காத அன்போடு விளங்குக

(அண் இவந்தனம்) இவ்வந்தனம் அண்-இவ்வழிபாட்டைப்

பொருந்துக. இவ்வாறு செய்யின்

கை அகம் ஏகு-ஆடுவோரது சிறுமையைத் தரும் பாவங்கள் நீங்குதற் கிடமான

அலையாதவன் -கடலில் வசிக்கும் யாதவன் ஆகிய திருமால் பெற்ற

பாநல்லம் கண்-பரவிய கரிய கண்களையுடைய

நிவந்த நங்கை அகம் ஏகு-உயர்ச்சி பெற்ற நங்கையாகிய

வள்ளி நாயகியிடத்துத் தானே வலியச் சென்ற; அலையாதிவன் பானலங்கண்ணி-வருந்துதல் இல்லாத அக்கடவுளது நீலோற்பவ மாலையானது

(வந்த நம் கையகமே) நம் கையகமே வந்த-நமது கையின்கண் வந்தேவிடும் எ-று.

*விரை.*

வந்தது எனத் தெளிவு பற்றி எதிர்காலம் இறந்த காலமாயிற்று.

இது கடைக்குறைந்து நின்றது. இது மாலை விருப்புரைத்தல்.

### இ.பொ.ரை.

யாதவனாகிய நங்கையகம் ஏகினோன் எனக் கொண்டு சிவனுக்கு ஆக்கலும் ஓராற்றாற் பொருந்தும். மோகினியாகிய திருமாலைச் சிவன் கூடிய வரலாற்றால் இது பொருந்துமாறு காண்க.

61) *அவியத்த மாயா மலமா வினையே மகத்தளியே*
*அவியத்த மாயா மலமா வினையே மகத்தளியே*
*அவியத்த மாயா மலமா வினையே மகத்தளியே*
*அவியத்த மாயா மலமா வினையே மகத்தளியே*

இது ஒருபொருளுடைத்து

### சொ-கை.

*அவ்வியத்தம் ஆயாமல் அம் ஆவி நையேம் அகம் தளி ஏய்*
*அவ்வியத்தம் மாயாமலம் மா வினை ஏம் மக தள்ளியே*
*அவி அத்தம் ஆய் ஆம் மல்ல மாவின் ஐயே மகத்து அளி ஏ*
*அவி அத்த மாயாம் அல்லமா இன் ஐயே மகத்து அளியே.*

### ப.உரை.

அவ்வியத்தம்-யாம் மனக்கோட்டம் என்னும் அவ்வியம் உடையேம் ஆயினும்

ஆயாமல்-அதனை ஆராயாமல்

(அம் ஆவினையேம் அகத்தளி ஏய்) அகத்தளி ஏய் அம் ஆவி

நையேம் - மனமாகிய கோலியின்கட் பொருந்துக. (பொருந்தின்) அழகிய எம் உயிர் வருந்தேம்.

அவ்வியத்தம் மாயாமலம் மாவினை- இத்தன்மையதென்று அறியப்படாததாகிய ஆணவமலமும் மாயாமலமும் மிக்க கன்மலமும் ஆகியவற்றை

(ஏம் மக தள்ளி அவி) தள்ளி அவி ஏம் மக-எம்மை விட்டு நீங்கக் கெடுத்தருள்க இனிய குழந்தைப் பருவம் உடையானே

அத்தம் ஆய் ஆம் மல்ல-எமக்குச் செல்வமும் தாயுமாகின்ற வளமுடையானே

மாவின் ஐயே-யானை வாகனமுடைய அழகனே

மகத்து அளி அவி அத்த-யாகத்து அளிக்கப்படும் அவிப் பாகத்துக்குரிய அத்தனே மாயாம் அல்லமா (நீஅருளின்யாம்) இறவாதேம் அல்லமோ இறவேம்

இன் ஐயே-இனிய ஐயனே

மகத்து அளியே-மகத்தாகிய கருணையுடையானே எ-று

*விரை.*

அவ்வியத்தம், மல்ல, அல்லமா-இடைக்குறை.

ஏமம்-கடைக்குறை. அளி-ஆகுபெயர்.

62) *அமலைய வந்தனஞ் சேவானை யாமோ தகவலனே*
*அமலைய வந்தனஞ் சேவானை யாமோ தகவலனே*
*அமலைய வந்தனஞ் சேவானை யாமோ தகவலனே*
*அமலைய வந்தனஞ் சேவானை யாமோ தகவலனே*

இது முப்பொருளுடைத்து.

*முசொகை.*

*அம் மலைய வந்தன் அஞ்சு ஏவால் நையா மோது அகம் அலன் ஏ*
*அ மலைய வந்த நஞ்சு ஏவு ஆனையாம் மோதக வல்லனே*
*அமலை அ அந்தன் அம் சேவான் ஐ ஆமோத கவலம் நேய*
*மலைய வந்தனம் சே வான் ஐ யாம் ஓது அகம் வலனே.*

ப. ரை.

அம் மலைய வந்தன்-அழகிய பொதிய மலையிலிருந்த வரும் தென்றலாகிய தேரையுடைய மன்மதனது

அஞ்சு ஏவால் நையா மோது-பஞ்ச பாணங்களினால் வருந்தாமல் அவற்றை மோதுக.

அக அலன்-அவற்றால் வரும் பாவமும் துன்பமும்

அ மலைய வந்த நஞ்சு-அந்தத் தேவரைக் கொல்ல எழுந்த ஆலகாலவிடமாகும்

ஏவு ஆனை யாம் மோதக வல்லன் - தேவரை ஏவல் கொண்ட யானை முகத்தையுடைய மோதகப் பிரியனாகிய வல்லவனுக்கும்

அமலை-உமா தேவிக்கும்

அ அந்தன் அம் சேவான்- அந்தச் சங்கார கர்த்தனாகிய அழகிய இடபவாகனமுடைய சிவபிரானுக்கும்

ஐ ஆமோத-பேரானந்தம் செய்பவனே

கவலம் நேய-யாம் வருந்தேம்; நேயனே.

மலைய வந்தனம்-மலைகளையுடையானே வந்தனஞ் செய்கின்றேம்

சேவான்ஐ-செவ்விய வானுலகத்தார்க்குத் தலைவனே

யாம் ஓது அகவலனே-யாம் புகழும் மனத்தின்கண் உள்ள வெற்றி யுடையானே எ-று.

**விரை.**

*வந்தனம் செய்கின்றோம்; பஞ்ச பாணங்களால்*
*விளைவன பாவமும்*

*துன்பமுமே ஆதலின் அவற்றை மோது; மோதின்*
*யாம் கவலேயம் எனக்*

*கூட்டுக. மலையமலை மலையம் என்றாயிற்று.*
*நையா-ஈறுகெட்ட எச்சம் வல்லன்-இடைக்குறை.*

*இ.பொ.ரை.*

*ஆனையாம் மோதகவல்லனே அமலைக்கும்*
*சேவானுக்கும் ஆமோதனே*
*எனவும் ஈற்றடி மல் ஐயவெனப் பிரித்து வலிமிக்க*
*ஐயனே*
*எனவும் உரைத்து விநாயகர் பாட்டாகக் கொள்க.*

*மூ.பொ.ரை.*

மோத வல்லனுக்கும் அமலைக்கும் அழகு செய்கின்றோனே, சேவானே, ஆமோதனே, நேயனே, மல் ஐயனே, வான் ஐயே எனவுரைத்துச் சிவபிரான் பாட்டாகக் கொள்க.

63) *வரனில வாக்கத் திருவரை யாகத்த மானத்தனே*
*வரனில வாக்கத் திருவரை யாகத்த மானத்தனே*
*வரனில வாக்கத் திருவரை யாகத்த மானத்தனே*
*வரனில வாக்கத் திருவரை யாகத்த மானத்தனே*

இது முப்பொருளுடைத்து

*மு.சொ.கை.*

*வரல் நிலவு ஆகத்து இருவர் ஐ ஆகு அத்தம் மான்*
*அத்தன் ஏ*
*வரன் இல ஆக்க திரு வரை ஆகத்த மால் நத்தன்*
*ஏவு*
*அரன் இல்லம் ஆக்கம் திருவரை யாகத்து அம்மான்*
*அத்தனே*
*வரம் நில ஆகத்து இரு அரையா கத்த மானத்தனே.*

*ப.ரை.*

வரல்-வருக

நிலவு ஆகத்து இருவர்-விளங்குகின்ற திருமேனியன் இருபக்கத்தினும் பிரம விட்டுணுக்களாகிய இருவரையுடைய

ஐ ஆகு-கடவுளாகிய

அத்த மான் அத்தன்-கரத்தில் மான் ஏந்திய பிதாவும்

வரன் இல ஆக்க - அசுரரது வரங்களை இல்லையாகும்படிசெய்ய

திருவரை ஆகத்த மால் நத்தன் ஏவு அரன்-இலக்குமியைக் கொண்ட மார்பையுடைய மாலாகிய சங்கேந்தியைப் பாணமாக ஏவிய அரனும்

இல்ல ஆக்கத் திருவரை-இல்லமெனக் கொண்ட பொன்னாலாகிய அழகிய மேரு மலையுடைய

யாகத்து அம்மான் அத்தனே-யாகத் தலைவனுமாகிய சிவபிரானுக்குக் குருவே

வர நில-மேனிலமாகிய திருவினை யுடையானே

ஆகத்து இரு-செல்வம் போன்று எம்மிடத்து இரு

அரையா கத்த மானத்தனே-அரசனே கர்த்தனே பெருமையுடையானே எ-று.

*விரை.*

ஆகத்து என்பது ஆக்கத்து எனத் தொடைநோக்கி விரிந்தது.

வரங்களை இலவாக்கும்படி ஏவிய அரன் எனக் கூட்டுக. ஆக்கம்- பொன், செல்வம். அம்மான்-இடைக்குறை.

*இ.பொ.ரை.*

அம்மான் அத்தனே எனற்கு அம்மானுக்குச் செல்வமாகிய புத்திரனே என உரைத்துச் சிவகுமாரர் நால்வருக்கும் தனித்தனி கூறிக் கொள்க.

*மூ.பொ.ரை.*

அம்மானே அத்தனே என விளித்து ஏனையவும் இணங்க வுரைத்துச் சிவபிரான் பாட்டாகக் கொள்க.

64) *மாகந்த மாதனத் தந்தக ராசல மாறனையே*
*மாகந்த மாதனத் தந்தக ராசல மாறனையே*
*மாகந்த மாதனத் தந்தக ராசல மாறனையே*
*மாகந்த மாதனத் தந்தக ராசல மாறனையே*

இது ஒரு பொருளுடைத்து

சொகை.

*பாகம் தமாது அனத்தம் தகரா சலம் ஆறு*
*அன்னை ஏம்*
*ஆகு அந்தம் ஆதல் நத்து அந்தகர் ஆசு அலம் மாற*
*நை ஏமா*
*கந்த மா தனத்து அந்த கராசல மாறன் ஐயே*
*மா கந்தமாதனத்து அம் தகரா சலம் மால் தன் ஐயே*

பதவுரை.

மாகந்த மாது-ஆகாயத்துள்ள உலகங்களது

அனந்தம் தகரா-(அசுரர் விளைத்த) கேட்டைத் தகர்த்து

சலம் ஆறு அன்னை-கோபம் தணிந்த தாய் போல்வானே

ஏம் ஆகு அந்தம் ஆதல் நத்து-மயக்கமாகின்ற முடிவு காலத்திலாவது (யான் வருந்தாமல் என்னை) விரும்புக

அந்தகர் ஆசு அலம் மாற நை-இயமனால் உளதாகும் குற்றமாகிய துன்பம் நீங்கும்படி அதனை அழித்தருள்க.

ஏமா கந்த-இன்ப வடிவனே, கந்தனே

மாதனத்து அந்த-மகத்தாகிய அருட் செல்வத்தையுடைய அழகனே

கராச்ல-யானைவாகனமுடையானே

மாறன் ஐயே-உக்கிரகுமாரன் ஆகிய அரசனே

மா கந்த மாதனத்து-பெரிய கந்தமாதனகிரியின்கண் எழுந்தருளியிருக்கின்ற

அம் தகரா-அழகிய ஆட்டு வாகனமுடையானே

சலமால் தன் ஐயே-சலத்தில் வசிக்கும் திருமாலுக்குத் தலைவனே எ-று.

வி-ரை.

அன்னை-இடைக்குறை. ஏமம்-கடைக்குறை. தகரா என்னும் வினையெச்சத்தின் முன் வலிமிகாமை விகாரத்தால்

கொள்க. அந்தகர் என்றது இழிவினால் திருக்கோவையாரில் காமனைக் காமர் என்றது போல. தன் என்பது சாரியை.

65) *மாசிலம் பன்னாகத் தன்பினை யாடக வாகத்தனே*
*மாசிலம் பன்னாகத் தன்பினை யாடக வாகத்தனே*
*மாசிலம் பன்னாகத் தன்பினை யாடக வாகத்தனே*
*மாசிலம் பன்னாகத் தன்பினை யாடக வாகத்தனே*

இதுவுமது

### *சொகை.*

*மாசில் அம் பன்னாகத்தான் பின்னையான் தகவு ஆகத்தன் ஏ*

*மாசு இல் அம்பன் ஆகத்தன் பின் ஐ ஆடகம் ஆகத்தனே*

*மா சிலம்பன் ஆகு அத்தன் பின் ஐ ஆடு அக வாகு அத்தனே*

*மா சிலம்பல் நாகத்து அன்பினை ஆள் தக வா கத்தனே.*

*பதரை.*

மாசில் அம்பன்னாகத்தான்-மேகம் போன்ற அழகினையுடைய சர்ப்ப சயனத்தையுடையானும்

பின்னையான் தகவு ஆகத்தன்-நப்பின்னைப் பிராட்டிக்குரிய மார்பினை யுடையானுமாகிய திருமாலாகிய

மாசு இல் அம்பன்-குற்றமில்லாத அம்பை உடையானும்

ஆகத்தன் பின்-இடப வாகனத்தையுடைய கர்த்தனுமாகிய சிவபெருமானால் தழுவப் படுகின்ற

ஐ ஆடக ஆகத்தனே-அழகிய பொன்னிறமான தேகத்தையுடையானே

மா சிலம்பன்-பெருமை பொருந்திய சிலம்பனே

ஆகு அத்தன் பின் ஐ-ஆகு வாகனத்தைதயுடைய விநாயகனுக்குத் தம்பியாகிய ஐயனே

ஆடு அக வாகு அத்தனே-அசைகின்ற என் மனதின் கணுமுள்ள அழகினையுடைய அத்தனே

மாசிலம்பல் நாகத்து அன்பினை-கரிய ஒலித்தலையுடைய யானை வாகனத்தையுடைய அன்பினையுடையானை

ஆள் தக-தகுமாறு ஆளுக

வா கத்தனே-கர்த்தனே வருக எ-று.

*வி.ரை.*

மாசில் என்பதில் இல் ஐந்தன் உருபு. பன்னகம்-நீட்சி பெற்றது. பின்னையான்-இடைக்குறை. சிலம்பனாகு - ஒற்று விரிந்தது. சிலம்பல் நாகம் - ஒலிக்கின்ற மலை எனினும் அமையும்.

*"தக ஆள் கத்தனே வா" என மாற்றுக.*

66) *வாமக் கடம்ப வனத்தா ரணிய வனம்பதியே*
*வாமக் கடம்ப வனத்தா ரணிய வனம்பதியே*
*வாமக் கடம்ப வனத்தா ரணிய வனம்பதியே*
*வாமக் கடம்ப வனத்தா ரணிய வனம்பதியே*

இது இருபொருளுடத்து

*முசொ.கை.*

*வாமம் கடம்ப வனம் தார் அணியவன் நம் பதியே*
*வாம் மக்கடம் பவனத்து ஆர் அண்ணி அவன் நம்பு அதிவு ஏ*
*ஆம் அக்கடம் பவம் நத்தார் அணியவன் அம் பதியே*
*வா மக்கள் தம் பவனத்து ஆரணியம் வனம் பதியே.*

*பஎரை.*

வாமக் கடம்ப வனத்தார் அணியவனே-ஒளி பொருந்திய கடப்ப மலரால் கட்டப் பெற்ற அழகிய மாலையை அணிதலுடைய முருகனே.

நம்பதி-நமது கடவுளாம்.

வாம் மக்கடம் பவனத்து ஆர் - (மனமே) வாவுகின்ற மாக்கடநியாயத்தால் அவனைப் பற்றுந் தியானத்தைப் பொருந்துக

அண்ணி அவன் நம்பு-சார்ந்து அவனை நம்புக.

அதி ஏவு ஆம்-மிக்க வருத்தத்துக்கு ஏதுவாகிய

அக்கடம் பவம் நத்தார்-அச்சரீரத்தையும் பிறப்பையும் விரும்பாத ஞானிகளுக்கு

அணியவன் அம் பதியே-அணிமையாகும் அவனது அழகை உள்ளிடத்துப் பதித்திடுக

மக்கள் தம் பவனத்து-இம் மக்கள் உலகத்து

ஆரணிய வனம் பதியே வா-காடு சூழ்ந்த அவனது திருப்பதிகளுக்கு என்னுடன் வருக எ-று.

*விரை.*

வாவும் என்பது உயிர் மெய் கெட்டு வாம் என நின்றது. மார்க்கடம்-குரங்கு. அது மக்கடம் என நின்றது விகாரம். மர்க்கட நியாயம், மகவு தாயை விடாது பிடித்து அதன் உதவியான் மரத்தில் சேரல் போல மனமும் கடவுளை இடைவிடாது தியானித்து அவனுதவியால் முத்தி எய்தல். அவனை என்னும் இரண்டாவதும், நந்தார்க்கு என்னும் நான்காவதும் விகாரத்தால் தொக்கன. வா என்பது ஈற்றிற் கூட்டப்பட்டது. அண்ணி இடைக்குறை.

*இ.பொ.உ.ர.*

கடம்ப வன்த்து ஆரணியவன் எனப் பதம் பிரித்துக் கடம்பவனத்தின் கணுள்ள ஆரணியாகிய அமலையைப் பாகத்தில் உடையான் எனக் கூறுக. ஆரணியவன் ஆத்தியை அணிந்தவன் எனக் கூறலும் ஒன்று. கடம்பவனத் தாரணி இவன் எனப் பிரித்து கடம்ப வனஞ் சூழ்ந்த தாரணியாகிய மதுரைப் பதியுடையான் எனினும் அமையும். தாரணி-பூமி.

67) *திருக்கோவை யம்பா வரையஞ்சு கந்தரத் தேமுறையே*
*திருக்கோவை யம்பா வரையஞ்சு கந்தரத் தேமுறையே*

*திருக்கோவை யம்பா வரையஞ்சு கந்தரத் தேமுறையே*
*திருக்கோவை யம்பா வரையஞ்சு கந்தரத் தேமுறையே*

இது இருபொருளுடைத்து.

### *முடிசொாகை.*

*திருக்கோ ஐயம் பாவரை அஞ்சுகம் தரத்தேம் முறையே*
*திருக்கு ஓ வை வை அம்பா வரை அஞ்சுகம் தரம் தேமுறை ஏ*
*திருக்கோவை அம் பா வரை அஞ்சு கந்தரத்து ஏம் உறு ஐ ஏ*
*திரு கோ வை அம்பு ஆவர் ஐ ஆம் சுகம் தர தேம் உறையே.*

### *பரை.*

திருக்கோ-விபரீத உணர்வு மாத்திரமோ அதனோடு ஐயம் பாவரை அஞ்சுகம்-ஐயவுணர்வையும் பாவிகளையும் அஞ்சுகின் றேம்

தரத்தேம்-நின்னால் ஆளப்படும் தரத்தையுடையேம்

(முறையே திருக்குவை) திருக்குவை முறையே-கடைக்கண் நோக்கத்தை எம் மேல் வைத்தருள்க. இது முறையேயாகும்.

அம்பாவரை அஞ்சுகம்-அம்பையாகிய மலையரசன் பெற்ற கிளிபோன்ற பார்ப்பதியையும்

தரத்தேமுறை-மேன்மை பொருந்திய தெய்வத்தன்மையுடைய திருமுறையாகிய

திருக்கோவை அம்பா-திருக்கோவையாரின் கணுள்ள அழகிய நானூறு பாக்களையும்

வரை-வரைந்த

அஞ்சு கந்தரத்து-ஐந்து கழுத்தினையுடைய

ஏம் ஊறு ஐ-இன்பமிக்க அழகினையுடைய

திருக்கோவை அம்பு ஆவர் ஐ-திருவுக்குக் கோவாகிய விண்டுவைக் கூரிய அம்பாகப் பெற்ற சிவபிரானுக்குக் குருவே

அம் சுகம் தரத்தேம் உறையே-அழகிய பேரின்பத்தை எமக்குத் தர எம்மிடத்துப் பொருந்துக எ-று.

*விரை.*

வரை என்பதைத் தனித்தனி கூட்டி அஞ்சுகத்தை மணந்த எனவும்திருக்கோவையை எழுதிய எனவும் பொருள் கொள்க. ஏ,ஒ அசை. ஐய விபரீத உணர்வின்றி மெய்யுணர்வெய்தினும் பாவரொடு சேரின் அம்மெய்யுணர்வு கெடுமாதலால் பாவரையும் உடன் கூறினார். அம்பா-வடமொழித் தற்சமம். அம்பை-தற்பவம்.

*இ.பொ.ரை.*

ஈற்றடி திரு கோவை அம்பா வரையம் எனப் பிரித்து அஞ்சு கந்தரத்து ஏமுறு ஐயனே திருவின் கோவாகிய கூரிய அம்பினை யுடையானே உன்னை வரேயேம் எனவும் ஏனைய முன்போலவும்உரைத்துச் சிவபிரான் பாட்டாகக் கொள்க.

வரைதல்-நீக்கல்.

68) ***உகவாதி கந்த வதன வயனத்தர்க் கொன்றையனே***
***உகவாதி கந்த வதன வயனத்தர்க் கொன்றையனே***
***உகவாதி கந்த வதன வயனத்தர்க் கொன்றையனே***
***உகவாதி கந்த வதன வயனத்தர்க் கொன்றையனே***

இது ஒரு பொருளுடைத்து

*சொ.கை.*

***உகம் ஆதி கந்த வதம் நவை அனத்தர் கொன்ற ஐயனே***
***உக வாது இகந்தவ தன்னம் அயனத்தர் கொன்றையன் ஏய்***
***உகவாது இகம் தவம் தனம் வயம் நத்தர்க்கு ஒன்று ஐ அன்னே***

*உகு அவா திக்கு அந்தம் வதனம் அயன் நத்தர்க்கு ஒன்று ஐயனே.*

*பதரை.*

உக ஆதி கந்த-யுகங்களுக்கு ஆதியே கத்தனே

வத நவை அனதர்க் கொன்ற ஐயனே-கொலைக் குற்றத்தையுடைய' கேட்டினராகிய அசுரரைக் கொன்ற ஐயனே.

உகவாது இகந்தவ-(சமணரது) உயர்ந்த வாதத்தைக் கடந்தவனே

தன்ன அயனத்தார் (அன்பில்லாத) அற்பப் பிறப்பையுடையாரை

கொன்றையன் ஏய் உகவாது-கொன்றை மாலையணிந்த சிவபிரான் வெறுப்பது போலவே விரும்பாது

இகம் தவம் தனம் வயம் நத்தர்க்கு-இவ்வுலகத்துத் தவமாகிய செல்வத்தின் வலியை விரும்பிய ஞானிகளுக்கு

ஒன்று ஐ அன்னே- பொருந்திய அழகையுடையை தாய் போலவானே

உகு அவா-எனது ஆசையை ஒழித்தருளுக.

திகந்த வதன அயன்-திக்காகிய அழகிய முகங்களையுடைய பிரமனுக்கும்

நத்தர்க்கு-சங்கமேந்திய திருமாலுக்கும்

ஒன்று ஐயனே-ஒரு பொருளாகிய தலைவனே எ-று.

*விரை.*

நவை, நவய் என மயங்கிற்று. கொன்ற, ஏய என்னும் எச்சத்து ஈறு விகாரத்தால் தொக்கன. உகப்பு என்னும் உரிச் சொல் விகுதி குன்றி நின்றது. தன்னம், அன்னே-இடைக்குறை.

69) *ஒருவா சவிசை வலக்கார மோதிக் குடையவனே*
*ஒருவா சவிசை வலக்கார மோதிக் குடையவனே*

*ஒருவா சவிசை வலக்கார மோதிக் குடையவனே*
*ஒருவா சவிசை வலக்கார மோதிக் குடையவனே*

இதுவும் அது.

*சொல்கை.*

*ஒருவா சவி சை வல் அக்கு ஆரம் ஓ திக்கு உடையவன் ஏய்*
*ஒருவாச இசைவல் அக்காரம் ஓதி குடையவனே*
*ஒரு வாச இசை வலக்காரம் மோது இக்கு உடை அவம் நே*
*ஒருவு ஆசு அவி சைவலம் கார் அம் ஓதிக்கு உடையவனே.*

*பகரை.*

ஒருவா சவி சை-ஒருவனே பிரகாசப் பொருளே செல்வமே

வல் அக்கு ஆரம்-வலிய எலும்பு மாலை அணிந்த

திக்கு உடையவன் ஏய்-திசையாகிய ஆடையை உடைய சிவபிரானை ஒத்த

ஒரு வாச-ஆட்டு வாகனத்து வசிப்பவனே

இசைவல்-(யான் நினக்கு அடிமையாகிப்) பொருந்துவேன்

அக்காரம்-சருக்கரை போல் இனியானே

ஓதிக் குடையவனே-ஞானமாகிய குடையை உடையானே

ஒரு வாச-ஒப்பற்ற பரிமளமுடையானே

இசை-எனக்கு ஞானோபதேசம் செய்க.

வலக்காரம் மோது-பொய்யாகிய அஞ்ஞானத்தை மோதுக

இக்கு உடை-(என்னை வருத்தும் காமனது) கருப்புவில்லை முறித்தருள்க

அவம் நே ஒருவு ஆசு அவி-பாவத்தையும் அன்பு நீங்குதலால்

வரும் குற்றத்தையும் அவித்தருள்க.

சைவலக் கார் அம் ஓதிக்கு உடையவனே-பாசி போன்ற

கரிய அழகிய கூந்தலையுடைய வள்ளியம்மைக்கு உடைய மணவாளனே எ-று.

**வி-ரை.**

ஓ-சை.

70) *அம்பர வைத்திரு வேடக னத்தத்த னாரணனே*
*அம்பர வைத்திரு வேடக னத்தத்த னாரணனே*
*அம்பர வைத்திரு வேடக னத்தத்த னாரணனே*
*அம்பர வைத்திரு வேடக னத்தத்த னாரணனே*

இஃது இருபொருளுடைத்து.

*முசொகை.*

*அம் பரவை திரு வேள் தகல் நத்தத்தன் நாரணன் ஏ*
*அம்பு அரவு ஐ திருவேள் தகனத்து அத்தன் ஆரணன் ஏ*
*அம்பரம் ஐ திருவேடக நத்தத்தன் ஆர் அண்ணல்*
*நேயம் பர வைத்து இரு ஏடு அகம் நத்து அத்த நார் அண் ஆன்னே.*

*ப-ரை.*

அம்பரவைத் திருவேள்-அழகிய பாற்கடலில் தோன்றிய திருமகள் விரும்பும்

தகல் நத்தத்தன் நாரணன் ஏ-தகுதியுடைய நாரணனாகிய அம்பையும்

அம்பு அரவு ஐ திரு-நீரையும் அரவையும் அருட்பெருஞ் செல்வத்தையும் உடைய

வேள் தகனத்து அத்தன்-காம தகனனாகிய அத்தனும்

ஆரணன் அம்பரம் ஐ-வேதநாயகனும் விண்ணுலக முதல்வனும்

திருவேடக நத்தத்தன்-திருவேடகம் என்னும் திருப்பதியின் கணுள்ளானும்

ஆர் அண்ணல் நேயம்-எங்கும் நிறைந்த அண்ணலுமாகிய சிவபிரானது அன்பை

பர வைத்து-என்னகத்துப் பரவ வைத்து

(இரு ஏடு அகம்) ஏடு அகம் இரு-மலர் போன்ற என் மனத்து நீங்கா திருத்தல் செய்க

நத்து அத்த-விரும்புகின்ற தந்தையே

நார் அண் அன்னே-அன்பு பொருந்திய தாயே.

**விரை.**

பரவ என்னும் எச்சம் பர எனக் கடைக்குறைந்தது. பரனே என விளியாக்கினும் அமையும். அண்ணல், அன்னே-இடைக்குறை.

ஏடு-பூ விதழ். இது ஆகு பெயராய்ப் பூவை உணர்த்திற்று.

ஆர்-ஆத்தியுமாம். இதனை உடனிலையால் விநாயகர் முதலாயினார்க்கும் கொள்க.

**இ.பொ.ரை.**

வேள் தகனத்து அத்தனே ஆரணனே அம்பர ஐயே திருவேடக நத்தத்தனே ஆர் அண்ணலே நத்து அத்தனே நார் அண் அன்னே நேயம் பரவ வைத்து அகம் இரு என உரைத்துச் சிவபிரான் பாட்டாகக் கொள்க.

71) *நாமறக் காமக்கோட் டத்தி கழுமல னாவலனே*
*நாமறக் காமக்கோட் டத்தி கழுமல னாவலனே*
*நாமறக் காமக்கோட் டத்தி கழுமல னாவலனே*
*நாமறக் காமக்கோட் டத்தி கழுமல னாவலனே*

இதுவும் அது.

**மு.சொ.கை.**

*நாம் அற கா மக்கு ஒட்ட திகழும் மல்லன் ஆவலனேன்*

*ஆமறம் காமம் கோள் தத்து இகழும் அல்லன் ஆவல் அலனே*

*நாம் அறம் காமக்கோட்டத்தி கழுமலன் அவலனே*

*நாம் மறக்காம் அக்கோள் தத்தி கழுமலம் நாவலனே.*

*பதவுரை.*

*நாம் அறக் கா-பிறவி அச்சம் தொலையக் காத்தருள்க*

*மக்கு ஒட்டத் திகழும் மல்லன் ஆ-மங்கி அழிதலை நீக்குதற்குத் திகழும் வளமுடையேனாகவும்*

*வலனேன் ஆ-வெற்றியுடையேனாகவும்*

மறக்காமக் கோள்-பாவத்திற்கு ஏதுவாகிய ஆசை என்னுட குற்றமும்

தத்து இகழும்-அதனால் வரும் ஆபத்தும், இகழ்ச்சியும்

அல்லன் ஆவல்-உடையன் அல்லேன் ஆகவும் ஆவேன்

அன்னே-தாய்போல்வானே

நாம் அறக் காமக் கோட்டத்தி கழுமலன்-கீர்த்தி பொருந்திய காமக் கோட்டத்தில் எழுந்தருளி அறத்தை வளர்த்த அம்பிகை பொருந்துதலுடைய சிவபிரானிடத்து

ஆவலனே-அன்புடையானே

நாம் மறக்காம்-யாங்கள் எப்போதும் நின்னை மறவேம்

அக்கோள் தத்தி-நின்னைச் சிந்தித்தலாகிய அக்கொள்கை தவறி

கழுமல நாவலனே-சீகாழியில் அவதரித்த புதல்வனே எ-று.

*விசேடவுரை.*

அக்கோள் தத்தி நாம் மறக்காம் எனக் கூட்டுக. தத்திகழுமலம் எனத் தொடை நோக்கி மிகாதாயிற்று.

கழுமல்-பொருந்துதல். கழுமலம்-சீகாழி.

நாமறக் காத்தல்-யான் இவ்வாறாவேன் என முன்னர் ஒருமையாற் கூறிப்பின் அடியார் பிறரையும் உளப்படுத்தி நாம் மறக்கோம் எனப் பன்மையாற் கூறினார். காமக் கோட்டம், காஞ்சிப்பதியிலுள்ள கோயில்.

மல்லன், அல்லன், அன்னே-இடைக்குறை. ஆக-கடைக்குறை.

*இ.பொ.ரை.*

காமக் கோட்டத் திகழு முதலுடையானே ஆவலனே கழுமல நகரை யுடைய நாவலனே எனவும் ஏனைய முன்போலவும் உரைத்துச் சிவபிரான் பாட்டாகக் கொள்க.

72) *வந்தனங் கங்கா தரனம்ப னந்தன மாதவனே*
*வந்தனங் கங்கா தரனம்ப னந்தன மாதவனே*
*வந்தனங் கங்கா தரனம்ப னந்தன மாதவனே*
*வந்தனங் கங்கா தரனம்ப னந்தன மாதவனே*

இதுவும் அது.

*மு.சொ.கை*

*வந்தனம் கம் காது அரன் அம்பன் நந்தன் அம் மாதவன் ஏவு*
*அந்த நம் கங்காதரன் நம்பன் நந்தன் மா தவனே*
*வந்தனம் கங்கு ஆதாரம் நம்பு அன்னம் தனம் ஆ தவநே*
*வந்து அனங்கம் காதரன் அம்பு அனந்தம் நம் ஆதவனே.*

*ப.ரை.*

வந்தனம் - வந்தனம் புரிகின்றோம்

கம் காது அரன் - பிரமனது தலையைக் கிள்ளிய அரனும்

அம்பன் நந்தன் அம்மாதவன் ஏவு - சலத்தில் வசிப்பவனும் சங்கமேந்தியும் அழகிய மாதவனும் ஆகிய விண்டுவாகிய பாணத்தையுடைய

அந்த நம் கங்காதரன் - அழகிய நம் கங்காதரனும்

நம்பன் நந்தன் - நம்பனுமாகிய சிவபிரான்குமாரனே

மாதவனே - மிக்க தவமுதல்வனே

(வந்தனம் கங்கு) கங்கு வந்தனம்-நின் பக்கல் யாம் தூதாக வந்தோம்

ஆதரம் நம்பு அன்னம் தனம் - அன்பால் நின்னையே நம்பிய அன்னம் போல்வாளது தனங்களில்

ஆதவனே வந்து அனங்கம் - மிக்க பிரியத்தைச் செய்யும் தென்றல் ஆகிய தேரையும் அனங்கத்தையுமுடைய

காதரன் அம்பு அனந்தம் - அஞ்சத்தக்கானாகிய மன்மதனது அம்புகள் அனந்தம் வீழ்ந்தன

நம் ஆதவனே - நமது ஞான சூரியனே எ-று

*வி-ரை.*

அன்னம் - இடைக்குறை. அனங்கங்காடானெனத் தொடைநோக்கி மெலிந்தது. அனங்கம் - அங்கமின்மை, காதரம் - அச்சம்.

இது தூதிடை ஆற்றல் துறை.

இதனை உடனிலைச் சிலேடையால் விநாயகர் பாட்டாகக் கொள்க.

*இ.பொ.ரை.*

இரண்டாவது அடியீற்றில் நம் தனம் மாதவனே எனவும் ஏனைய முன்போலவும் பிரித்து அரனே, கங்காதரனே, நம்பனே, நமது தனமாகிய தவமுதல்வனே எனவும் ஏனைய முன்போலவும் உரைத்துச் சிவபிரான் பாட்டாகக் கொள்க.

73. *மாதிருக் கூடலங் கத்தனாட் டத்த மலையத்தனே*
*மாதிருக் கூடலங் கத்தனாட் டத்த மலையத்தனே*
*மாதிருக் கூடலங் கத்தனாட் டத்த மலையத்தனே*
*மாதிருக் கூடலங் கத்தனாட் டத்த மலையத்தனே*

இது முப்பொருளுடைத்து.

*மு.சொ.கை.*

*மா திரு கூடு அல் அங்கத்தன் நாள் தத்து அம் மலையத்தன் ஏமா*
*திரு கூடல் அங்கத்தன் ஆட்டத்து அமலை அத்தன்ஏ*
*மாது இருக்கு ஊடு அலங்கு அத்தம் நாட்டு அத்தம் மல் ஐயத்தன் நே*
*மா திருக்கூடல் அம் கத்தன் நாட்டத்த மலை அத்தனே.*

*பஉரை.*

மா திருக்கூடு - இலக்குமியாகிய திருவென்னும் கிளிவீற்றிருக்கும் கூடு போன்ற

அல் அங்கத்தன் - கரிய மார்பாகிய அங்கத்தையுடைய மாலுக்கும்

நாள் தத்து அம் மலையத்தன் - காலத்தைக் கடந்த அழகிய பொதியின் மலையின் கணுள்ள அகத்திய முனிவருக்கும்

ஏமா-இன்பம் செய்வானே

திரு - செல்வமாக உள்ளவனே

கூடல் - எம்மைக் கூட்டுக

அங்கத்தன் - என்பு மாலையுடையானும்

ஆட்டத்து அமலை அத்தன் - வெற்றியுடைய அமலைக்குப் பாதியாயினானும்

மாது இருக்கு ஊடு அலங்கு - அழகிய வேதத்தின் கண் விளங்குகின்ற

அத்தம் நாட்டு - அருத்தத்தை முனிவருக்கு உபதேசித்த

அத்தம் மல் ஐயத்தன் - கையின்கணுள்ள வளம் பொருந்திய பிட்சா பாத்திரம் உடையானும்

நே மா திருக்கூடல் அம் கத்தன் - பிரியமாகிய பெருமை பொருந்திய திருக்கூடலின் கணுள்ள அழகிய கருத்தனுமாகிய சிவபிரானது

நாட்டத்த - நெற்றிக் கண்ணிற் றோன்றிய குமாரனே

மலை அத்தனே - மலையின்கணுள்ள அத்தனே எ -று

*வி-ரை.*

திருமால் மார்பைக் கூடு என ஏகதேச உருவகம் ஆக்கினமையால் அதற்கிணங்கத் திருவைக் கிளி என்றார். மலயம் மலையம் என்றாயிற்று. இருக்கு ஈண்டு வேதமெனப் பொதுமை குறித்தது. இது கடவுள் மாட்டு மானுடப் பெண்டிர் நயந்த பக்கம்.

*இ.பொ.ரை.*

மூன்றாவதடி அத்தம் நாட்டு அத்த எனவும், ஈற்றடி நாட்டு அத்தம் எனவும் பிரித்து நாட்டு அத்தம் என்பவற்றை அத்தம் நாட்டு எனமாற்றி அத்தநாடு பொன்னாடு எனக்கொண்டு அங்கத்தனுக்கும் மலையத்தனுக்கும் ஏமா, திருவே, அங்கத்தனே, அமலைக் கத்தனே இருக்கின்கண் அலங்குகின்ற அத்தனே, பொன்னாடருக்கு அத்தனே ஐயத்தனே கத்தனே கையின்கண் வில்லாகநாட்டிய மேருமலையுடைய அத்தனே எனவுரைத்துச் சிவபிரான் பாட்டகக் கொள்க.

*மூ.பொ.ரை*

மூன்றாவதடி ஐயத்தன் ஏமா எனவும், ஏனைய இரண்டாவது பதப்பிரிவு போல்வும் பிரித்து அல் அங்கத்தனே, மலையத்தனுக்குப் பொன்போன்றவனே, எமது திருவொப்பவனே, அங்கத்தனும் அமலையத்தனும் இருக்கு ஊடு அலங்கு அத்தனும் அத்த நாட்டுக்கு அத்தனும் ஐய த்தனுமாகிய சிவபிரானுக்கு மோகினியாகி இன்பமளித்தோனே, திருக் கூடற் கத்தனாகிய அழகனே, அத்தத்தின் குடையாக நாட்டி எடுத்த கோவர்த்தன கிரியை உடைய அத்தனே என உரைத்துத் திருமால் பாட்டாகக் கொள்க.

74) *மலைப்பதி கந்தவ மானத் தமரா வரனையனே*
*மலைப்பதி கந்தவ மானத் தமரா வரனையனே*
*மலைப்பதி கந்தவ மானத் தமரா வரனையனே*
*மலைப்பதி கந்தவ மானத் தமரா வரனையனே*

இதுவும் அது.

*மு.சொ.கை.*

*மலைப்பது இகந்து அவமானத்து அமரா வரல்*
*நையன் ஏம்*
*அலைப்பு அதிகம் தவ மான் அத்தம் அரா அரன்*
*ஐயன் ஏம்*
*மல் ஐ பதிகம் தவம் ஆ நத்து அமரா வரனை*
*அன்னே*
*மலை பதி கந்த அம்மான் அத்த மரா வரன் ஐயனே.*

*பஉரை.*

மலைப்பது இகந்து - யான் மயங்குதலை நீங்கி

அவமானத்து அமராஅவரல் - அவமானம் அடையாவண்ணம் நீவரும் நையன் - நீவருந்தேன்

ஏம் மலைப்பு அதிகம் - இதுபொழுது அம்மயக்கத்தால் வருந்துதல் அதிகமுடையேன்

தவ - மிகுதியாக

மான் அத்தம் அரா - மானேந்திய கையையும் அரவாபரணத்தையு முடைய

அரன் ஐயன்ஏம் - அரனாகிய ஐயனுக்கு இனிமையான

மல் ஐ பதிகம் - வளமுடைய அழகிய தேவாரப்பதிகம் பாடுதலே

தவம் ஆ நத்து அமரா - தவமாக விரும்பிய தேவனே

வரனை அன்னே - மேலோனே தாயே

மலைப்பதி கந்த - மலைகளுக்குத் தலைவனே, கந்தனே

அம்மான் அத்த - அம்மானே அத்தனே

(மரா வரன்) வரன் மரா - யான் வேண்டும் வரமாவது நின் கடப்பமாலையே

ஐயனே - அழகனே எ-று

*வி -ரை.*

இகந்து என்னும் எச்சம் அமரா என்பதன் எதிர்மறை கொண்டு முடிந்தது. தவ என்னும் உரிச்சொல்லை நத்து என்னும் வினையொடு கூட்டுக. வரனை என்பதன் கண் ஐ முன்னிலைக்கண் வந்தது. அம்மான் இடைக்குறை.

இது மாலை விருப்புரைத்தல்.

*இ.பொ.உரை.*

ஈற்றில் நத்தமர் ஆவர் அனையனே எனப்பிரித்து அரனே, ஐயனே , மூவர் பதிகங்களைத் தவமாக விரும்பிய அரனே

வரனே அன்னே மலைப்பதியாகிய கந்தனுக்கு அம்மானே உயர்ந்த சுற்றமாவாரை ஒப்போனே என உரைதத்துச் சிவபிரான் பாட்டாகக் கொள்க.

இப்பொருளில் அம்மான், பிதா. நத்தமர் என்பதன் கண் நகரம் உயர்வு குறித்து வந்தது.

*மூ பொருள்.*

இரண்டாவது பொருளிற் கூறியாங்குப் பதப்பிரிவு செய்து அரனுக்கு இனிமை செய்வோனே ஆழ்வார் பதிகங்களை விரும்பிய அமரனே கந்தனுக்கு அம்மானே என உரைத்துத் திருமால் பாட்டாகக் கொள்க. அம்மான் - மாமன்.

75. *வரைய கலார மராவான வாமன மானையனே*
*வரைய கலார மராவான வாமன மானையனே*
*வரைய கலார மராவான வாமன மானையனே*
*வரைய கலார மராவான வாமன மானையனே*

*இஃது ஒற்றெழுத்தின்றி வந்த ஏகபாதம்.*

இது முப்பொருளுடைத்து.

*முசொகை.*

*வரைய கல்லார் அமரா வானவா மன்ன மான் ஐயனே*
*வரைய கல்லாரம் மராவான் அவாம் மனம் மால்*
*நை அன்னே*
*வரை அகல் ஆர் அமர் ஆ ஆன வாமன மால்*
*நயன் ஏவு*
*அரைய கல் ஆரம் அரா வான வாமன் அம்மான்*
*ஐயனே.*

*பகை.*

வரைய - மலைகளையுடையானே

கல்லார் அமரா வானவ - கல்லாரை விரும்பாத தேவனே மன்ன-மன்னனே

(மான் ஐயனே வரைய) ஐயனே மான் வரைய-ஐயனே எனது மான் போலும் நோக்கத்தாளை மணந்தருள்க.

கல்லாரம் மரா வான் அவாம் - நீயணிந்த நீலோற்பவ மாலையானும் கடப்ப மாலையானும் நின்னையே விரும்புகின்ற

மனம் மால் நை-அவளது மனத்தின்கணுள்ள காமமயக்கத்தைக் கெடுத்தருள்க

அன்னே-தாய் போல்வானே

வரை அகல் ஆர் அமர் - அளவு கடந்த (அரிய, திரிபுர) யுத்தத்தின் கண் ஆ ஆன வாமனமால் - இடபமாகத் தாங்கிய வாமனன் என்னும் திருமாலாகிய நயன் ஏவு அரைய-நன்மை பொருந்திய பாணத்தையுடைய அரையனும் கல் ஆரம் அரா-மாணிக்கக் கற்களையுடைய ஆரமாகிய பாம்புகளை அணிந்த

வான வாமன அம்மான் ஐயனே - மேலாகிய வாமனும் அம்மானுமாகிய சிவபிரானுக்குக் குருவே

### வி.ரை.

கல்லார் மன்ன கல்லாரம் அன்னே அம்மான் - இவை இடைக்குறை. நயன். நையன் என மயங்கிற்று. "*பல்லோர் அறியும் சொல்*" *என்புழிப் போலக் கல்லார் அமரா என்பது இரண்டாவது தொகப் பெற்றது*

இது வரைவு வேண்டல்.

### இ.பொ.ரை.

வரைதலையுடைய கல்லாரை அமராத வானவா, மன்னனே, மானைத்தரித்த ஐயனே, அன்னே, அரையனே, வாமனே, அம்மானே, ஐயனே எனவுரைத்துச் சிவபிரான் பாட்டாகக் கொள்க. வரைதல் - நீக்கல். ஐயன் ஒன்று அழகன்; ஒன்று தந்தை.

### மூ.பொ.ரை.

ஈற்றில் ஐயன் எனற்கு அழகு செய்வோன் எனவும் வரைதலுடைய கல்லார் எனவும் கொண்டு வாமனனாகிய அம்மானுக்கு ஐயனே என உரைத்து விநாயகர் முதலிய ஏனையோர்க்கும் கொள்க.

76. மாணவ னாமல மாறு முகவா மனகத்தனே
மாணவ னாமல மாறு முகவா மனகத்தனே
மாணவ னாமல மாறு முகவா மனகத்தனே
மாணவ னாமல மாறு முகவா மனகத்தனே

சொ.கை.

மாணவன் ஆம் அலம் ஆறும் உக வா மல்நகத்தனே ஏம்
ஆள் நவம் நாம் அல்லம் மாறும் உகவா மன அகத்தன் ஏம்
ஆணவம் நாம் மலம் மாறும் உகம் வாமன் அகத்தனே
மாணவ நா மல் அம் ஆறுமுகவா மன்ன கத்தனே.

பஙரை.

மாணவன் ஆம்-யான் நினக்குச் சீடன் ஆவேன்

அலம் ஆறும் உகவா-பிறவித் துன்பங்களும் அவற்றிற்குக் காரண மாகிய விருப்பு வெறுப்புக்களும் கெடுமாறு வருக

மல் நகத்தன்-வளம் பொருந்திய மலைகளை யுடையானே

ஏம் ஆள்-இனிதாக என்னை ஆளுக

(நவம் நாம் அல்லம்) நாம் நவம் அல்லம்-ஆண்டானும் அடிமையும் ஆகிய நாம் இருவரும் புதியவரல்லேம்

மாறும் உகவா மன் அகத்தன்-யானே பகைவரும் களியாது இரங்கத் தக்க மிக்க பாவத்தை யுடையேன்

ஏம் ஆணவம்-மயக்கம் ஆகிய ஆணவம் என்ற மலத்தினை இயல்பாகவே நீங்கிய

உகவாமன் அகத்தனே-யுகாதியாகிய சிவபிரானது அகத்தின்கண் உள்ளவனே

மாணவ-மாட்சிமையுடையானே

நாமல் அம்-நாவினது வளத்தையுடைய அழகிய

ஆறுமுகவா மன்ன கத்தனே-ஆறுமுகவனே மன்னனே கருத்தனே எ-று

*வி-ரை.*

அலமும் எண்ணும்மை விகாரத்தால் தொக்கது. ஆறு-வழி. நீ ஆள்வானாதல் நான் ஆளப்படுவானாதல் அநாதியே அமைந்தன. புதியன அல்ல ஆதலின் யான் எத்துணைப் பாவி ஆயினும் என்னை ஆளுதல் நின் கடன் என்பது கருத்து. நீதி தப்பினாரை வெல்லல் எளிதாகலிற் பாவஞ் செய்யிற் பகைவர் களித்தல் இயல்பாயினும் அளவு கடந்தமையால் அவருங்களித்திலர் என்னும் கருத்தால் மாறும் உகவா அகத்தன் என்றார்.

77. *கனவிர தத்தர கந்தாமன் னாவல கைத்தண்டனே*
*கனவிர தத்தர கந்தாமன் னாவல கைத்தண்டனே*
*கனவிர தத்தர கந்தாமன் னாவல கைத்தண்டனே*
*கனவிர தத்தர கந்தாமன் னாவல கைத்தண்டனே*

*சொ.கை.*

*கன விரதம் தரம் கந்தா மன்னா வலம் கைத்து அண்டம் நே*
*கனம் இரதத்து அர கந்தா மன் ஆவல கைத்தண்டு அநேக*
*நவிரம் தத்தர் அகம் தாம் அன்னா அலகை தண்டனே*
*கனம் விரதத்தர் அகம் தாம் மல் நாவல கை தண்டனே.*

*பரை.*

கனவிரதத் தரம் கந்தா-நீர்வளம் பொருந்திய மலைகளையுடைய கந்தனே

மன்னா வல கைத்து-மன்னனே வலிய செல்வமே

அண்டம் நே கன இரதத்து-உலகமாகிய விரும்பப்பட்ட வலிய தேரையுடைய

அர கந்தா மன் ஆவல - அரனாகிய அழியாத சிவபிரானது அன்பினையுடையானே

கை தண்டு அநேக நவிர தத்தர்-அணி வகுத்த சேனைகளையுடைய அளவற்ற மலைகளையொத்த விலக்கு நெறிகளையுடைய சூரன் முதலியோரது

அகம் தரம் அன்னா-அகந்தையைக் கடந்த தாய்போல்வானே அலகை தண்டனே.

கனவிரதத்தர் அகம் தா-மேன்மையாகிய தவவிரதத்தையுடைய ஞானிகளது மனத்துக்கட் கருதப்படும் பொருளை அடியேனுக்குத் தருக

மல் நாவல-வளமிக்க நாவலனே

கைத் தண்டனே-தண்டபாணிக் கடவுளே எ-று.

*வி-ரை.*

கனவிரதம்-நீர். தரமும் நவிரமும் மலை. அகம் அகத்திற் கருதப்ப டு பொருளை உணர்த்தலின் ஆகுபெயர்.

78. *அத்திரி யாவரன் பாரிடத் தாம்பலந் தந்தனையே*
*அத்திரி யாவரன் பாரிடத் தாம்பலந் தந்தனையே*
*அத்திரி யாவரன் பாரிடத் தாம்பலந் தந்தனையே*
*அத்திரி யாரவன் பாரிடத் தாம்பலந் தந்தனையே*

*சொ.கை.*

*அத்திரியா வரன் பாரிடத்து ஆம் பலம் தந்து அல் நை ஏ*
*அத்திரி ஆ வரன் பார் இட தாம் பல் அந்தம் தன்னை ஏய்*
*அத்திரி ஆவர் அன்பு ஆர் இடத்து ஆம்பல் அந்தம் தன் ஐ ஏய்*
*அத்து இரியா அரன் பாரிடத்து ஆம்பல் அம் தந்தன் ஐயே.*

## *அ-ள்*

வரன்பார்-வீட்டுலகு. வரன் அத்திரியாக இடம்பார் என்க. அத்தி ரி-மலை

தாம்-தாவும். பல் அந்தம் தாம் தனை ஏய் அத்திரி முனிவர் என்க.

அத்திரிக்கு அன்பு நிறைந்த புதல்வன் என்க. இடத்து அந்தம் ஆம்பல் ஐ என்க. தன்-சாரியை. பாரிடம்-பூதகணம்.

அரனுக்கும் தந்தனுக்கும் அழகு செய்வோன் என்க. அரனும் தந்தனு க்கு ஐயனுமாகிய சிவன் என்க. அரனது பூதகணத் தலைவனாகிய த ந்தன் என்க.

*பஹரை.*

அ திரியா வரன் பாரிடத்து-அழியாத மேனிலம் என்னும் வீட்டுலகின் கண்

ஆம்பலம் தந்து-முளைத்தற் கேதுவாகிய ஐம்புலம் அடக்கல் என்னும் வலியை எமக்குத் தந்து

அல் நை-அஞ்ஞான இருளைப் போக்குக.

(அத்திரி ஆ வரன்பார் இட) வரன் அத்திரி ஆ இடப்பார்-எமக்கு அருளும் வரங்கள் மலைபோல நிலைபெறவும், ஏற்பாருக்கு இல்லை என்னாது அவர்வேண்டுவன கொடுக்கவும் கிருபா நோக்கம் செய்க.

(தாம் பல் அந்தம்) பல் அந்தம் தாம்-தவம் கல்வி ஞானம் முதலாய பலவற்றின் முடிவைக் கடந்துகண்ட

தன்னை ஏய் அத்திரி ஆவர்-தாயை ஒத்த கருணையுடைய அத்திரி எ ன்னு முனிவர்க்கு

அன்பு ஆர்-அன்பு நிறைந்த புதல்வனாகிய

(இடத்து ஆம்பல் அந்தம் ஐ ஏய் இடத்து அந்தம் ஆம்பல் ஐ ஏய்- இவ்விடத்துள்ள அழகினையுடைய ஆம்பற்பூக்களுக்கு நண்புடைய தேவனாகிய சந்திரனைத் தலையிற்சூடிய

அத்து இரியா அரன்-செந்நிறங் கெடாத அரனுக்கும்

பாரிடத்து ஆம்பல் அம் தந்தன்-பூதப்படையும் யானைமுகமும் ஒற்றைக் கொம்புமுடைய கணபதிக்கும்

ஐயே-அழகு செய்யும் குமார தெய்வமே எ-று.

**79.** ***தந்தா யவனிகந் தாவர சாதனஞ் சாந்தனையே***
***தந்தா யவனிகந் தாவர சாதனஞ் சாந்தனையே***

**தந்தா யவனிகந் தாவர சாதனஞ் சாந்தனையே**
**தந்தா யவனிகந் தாவர சாதனஞ் சாந்தனையே.**

**சொகை.**

**தந்தாய் அவனி கந்தா வர சாத நம் சாந்தன் ஐயே**
**தந்தாய் அ அனிகம் தா அரசா தனம் சாந்தம் நை ஏதம்**
**தாய் வன்னி கந்து ஆ வர சாது அன்னம் சாம் தனையே**
**தந்து ஆயவன் இகம் தாவரம் சாதம் நஞ்சு ஆம் தன்னையே.**

**பரை.**

தந்தாய் அவனி-உலகங்களைப் படைத்தவனே

கந்தா வர சாத-கந்தனே வரதனே உண்மைப்பொருளே

நம் சாந்தன் ஐயே தந்தாய்-நமது சாந்தனே, தலைவனே, தந்தையே

அ அனிகம் தா அரசா-அத் தேவசேனைக்கு வலிமை பெருந்தய அரசனே

தனம் சாந்தம்-தலைமகளது தனங்களில் அணிந்த சந்தனம்

நை ஏதம் தாய வன்னி-வருத்துகின்ற துன்பத்தைச் செய்யும் தாவிய தீயாகக் கருதப்படுகின்றது

கந்து ஆவர-ஆதலால் இது பொழுது பற்றுக் கோடாக வருக

சாது-சாதுவே

அன்னம் சாம்தனையே - அவ்வன்னம் போல்வாள் சாம் அளவினை யுடையாள்

தந்து ஆயவன் - வேதநூலாகவும் விளங்குகின்றவனே

இகம் தாவர சாதம் - இவ்வுலக வாழ்வும், உடல் வளர்க்கும் சோறும்

நஞ்சு ஆம் - அவளுக்கு விடமே ஆகின்றன

தன்னையே - தாய் போல்வானே எ-று.

இது தலைவி துயர் கூறித் தூதுரைத்தல்.

80. *சாரங்கத் தையன லத்தை யமையங்கைத் தாமனையே*
*சாரங்கத் தையன லத்தை யமையங்கைத் தாமனையே*
*சாரங்கத் தையன லத்தை யமையங்கைத் தாமனையே*
*சாரங்கத் தையன லத்தை யமையங்கைத் தாமனையே*

இது முப்பொருளுடைத்து.

*முசொகை.*

*சாரங்கத்து ஐயன் அலத்து ஐ அம் மயங்கு ஐ தாமன் ஐயே*
*சாரங்கத்தை அனலத்தை அமை அங்கை தாமனையே*
*சார் அங்கம் தையல் நல் அத்தை அம்மை அம் கைத்து ஆம் அல் நை*
*ஏசார் அங்கத்து ஐயன் அலத்து ஐயம் ஐயம் கைத்தாம் அன்னையே.*

*பரை.*

சாரங்கத்து ஐயன் - சாரங்கம் என்னும்வில்லையுடைய அழகனும்

அலத்து ஐ - கலப்பையையுடைய பலராமனாக அவதரித்தஐயனும்

அம் மயங்கு ஐ தாமன் - மேகமும் மருளுங் கரிய நிறத்தையுடைய அழகிய மாலையணிந்தவனுமாகிய திருமாலுக்கு

ஐயே - தலைவனே

சாரங்கத்தை அனலத்தை அமை அங்கை - மானையும் நெருப்பையும் பொருந்திய அங்கையையுடைய

தாமனையே சார் - ஒளிபொருந்திய சிவபிரானது இடப்பாகத்தைப் பொருந்திய

அங்கத் தையல்.- திருமேனியையுடைய தையலும்

நல் அத்தை அம்மை - நல்ல தலைவியும் அம்மையும் ஆகிய பார்வதிக்கு

அம் கைத்து - அழகிய செல்வம் ஆகிய புத்திரனே

ஆம் அல் நை ஏசார் - எமக்குளதாகிய ஆணவ இருளைக் கெடுத்தருள்க. இதனால் எவரும் பழிகூறார்

அங்கத்து ஐயன் - மேன்மை பொருந்திய ஐயனே

அலத்து ஐயம் ஐயம் கைத்தாம் - துன்பம் தருவதாகிய சந்தேகத்தையும், ஏனையோரிடத்து இரத்தலையும் வெறுத்தேம்

அன்னையே - தாய் போல்வானே எ-று

*கு-பு.*

சார்ங்கம் என்பது அகர உயிர் விரிந்து சாரங்கமென நின்றது. இதனை உடனிலைச் சிலேடையால் விநாயகருக்குங் கொள்க.

*இ.பொ.ரை.*

தாமனை எனற்கு முன்னிலைக்கண் வந்த ஐகாரமாகக் கொண்டு ஒளியுடையாய் எனவும், அம்மைக்கு அழகிய செல்வமாகிய கணவனே எனவும், அங்கத்து ஐயன் எனற்கு எலும்பணிந்த ஐயனே எனவும் உரைத்துச் சிவபிரான் பாட்டாகக் கொள்க.

*மூ.பொ.ரை.*

*சாரங்கத்து ஐயனே, அலத்தினையுடைய ஐயனே அம்மயங்கு*
*ஐத்தாமனே ஐயே அம்மைக்குச் செல்வமாயுள்ள சகோதரனே*

என உரைத்துத் திருமால் பாட்டாகக் கொள்க.

81. *தாரகத் தானத்த னஞ்சக் கரத்தரி சையத்தனே*
*தாரகத் தானத்த னஞ்சக் கரத்தரி சையத்தனே*
*தாரகத் தானத்த னஞ்சக் கரத்தரி சையத்தனே*
*தாரகத் தானத்த னஞ்சக் கரத்தரி சையத்தனே*

இது நீரோட்டக ஏகபாதம்

*சொகை.*

*தாரகம் தானத்தன் தம் சக்கு அரத்தர் இசை*
*அத்தன் ஏ*
*தார் அகத்தன் நத்தன் அம் சக்கரத்து அரி*
*சையத்தன் நே*
*தாரகத்தன் அத்தன் அஞ்சு அக்கரத்தர் இசை*
*அத்தன் ஏ*
*தாரக தானத்தன் அஞ்ச கரத்து அரி சையத்தனே.*

*பதை.*

தாரகத் தானத்தன் - பிரணவமாகிய இடத்தில் இருப்பவனும்

நம் சக்கு அரத்தர் இசை - நமது தாயராகிய கண்கள் அரம் போன்ற வள்ளி தேவயானையாரைப் பொருந்திய

அத்தன் - பிதாவும்

ஏ தார் அகத்தன் - பாணங்களையுடைய தேவசேனை நடுவில் தலைவனாக நின்றவனும்

நத்தன் அம் சக்கரத்து அரி சையத்தன் - சங்கமேந்தியும் அழகிய சக்கரத்தையுடைய அரியும் செல்வமுடையவனும் ஆகிய திருமாலுக்கு

நே தாரகத்தன் - அன்பினையுடைய ஆதாரமானவனும்

அத்தன் - தலைவனும்

அஞ்சு அக்கரத்தர் இசை அத்தன் - பஞ்சாக்கரத்தையுடைய சிவபிரானுக்குபதேசித்தருளிய உண்மைப் பொருளையுடையானும்

தாரகத் தானத்தன் அஞ்ச - தாருகனாகிய மும்மதம் பொருந்திய யானை முகாசுரனை அசுரர் எல்லாரும் அஞ்சும்படி

கரத்து அரி - கரத்தாற் கொன்றருளிய

சையத்தனே - மலைகளை யுடைய சுப்பிரமணியக் கடவுளே எ-று.

82\. *சையத்தி யங்கத் திருத்தனை யன்னாகஞ் சக்கரனே*
*சையத்தி யங்கத் திருத்தனை யன்னாகஞ் சக்கரனே*
*சையத்தி யங்கத் திருத்தனை யன்னாகஞ் சக்கரனே*
*சையத்தி யங்கத் திருத்தனை யன்னாகஞ் சக்கரனே.*

இது நாற்பொருளுடைத்து.

*முசொகை*

*சயத்து இயங்க திருத்தல் நை அல் நாகு அம் சக்கு அரம் நே*
*சை அத்தி அம் கத்திரு தனயன் ஆகம் சக்கரன் ஏ*
*சையத்தி அங்கத்து இருத்து அனையன் ஆகு அஞ்சு அக்கரன் ஏ*
*சை அத்தி அங்கம் திருத்தன் ஐ அன்னா கஞ்சம் கரனே.*

*பரை.*

சயத்து இயங்கத் திருத்தல் - சயத்துடன் இயங்குமாறு என்னைத் திருத்துக

(நை அல்) அல் நை - அஞ்ஞான இருளை அழித்தருள்க

நாகு அம் - இளமையும் அழகுமுடைய

சக்கு அரம் நே சை - கண்கள் அரம் போன்ற பெண்கள் ஆசை இகழ்ச்சியே. அதனால் அதனையும் நீக்குக.

அத்தி - திருப்பாற்கடலில்

அம் கத்திரு தனயன் ஆகம் - அழகிய கத்திருவின் புத்திரனாகிய ஆதிசேடனது உடலின்கண் யோகநித்திரை செய்யும்

சக்கரன் ஏ - சக்கராயுதத்தையுடைய திருமாலாகிய பாணத்தையுடைய

சையத்தி அங்கத்து இருத்து - மலைமகளைத் தன்து பாதித் தேகத்து இருத்திய

அனையன் ஆகு - அத்தன்மையன் ஆகிய

அஞ்சு அக்கரன் - பஞ்சாக்கர மூர்த்தியாகிய சிவனையும்

சை அத்தி - அருட் செல்வமுடைய யானைமுகனும்

அங்கத் திருத்தன் ஐ - மேன்மைதங்கிய பூரணனும் மூத்தோனுமாகிய கணபதியையும்

அன்னா - ஒப்பானவனே

கஞ்சக்கரனே - தாமரை மலர் போலும் கரமுடையானே எ-று.

*வி-ரை.*

சயம் - சையம் என மயங்கிற்று. சக்கு அரம் - அன்மொழித் தொகை. சை - இகழ்ச்சிக் குறிப்பு.

*இ.பொ.ரை.*

ஈற்றடியில் திருத்தனை அன்னா எனப்பிரித்து அத்தி எனற்கு என்பெனப் பொருள் கொண்டு பஞ்சாக்கர மூர்த்தியும் அத்தியை அணிந்த திருத்தனும் ஆகிய சிவபிரானை ஒத்த விநாயக மூர்த்தியே முருகக் கடவுளே என்று உடனிலைச் சிலேடையால் இவ்விருவர்க்குங் கொள்க.

*மூ.பொ.ரை.*

அஞ்சு அக்கரனே அத்தியை அணிந்த திருத்தனே ஐயே அன்னையே கஞ்சக் கரனே என உரைத்துச் சிவபிரான் பாட்டாகக் கொள்க.

*நா.பொ.ரை.*

இரண்டாவதடி ஈற்றில் சக்கரனே எனப்பிரித்துச் சக்கராயுதனே பஞ்சாக்கரனும் திருத்தனுமாகிய சிவனை ஒப்பானவனே என உரைத்துத் திருமால் பாட்டாகக் கொள்க.

83. *சங்கர வையங் கவின மணிகண் டனமனனே*
*சங்கர வையங் கவின மணிகண் டனமனனே*
*சங்கர வையங் கவின மணிகண் டனமனனே*
*சங்கர வையங் கவின மணிகண் டனமனனே*

சொ.கை

*சங்கர ஐ அங்கம் இனம் அணி கண்டு அன்ன மன்னன் ஏ*
*சங்கு அரவு ஐயம் கவி நம் மணிகண்டன் அம் மனம் நேசம்*
*கரவு ஐயம் கவின் அமன் நிகண்டம் நமன் அன்னே*
*சம் கரம் ஐயங்கவினம் மணி கண் தனம் அன்னனே.*

ப-ரை.

சங்கர ஐ - சங்கரனாகிய கடவுளும்

அங்க இனம் அணி - எலும்பின் கூட்டத்தை அணிந்த

கண்டு அன்ன மன்னன் - அடியார்க்குக் கற்கண்டை ஒத்த தலைவனும்

சங்கு அரவு ஐயம் கவி - சங்கும் அரவும் பிட்சாபாத்திரமும் காதுமுதலிய அங்கங்களை மூடப்பெற்ற

நம் மணிகண்டன் - நமது நீலகண்டனுமாகிய சிவபிரானுடைய

அம் மனநேசம் - அழகிய மனத்துக்கண் விளங்கும் நேசத்தையுடையானே

கரவு ஐயம் கவின் - வஞ்சகமும் சந்தேகமும் விளங்குகின்ற

அமண் நிகண்ட நமன் - சமணருக்கும் நிகண்ட வாதிகளுக்கும் இயமனாக அவதரித்த ஞானசம்பந்த மூர்த்தியே

அன்னே - அன்னையனையனே (நீ எமக்கு)

சம் கர ஐயம் கவினம் - சுகத்தைக் கொடுக்கும் கையின்கணுள்ள புதுவெண்ணெயையும்

மணிகண் - கருமணியோடு கூடிய கண்ணையும்

தனம் - செல்வத்தையும்

அன்னனே - ஒப்பாயினாய் எ-று.

வி-ரை.

ஐயங் கவினம் - குறுக்கல் விகாரம் தனக்கு ஒருவாற்றானும் உவமை இல்லை எனினும் எளிதில் பயன்படல்

நோக்கி வெண்ணெயும், அறிவுக் கறிவாய் நின்று அறிவித்தல் பற்றிக் கண்மணியும், போக மூட்டல் பற்றிச் செல்வமும் உவமையாக்கப்பட்டன. பிறவும் இவ்வாறே கொள்க. தனக்குவமை இல்லாதான் என்றுண்மை வெளியட்ட தேவரும் அகரத்தை உவமை கூறியமை காண்க.

84\. *மலைய மலையனை யந்தத் தயிலேக மானந்தனே*
*மலைய மலையனை யந்தத் தயிலேக மானந்தனே*
*மலைய மலையனை யந்தத் தயிலேக மானந்தனே*
*மலைய மலையனை யந்தத் தயிலேக மானந்தனே*

*சொலகை.*

*மலைய மலையன் ஐ அந்தத்து அயில் ஏக மால் நந்த நே*
*மலைய மலைய நை அம் தத்தை இல் ஏகு அம் ஆனந்தனே*
*மலைய மல் ஐயன் ஐயம் தத்து ஐயில் ஏகு அம்மான் அந்தனே*
*மல் ஐ அமலை அன்னை அத்தத்து ஐ இலேக மா நந்தனே.*

*பஙரை.*

மலைய மலையன் ஐ -பொதியின் மலையின் கணுள்ள அகத்திய முனிவருக்குக் குருவே

அந்தத்து அயில் ஏக-அழகினையுடைய வேலாயுதமுடைய ஏகனே

மால் நந்த - காமமயக்கம்மிக

நே மலைய மலைய நை - நின்பால் வைத்த அன்பு வருத்த அதனால் வருந்தும்

அம் தத்தை இல் ஏகு - அழகிய கிளி போல்வாளை நின் இல்லின்கட் கொண்டு செல்க

அம் ஆனந்தனே - அழகிய ஆனந்தமுடையானே

மலைய - மலைகளை யுடையானே

மல் ஐயன் - வளமிக்க ஐயனே

ஐயம் தத்து ஐயில் ஏகு அம்மான் - சந்தேகமும் விபத்தும் அடியருக்கு நின் அழகால் நீங்குதற்குக் காரணமான அம்மானே

அந்தனே - அழகனே

மல் ஐ அமலை அன்னை - வளமிக்க அழகுடைய அமலையாகிய அன்னைக்கும்

அந்தத்து ஐ இலேகன் - சருவ சங்காரத்தைச் செய்யும் கடவுளான தேவனுக்கும்

மா நந்தனே - பெருமை பொருந்திய புதல்வனே எ-று.

*வி-ரை.*

இது உடன்போக்கு வேண்டல்.

85. *மானம்பா கத்தவென் றாயவா கந்த வனத்தனையே*
*மானம்பா கத்தவென் றாயவா கந்த வனத்தனையே*
*மானம்பா கத்தவென் றாயவா கந்த வனத்தனையே*
*மானம்பா கத்தவென் றாயவா கந்த வனத்தனையே*

இது இருபொருட்டு

*சொகை*

மா நம்பா கத்த என் தாய் அ ஆகம் தவ நத்து அன்னை ஏ மான் அம் பாகத்த என்று ஆயவா கந்தம் வனத்தன் ஐ ஏம் ஆன் அம்பு ஆகு அத்த வென்றாய் அவா கம் தவம் நத்தன் ஐ ஏமா நம்பு ஆகத்த என்று ஆய வா கந்த அனத்தம் நையே.

*பரை.*

மாநம்பா-பெருமையுடைய நம்பனே

கத்த-கருத்தனே

என் தாய்-என்னுடைய தாயே

அ ஆகம் தவ நத்து-நினது அத்தகைய திருமேனியை மிகவும் விரும்பிய

அன்னை மான் அம் பாகத்த-அன்னையாகிய மானையுடைய அழகிய பாதிப் பாகத்தையுடையானே

என்று ஆயவா-சூரியனாக விளங்குகின்றவனே

கந்தவனத்தன் ஐ-வாசனை பொருந்திய துளவமாலையணிந்த திருமாலாகிய தலைவன்

ஏம் ஆன் அம்பு ஆகி - இனிய இடபமும் அம்புமாகப் பெற்ற அத்த அத்தனே

(வென்றாய் அவா) அவா வென்றாய் - ஆசையை வென்றவனே

கம் தவ நத்தன் - பிரமனும் தவத்தையுடைய மாலும்

ஐ ஏமா நம்பு - அழகிய காவலாக நம்பி இருபாகத்தும் பொருந்திய

ஆகத்த - திருமேனியுடையானே

என்று ஆயவா - என்று சிவனைத் துதித்து அவனை ஆராயுமாறு நீ என்முன் வருக

கந்த - கந்தனே

அனத்தம் நை - கேட்டினை விலக்குக எ-று.

*இ.பொ.ரை.*

ஈற்றில் கந்து அ அனத்தம் நை எனப்பிரித்து எமக்குப் பற்றுக் கோடாகிய சிவனே ஆயுமாறு வருக. அனத்தங்களை நையச் செய்க என்றுரைத்துச் சிவபிரான் பாட்டாகக் கொள்க.

இதுவே உடனிலைச் சிலேடையால் விநாயகர்க்கும் பொருந்தும்.

86. *வரனம் பரமலை யாணந் தனனா மகாவலனே*
*வரனம் பரமலை யாணந் தனனா மகாவலனே*
*வரனம் பரமலை யாணந் தனனா மகாவலனே*
*வரனம் பரமலை யாணந் தனனா மகாவலனே*

*சொ.கை.*

*வரல் நம்பர் அமலையாள் நந்தன நாம கா வலன் நே*
*வர நம் பரமலை ஆள் நந்து அனல் நாம கா அலனே*
*வரன் அம்பர் அமலை ஆணம் தன்னம் நா மகா*

வலனே

*வரன் அம் பர மல் ஐ ஆணம் தனன் ஆம் அகா வல்லனே.*

*ப.உரை.*

வரல் - வருக

நம்பர் அமலையாள் நந்தன நாம - சிவபிரானுக்கும் உமாதேவிக்கும் புத்திரனாகிய கீர்த்தியை யுடையானே

கா வலன் நே வர - கற்பகத் தருவின்கண் உள்ளானாகிய இத்திரனுக்கு அன்பினையுடைய மருமகனே

நம் பரமலை ஆள் - நமது திருப்பரங்குன்றை ஆளுகின்ற

நந்து அனல் நாம - ஆக்கமுற்ற அக்கினி தேவனால் வந்த பாவகி என்னும் பெயரையுடையானே

கா - காத்தருள்க

(அலனே வரன் அம்பர்) வரன் அம்பர் அலனே - மேலாகிய அவ்வுலக இன்பமும் துன்பமேயாம். அதனால் அதுவும் வேண்டேன்.

அமலை ஆனம் தன்னம்-இவ்வுலகத்து உடல் நிற்றற்கேதுவாகிய சோறும் கறிகளும் அற்பத்தன்மை யுடையனவே. அதனால் அதுவும் வேண்டேன்.

நா மகா வலனே வரன் - நாவினது மகிமை பொருந்திய வெற்றியே யான் வேண்டும் வரமாகும்.

அம்பர - அழகிய மேலோனே

மல் ஐ - வளமுடைய ஐயனே

ஆணம் தனன் ஆம் அகா - அன்பே செல்வமாகிய மனமுடையானே

வல்லனே - எல்லாம் வல்லோனே எ-று.

87. *காத லனந்த வரப்பணங் கைக்கங் கணவனையே*
*தூாத லனந்த வரப்பணங் கைக்கங் கணவனையே*

*காத லனந்த வரப்பணங் கைக்கங் கணவனையே*
*காத லனந்த வரப்பணங் கைக்கங் கணவனையே*

இது இருபொருளுடைத்து.

*முசொகை.*

*காது அலன் அந்தம் வரம்பு அண் நங்கைக்கு அம் கணவனை ஏகாது*
*அல் அனந்த அர பணம் கை கங்கணவன் ஐயே*
*காதல நம் தவம் அப்பு அணங்கு ஐக்கு அங்கண அன்னை ஏகா*
*தலம் நந்த வர பண் அங்கு ஐக்கம் கண் அவம் நை ஏ.*

*பரை.*

(காது அலன்) அலன் காது - துன்பத்தைக் கெடுத்தருள்க

அந்த வரப்பு அண் - அழகினது எல்லையைப் பெற்ற

நங்கைக்கு அம் கணவனை - வள்ளியம்மைக்கு அழகிய கணவனே

(ஏகாது அல்) அல் ஏகாது - இருளாகிய நிரயத்துச் செல்லாமல் அனந்த - அனந்தனே

(அர பணம்) பண அர - படத்தினையுடைய பாம்பாகிய கை கங்கணவன் - கைக் கங்கணமுடைய சிவபிரானுக்கு

ஐயே - குருவே

காதல - புதல்வனே

நம் தவ - நமது தவ முனிவருக்கும்

அப்பு அணங்கு ஐக்கு - நீரர மகளிர்க்குத் தலைவியாகிய கங்காதேவிக்கும்

அம் கண்ண - அழகிய கண்போல்வானே

அன்னை - தாய்போல்வானே

ஏகா - ஏகனே

SENTHAMIL COLLEGE LIBRARY, MADURAI

தலம் நந்த வரப்பண் - நினது தலங்கட்கு எமக்கு ஆக்கமுளதா மாறு யாம் வரச் செய்க

அங்கு ஐக்கம் கண் - அவ்விடத்து முத்திநிலையைக் கொடுத்தற்குக் கருதுக

அலம் நை - பயனற்ற செயல்களை ஒழித்தருளுக எ-று.

*வி-ரை.*

அல்லாகிய நிரயத்து ஏகாமல் நினது தலங்கட்கு வரப்பண் எனக் கூட்டுக.

*இ.பொ.ரை.*

நங்கை எனற்கு உமாதேவி எனவும் கங்கணவனை எனப்பிரித்துக் கங்கண முடையானே எனவும், காதல எனற்கு அன்புடையானே எனவும் ஏனைய முன்போலவும் உரைத்துச் சிவபிரான் பாட்டாகக் கொள்க.

88. *வலக்கார மன்னா யகனத்த வாகவி மாலையனே*
*வலக்கார மன்னா யகனத்த வாகவி மாலையனே*
*வலக்கார மன்னா யகனத்த வாகவி மாலையனே*
*வலக்கார மன்னா யகனத்த வாகவி மாலையனே*

இது முப்பொருளுடைத்து

*மு.சொ.கை.*

*வல் அக்காரம் அன்னாய் அகன் அத்த வாக இமாலயன் நே*
*வல் அக்கு ஆரம் மல் நாயகன் அத்த வா கவி மால் அயன்*
*வலம் காரமன் ஆய கனத்த ஆகு அவி மால் ஐயனே*
*வலக்காரம் மன்னாய் அகல் ந தவா கவி மாலையனே.*

*ப.ரை.*

வல் - விரைந்து

அக்காரம் அன்னாய் - சர்க்கரை போல் இனிப்பவனே

அகன் அத்த - மனத்தில் விளங்கும் பிதாவே

வாக - அழகுடையவனே

இமாலயன் - மேருமலையையுடையவனும்

நே வல் அக்கு ஆரம் - பிரியமாகிய வலிய எலும்பு மாலையை அணிந்த

மல் நாயகன் - வளமிக்க நாயகனுமாகிய சிவபிரானுக்கு

அத்த - குருவே

வா - வந்தருள்க

கவிமால் - குரங்குச் சேனையை யுடைய திருமாலுக்கும்

அயன் - பிரமனுக்கும்

வலக்கார - வெற்றி பொருந்திய மேகவாகனத்தையுடைய

மன் ஆய - தேவராசனாகிய

கனத்த ஆகு ஆவி - மேன்மையுடையனவாகிய நூறு யாகங்களையுடைய

மால் - இந்திரனுக்கும்

ஐயனே - தலைவனே

வலக்காரம் மன்னாய் - பொய்யொடு பொருந்தாதவனே

அகல் ந தவா - விரிந்த உயர்ந்த தவமுதல்வனே

கவிமாலையனே - பாமாலையை அணிந்தவனே எ-று.

***வி-ரை***

விரைந்து வருக எனக் கூட்டுக.

*இ.பொ.ரை.*

நாயகன் அத்த எனற்கு நாயகனுக்குச் செல்வமாகிய விநாயக மூர்த்தியே என உரைத்துக் கொள்க.

*மூ.பொ.ரை.*

இமாலயனே எனப்பிரித்து இமாலயனே, நாயகனே அத்தனே என உரைத்துச் சிவபிரான் பாட்டாகக் கொள்க.

89. *மான வரதனா மோத விசாகா வரத்திருக்கே*
*மான வரதனா மோத விசாகா வரத்திருக்கே*

*மான வரதனா மோத விசாகா வரத்திருக்கே*
*மான வரதனா மோத விசாகா வரத்திருக்கே*

**சொற்கை.**

*மான அரதன ஆமோத விசாகா வர திருக்கு ஏ*
*மானவரது அல் நாம் மோது அவி சாகா வரத்து இருக்கேமா*
*நவரத நாமோ தவிசு ஆகா அரம் திருக்கு ஏம்*
*ஆன வரதன் நாம் ஓது அவி சாகா வரத்து இருக்கே.*

**பஊரை.**

மான - பெருமையுடையவனே

அரதன ஆமோ தவிசாகா - இரத்தினம் போன்ற ஆனந்தமுடைய விசாகனே

வர - வருக

திருக்கு ஏ - கண்ணாகிய பாணத்தையுடைய

மானவரது - மான்போன்ற பெண்களது

(அல் நாம் மோது அவி) அல் மோது நாம் அவி - காமமயக்கமாகிய இருளை மோதுக. அதனால் உண்டாகும் அச்சத்தைக் கெடுத்தருள்க

சாகா வரத்து இருக்கேமா - இவ்வாறு செய்யின் சாகாவரம் பெற்றிரேமா இருப்போம்.

நவரத - நவரச முணர்ந்த புலவனே

நாமோ தவிசு - யாமோ நீ எழுந்தருளியிருக்கும் ஆசனமும் ஆவேம்

(ஆகா அரம் திருக்கு) அரத் திருக்குஆகா - அறிவைத் தேய்க்கும் அரம் போன்ற குற்றங்கள் உள்வாரா.

ஏம் ஆன வரதன் நாம் ஓது - இனிய இடபவாகனத்தையுடைய வரதனது கீர்த்தியைப் பாடிய

அவிசாகா-யாகத்து உதித்த ஆட்டு வாகனமுடையோனே

வரத்து இருக்கே - மேன்மைபொருந்திய வேதப் பொருளே
எ-று

**வி-ரை.**

அரதமோத - தீர்க்க சந்தி. வர - வியங்கோள். சாவாத என்னும் எச்சம் ஈறுகெட்டுச் சாரியை பெற்றது. அவி - ஆகுபெயர் நாமம் -கடைக்குறை. ஆன - குறிப்புப் பெயரெச்சம்.

90. திருக்கவித் தேவாரம் பாடந்த வாரணத் தேசத்தனே
திருக்கவித் தேவாரம் பாடந்த வாரணத் தேசத்தனே
திருக்கவித் தேவாரம் பாடந்த வாரணத் தேசத்தனே
திருக்கவித் தேவாரம் பாடந்த வாரணத் தேசத்தனே

**சொ.கை.**

*திரு கவித்தே வாரம் பாடு அந்த வார் அண்ண தே சத்தனே*
*திருக்கு அவித்தே வார் அம்பு ஆள் தந்த வாரணத் தேசத்தன் ஏது*
*இருக்க வித்தே வார் அம்பு ஆடு அம் தவா ரண தேசத்தனே*
*திரு கவி தேவாரம் பாடு அந்த ஆரண தேசத்தனே.*

**ப.ரை.**

திரு கவித்தே - அருட்செல்வமாகிய முடியைக் கவித்து

வாரம்பாடு அந்த வார் அண்ண - அன்பும் பெருமையும் அழகுடைய ஒழுக்கமும் எனக்குப் பொருந்தும்படி

தேசத்தனே - தெய்வமே உண்மைப் பொருளே

திருக்கு அவித்தே - அஞ்ஞானத்தைக் கெடுத்து.

வார் அம்பு - ஒழுக்கமுள்ள மேகம் போல்வானே

ஆள் - என்னை ஆண்டருள்க

தந்த வாரணத்தே - கொம்புடைய யானை வாகனத்தின் கண் விளங்குகின்ற

சத்தனே - உண்மைப் பொருளே

ஏது - காரணனாய் இருப்பவனே

இருக்க வித்தே - வேதங்களையுடையானே வித்துப் போல்வானே

வார் அம்பு - நீண்ட பாணங்களின்

ஆடு அம் தவா - வெற்றியும் அழகும் நீங்காத

ரணத் தேசத்தனே - யுத்த களத்தில் விளங்குபவனே

திரு கவி தேவாரம் பாடு - தேவாரமாகிய அழகிய கவிகளைப்பாடிய

அந்த ஆரணத் தேசத்தனே - முடிவாகிய வேதத்தில் விளங்குகின்ற ஒளியுடையானே எ-று

**வி-ரை.**

வாரமும் பாடும் அந்தமும் வாரும் அண்ணும்படி திருக்கை அவித்து. திருக்கை கவித்து என்னை ஆள எனக் கூட்டுக.

கவித்தே, அவித்தே, வாரணத்தே என்பவற்றுள்ள

ஏகாரம் அசைகள். அண்ண - இடைக்குறை.

திருக்கவித் தேவாரம் என்றது ஈண்டுச் சம்பந்தர் பாடிய திருநெறித் தமிழை.

91. *சம்பந் தனமா தரிபவ னாசனந் தங்காமனே*
*சம்பந் தனமா தரிபவ னாசனந் தங்காமனே*
*சம்பந் தனமா தரிபவ னாசனந் தங்காமனே*
*ச்ம்பந் தனமா தரிபவ னாசனந் தங்காமனே*

**சொகை.**

*சம்பந்த நம் ஆதரி பவ நாச நந்து அம் கா மன் ஏ*
*சம்பம் தனம் மாது அரி பவனாசனம் தங்கு ஆ மன் ஏ*
*சம்பு அந்தன் அம் மாதரி பவன் ஆசு அல் நந்து*
*அங்கா மல் நேசம் பந்தன் மாது அரிபவன் ஆசு அனந்தம் காமன்னே.*

சம்பந்த - சம்பந்த மூர்த்தியே

நம் ஆதரி - எம்மை ஆதரிக்க வேண்டும்

பவநாச - அடியாரது பிறப்பை ஒழிப்பவரே

நந்து அம் கா - மிக்க அழகு பொருந்திய கற்பகச் சோலையையும்

மன் சம்பம் - நிலைபெற்ற வச்சிராயுதத்தையும்

மாது - இந்திராணியையுமுடைய

அரி - இந்திரனுக்கும்

பவனாசனம் தங்கு ஆ - ஆதிசேட சயனத்தில் தங்கிய இடபமாகிய திருமாலே

மன் ஏ - மிக்க பாணமாகக் கொண்ட

சம்பு அந்தன் - சம்புவும் சங்கார கர்த்தனும்

அம் மாதரி பவன் - அழகிய உமாதேவியையுமுடைய பவன் என்னுந் திருநாமம் உடையானுமாகிய சிவனுக்கும்

ஆசு - கவசம் போல்பவனே

அல் நந்து அங்கா - இருள் கெடத்தக்க பிரகாசம் பொருந்திய தேகம் உடையவனே

மல் நேசம் - அடியார்களுக்கு வளந்தரத்தக்க கருணையால்

பந்தன் மாது அரி பவன் - பிறவியிற் கட்டுப்படுத்தும் ஆசை நீக்குபவனே

ஆசு அனந்தம் - எமக்கோ குற்றங்கள் அளவற்றனவாய் இருக்கின்றன; ஆயினும்

கா - எம்மைக் காத்தருள்க

மன்னே - தலைவனே எ-று.

92. *காமன்ன வாகு வலய னயனங் கடந்தனமே*
*காமன்ன வாகு வலய னயனங் கடந்தனமே*

*காமன்ன வாகு வலய னயனங் கடந்தனமே*
*க்ாமன்ன வாகு வலய னயனங் கடந்தனமே*

**சொ. கை**

*கா மன்ன வாகு வலயன் அய நங்கள் தம் தனம்*
*ஏகா மன்னவா கு அலையன் ஐயன் அம் கடம்*
*தன்னமே*
*காமன் அவா குவலயம் நயனம் கடம் தனம்*
*ஏகாம் அன்னம் வாகு வல் அயன் அயனம்*
*கடந்தனமே.*

**பஉரை.**

(காமன்ன) மன்ன கா - அடியேங்கள் நிலைபெறும்படி காத்தருள்க

வாகு வலயன் - வாகு வலையம் என்னும் தோளணி அணிந்தவனும்

அய - ஆட்டுவாகன முடைய

நங்கள் தம் தனம் - எங்களுடைய செல்வமும் ஆகிய

ஏகா மன்னவா - ஏகனே தலைவனே

கு அலையன் ஐயன் - பூமி தேவியையும் திருப்பாற்கடலையுமுடைய திருமாலுக்கு நாயகனே

அம் கடம் தன்னமே - அழகிய சரீரமும் அழியும் அற்பத் தன்மை யுடையனவேயாம். ஆதலால்

காமன் அவா - மன்மதனால் உண்டாகும் காம இச்சையால்

குவலய நயனம் - நீலோற்பலம் போன்ற கண்களிலும்

கடம் தனம் - குடம் போன்ற தனங்களிலும்

ஏகாம் - விரும்பிச் செல்ல மாட்டோம்

அன்ன வாகு வல் அயன் - அன்ன வாகனத்தில் வருகின்ற அழகும் வலியும் உடைய பிரமாவால் உண்டாக்கப்படுகின்ற

அயனம் கடந்தனம் - பிறவித் துன்பத்தினின்றும் நீங்கினோம் எ-று

*வி-ரை.*

இரண்டாமடி அலையன் ஐயன் என்பன அலயன், அயன் எனப் போலியாயிற்று. தன்னம் - இடைக்குறை. மூன்றாமடி காமனவா என்பது காமன்னவா எனஒற்று விரிந்தது.

93. நளினத்த வஞ்சத்த வாகன வாகன காவலையே
நளினத்த வஞ்சத்த வாகன வாகன காவலையே
நளினத்த வஞ்சத்த வாகன வாகன காவலையே
நளினத்த வஞ்சத்த வாகன வாகன காவலையே

*சொ.கை.*

*நளினத்து அ அஞ்சத்து அவா கன ஆகன் நகு ஆவல் ஐ ஏம்*
*நளி நத்த வஞ்சத்த வாகன வாகன் அகா வல் ஐயே*
*நள் இனத்த அஞ்சு அத்த ஆகன் அவா தன கா அலையேன்*
*அளி ந தவம் சத்த வா கன வாக நகா வல்லையே.*

*ப.ரை.*

நளினத்து அ அஞ்சத்து அவா - தாமரை மலரின்கண் வசிக்கும் அவ்வ ன்னம் போலும் இலக்குமியை விரும்புகின்ற

கன ஆகன் - மேகம் போலும் நிறமுடைய தேகமுடையானும்

நகு ஆவல் ஐ - விளங்குகின்ற அன்பினையுடைய ஐயனும்

ஏம் நளி நத்த - இனிய பெரிய சங்குமுடையானும்

வஞ்சத்த - வஞ்சமுடையானும் ஆகிய திருமாலாகிய

வாகன-இடப வாகனத்தையுடைய

வாகன அகா - அழகனாகிய சிவபிரானது மனத்தின்கண் விளங்குகின்றவனே

வல் ஐ யே - சர்வ வல்லமையும் உள்ள கடவுளே

நள் இனத்த - எனக்கு நட்புடைய சுற்றமானவனே

அஞ்சு அத்த ஆகன் - ஐந்து கரங்கள் பொருந்திய ஆகுவாகனமுடைய விநாயகக் கடவுள்

அவா கன - விரும்புங் கனமுடையானே

கா அலையேன் - காத்தருளுக; காப்பின் யான் என்றும் வருந்தேன்

(அளி ந தவம்) நத்தவம் அளி - உயர்ந்த தவத்தின்னை எமக்கருள்க

சத்த - உண்மைப் பொருளானவனே

கன வாக - கனவிய புயங்களை யுடையானே

நகா - மலைகளை யுடையானே

வல்லையே வா - விரைய என்முன் வருக எ-று.

*வி-ரை.*

வா என்பது வல்லையே என்பதுடன் கூட்டப்பட்டது.

94. *காவானந் தஞ்சிந்து வாரத் தினாத கரவரையே*
*காவானந் தஞ்சிந்து வாரத் தினாத கரவரையே*
*காவானந் தஞ்சிந்து வாரத் தினாத கரவரையே*
*காவானந் தஞ்சிந்து வாரத் தினாத கரவரையே*

*சொகை*

*காவான் நந்தம் சிந்து வாரத்து இன்னா தகர் அவர் ஐயே*
*கா வா நந்து அஞ்சு இந்து ஆர தின்னாது அகரம் வரை ஏகா*
*வான் அந்தம் சிந்து வாரத்தினா தகர் வரை ஏகா*
*ஆனந்தம் சிந்து வார் அத்தி நாத கரவரையே.*

*பரை.*

காவான் - கற்பகத்தையுடைய இந்திரனுக்கும்

நந்தம் சிந்து வாரத்து - பாஞ்ச சந்யம் என்னும் சங்காலும், சார்ங்க மென்னும் வில்லாலும்

இன்னா தகர் அவர் - அவர்கள் செய்யும் துன்பத்தை நீக்கிய அந்த விண்டுவுக்கும்

ஐயே - தலைவரே

நந்து அஞ்சு இந்து ஆரத் தின்னாது - ஆக்கமுடைய பஞ்சபாணங்களும் சந்திரனும் என்னை முற்றத் தின்னாமல்

காவா - காக்கவரும்

அகர - அகரம் போன்றோனே

வரை ஏகா - மலைகளை யுடைய ஏகனே

வான் அந்தஞ்சிந்து - தேவலோகத்தின் கெடுதியை நீக்கிய

வாரத்தினா - அன்பினையுடையானே

தகர - ஆட்டுவாகனமுடையானே

வரை ஏகா ஆனந்தம் சிந்து - எல்லையுட்செல்லாத ஆனந்த சமுத்திரமே

வார் அத்திநாத - ஒழுக்கமுடைய தெய்வயானைக்கு நாதனே

கர வரையே - யானை போல்வானே எ-று.

*வி-ரை.*

சிந்துவாரம் --வில். வார் ரத்தினா, வாரத்தினா என வேய்யாது, வேயாது என்பது போல நிலைமொழியீறு கெட்டது. சிந்து உவா எனப்பிரித்து உவாஎனற்கு இளையவரே எனக் கொள்ளினும் அமையும்.

95. *கருத்த கலாமலை வாமா தவத்தருக் காவணமே*
*கருத்த கலாமலை வாமா தவத்தருக் காவணமே*
*கருத்த கலாமலை வாமா தவத்தருக் காவணமே*
*கருத்த கலாமலை வாமா தவத்தருக் காவணமே*

*சொ.கை.*

*கரு தகலா மலை வா மா தவத்தருக்கு ஆவணமே*
*கருத்து அகலாமல் ஐ வாமா தவ தருக்கா வண்ணம் ஏகு*

*அருத்த கல்லாம் அலைவாம் ஆத அத்தருக்கு ஆ வண்ணமே*

*கருத்த கலாம் மலைவாம் ஆதவம் தரு காவணமே*

*பழைய.*

கரு தகலா - பிறவி (எமக்குத்) தக்கதாகுமோ

மலைவா - அதனைப் பொருது கெடுத்தற்கு வந்தருள்க

மா தவத்தருக்கு ஆவணமே - மிக்க தவமுடையாருக்கு உரிமை யுடையானே

கருத்து அகலாமல் - (எமது) மனத்தின் கண் நீங்காமல்

ஐ வாமா - அழகிய ஒளியையுடையானே

தவ தருக்காவண்ணம் - மிகுதியும் யாம் செருக்கடையா வண்ணம் ஏகு - செல்லுக

அருத்த - புருடார்த்தங்கள் ஆயவனே

கல்லாம் - (யான் நின்புகழைக்) கற்றே மல்லேம்

அலைவாம் - அலைந்து திரிகின்றேம்

ஆத - குருவே

அத்தருக்கு ஆ வண்ணமே - பரம் பிதாவாகிய சிவனுக்குரிமை யாகிய தன்மையுடையானே

கருத்த - கருத்தனே

கலா மலைவாம் ஆதவம் கலகங்களுக்கு ஏதுவாகிய மயக்கமென்னும் வெயிலுக்கு

தரு காவணமே - மரமாகவும் பந்தராகவும் விளங்குபவனே எ-று

*வி-ரை*

அகலாமல் கருத்தின்கட் செல்லுக எனக் கூட்டுக.

வண்ணம், கல்லாம் - இடைக்குறை.

*96. காதகத் தாடங்கந் தான யனத்தினங் கைத்தனமே*
*காதகத் தாடங்கந் தான யனத்தினங் கைத்தனமே*

*காதகத் தாடங்கத் தான யனத்தினங் கைத்தனமே*
*காதகத் தாடங்கத் தான யனத்தினங் கைத்தனமே*

*சொகை.*

*கா தக தாள் தங்கு அம் தா நயம் நத்தினம்*
*கைத்தனம் ஏ*
*காதகம் தாள் தங்கம் தானையன் அத்தி*
*நங்கைத்தினம் ஏகாது*
*அகத்து ஆடு அம் கந்தா நையம் நத்து இனம்*
*னகத்து அன்னம் மே*

*காது அகம் தாடங்கம் தா நயனத்தின் அம் கை*
*தனமே.*

*பகரை.*

கா தக - தக்கவாறு (எம்மைக்) காத்தருள்க

தாள் தங்கு அம்தா - நினது திருவடி மலர்களிற்றங்கும் அழகை அருளுக

நயம் நத்தினம் - நன்மையை விரும்பினோம்

(கைத்தனம் காதக தாள்) காதக தாள் கைத்தனம் - கொலை முதலிய தீய முயற்சிகளை வெறுத்து விட்டோம்

தங்கம் தானையன் அத்தி நங்கை - பீதாம்பர தாரியாகிய திருமால் பெற்ற புத்திரியாகிய தெய்வயானையின்

தனம் ஏகாது - தனங்களை விட்டு நீங்காது

அகத்து ஆடு - மனத்தின்கண் விளையாடுகின்ற

அம் கந்தா - அழகிய கந்தனே

நையாம் - வருந்த மாட்டோம்

நத்து இனம் கைத்து அன்னம் - கூடச்கூட வெண்மையும் ஒளியும் விளங்குவனவாகிய சங்கின் கூட்டமும் பொன்னும் போல் பிரார்த்த வினையால் என்ன துன்பம் அடையினும் அன்பிற் சிறிதும் குறைவுபடேம்

மே (வு) காது அக தாடங்கம் தா - பொருந்திய காதினிடத்து விளங்கும் தோட்டின் மேல் தாவுகின்ற

நயனத்தின் - விழியுடைய உமாதேவியாரது

அம் கை தனமே - அழகிய கைப்பொருள் போன்ற முருகப் கடவுளே எ-று.

97. *அளியந்தத் தேகமா சையம் பரமா திருத்தனையே*
*அளியந்தத் தேகமா சையம் பரமா திருத்தனையே*
*அளியந்தத் தேகமா சையம் பரமா திருத்தனையே*
*அளியந்தத் தேகமா சையம் பரமா திருத்தனையே*

*சொ.கை.*

*அளியம் தத்து ஏகம் மாசை அம்பு அரம் மா திரு தன்னையே*

*அளியம் தத்து ஏகம் ஆசை அம் பரமா திருத்து அல் நையே*

*அள்ளி அந்தம் தேகம் மாசையம் பர மாது இருத்து அன்னை ஏ*

*அளி அந்த தே கம் ஆசை அம்பர மா திருத்தன் ஐயே.*

*பஉரை.*

அளியம் - யாம் ஏழைகளாய் இருக்கின்றேம்

தத்து ஏகம் - விபத்துகள் நீங்கினோமில்லை

மாசை அம்பு அரம் - பொன்னோ கொல்லும் அம்பும் தேய்க்கும் அரமும் போன்றது

மாதிரு தன்னை அளியம் - இலக்குமி நோக்கத்தால் உளதாய் செல்வத்தை இரப்போர்க்குக் கொடேம்

தத்து ஏகம் ஆசை - இத் தீவினை யுடையேம் ஆயினும் தீவினை யுடையாருக்குக் கிட்டாது தத்துகின்ற முத்தியின் கண் விருப்பம் உடையேம் ஆதலின்

அம் பரமா - அழகிய பரமனே

திருத்து - (எம்மை நன்மார்க்கத்திற் செல்லுமாறு) திருத்துக

அல் நையே - அஞ்ஞான இருளைக் கெடுத்தருள்க

அள்ளி அந்தத் தேகம் - அழகிய தமது தேகத்தில்

மாசையம் - பெரிய இமயமலையான் புத்திரியாகிய

பர மாது இருத்து - மேன்மை பொருந்திய உமாதேவியாரை இருத்தியருளிய

அன்னை ஏய் அளி - தாயைப் போன்ற கருணையையுடைய

அந்த.தே - அத்தேவரும்

கம் ஆசை அம்பர - ஆகாயமும் திக்கும் ஆகிய ஆடையையுடைய

மாதிருத்தன் - மகத்தாகிய பரிபூரணருமான சிவபிரானுக்கு

ஐயே - குருவே எ-று.

98. *திரவியக் கந்தா விருந்தா மதனஞ் சிறப்புகவே*
*திரவியக் கந்தா விருந்தா மதனஞ் சிறப்புகவே*
*திரவியக் கந்தா விருந்தா மதனஞ் சிறப்புகவே*
*திரவியக் கந்தா விருந்தா மதனஞ் சிறப்புகவே*

*சொகை.*

*திரவியம் கந்த இருமை தாமதம் நஞ்சு (நைந்து) சிற புக ஏது*
*இரவு இயம் கந்து அவிரும் தா மத நஞ்சு சிறப்பு உக ஏது*
*இரவி அக்கம் தவிரும் தாம தனம் சிறப்பு உகவே*
*திரம் இயக்கு அந்த விருந்து ஆ மதன் அஞ்சில் தப்புக ஏ.*

*பரை.*

திரவியக் கந்த - திரவியம் போன்ற கந்தனே

இருந்தாமதம் நஞ்சு இறப்புக - பெரிய தாமத குணம் நைந்து

அழியும் வண்ணம் எமதகத்துட் புகுதுக

(ஏது இரவு) இரவு ஏது - பின் பிறரை இரத்தல் எமக்கு இல்லையாம்

இயக் கந்து - சொல்லப்பட்ட பற்றுக்கோடாய் உள்ளோனே

அவிரும் தா மத - விளங்குகின்ற வலிய பெருமையுடையானே

நஞ்சு இறப்பு உக ஏது - நஞ்சனைய மரணத் துன்பம் நீங்குதற்குக் காரணமாயவனே

இரவி அக்கம் தவிரும் தாம - இரவியாலும் கண்ணாலும் காணப்படாத பிரகாச முடையானே

தனம் சிறப்பு உகவே - எமக்குச் செல்வமும் வீடும் இன்பமாயவனே திர - திரமுடையானே

இயக்கு அந்த - உயிர்களை இயக்குகின்ற அழகனே

விருந்து ஆ - யாம் தேவர்க்கு விருந்தினர் ஆமாறு

மதன் அஞ்சில் தப்புக - மன்மதனது பஞ்ச பாணங்களினின்றும் தப்புவோமாக எ-று.

99. *சிந்தனை யான மயில வனந்தவஞ் சேவலனே*
*சிந்தனை யான மயில வனந்தவஞ் சேவலனே*
*சிந்தனை யான மயில வனந்தவஞ் சேவலனே*
*சிந்தனை யான மயில வனந்தவஞ் சேவலனே*

*சொ.கை.*

*சிந்தன் ஐ யான மயில் அனந்த அஞ்சு ஏவலன் ஏ*
*சிந்தனை ஆன மை இல்லவநந்த அஞ்சு ஏவலன் ஏ*
*சிந்த நையாம் நம் அயிலவ நம் தவம் சேவல்லன் நே*
*சிந்து அனையான் அம்மை இல்லவன் நந்த அம் சேவலனே.*

*பரை.*

சிந்தன் ஐ - குறள் உருவாகிய விண்டுவுக்குத் தலைவனே

யானமயில் - வாகன மாகிய மயிலையுடையானே

அனந்த - அழியில்லாதவனே

அஞ்சு ஏவலன் - பழிபாவங்களுக்கு அஞ்சும் நினது ஏவலைமேற் கொண்டொழுகும் எனது

சிந்தனை ஆன - மனத்தின் கணுள்ள

மை இல்லவ - குற்றமில்லானே

நந்த - ஆக்க முடையானே

அஞ்சு ஏவலன் - பஞ்ச பாணங்களின் வெற்றியையுடைய மன்மதன்

ஏ் சிந்தை நையாம் - புட்பபாணங்களைப் பிரயோகிப்ப அதனால் யாங்கள் வருந்தேம்

நம் அயிலவ - எமது வேலாயுதக் கடவுளே

நம் தவம் - நமது தவமானவனே

சேவல்லன் - இடப வாகன முடைய வல்லவனும்

நே சிந்து அனையான் - கருணையால் கடல் அனையானும்

அம்மை இல்லவன் - உலகமாதாவாகிய உமாதேவியை மனைவி யாகக் கொண்டவனும் ஆகிய சிவபிரானுக்கு

நந்த - குமாரனே

அம் சேவலனே - அழகிய சேவற் கொடியுடையானே எ-று.

**விரை.**

முதலடியீற்று ஏகாரம் அசை. மை (மய்) போலி. இல்லை வல்லன், இல்லவன் - இடைக்குறை. அம்மை அமய் என இடைக்குறைந்து போலியாயிற்று. நந்த - கடைக்குறை.

100. *சேவல மந்தண வாமனந் தாமன் றிருத்தவத்தே*
*சேவல மந்தண வாமனந் தாமன் றிருத்தவத்தே*
*சேவல மந்தண வாமனந் தாமன் றிருத்தவத்தே*
*சேவல மந்தண வாமனந் தாமன் றிருத்தவத்தே*

சொ.கை.

சேவல மந்தண ஆம் அநந்தாமன் திருதவதே
சே வலம் அந்தண் வாமன் நந்தா மன் திருத்து
அ தேசு
ஏவு அலமந்து அணவாமல் நந்தா மன்று இருத்து
அவத்து ஏசு
ஏவலம் அந்தண வாமனம் தா மன் திரு தவத்தே.

பதவுரை.

சேவல - சேவற் கொடியை யுடையானே

மந்தண - இர்கசியப் பொருளே

ஆம் அநந்தா எமக்கு உரிமையாகிய அழிவற்றவனே

மன் திருதவ தே சே - நிலை பெற்று இலங்கும் நாயகனாகிய தேவன் என்னும் இடபவாகனத்தையுடைய

வலம் அந்தண வாமன் - வெற்றி பொருந்திய அந்தணனாகிய வாமனுக்கு

நந்தா - குமாரனே

மன் திருத்த அத்தேசு - மன்னனே திருத்தனே அத்தனாகிய ஒளியே

அலமந்து அணவாமல் - பிறவித் துன்பத்துட் சுழன்று பொருந்தாமல்

நந்தா மன்று இருத்து - அழியாத ஞான சபையில் இருக்கச் செய்

அவத்து ஏசு ஏவலம் - வீணாகிய குற்றத்தின்கண் மனத்தினை ஏவேம்

அம் தணவா மனம் தா - ஞான அழகு நீங்காத மனத்தைத் தந்தருளுக

(மன் திரு தவத்தே) திரு தவத்தே மன் - எமது அழகிய தவத்தால் எம்மைப் பொருந்துக எ-று

**ஆசிரியரின் நூல்கள்:**

சிதம்பர விநாயகர் மாலை

சொக்கலிங்கப் பெருமான்மேல் பதிகங்கள்

மாலை மாற்று மாலை

ஏகபாத நூற்றந்தாதி

நவமணிக் காரிகை நிகண்டு

தொல்காப்பியப்பாயிர விருத்தி

தொல்காப்பிய விருத்தி

இன்னிசை இருநூறு

வள்ளுவர் நேரிசை

பஞ்சதந்திர வெண்பா

மதுரைச் சிலேடை நுண்பொருட்கோவை

திருக்குறளாராய்ச்சி

திருக்குறள் சண்முகவிருத்தி

மீனாட்சியம்மை சந்தத்திருவடிமாலை

இசை நுணுக்கச் சிற்றுரை.

LIBRARY MADURAI
SENTHAMIL COLLEGE

# மதுரைத் தமிழ்ச் சங்கம் வெளியிடவிருக்கும் நூல்கள்

☛ **மதுரைத் தமிழ்ச்சங்க தமிழ்ச் சொல் அகராதி**

(மறுபதிப்பு)

திருவாவடுதுறை யாதீன வித்துவானும்

மதுரைத் தமிழ்ச்சங்க நூற்பரி சோதகருமான

***சே.ரா.சுப்பிரமணியக் கவிராயரால்***

(பரிசோதிக்கப்பெற்றது)

☛ **வைத்திய சார சங்கிரகம்**

(மறுபதிப்பு)

சித்த வைத்திய நூல்

நீண்ட அனுபவ ***வைத்தியர் முத்துக்கருப்பபிள்ளை***

அவர்களால் பேராய்வு செய்து எழுதப்பெற்றது.

SANKAR MADURAI-1. Ph.: 26564